



# கசின் சிறுகதைகள்

யாழ் இலக்கிய வட்டம்

# கசின் சிறுகதைகள்

தொகுப்பாசிரியர்:

**பொ. ஆனந்தலிங்கம்**

வெளியீடு:

**யாழ். இலக்கிய வட்டம்,**

**யாழ்ப்பாணம். இலங்கை**

- முதலாம் பதிப்பு - ஏப்பிரல், 1999
- வெளியீடு: யாழ். இலக்கிய வட்டம், யாழ்ப்பாணம்.
- கசின் சிறுகதைகள் (சிறுகதைத் தொகுதி)
- நூலாசிரியர்: கசின் (க. சிவகுருநாதன்)
- H6, அரசினர் தொடர்மாடி, பம்பலப்பிட்டி. கொழும்பு - 4
- விலை: ரூபா 125/=
- KASIN SIRUKATHAIKAL
  (A collection of short stories)
- KASIN (K. SIVSKURUNATHAN)
- H6, Govervment Flats, Bambalapitiya. Colombo - 4.
- Price: Rs.125/=
- YARL ILAKKIYA VADDAM
  (Jaffna Literary Circle)
  Jaffna. Sri Lanka.

# அணிந்துரை

**கலாநிதி. க. குணராசா (செங்கை ஆழியான்)**
**பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்.**
**யாழ்ப்பாணம்.**

இலங்கை இலக்கியப் பேரவை 1994 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 17ந் திகதி ஈழத்தின் மூத்த எழுத்தாளர் கசின் அவர்களைக் கௌரவித்துப் பெருவிழா ஒன்றினை எடுத்தது. அந்த விழாவில் திரு.க. சிவகுருநாதன் (கசின்) அவர்களின் இலக்கியப் பங்களிப்பினை விளக்கிய நான் அவர் பிள்ளைகளுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தேன். "ஈழத்தின் மூத்த எழுத்தாளர் கசின் அவர்களின் படைப்புக்களை நூலுருவில் வெளியிட்டு இளந் தலைமுறையினருக்கு அவரை இனங்காணவும் அவரின் ஆற்றலையும், அவர் தமிழிலக்கியவுலகிற்குச் செய்த பணிகளையும் தெரியவைக்கும் கடமை அவர் பிள்ளைகளுக்குரியது" என, அன்று விடுத்த வேண்டுகோள் கடந்த அரை தசாப்தத்துள் அவரின் மூன்று நூல்களைத் தமிழுலகிற்கு வழங்க வைத்துள்ளது. நிதானபுரி, காதலும் கடிதமும் ஆகிய அவரின் நாவல்களும் அவற்றினைத் தொடர்ந்து கசின் சிறுகதைகளும் வெளிவந்துள்ளமை உண்மையில் இலக்கிய உலகிற்கு உவப்பினைத் தரும் செய்திகளாகும்.

ஈழகேசரி உருவாக்கிய எழுத்தாளர்களில் ஒருவர் கசின் என்ற புனைபெயரில் முன்னைய இலக்கியத் தலைமுறைக்கு நன்கு அறிந்தவரான திரு.க. சிவகுருநாதன் ஆவார். 1946 ஆம் ஆண்டிலிருந்து மூன்று தசாப்தங்கள் வரை ஈழத்தின் அனைத்துப் பத்திரிகைகளிலும் ஓயாது நிறையவே எழுதியுள்ளார். சிறுகதை, நாவல், கட்டுரை என்ற முத்துறைகளிலும் கசின் அகலமாகக் கால்களை ஊன்றியுள்ளார். நூலுருவில் அவரது படைப்புக்கள் வெளிவரத் தாமதமாகியதால் அவரின் படைப்புக்கள் இளந்தலைமுறையினருக்குத் தெரியவரவில்லை. அதனால் இன்றைய தலைமுறைக்கு ஆற்றலும் ஆளுமையும் நிறைந்த ஓர் ஆக்கவிலக்கிய கர்த்தாவின் இலக்கியப்பணி தெரியாது திரையிடப்பட்டிருந்தது.

1920 ஆம் ஆண்டு புலோப்பளையில் பிறந்த எழுத்தாளர் கசின் அச்சுவேலி சரஸ்வதி, உசன் இராமநாதன் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்றார். பின்னர் திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலையில் தனது ஆசிரியப் பயிற்சியை நிறைவு செய்தார். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையைத் தன் குருவாக கசின் மதிக்கிறார். கசினின் எழுத்துக்களில் தூய்மையும் நடையில் எளிமையும் இருப்பதற்குப் பண்டிதமணியின் செல்வாக்கே காரணமெனலாம். தமிழாசிரியராக இலங்கையின் பலபாகங்களில் கடமையாற்றி நிறைவாக உடுத்துறை மகாவித்தியாலயத்தின் அதிபராகப் பதவி வகித்து ஓய்வு பெற்றுள்ளார். இன்று சமய, சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார். முன்னைய ஆனந்தவிகடன் ஆசிரியர் தேவன் அவர்களைக் கசின் அவர்களுக்கு மிகவும் பிடிக்கும். அதனால் தேவனின் நகைச்சுவை இழையோடும் எழுத்து நடையைக் கசினின் எழுத்துக்களில் அவதானிக்கலாம்.

கசின் முதலில் ஒரு கட்டுரை ஆசிரியராகவே எழுத்துலகில் புகுந்தார். இலக்கியம் என்றால் என்ன? தமிழ் ஆசிரியர் வரலாறு, பாட்டியின் ஆராய்ச்சி,ஆகிய கட்டுரைகள் ஈழகேசரியில் வெளிவந்துள்ளன. அவர் சிறுகதை ஆசிரியராகப் பரிணமித்தபோதும் கட்டுரைகள் எழுதுவதை நிறுத்திக் கொள்ளவில்லை. காலத்திற்குக் காலம் இலக்கியம் சம்பந்தமாகவும் கல்வி சம்பந்தமாகவும் தெரிவிக்கப்படும் கருத்துக்களைச் சீர்தூக்கி விமர்சித்துக் கட்டுரைகள் எழுதிவந்துள்ளார். உதாரணமாகக் கல்வி வெள்ளை அறிக்கை பற்றிச் சிந்தாமணியில் அவர் எழுதிய கட்டுரை அக்கால வேளையில் பரபரப்பினை ஏற்படுத்தியது. அவ்வகையான கட்டுரைகளைச் "சட்டம்பியார்" என்ற புனைபெயரில் எழுதுவதை அவர் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

1947 ஆம் ஆண்டு கசினின் முதலாவது ஆக்கவிலக்கியமாக அவரின் தொடர் நாவலான வண்டியில் வளர்ந்த கதை ஈழகேசரியில் வெளிவந்தது. இந்த நாவலில் அவர் கையாண்ட உத்தி, அக்காலத்தில் புதுமையானது. புகையிரதத்தில் சந்திக்கும் இருவர் ஒருவரையொருவர் அறிய முடியாமையினால் காதற் கடிதங்களைப் பத்திரிகை மூலம் பரிமாறிக் கொள்கின்றனர். இவர் பின்னர் எழுதிய

நாவல்களிலும் கடிதங்கள் மூலம் கதையை வளர்த்துச் செல்கின்ற பாணி நிறையவே காணப்படுகின்றது. சகடயோகம், இராசமணிச் சகோதரிகள், இதயஊற்று, தேடிவந்தசெல்வம், கற்பகம், நிதானபுரி, சொந்தக்கால், கண்டெடுத்த கடிதங்கள் எனப்பல நாவல்களைக் கசின் எழுதியுள்ளார் என்பது இன்றைய தலைமுறைக்கு வியப்பான சங்கதியாகும். இந்தியப் பத்திரிகைகளும், இந்திய எழுத்துக்க ளும் ஆழ வேரூன்றியிருந்த ஒரு காலகட்டத்தில், ஈழத்துப் பத்திரிகைகளில் தரமாகவே எழுதி தமக்கென ஓரிடத்தை அவர் தக்க வைத்திருக்கின்றார்.

கசின் அவர்களின் சிறுகதைகள் ஈழத்துச் சிறுகதைத் துறைக்கு மெருகூட்டினவென்பேன். சிறுகதைகளை இவர் நிறையவே எழுதியுள்ளார். 1947ல் ஈழகேசரியில் எழுதிய வண்டியில் வளர்ந்த கதைக்குப் பின்னர் குஞ்சுமாணிக்கம், வனசஞ்சாரம், இது காதலல்ல, கதவைச் சாத்தினாள், மணியோசை, யார் பேசுகிறது?, ஒரு சொட்டுக் கண்ணீர், ஆரம்ப சிகிச்சை, பரிமளசுந்தரி, செய்ந்நன்றி, பிழையும் சரியும் முதலான சிறுகதைகள் ஈழகேசரியில் மட்டும் வெளிவந்திருக்கின்றன. கசினின் ஈழகேசரிக் கதையாக வெளிவந்த பிழையும் சரியும் ஈழகேசரி வெள்ளிவிழா ஆண்டுமலரில் வெளிவந்தது (1956). இவற்றினைவிட பச்சைக்கிளி, பஞ்சும் நெருப்பும், சிலந்திவலை, தமிழன்தான் முதலான சிறுகதைகள் பிற பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன. அவரது சிறுகதைகளில் பெரும்பாலானவை ஈழகேசரியில் வெளிவந்திருப்பதனால் கசின் அவர்களை ஈழகேசரிப் பண்ணையில் உருவானவராகக் கொள்வதில் தவறில்லை. ஈழகேசரி ஈழத்திற்குப் பெருமை சேர்க்கும் படைப்பாளிகள் பலரினை உருவாக்கியிருக்கின்றது. அவ்வகையில் அவர்களில் கசினுமொருவராவார்.

கசின் சிறுகதைகளில் பொதுவாகக் காதல் தூக்கலாகவே காணப்படும். மானிட உறவுகளின் பல்வேறு பரிசுத்த நிலைகளை அவர் தனது சிறுகதைகளில் கொண்டுவந்தார். மானிடன் உள்ளவரை நிலைத்து நிற்கும் பொது உணர்ச்சியான காதலைக் கருவாகக் கொண்டு பல சிறுகதைகளை ஆக்கியுள்ளார். சிறுகதையின் உலகந் தழுவிய பொதுமை அம்சம் அதுவே. அவருடைய சிறுகதைகளில்

தமிழ்ச் சமூகத்தின் பழக்க வழக்கங்கள், பேச்சுமுறை என்பன சிறப்பாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன.இந்த மண்ணோடு ஒட்டிய விடயங்களைத் தனது ஆக்கங்களில் சலியாது எடுத்துக்காட்டியமை கசினுக்குரிய திறனாகும்.

இலங்கை வானொலியில் இவரின் பல சிறுகதைகள் வாசிக்கப்பட்டுள்ளன. இலக்கியம் சம்பந்தமான பேச்சுக்களை இவர் வானொலியில் நிகழ்த்தியுள்ளார். எடுத்துக்காட்டாகக் கவிதை இன்பம் பற்றிச் சில வருடங்களுக்குமுன் தொடராக வானொலியில் உரையாற்றியுள்ளார்.

"கசினின் சிறுகதைகளிலும் நாவல்களிலும் கருப்பொருளாகக் குடும்ப உறவுகளே முக்கியம் பெற்றன. இவருடைய கதைகளும் நாவல்களும் காதல், காமம் சம்பந்தமான மானிட நடத்தைகளைச் சித்தரிக்கின்றன. ஆனால், அவற்றில் வக்கிரமற்ற மெல்லிய இயல்புணர்வு விரவி நிற்கும். கொச்சைப்படுத்தாத உறவு நிலை ஆழம் பதித்திருக்கும். வண்டியில் வளர்ந்த கதை, குஞ்சுமாணிக்கம், நூலும் நூற்கயிறும், வனசஞ்சாரம், மிஸ் அன்னபூரணி, இது காதலல்ல, குமாரி ரஞ்சிதம், ஒரு சொட்டுக் கண்ணீர், இராசமணியும் சகோதரிகளும், காதல்வலை, மணியோசை முதலான கதைகளில் இப்பண்புகள் மேலோங்கியிருப்பதைக் காணலாம்" எனக் கனக செந்திநாதன் குறிப்பிட்டுள்ளார். கசின் எழுதும் கதைகளில் சிக்கல்கள் அதிகம் இருப்பதில்லை. வசனநடை வாசகர்களைக் கவரக்கூடியது. எந்தக் கதையை வாசித்தாலும் அது எங்கோ நடந்தது போலப் பிரமை தட்டும் என்கிறார் கனக செந்திநாதன். "வாழ்க்கைக்குப் பொருந்தாத கதைகளை எழுதி எந்த ஆசிரியனும் வெற்றி பெற முடியாது" எனக் கசின் கூறுகிறார். "ஒவ்வொரு எழுத்தாளனும் கதை புனையும்போது தனது கதை நடந்த கதை போலவே இருக்க வேண்டுமென்பதற்காகத் தனது வெற்றியின் பெரும் பாகத்தை செலவிடுகிறான்" என்று கசின் கூறுகிறார். "என்னுடைய கதைகளில் மண்வாசனை நிறையவே வீசும்.எமது மண்வாசனை தமிழ் நாட்டவருக்கு ரசிக்காது. இக்காரணத்தினால் தான் நான் இந்தியப் பத்திரிகைகளுக்குக் கதை எழுதுவதில்லை. கற்பனாசக்தி ஒருவனுக்கு இயற்கையாக அமைந்ததொன்று. எனினும்

அதற்குப் பயிற்சி வேண்டும். மற்றையோரைப் பின்பற்றாது புதிதாகச் சிந்திக்கும் பழக்கத்தை இளமையிலிருந்தே பழக வேண்டும். இப்பழக்கம் எமது நாட்டில் சிறந்த எழுத்தாளர்களைத் தோற்றுவிக்கலாமெனக் கருதுகின்றேன்" எனக் கசின் கூறுகின்றார். "நேர்மையான போக்கும் விசாலமான உள்ளமும் நடுநிலையான கொள்கையும் உடையவர்களிடமிருந்துதான் சிறந்த இலக்கியம் தோன்ற முடியும்" என்ற கருத்தில் கசின் பிடிவாதமாகவுள்ளார்.

கசின் அவர்களின் இச் சிறுகதைத் தொகுதியிலுள்ள சிறுகதைகளை மீண்டும் ஒருமுறை படிக்கும் போது உடனடியாக மனதில் தோன்றுகின்ற இலக்கிய மதிப்பு, ஆசிரியர் நல்ல வினைத்திறன் வாய்ந்த படைப்பாளியாகவுள்ளார் என்ற கணிப்பே. ஏற்கனவே குறிப்பிட்டவாறு கசின் அவர்களின் சிறுகதைகளில் யாழ்ப்பாணச் சமூகத்தின் பல்வேறு விதமான காதலுணர்வு நிலைகள் சித்திரிக்கப்பட்டுள்ளன. பண்டிதரான கசின் தமிழரது களவொழுக்கத்தின் பல்வேறு நிலைகளை மிக அற்புதமாகத் தமது சிறுகதைகளில் வடித்துள்ளார். அவர் கையாண்டுள்ள வசன நடையில் பொதிந்து கிடக்கும் எள்ளல்,நையாண்டி,நகைச்சுவை படிப்போரை கதையோடு ஒன்றிவிட உதவுகின்றன. மேலும், மிக நுட்பமான அவதானிப்புகளுடன் அவரின் சிறுகதைகள் நகர்த்தப்படுகின்றன. 1947 / 1957 காலகட்டத்துள் கசினின் சிறுகதைகள் பலவும் எழுதப்பட்டு வெளிவந்துள்ளன. இருபத்தேழு வயதுக் கனவுகளோடு அவர் சமூகத்தைப் பார்த்துள்ளார். வாழ்க்கைக்குப் பொருந்தாத கதைகளை அவர் எழுத விரும்பவில்லை.

அவருடைய சிறுகதைகளுள் "குஞ்சுமாணிக்கம்" ஈழத்தின் சிறந்த சிறு கதைகளுள் ஒன்றாகக் கருதப்பட வேண்டியதாகும். அரசியல் வேறுபாடுகள் எவ்வாறு சாதாரண மக்களைப் பிரிக்கின்றன என்பதை மிக நளினமாகவும் ஆழமாகவும் "குஞ்சுமாணிக்கம்" சிறுகதையில் சித்திரித்துள்ளார். வன்னிப் பிரதேசப் பின்னணியில் எழுதப்பட்ட மணியோசை, பரிமளசுந்தரி ஆகிய இரு சிறு கதைகளும் குறிப்பிடத்தக்கவை. பகைப்புலச்சித்தரிப்பு இச்சிறுகதைகளில் மிகச் சிறப்பாகவுள்ளன.

நிறைவாக, கசின் கருதுவதுபோல, தமிழிலக்கியக்கடலின் ஒரு சிறு துளியாக இச்சிறுகதைத்தொகுதி அமையுமென்பதில் ஐயமில்லை. ஈழத்துச் சிறுகதைத் துறையின் பாய்ச்சலிற்கு, கசினின் சிறுகதைகளும் ஒரு படியாக விளங்கியுள்ளன என்பதை மறுப்பதற்கில்லை.

கசினின் சிறுகதைகளைத் தேடியெடுத்துப் பிரதி பண்ணித் தொகுத்து, தமிழ் மக்களுக்கு வழங்கும் அன்பர் பொ. ஆனந்தலிங்கம் பாராட்டிற்கும் நன்றிக்குமுரியவர். நமது இலக்கிய இருப்பினை அறிவதற்கு உதவுபவர்களில் அவர் ஒருவராகிறார்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
01.03.1999

**செங்கை ஆழியான்**
**க. குணராசா**

# முன்னுரை

எனது ஆக்கங்களை நூலாக வெளியிட வேண்டுமென்ற கோரிக்கை எனக்கு ஒரு பாராட்டுவிழா "செங்கை ஆழியான்" கலாநிதி க. குணராசாவின் முயற்சியால் 1994ம் ஆண்டு இலங்கை இலக்கியப் பேரவை நடாத்தியபோது விடுக்கப்பட்டது. அக்கோரிக்கைப்படி ஏற்கனவே இரண்டு நாவல் தொகுதிகள் வெளிவந்துள்ளன. அவ்வரிசையில் இது மூன்றாவது வெளியீடாகும். 1946ம் ஆண்டிலிருந்து ஈழகேசரி, தினகரன், கலைச்செல்வி ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்த 15 சிறுகதைகள் இச்சிறுகதைத் தொகுதியில் இடம்பெறுகின்றன.

அக்காலத்தில் இச்சிறுகதைகளை எழுதிய பொழுது இவற்றைப் பின்னொருநாள் நூலாக வெளியிட வேண்டுமென்ற சிந்தனை எனக்கிருக்கவில்லை. அதனால் பலசிறுகதைகள் என்வசமில்லை. பலவித முயற்சி செய்து எனது சிறுகதைகளை திரு.பொ. ஆனந்தலிங்கம் சேகரித்தார். இன்னும் சில கதைகள் கிடைக்கவில்லை. இப்பொழுது கிடைக்கப்பெற்ற சிறுகதைகளைச் சேர்த்து இச்சிறுகதைத்தொகுதி வெளிவருகின்றது.

இப்பொழுது முற்போக்கு இலக்கியம், நற்போக்கு இலக்கியம், அஃதல்லாத இலக்கியம் என்று சொல்கிறார்கள். எனது கதைகள் எந்தவகை என்று எனக்குத் தெரியாது. கலை கலைக்காகவே இருக்க வேண்டுமென்பது மேல் நாட்டவர் கொள்கை. ஒரு கலை வடிவிலிருந்து சமுதாயத்திற்கு ஒரு போதனை இருக்கவேண்டு மென்பது எனது கொள்கை. இக்கொள்கையை எவ்வளவுதூரம் எனது கதைகள் நிறைவேற்றுமென்று எனக்குத் தெரியாது.

மேல்நாட்டிலிருந்து தான் சிறுகதை எழுதும் பழக்கம், தமிழிற்கு வந்ததென்று சிலர் கூறுகிறார்கள். இக்கருத்து மிகவும் பிழையானது. எமது காலத்து எட்டுத்தொகை நூல்களிலுள்ள ஒவ்வொரு செய்யுளும் ஒரு சிறுகதையே. செய்யுள் வடிவில் சுருக்கிக் கூறப்படுவதும், வசன நடையில் விரித்துக் கூறப்படுவதுதான் இரண்டிற்குமுள்ள வித்தியாசமாகும்.

வீரமாமுனிவர், ஆறுமுகநாவலர் காலத்திலிருந்து தான், தமிழை வசனநடையில் எழுதும் பழக்கம் வந்தது. இன்னொரு வகையாகச் சொன்னால், அச்சுயந்திரம் அறிமுகமான பின்தான் தமிழில் வசனநடை தழைத்தது. முன்னர் ஏடுகளில் சுருக்கமாக விபரிப்பது விரும்பப்பட்டது.

எனது மதிப்புக்குரிய செங்கை ஆழியானினதும் தினக்குரல் பத்திரிகை ஆசிரியர் திரு. ஆ. சிவனேசச்செல்வனினதும் தூண்டுதலால் இச்சிறுகதைத்தொகுதி வெளிவருகின்றது. இது தமிழ் இலக்கிய உலகை எவ்வளவு தூரம் திருப்திப்படுத்துமென்று நானறியேன். ஒரு கன்றுக்குட்டியின் முயற்சியாகவும் கருதலாம். எப்படியெனினும், எனது இச்சிறு நூலையும், தமிழ் இலக்கியம் என்ற பெருங்கடற் பகுதியில் ஒரு சிறு துளியாக ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையில் வெளியிடுகின்றேன். இச் சிறுகதைத் தொகுதியை சிறந்த முறையில் தொகுத்தளித்த திரு. பொ. ஆனந்தலிங்கம், வெளியிடும் யாழ் இலக்கிய வட்டத்தினர், கணனியில் பதிவு செய்துதந்த திரு. இ. ஆத்மானந்தன் நூலை அச்சுப் பதிவு செய்த சிறீ லங்கா பதிப்பகத்தினர், அட்டைப்படத்தை வரைந்த திரு. ரமணி ஆகியோர் எனது நன்றிக்குரியவர்கள்.

H6, அரசினர் தொடர்மாடி, **க. சிவகுருநாதன் (கசின்)**
பம்பலப்பிட்டி,
கொழும்பு - 4
99 - 03 - 10

# ஈழத்துப் பேனாமன்னர்கள்

# 'கசின்'

தமிழ்நாட்டிலே தலைவணங்காத எழுத்தாளர் என்றும், உள்ளதை உள்ளபடி சொல்பவர் என்றும் ஒருவரைக் குறிப்பிட வேண்டுமெனின் வல்லிக்கண்ணன் அவர்களைக் குறிப்பிடலாம். தமிழ்நாட்டிலும் ஈழநாட்டிலும் பிரபலமான எழுத்தாளர் ஒருவரைக் குறிப்பிட வேண்டுமானால் அமரர் கல்கி அவர்களைக் குறிப்பிடலாம். இவர்கள் இருவரும் ஒரே முகமாக நல்ல கதைகளை எழுதும் ஒருவர் எனக் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டவர்தான் "கசின்" என்ற மூன்றெழுத்துக்களால் குறிக்கப்படும் அன்பர் க. சிவகுருநாதன் அவர்கள்.

"காதல்", "காமம்" என்பனவும் மூன்றெழுத்துக்களால் கூறப்படுபவையே. "கசின்" என்ற புனைபெயருக்கும் மேலே கூறப்பட்டவைகளுக்கும் நெருங்கிய ஒற்றுமையுண்டு. ஆம், அவர் எழுதிய சிறுகதைகளும், நெடுங்கதைகளும் காதல், காமம் சம்பந்தமுடையன. வண்டியில் வளர்ந்த கதை, குஞ்சுமாணிக்கம், நூலும் நூற்கயிறும், வனசஞ்சாரம், மிஸ் அன்னபூரணி, இது காதலல்ல, குமாரி ரஞ்சிதம், ஒரு சொட்டுக் கண்ணீர், இராசமணியும் சகோதரிகளும், கதவைப் படீரென்று சாத்தினாள், காதல்வலை, இதயஊற்று, குறள் படும் பாடு, சகடயோகம், மணியோசை என்பன அவர் எழுதிய கதைகளிற் சில.

இக்காலச் சிறுகதைகள் முற்காலத்திற் கிராமிய சனங்களிடையே பேச்சுவழக்காக இருந்தனதான். "அடேயப்பா அன்னிக்கு ஒரு பொம்பிளையை இறயிலுக்குள் கண்டேன். தேவரம்பை மாதிரி. அவளருகில் ஒரு ஆம்பிளையிருந்தான். ஆகா! மன்மதன் மாதிரி. அவர்களைக் கண்டவுடன் எனக்கு வாய்த்தாளே ஒரு கருங்குரங்கு, அவளை நினைக்க எனக்கு எரிச்சலாயிருந்தது. பிறகுதான் தெரிந்தது அந்தப் பொம்பிளை ஒரு கிழவனின் மனைவியென்று. அவளுக்குப் பக்கத்தில் இருந்தவன் அவள் தமையன். அப்போதுதான் என் மனம் ஆறியது"

என்று கிராமத்தான் ஒருவன் தன் நண்பனுக்குக் கூறியதை, இக்காலத்தில் மெருகு வைத்து எழுதினால்"மனத்திருப்தி" என்ற கதையாகலாம் என்று இலக்கியங்களின் போக்கு என்ற கட்டுரையில் சிறுகதை சம்பந்தமான - இரத்தினச் சுருக்கமாக - ஆனால் தெளிவாக அவர் கூறியுள்ளார்.

"இப்படிச் சந்தியில், தெருவில், தோட்டத்தில், சந்தையில், புகையிரதத்தில், பஸ்ஸில் நடக்கும் ஒவ்வொரு சிறு சம்பவங்களும் திரண்டோ தனித்தோ செவ்வனே எழுதப்பட்டு இக்கால இலக்கியம் என்று தமிழ்நாட்டில் மிடுக்காய் உலாவுகின்றனவென்று அவர் கூறுகின்றார்.

ஆனால் "வாழ்க்கையில் உள்ளதை உள்ளபடி சித்தரிப்பதுதான் இலக்கியமுறை.ஆனால் வாழ்க்கையில் மேன்மையும் உண்டு; சிறுமையும் உண்டு; அழகும் உண்டு; அவலட்சணமும் உண்டு; பயன்படுவதுமுண்டு; பயனற்றதுமுண்டு. பொறுக்கி எடுத்துக் கொள்வதிற்றான் எழுத்தாளனின் கலைத்திறமை இருக்கிறது..... வழி புரண்ட காதலை வைத்துக் கதை எழுதுவது எளிது. விற்பதும் எளிது. கள்ளிப் பெட்டிப் பலகையில் தச்சு வேலை செய்வது எளிது. ஆனால் உறுதியும் பயனும் இல்லை" என்று ஒரு பெரியவர் உபதேசிக்கிறார்.

எவர் எப்படிக் கூறினாலும் காதல் கதைகளைத்தான் வாசகர்கள் விருப்பத்தோடு படிக்கிறார்கள். எத்தனையோ நுட்பமான வழக்குகள் நீதிமன்றங்களில் நடந்தாலும் கற்பழித்த வழக்கும், காணாமல் ஓடிப்போனவள் வழக்கும் பார்க்கத்தான் கூட்டம் கூடுகிறது. இது ஏன்? எத்தனையோ கதைகள் - கதா பாத்திரங்கள் பெருகியிருந்தும் லைலா - மஜ்னு, ரோமியோ - ஜூலியட், அம்பிகாபதி - அமராவதி, தேவதாஸ் - பார்வதி என்ற காதற் கதைகள் மதிப்பிற் குறைபடவில்லையே. ஆகவே இது ஒரு விடுவிக்க முடியாத முடிச்சு. "கசின்" எழுதும் கதைகளிற் சிக்கல் அதிகம் இருப்பதில்லை. வசனநடை வாசகர்களைக் கவரக் கூடியது. எந்தக் கதையை வாசித்தாலும் எங்கேயோ இது நடந்தது போன்ற மனப்பிரமை தட்டும். கதாபாத்திரங்களின் வர்ணனை சில இடங்களில் நன்றாக

இருக்கும். உருத்திராபுரி இந்துக்கல்லூரி முகாமைக்காரர் அருணாசலத்தை அவர் வர்ணிக்கிறார் பாருங்கள்:

"பவளமால் வரையில் நிலவெறிப்பதைப் போலத் திருநீற்றுப் பூச்சுடனும், கையில் பிரம்புடனும், குமிழி மிதியடி மேல் அருணாசலம்பிள்ளை உருத்திராபுரி இந்துக் கல்லூரிக்கு விஜயம் செய்தார். எந்த விஷயத்தையும் தீர விசாரிக்கும் குணமுடைய அவர் அப்படி வந்தது புதினமன்று".

யூ.என்.பி யும் தமிழ்க் காங்கிரசும் சேர்ந்ததனாற்றான் குஞ்சுமாணிக்கம் என்றழைக்கப்படும் புஞ்சி மெனிக்காவினதும், முத்துச்சாமியினதும் காதல் நிறைவேறியது என்ற கதை, கதைஅம்சத்திலும், வசன நடையிலும் சிறந்து விளங்குகிறது.

"உண்மைக் காதல் தானா? என்று அறிவதற்கு பண்டைத் தமிழ் ஆசிரியர்கள் இரண்டு குளிகைகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். முதற்குளிகை பலனளிக்காவிட்டால் இரண்டாவது குளிகை நிச்சயம் பலன் அளிக்கும். முதற்குளிகைக்கு நாணநாட்டம் என்றும் இரண்டாவது குளிகைக்கு நடுங்கநாட்டம் என்றும் பெயர் ... முத்துமாணிக்கத்திடம் முதலாம் குளிகை பலனளிக்கவில்லை.... இரண்டாம் குளிகையை என் தாய் பிரயோகித்தாள். அது பலன் அளித்தது".

வனசஞ்சாரம் என்ற கதையில் வரும் "மெய்க்கஞ்சி" வித்தியாசாலையைப் பாருங்கள்:

"இன்று இன்ஸ்பெக்டர் வருவார், உற்சாகமாகப் படிக்க வேண்டும்" என்று "பிரின்சிபால் சொன்னால் நிச்சயம் அன்று பரிசோதகர் வரமாட்டார். இன்றைக்கு நூறு கணக்குத் தாருங்கள்; நாளைக்கு முழுவதும் செய்து வருகின்றோம் என்பார்கள் மாணவர்கள். ஆனால் ஒரு கணக்கும் செய்து வரமாட்டார்கள்; அவர்களில் என்ன குறை, வித்தியாசாலை தான் மெய்க்கஞ்சி வித்தியாசாலையாச்சே"

"கதவைப் படீரென்று சாத்தினாள்" என்பதை ஆரம்ப வாக்கியமாகக் கொண்டு அன்பர் எழுதியுள்ள கதை இளம்

தம்பதிகளின் உல்லாச வாழ்க்கையை உய்த்துணராமல், இரா முழவதும் அரட்டையடிக்கும் நண்பர்களுக்குச் "சவுக்கடி" கொடுப்பதாக இருக்கின்றது. "இது காதலல்ல" என்ற கதை வட இலங்கையின் பிரபல மூன்று கோயில்களான சந்நதிமுருகன், பன்றித்தலைச்சியம்மன், வற்றாப்பளை அம்மன் ஆகியவற்றை வைத்து எழுதப்பட்ட ஒரு சாதாரண காதல் கதை தான்.

ஆனந்தவிகடன் ஆசிரியர் "தேவன்" அவர்களைப் பின்பற்றி தாம் எழுதும் தொடர்கதை அத்தியாயங்களுக்கு முகப்பாக கவிதை வரிகளையோ பழமொழிகளையோ எழுதியிருக்கிறார் இவர். அப்படி எழுதியிருக்கும் சில வரிகள் அபாரமாக இருக்கின்றன.

"சகடயோகம்" என்ற தொடர்கதைக்கு அவர் எழுதிய முகப்பு இரண்டைப் பாருங்கள்;

"மிடுக்கான போர்வீரன் ஒருவன் நடந்து சென்றாலும் செல்வானேயொழிய ஒரு கிழக்குதிரையின் மேல் ஏறிச் செல்ல மாட்டான்." - (ஒரு பழமொழி)

"அட கெடுவாய் பல தொழிலுமிருக்கப் பள்ளி
ஆசிரியத் தொழில் பெரிதென்றெண்ணி வந்தோம்
படியினிலே மடப்பள்ளி வேலை நூறு
படி பெரிதென் றிப்பொழுதே யறிந்து கொண்டோம்
- (பல்லிகள் தூது கோஷ்டி சோ.ந)

அவர் எழுதிய தொடர்கதைகளிற் சில கடித ரூபமாகத் தொடர்கின்றன. இராசமணியைப் பற்றி எழுதிவிட்டு அவள் சகோதரிமார் நால்வரையும் பற்றி எழுதிய நான்கு காதற் கதைகளும் புது முறையாகவும் நன்றாகவும் அமைந்து இருந்தன.

இவை மாத்திரமன்றிப் "பாட்டியின் ஆராய்ச்சி" என்ற தலைப்பில் நகைச்சுவைக் கட்டுரைகள் பலவும் அவர் எழுதியிருக்கிறார். சங்க நூற் காட்சிகள் சிலவற்றிற்கு நல்ல மதிப்புரைகளும் வரைந்துள்ளார். இவற்றிலிருந்து கசினின் இலக்கியப் பரப்பை அறிய முடிகிறது.

குறுகிய காலத்தில் வெகு பிரசித்தமான "கசின்" அவர்கள்

அரசினர் பாடசாலையொன்றில் ஆசிரியர் என்று அறியும்போது தான், அவர் தன் சூழலில் உள்ள பாத்திரங்களை வைத்துக் கதைகள் எழுதும் இரகசியம் தெரிகிறது. காதற் கதைகள் போதும், அன்பையும், தாய்மையையும், ஒற்றுமையையும் பிரதி பலிக்கும் கதைகளையும் எழுதிக் குவிக்க வேண்டும் என்பது தான் கசினுக்கு என்னுடைய வேண்டுகோள்.

**- கனக செந்திநாதன்**
(கரவைக்கவி கந்தப்பனார்)
-ஈழகேசரி 26.06.55

# பொருளடக்கம்


குஞ்சு மாணிக்கம் ........ 3
கதவைச் சாத்தினாள் ........ 9
வன சஞ்சாரம் ........ 15
மணி ஓசை ........ 24
யார் பேசுகிறது? ........ 42
மிஸ் அன்னபூரணி ........ 51
நூலும் நூற்கயிறும் ........ 70
இராசமணி ........ 83
ஒரு சொட்டுக் கண்ணீர் ........ 101
ஆரம்பசிகிச்சை ........ 112
பரிமள சுந்தரி ........ 119
செய்ந்நன்றி ........ 129
ஆசை நாயகி ........ 135
சிலந்திவலை ........ 139
தமிழன்தான் ........ 145

## நூலாசிரியர் எழுதிய நாவல்களும் வெளிவந்த பத்திரிகையும், வருடமும்

| | | |
|---|---|---|
| ✳ வண்டியில் வளர்ந்த கதை | – ஈழகேசரி | – 1947 |
| ✳ சகடயோகம் | – ஈழகேசரி | – 1949 |
| ✳ இதயஊற்று | – ஈழகேசரி | – 1951 |
| ✳ குமாரி இரஞ்சிதம் | – ஈழகேசரி | – 1952 |
| ✳ பச்சைக்கிளி | – ஈழகேசரி | – 1957 |
| ✳ கற்பகம் | – தினகரன் | – 1959 |
| ✳ தேடிவந்த செல்வம் | – ஈழநாடு | – 1959 |
| ✳ நிதானபுரி | – தினகரன் | – 1961 |
| ✳ சொந்தக்கால் | – தினகரன் | – 1961 |
| ✳ கண்டெடுத்த கடிதங்கள் | – வீரகேசரி | – 1963 |

# குஞ்சு மாணிக்கம்

- தற்கொலை செய்யக்கூடியதான மனப்பான்மை இல்லா விட்டாலும், தற்கொலை செய்ய ஆயத்தமாக இருப்பவர்கள் போல நடிப்பவர்களே காதலில் வெற்றி அடைவார்கள்.
- சமயத்துக்குத் தக்கபடி தமது கொள்கைகளை மாற்றுபவர்களே அரசியற் சூதாட்டத்தில் வெற்றி அடைவார்கள்.

*கதாநாயகி*

**ப**ண்டைக்கால இலக்கிய ஆசிரியர்கள் எவராவது தமது கதாநாயகிக்கு "இடையிருந்தது" என்று கூறியது கிடையாது. கடைசி, சந்தேகத்தில் ஆராயப்படவேண்டிய விஷயம் என்றாயினும் வைத்திருப்பார்கள். ஆனால், குஞ்சுமாணிக்கத்திற்கு இடை இருந்தது என்றுதான் நிச்சயமாகச் சொல்லுவேன். மற்றவர்கள் எல்லாம் சந்தேகப்பட இடம் வைக்கக்கூடாதென்று நினைத்துப்போலும், அவள் மார்ச்சட்டைக்கும் அரையில் உடுத்திய சீலைக்குமிடையில் நாலு விரற்கடையகலம் தெளிவாகப் புலம்படும் வண்ணம் உடுத்தியிருப்பாள். ஆனால் அவள் எதிரில் வரும்பொழுது எனது நெஞ்சு மணிக்கூட்டில் ஆடும் குண்டு போல அடித்துக் கொள்ளும். அவள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும், அவளுடைய நாரி அந்தப் பக்கமும் இந்தப் பக்கமுமாக வளைந்து கொடுக்கும் காட்சி எங்கே முறிந்து விடும் என்று என்னைத் திகிலுறச் செய்யும். இந்தப் பயங்கரக்காட்சியை நான் அனேகமாகப் பார்க்கவே விரும்புவதில்லை. யாழ்ப்பாணம் பெரிய தெருவால் போகும்பொழுது கண்ணைப்பறிக்கும் பல வர்ணப் புள்ளித் துணிகள்

இருபக்கமும் கடைகளில் காட்சியளிப்பதைக் காணலாம். இந்த அழகான துணிகள் எல்லாம் வெட்டப்பட்டுச் சட்டையாகிப் பெண்களின் ஒரு தோட்பக்கத்தால் சிறிது வெளியே காட்சியளிப்பதைக் கண்டால் வயிறு பற்றியெரியும். அவைகளின் முழு அழகையும் காண யாருக்குத்தான் ஆவல் இராது. இந்த ஆவலைக் குஞ்சுமாணிக்கம் பூரணமாகப் பூர்த்தி செய்கிறாள். அவள் அரையிற் கட்டுவது சீத்தைத் துணிகளே.

குஞ்சுமாணிக்கம் எங்கள் வீட்டு வேலைக்காரி. அவளின் சரியான பெயர் **புஞ்சிமெனிக்கா**. எனது தாயார் தனது தமிழ் வாயால் திருத்திக் குஞ்சுமாணிக்கம் என அழகாக அழைப்பாள். அதுவே அவள் பெயராகிவிட்டது.

***'மற்னி'க் காட்சி***

எனக்காகப் புகையிலை பிறந்ததோ! புகையிலைக்காக நான் பிறந்தேனோ என்பதில் எனக்கு இப்பொழுதும் சந்தேகம். ஏனெனில் என் வாயிற் புகையிலை இல்லையென்றால் நான் சாப்பிட்டுக் கொண்டிருக்கவேண்டும், அல்லது நித்திரை செய்துகொண்டிருக்க வேண்டும். இந்தப் பொல்லாத பழக்கத்தினால்தான் அந்த "மற்னி"க் காட்சியை நான் பார்க்க நேர்ந்தது. என் வாயில் புகையிலை இருந்தால் நான் அடிக்கடி எழும்பித் துப்புவது வழக்கம். இந்த இடத்தில் இதோடு தொடர்பற்ற இன்னொரு கதையையும் சொல்லி விடுகிறேன். புகைவண்டிகளிற் பிரயாணம் செய்யும்பொழுது என்னுடன் ஒருவரும் கதைக்க முடியாது. என் வாய் நிரம்ப எச்சில் இருக்கும். பெட்டிகளில் "துப்பக்கூடாது" என்று எழுதப்பட்டிருக்கிறதல்லவா? சமீபத்திற்றான் "உள்ளேதான் துப்பக்கூடாது, வெளியிலே துப்பலாம்" என்று எனக்குத் தெரிய வந்தது.

காலைப்போசனம் முடிந்து, ஒரு அமைதி வீடெங்கும் நிலவிய நேரம். நான் எனது அறையிற் படித்துக்கொண்டிருந்தேன். காலை பத்து மணி இருக்கும். ஜன்னலால் எட்டி வெளியில் துப்பினேன். துப்பும்பொழுது இன்னொரு காட்சியையும் கண்டேன். சில வித்தியாதிகாரிகள் மாணவர்களின் கையை மணந்து அவர்கள் என்ன உணவைப் பகற் போசனமாக உண்டிருக்கிறார்கள் என்று அறிந்து கொள்ளுகிறார்களாம். அது மாதிரியான ஒரு பரிசோதனையை நான் ஜன்னலுக்கூடாகக் கண்டேன். குஞ்சுமாணிக்கத்தின் கையை முத்துச்சாமி மணக்கக் கொண்டு போகும்பொழுது எனது துப்பலும் அவள் கையில் விழுந்து அவனுடைய பரிசோதனைக்கு இடையூறு செய்தது. அதாவது அவனுக்கு

உண்மையான மணம் புலப்படாது புகையிலைக்கஷாயந்தான் மூக்கிற்பட்டது. இவை யெல்லாம் நடந்தது கணப்பொழுதில். "யார் துப்பினது என்று" இவர்கள் மேலே ஜன்னலைப் பார்க்குமுன் நான் மறைந்துவிட்டேன். "யாரோ துப்பிவிட்டுப் போய்விட்டார்கள்" என்று அவர்கள் மேலே ஜன்னற் பக்கத்தில் கருத்தைச் செலுத்தவில்லை.

எங்கள் வளவுக் கொல்லையில், பழைய மெத்தைகளும், வளையங்கழன்ற வில்லு வண்டியும் இன்னும் கழிக்கப்பட்ட சாமான்களும் உள்ள ஒரு ஓலைக் கொட்டில் உண்டு. குஞ்சுமாணிக்கமும், முத்துச்சாமியும் அங்கேயோடி, இங்கேயோடிக் கடைசியாக அங்கே போய்ச் சேர்ந்தார்கள்.

### உண்மைக் காதல் தான்

"உண்மைக் காதல் தானா?" என்று அறிவதற்கு நமது பண்டைத்தமிழ் ஆசிரியர்கள் இரண்டு குளிகைகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். முதற்குளிகையிலே பலன் அளிக்காவிட்டால் நிச்சயம் இரண்டாவது குளிகையில் பலன் அளிக்கும். முதலாவதற்கு "நாண நாட்டம்" என்றும், இரண்டாவதற்கு "நடுங்க நாட்டம்" என்றும் பெயர். "என்ன உன்னுடைய கண் சிவந்து நுதல் வெயர்த்து ஒரு மாதிரி நிற்கிறாய்" என்று கேட்டால் தலையைக் குனிந்து நிலத்தைச் சுரண்டிக்கொண்டு நிற்பாள். அதிலிருந்தும் பிடிக்கலாம். அதற்கும் பிடிபடாவிட்டால் "இன்ன நிறம் குறியுள்ள ஒருவன் கார் விபத்தில் காயப்பட்டுக் கிடக்கிறான்" என்று சொன்னால் உடனே நடுங்குவாள். இதிற் பிடிபடாமலே போகாது. இந்தக் குளிகைகளைக் குஞ்சுமாணிக்கத்தில் பிரயோகஞ் செய்து உண்மையை அறிந்து விடலாம் என்றால் அவளை நான் எப்படிக் கேட்கலாம். எனது தாயாரும் அகப்பொருள் இலக்கணம் படித்திருக்கிறாள் என்று எனக்குப் பிறகுதான் தெரியும்.

அம்மா, கோவிலால் வந்ததும் "குஞ்சுமாணிக்கம், குஞ்சுமாணிக்கம்" என்று கத்தினாள். என்னைக் கேட்டாள். நான் காணவில்லை என்றேன். "நீ அறைக்குள் போனால் போனது தான்" என்று என்னையும் வைது விட்டு அப்பாற் போகக் குஞ்சுமாணிக்கம் கொல்லைப் பக்கத்தில் வந்து நின்றாள். எங்கே போனாய், இதென்ன கன்னத்தில் கீறிக்கிடக்கிறது? என்ன வேர்க்க வேர்க்க வந்து நிற்கிறாய்? என்று கேள்விக்கு மேற் கேள்வி போட்டு முதலாம் குளிகையைப் பிரயோகஞ் செய்தாள். "கொல்லைப் பக்கத்துக் கொட்டிலிலுள்ள பழம் மெத்தையில் வெள்ளைப்போடு முட்டையிடப் போய்க் கிடந்தது. பிடிக்கப் போனேன்

முகத்தில் கீறிவிட்டது. எங்குந் துரத்திக் களைத்துப்போனேன்" என்று மட மட என்று சொன்னாள். முதலாம் குளிகை பலன் அளிக்கவில்லை.

அம்மா, ஒத்துக்கொண்டவள் போல் "சரி அந்த மரக்கறியை எடுத்துக் கொண்டு போ, நான் அடுத்த வீட்டில் முத்துச்சாமியைப் பிடிக்கப் பொலிஸ்காரர் போகிறார்களாம். பார்த்துக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லித் திரும்பினாள். குஞ்சுமாணிக்கத்தின் சரீரம் பதை பதைத்ததை நான் கடைக்கண்ணால் தெளிவாகக் கண்டேன். இரண்டாம் குளிகை பலன் அளித்தது.

## *இரு அரசியற் கட்சிகள்*

"முற்பிறப்பில் ஒட்டி நின்று கதை கேட்டவர்கள், மறு பிறப்பில் பாம்பாகப் பிறப்பார்கள்" என்று பாட்டி சொல்லுவாள். ஆனால் முற்பிறப்பில் பாம்பாகப் பிறந்தவர்கள் தான் மறுபிறப்பில் ஒட்டுக் கேட்க முடியும் என்பது எனது எண்ணம். மூலைகளிலும், முடுக்குகளிலும் நுழைந்து சென்று மூச்சு விடாமல் நின்று கேட்பது இலகுவா?

தினமும் இரவு பத்து மணியின்மேல் எனது தகப்பனாரினதும், தாயாரினதும் மந்திராலோசனை, கூடத்தில் நடக்கும். அன்று அவர்கள் மந்திராலோசனையக் கேட்க நான் மிகவும் விரும்பினேன். குஞ்சுமாணிக்கத்தின் சம்பவம் அம்மாவுக்குத் தெரிந்து விட்டது. மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கிறாள் என்று தெரிந்து கொள்ள வேண்டும். குஞ்சுமாணிக்கத்தின் விஷயத்தில் எனக்கு விஷேச சிரத்தை உண்டு. ஆனால் அவர்கள் சம்பாஷணை நான் நினைத்ததற்கு முழுமாறாக இருந்தது. அவர்கள் சம்பாஷணை வருமாறு:

"வரவரக் காரியம் முற்றி வருகிறது பாருங்கள். இன்று காலை நான் கோயிலால் வந்தபொழுது இவன் குஞ்சுமாணிக்கத்திடம் காகிதம் கொடுத்து அனுப்பி இருக்கிறான். நான் வர அவன் இங்கே இல்லை. நான் உடனே அவள் வீட்டுக்கு ஒரு சாட்டைச் சொல்லிக் கொண்டு போனேன். அங்கே சகுந்தலை இருந்து அப்பொழுதுதான் ஒரு கடிதத்தை வாசித்துக் கொண்டிருக்கிறாள். விஷயத்தை இப்படியே வளரவிட்டால் இவர்களுடைய காதல் வெளிப்பட்டதானால், அவர்களிடம் பிறகு ஒரு சீதனமும் வாங்கிக் கொள்ள முடியாது. கடைசியாக வெறும் பெண் தான் எடுக்க வேண்டி வரும். ஆகையால் நீங்கள் இப்பொழுதே யாரையும் கொண்டு கேட்பியுங்கள். பையனுக்கு இந்த வருஷம் செய்யப் போகிறேன். "உனக்கு விருப்பமானால் என்ன சீதனம் கொடுப்பாய்" என்று

கேட்பியுங்கள். அவர்களுக்கு மிகவும் விருப்பம். கேட்கப் பயந்திருக்கிறார்கள்" என்று அம்மா சொன்னாள்.

"உனது கதையென்ன? நேற்றுவரை பகையாக இருந்துவிட்டு இன்று கலியாணம் பேசுகிறதா? இனி இந்தத் தமிழ்க் கொங்கிரஸ்காரன் வீட்டிற் செய்தால் இவனுக்கு வருகிற உத்தியோகமும் வராமல் நின்று விடும். இனி இவனுக்குத் தனது மகளைக் கொடுக்கலாமென்று நினைத்துக்கொண்டு தானே முருகேசு முதலியார் யூ.என்.பி. க்கு முதுகு கொடுத்தவர். அதற்கிடையில் இப்படிச் செய்தால் உலகம் என்னைப் போக்கிலி என்று சொல்லாதா? இவன் கிடக்கிறான். சும்மா போ" என்று ஐயா சொன்னார். "எனக்கென்னவோ கவலையாயிருக்கிறது. இந்தக் காலத்ததுகள் விபரீதபுத்தி படைத்ததுகள்" என்று அம்மா பெருமுச்சுவிட்டாள்.

இந்தச் சம்பாஷணை உங்களுக்கு விளங்காவிட்டாலும் இதன் பிறகு நான் கிணற்றடியிற் கேட்ட சம்பாஷணை உங்களுக்கு நன்றாக விளங்கும்.

"குஞ்சு! சிங்களத்தியைக் கட்டிக்கிட்டன் என்று நம்ப தமிழ் காங்கிரஸ்காரன்கள் அடிக்க வருவான்களோ தெரியவில்லை."

"அவங்க அடிக்கமாட்டாங்க; ஆனா எனக்குத்தான் ஒன்னைக் கட்டிக்க மனமில்லே"

"ஏன் அப்படிச் சொல்றே குஞ்சு?"

"உங்களுக்கு நீங்கள் இன்னசாதி என்று சொல்ல வெட்கம்; தெருவால் நிமிர்ந்து நடக்கவும் தெரியாது, பிறகு நான் அடிக்கடி 'தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா' என்று கத்தவேண்டி வரும்."

"இந்தா குஞ்சு பகிடியை விட்டுட்டு, நாம் இருவரும் ஒருவரையும் காணாது ஓடிப்போய் விடுவோமோ?"

'உன்றை புத்திதான் புத்தி; இவங்களைப்போல எசமானும் கிடைப்பாங்களோ? உங்க எசமானும் எங்க எசமானும் சமாதானமாய்ப் போய்விட்டா எங்க கவலை தீர்ந்துவிடும். தமிழ்க் கொங்கிரசும் யூ.என்.பீ யும் சேர்ந்திட்டா இவங்க சிநேகமாகி விடுவாங்கள்.'

'சாமி, நல்லூர்க் கந்தா, உனக்கு ஒரு அபிஷேகம் செய்விக்கிறேன். தமிழ்க் காங்கிரசையும் யூஎன்பீ யையும் சேர்த்துப்பிடு.'

## கவலை தீர்ந்தது

எனது வேண்டுதலோ, முத்துச்சாமியின் வேண்டுதலோ; நல்லூர்க் கந்தன் அருள் செய்தான். கலியுக வரதன் முருகப் பெருமான் அல்லவா? தொழிற்சங்க மசோதாவில் அரசாங்கக் கட்சியுடன் தமிழ்க் காங்கிரஸ் சேர்ந்து 'வோட்' அளித்தது என்ற புதினத்தை அம்மாவுக்கு வாசித்துக் காட்டினேன். 'கவலை தீர்ந்தது' என்று அம்மா ஒரு பெருமூச்சு விட்டாள். குஞ்சுமாணிக்கத்தின் முகத்தில் ஒரு புதுப்பிரகாசம் தோன்றியது. தமிழ்க் காங்கிரசை என்னதான் 'கிளறிக்கல் யூனியன்' திட்டியபோதிலும், என்னால் போற்றாமல் இருக்க முடியாது.

நானும் மனைவியும் சென்றகிழமை 'ஹனிமூன்' அனுபவிப்பதற்காக நுவரெலியாவுக்குச் சென்ற பொழுது குஞ்சுமாணிக்கமும் முத்துச்சாமியும் எங்களுடன் கூடவந்தார்கள்.

(ஈழகேசரி - 25-7-48)

# "கதவைச் சாத்தினாள்"

கதவைப் படீரென்று சாத்தினாள். நான் திரும்பிப் பார்த்தேன். கதவைப் பூட்டியும் விட்டாள். இப்படிச் செய்வாள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அவள் கதவைப் பூட்டியது எனக்குப் பெரும் மிகிழ்ச்சி. இன்பத்தினால் என் நரம்புகள் எல்லாம் துடிதுடித்தன. எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. நானும் நாலைந்து நாட்களாக இதற்கு வழியென்னவென்று யோசித்து யோசித்து அலுத்துவிட்டேன். என்னுடைய தந்திரங்கள் ஒன்றும் பலிக்கவில்லை.

சாரதாவும் இதற்கு வழி என்னவென்று என்னைப்போல் யோசித்திருக்கிறாள் என்று நான் நினைக்கவில்லை. அவள் கதவைப் படீரென்று சாத்தினபொழுதுதான், எனது மன உணர்ச்சியே அவளுக்கும் இருந்தது என்று எனக்குத் தெரிந்தது. ஆனால் நான் சிறிதும் அக்கறையின்றித் திரிகிறேன் என்று அவள் நினைத்திருக்கின்றாள். அவள் கதவைச் சாத்திய வேகத்திலிருந்தும் அவள் முகக்கடு கடுப்பிலிருந்தும் அது தெரிந்தது. அவளுக்கு எனது எண்ணம் தெரியவில்லையே என்பதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. அதில் எனக்கு ஓரளவு மகிழ்ச்சியும் உண்டு. இன்னும் நான் காட்டிக்கொடாமல், "இப்படிப் பொழுது பட்டதும் படாததுமாகப் படுக்கைக்குப் போனால் மற்றவர்கள் என்ன சொல்லுவார்கள்" என்று மெதுவாகச் சொன்னேன்.

"மற்றவர்கள் என்று ஏன் சொல்லுகிறீர்கள்; அருணாசலம் என்று சொல்லுங்கள்; நீங்கள் அருணாசலத்தைக் கலியாணம் செய்வதற்கு என்னை ஏன் கலியாணம் செய்தீங்களோ தெரியவில்லை" என்று படபடப்பாகப் பேசினாள்.

எனக்குச் சிரிப்பு அடக்க முடியவில்லை. அவளும் சிரித்தாள். இந்தச் சிரிப்பொலிக்குள் வெளியிலிருந்தும் ஒரு ஒலி கேட்டது. அருணாசலம் என்னைக் கூப்பிட்டான். இரண்டு மூன்று சத்தம் கூப்பிட்டான். நான் ஒன்றும் பேசவில்லை. ஆனால் அருணாசலமும் திரும்பிப் போவதாய்க் காணவில்லை. பின்னர் கூப்பிட்டான். நான் அவனுக்கு மறுமொழி சொல்ல வாய் உன்னினேன்.

ஆனால் கூப்பிடத் தொடங்கினதும் சாரதா என்னைக் கவனமாகப் பார்த்துக்கொண்டு நின்றிருக்கிறாள். நான் அவனுக்கு மறுமொழி சொல்ல வாய் உன்னினதும், உடனே அவள் எனது வாயைக் கெட்டியாகப் பொத்திக் கொண்டாள். இதுவும் நான் எதிர்பார்க்கவில்லை.

நான் அவளிலிருந்து திமிறி அருணாசலத்தை விசாரித்திருக்கலாம், அவள் எனக்கு விருப்பமானதைத்தானே செய்தாள். பேசாமல் இருக்க எனக்குத் துணிவில்லை.

அருணாசலத்துடன் இருந்து பேசுவதற்கு எனக்கு உண்மையில் விருப்பமில்லை. ஆனால் அவன் கூப்பிட்டபொழுது, ஏன் என்று விசாரியாமல் விட எனது இயற்கை உணர்ச்சி விடவில்லை. ஒருவன் கூப்பிடும்பொழுது, ஏன் என்று கேட்காமல் இருக்க முடியுமா? எனக்குச் சிறிதும் விருப்பமில்லாமலே நான் ஏன் என்று கேட்க உன்னினேன்.

இப்படித் தத்தளித்த எனக்கு ஒரு உறுதுணையாக, அவள் என் வாயைப் பொத்தினாள். "நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது தாயம்" என்ற மாதிரிச் சிறிதும் விருப்பமின்றி ஏன் என்று கேட்க நினைத்த எனக்கு, அவள் வாயைப் பொத்தினது ஒரு சாட்டாகப் போய்விட்டது.

அவள் வாயைப் பொத்தினதும், அவளுடைய சமயோசித புத்தியினாலும், அவளுடைய ஸ்பரிசத்தினாலும், நான் ஆனந்த பரவசமாகி விட்டேன். அதோடு அருணாசலம் மேற்கொண்டு கூப்பிட்டுக் கொண்டு நிற்கிறானே என்ற பயமும் மனதில் இருந்தது. ஏதோ நல்லகாலமாக அருணாசலம் போய்விட்டான்.

அருணாசலம் போய்விட்ட சம்பவம் நீங்கள் ஏதோ சாதாரண சம்பவம் என்று நினைக்கக் கூடாது. அது உலக அதிசயங்களிலொன்று. சூரிய சந்திரர்களின் கதி வேறுபாட்டிற்கு அதை ஒப்பிடலாம். இந்தப் பெரிய அதிசயம் நிகழச் செய்தவள் எனது அருமைச் சாரதா அல்லவா? அவளுக்கு நான் பதிலுக்குச் செய்யக்கூடியதென்ன? வையகமும் வானமும் ஈடாகுமோ? என்னால் முடிந்ததெல்லாம் ஒரு சிறு முத்தம் தானே.

நான் விவாகஞ்செய்து இன்னும் சரியாக நாலு மாதங்கூட ஆகவில்லை. சாராதாவின் அகத்திலும், எங்கள் அகத்திலும் ஆக இந்த நாலுமாதமும் கழிந்துவிட்டது. பட்டணத்தில் குடியேறி ஆறே ஆறு நாட்கள்தான். நாங்கள் கழித்த நாலுமாதங்களிலும் நினைத்துக்கொண்டிருந்ததெல்லாம் பட்டணத்தில் நாங்கள் தனியே சீவிப்பதைப் பற்றித்தான்.

தம்பி, அக்கா, மாமன், மைத்துனன் ஆகியவர்களின் தொந்தரவுகளின்றி, சிவபூசையில் நுழையும் கரடிகளின் தொந்தரவுகளின்றி, வானத்தின் உச்சியில் பறக்கும் சோடிப் பட்சிகள் போல, சுற்றுப்புறமுள்ள சர்வ உலகத்தையும் மறந்து, சீவிக்கலாம் என்று கற்பனைமேற் கற்பனை செய்திருந்தோம்.

"நான் உங்களோடு பட்டணத்தில் தனிக் குடித்தனம் செய்ய வரவில்லை. இங்கே எல்லோரும் தங்களுக்குள் சிரிக்க, என்னையே சுற்றித் சுற்றித் திரியும் நீங்கள், பட்டணத்தில் தனிக்குடித்தனம் செய்ய வந்தால், குரங்கின் கையில் கொடுத்த பூமாலை மாதிரிக் கசக்கிப் பிழிந்து விடுவீர்கள்" என்று பாதி வெற்றியும் பாதி பகிடியும் போலச் சொல்வாள்.

"அப்படியானால் நான் உன்னோடு கூடிப் பேசுவதும் சிரிப்பதும் உனக்குப் பிடிக்கவில்லையென்று சொல்லு".

"ஐயையோ! அப்படி யார் சொன்னது? மற்றவர்கள் சிரிக்கிறார்கள் என்றல்லவா சொன்னேன்" என்று கதையைப் புரட்டிப் பேசுவாள். அந்த நேரத்தில் ஒருவர் பேசுவதில் உள்ள சரி பிழைகள் மற்றவர்களுக்குத் தெரியாது. பேசுபவருக்கும் தான் என்ன கதைக்கிறேன் என்று சரியாகத் தெரியாது. இருவரும் தன்வசமிழந்து அன்பு வசப்பட்டுத் தமியராகிய நிலையிற் பேசுவது அல்லவா? "பட்டணத்துக்குப் போனால் நீங்கள் நெடுகலும் சினிமாவுக்கு வரச் சொல்லிக் கேட்பீர்கள்; எனக்குச் சினிமா என்றாலே பிடியாது" என்று வேண்டுமென்றே சொல்லுவாள். இப்படி நாங்கள் தனிக் குடித்தன வாழ்க்கையின் கற்பனையிலேயே சஞ்சரித்து வந்தோம்.

நாங்கள் பட்டணம் வந்தபொழுது எங்களைப் புகையிரத நிலையத்தில் நண்பன் அருணாசலம் வரவேற்றான். அருணாசலமும் நானும் ஒரே கலாசாலையிலே படித்து ஒரே கந்தோரிலேயே உத்தியோகம் பார்த்து வந்தோம்.

நான் விவாகஞ் செய்துகொண்டு குடித்தன வாழ்க்கையை ஆரம்பிக்கவே, அவன் எதிர் வீட்டை வாடகைக்கு ஒழுங்கு செய்து கொண்டு தனது தாயுடன் அங்கே வசித்துவந்தான். நானும் அவனும் ஒரு வீட்டில் இருக்கும் காலத்தில் இரவு பத்துப் பதினொரு மணியளவிலும் இருந்து கதைப்போம். ஜவகர்லால்நேரு, அட்லி முதலிய இராஜ தந்திரிகளின் கதை தொடக்கம் அடுத்த வீட்டுப் பொன்னம்மாவின் கதைவரை, ஊர் வதந்திகளெல்லாம் கதைத்துக் கதைத்து முடியாமல் அரைமனத்தோடு நித்திரைக்குப் போவோம். மாதக்கணக்காக, வருஷக்கணக்காக நாங்கள் இதே மாதிரிச் சீவித்து வருகிறோம்.

இந்த அந்நியோன்னிய தொடர்பின்மேல், முற்றிக் கனிந்த நட்பின் மேல், நேற்று இடையிலே வந்து புகுந்த சாரதா ஆட்சி செலுத்துவாள் என்று அருணாசலம் என்ன யார்தான் நம்புவார்கள்?

பெரிய வீராதி வீரர்கள், வீரமார்த்தாண்டார்கள் ஒரு பெண்ணின் கடைவிழியிலிருந்து செல்லும் கூரிய பார்வையின் முன்னால் மண்டியிட்டார்கள் என்று இதிகாசங்கள் கூறும்பொழுது நான் சாரதாவுக்கு முன்னால் தோப்புக்கரணம் போட்டாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை.

நானும் சாரதாவும் எத்தனையோ திட்டம் போட்டு அவளோடு தொடங்கிய குடித்தன வாழ்க்கைக்கு ஆரம்பசகுனமாக, அருணாசலம் வீட்டில் முதல்நாள் விருந்து நடந்தது. அன்றே சாரதாவுக்கு அருணாசலத்தின் மேல் பகைமூண்டுவிட்டது. "நண்பர்கள் என்றால் இப்படி எந்த நேரமும் புருஷன் பெண்சாதி மாதிரி ஒட்டிக்கொண்டு திரிகிறதா?" என்று என்னிடம் சொன்னாள்.

சாரதா பல திட்டங்கள் தனக்குள் எண்ணியிருந்தாள். நான் கந்தோரால் வருவதைக் காவல் நின்று வெளிக் கேற்றில் வந்து கூடிக்கொண்டு வரவேண்டுமென்று எண்ணியிருந்தாள். காலையில் கந்தோருக்குப் போகும் பொழுது வெளிக்கேற்றுவரையும் வந்து நான் மறையும் வரையும் பார்த்துக் கொண்டு நின்றுவிட்டு வருவேன் என்று எண்ணியிருந்தாள்.

நான் கந்தோரால் வந்தவுடன் எனது கந்தோர்ப் புதினங்களைத் தான் கேட்டும், தான் புதினப்பத்திரிகைகளில் வாசித்தவற்றை எனக்குச் சொல்லியும் சம்பாஷிக்க வேண்டும் என்றெல்லாம் நினைத்திருந்த சாரதாவின் எண்ணங்கள் எல்லாவற்றையும் அருணாசலம் சிதறடித்து விட்டான்.

என்னைச் சாரதாவின் இடத்தில் வைத்துப் பார்த்தால், நான் அவளைக்

கொலை கூடச் செய்திருப்பேன். சாரதா பொறுமைசாலி. நான் காலையில் கந்தோருக்கு வெளிப்பட ஐந்து நிமிஷங்களுக்கு முன்னே அருணாசலம் என்னைக் கூட்டிப்போக வந்து விடுவான். சாரதா என்ன செய்வாள். பாவம், பல்லைக் கடித்துக்கொண்டு உள்ளே நிற்பாள். மாலையில் கந்தோரால் திரும்பி வரும்பொழுது அருணாசலம் கூட வருவான். வெளிக் கேற்றிலும் ஒரு ஐந்து நிமிஷம் நின்று கதைத்துவிட்டுத்தான் போவான்.

சாப்பிட்டு இரவு ஏழுமணிக்கெல்லாம் என்னோடு பேசுவதற்கு வந்து விடுவான். பிறகு எங்கள் பேச்சு முடிய இரவு பன்னிரண்டு மணிவரை யிலும், சிலசமயம் செல்லக்கூடும். அதில் வெடிச் சிரிப்புகளும், கனைப் புக்களும் கலந்து கலகலப்பாகவும் சுவாரஸ்யமாகவும் எங்கள் கதை செல்லும்.

சாரதாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும். சில சமயம் நான் அருணாசலத்திடம் "அலுப்பாயிருக்கிறது போடா" என்று சொல்லி எழும்புவேன். அவன் முதுகில் ஒரு குத்துப் போட்டுப் பிடித்து இருத்தி விடுவான். நான் இரசனையில்லாமல் அவன் கதையை என்னவோ நினைத்துக் கொண்டு கேட்டுக் கொண்டு இருப்பேன். அவன் இடையிலே ஒரு குறுக்குக் கேள்வி போட்டு என்னைத் தன்னுடைய கதைக்குத் திருப்புவான். நான் அவனுடைய கதையை அருவருப்போடு கேட்பதை அவன் உணரவில்லை.

நான் அவனோடு கதைத்து விட்டுப் படுக்கைக்குப் போகும்பொழுது சாரதா நல்ல நித்திரையாய்க் கிடப்பாள். அவள் நித்திரையில்லாமல் விழிப்பாக இருந்தால் உடனே ஒரு புயல் அடிக்காமல் விடாது. எனது நல்ல காலம் அவள் அதிகமாக நித்திரையாகவே இருப்பாள்.

இப்படி எங்கள் தினசரி நடக்க வேண்டிய இன்ப சந்தர்ப்பங்களுக்கு அருணாசலம் கரடியாக நின்றான். இரவில் அவனைக் கதைக்க வராமற் செய்வதற்கு என்ன வழியென்று நானும் சாரதாவும் தனித்தனியே யோசித்துக் கொண்டே இருந்தோம்.

அன்று அருணாசலம் வரச் சிறிது பிந்திவிட்டான். சாரதா சாப்பாடானதும், படுக்கையறைக்குள் விரைவாகப் போய்ப் படுக்கையைத் தட்டிப் போட்டாள். "இந்தாருங்கோ" என்று என்னை அழைத்தாள். நான் அறையுள் நுழைந்ததும் கதவைப் படீரென்று சாத்தினாள்.

"காவன் றன் மைந்தலுமக்
கன்னிகையும் தானுமங்கு

தேவ சுகங்கண்டு
விழியே திறக்கவில்லை
ஆவி கலப்பி
னமுத சுகந்தனிலே
மேனியங்கு மூடி
யிருந்த விழிநான்கு"

நானும் சாரதாவும் செய்து கொண்ட ஒழுங்கின்படி, அருணாசலத்திற்கு விவாகஞ் செய்து வைத்து விடவேண்டுமென்ற தீர்மானத்தோடு மறுநாள், அருணாசலத்தின் தாயோடு பேசினேன். தனக்கு இப்பொழுது விவாகம் வேண்டாம் என்று சொல்லித் திரிந்த அருணாசலம், முதனாளிரவு தனது தாயாருக்குத் தான் மிக விரைவில் விவாகஞ் செய்ய வேண்டுமென்று சொல்லி விட்டானாம்.

(ஈழகேசரி - 5-6-49)

# வன சஞ்சாரம்

● 'விலங்குகள் ஒற்றுமையாகப் படையெடுத்துவரின்
மனிதர்கள் எந்த மூலைக்கு...."

**நா**ன் ஒருவன்தானா? உலகத்தில் எந்த வாலிபனுக்கு, எந்தப் பெண்ணுக்குத் தான் விவாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்று ஆசையில்லை. ஆனால், பெற்றோர்கள் விவாகம் பேசிக்கொண்டு சென்றால், பிள்ளைகள் விவாகம் செய்ய விருப்பமில்லாதவர்கள் போல் "இப்பொழுது வேண்டாம்; ஆ; ஊ; என்று இழுத்துச் சாக்குப் போக்குச் சொல்லி, இறுதியில் விவாகம் செய்வார்கள். ஆனால் நான் அந்த அளவுஞ் செய்யாது, "எனக்கு விவாகம் செய்ய நல்ல விருப்பம்" என்று வெளிச்சமாகச் சொல்லியும், எனக்கு இன்னும் விவாகம் நடக்கவில்லை. இது என் மனக்குறை. இந்தக்குறை எப்பொழுது தீருமோ? அந்த நாளை நினைத்து என்மனம் ஏங்கித் தவங்கிடக்கிறது. "தேடிப் போனால் கிடையாது" என்பது ஒருவேளை உண்மைதானா? அல்லது செவ்வாய்க்குற்றம் என்று சொல்லப்படுகிற அந்தப் பொல்லாத குற்றம் என் விஷயத்தில் தலைப்படுகிறதோ? அந்தநாளும் வந்திடாதோ?...

இவ்வளவும் நான் தினமும் சிந்திக்கும் விஷயம் இதை முதலில் வெட்கமில்லாமல் சொல்லியிருக்கிறேன். ஏனெனில் பின்னால் சொல்லப் போகிற சம்பவங்களுக்குள் உங்கள் மனம் இலயிக்காமல், எனது அடிப்படை என்ன என்பதை நீங்களும் மறவாமல் இருப்பதற்காகத்தான்.

## 2. மெய்க்கஞ்சி வித்தியாசாலை

மெய்க்கஞ்சி வித்தியாசாலை, முன்பு கவர்னராயிருந்த யாரோ ஒரு வெள்ளைக்காரனால் யாழ்ப்பாணப் பட்டினத்தில் கட்டப்பட்ட வித்தியா

சாலை. யோசித்துச் செய்கிற காரியங்களிலும், யோசியாமற் செய்கிற காரியங்கள் சிந்திப்பது கூட, யோசியாமல் வைத்த பெயர் எவ்வளவு பொருத்தமாய் அமைந்திருக்கிறது பாருங்கள். இந்த வித்தியாசாலையில் அடியேனைத் தவிரப் "பிறின்ஸிப்பல்" ஆசிரியர், மாணவர்கள் எல்லோரும் மெய்பேச அஞ்சுவார்கள். மெய்க்கஞ்சி வித்தியாசாலை அல்லவா? எவ்வளவு பொருத்தம்!.

"பிறின்ஸிப்பல்" இன்று "இன்ஸ்பெக்டர்" வருவார், உற்சாகமாகப் படிப்பிக்க வேண்டும்" என்று சொன்னால், நிச்சயம் அன்று "இன்ஸ்பெக்டர்" வரமாட்டார். ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் என்னைத் தனித்தனி கண்டு "இன்று "மீற்றிங்"கில் "பிரின்ஸிப்ப" லில் உள்ள குறையெல்லாவற்றையும் நேரே எடுத்துச் சொல்லப் போகிறேன்" என்று சொல்வார்கள். ஒருவரும் ஒன்றும் பேசமாட்டார்கள். நான் தான் அகப்படுவேன். மாணவர்கள், "இன்று கோயிலுக்குப் போனோம் சேர்; இன்றைக்கு நூறு கணக்குத் தாருங்கள், நாளைக்கு முழுவதும் செய்து வருகிறோம்" என்பார்கள். ஒரு கணக்கும் செய்து வரார்கள், அவர்களில் என்ன குறை, வித்தியாசாலை மெய்க்கஞ்சி வித்தியாசாலை.

இச்சந்தர்ப்பத்தில் வித்தியாபகுதியாரிடமிருந்து, "மூன்றுமாத காலத்திற்கு, வவுனியாப் பகுதியிலுள்ள அரசினர் பாடசாலைக்குப் பதிற்றலைமை ஆசிரியராகக் கடமையாற்ற வேண்டும்," என்று உத்தரவு வந்தது. "பிரின்ஸிபல்லு" க்குப் பெரிய மகிழ்ச்சி. "காட்டுக்காய்ச்சல் வாங்கிக் களை தெளிந்து வருவார் தம்பி;" என்று சொல்லிக் கொண்டார். மூன்று மாதத்திற்குள் விவாகம் நடக்கும் என்று சொன்ன குருவிச் சாத்திரக்காரனைத் தேடிப் பிடிக்க வேண்டுமென்று எனக்கு ஆத்திரமாயிருந்தது.

## 3. காதலியார் சம்மளங்குளம்

நான் சென்ற பாடசாலையின் ஊருக்கு "காதலியார் சம்மளங்குளம்" என்று பெயர். இந்தமாதிரியான பெயரும் இல்லாவிட்டால் எனக்கு அங்கு செல்லச் சிறிதும் விருப்பம் இருந்திராது. "காதலியார்" என்ற சொல் என்னை அங்குச் செல்லத் தூண்டியிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்.

காதலியார் சம்மளங்குளத்திற்கு மாங்குளம் வரையும் புகையிரதத்தில் சென்று பின் பத்துமைல் பஸ்ஸில் சென்று, பின் பத்து மைல் நடுக்காட்டின் ஊடே வண்டியாற் செல்ல வேண்டும்.

குளமும், வயல் வெளியும், ஐந்து ஆறு குடிசைகளுமுள்ள ஒரு சிறு கிராமம். சுற்றிவர யானை, புலி, கரடி வசிக்கும் காடு. வனவிலங்குகளின் இராச்சியத்தில், ஒரு சிறு பகுதியில் மனிதன் தந்திரமாக வாழ்க்கை நடத்துகிறான். வனவிலங்குகள் மாத்திரம் தங்களுக்குள் ஒற்றுமையாகப் படையெடுத்துவரின் மனிதர்கள் எந்த மூலைக்கு.

"மனிதர்களே, நீங்கள் எங்களிலும் பார்க்க அதிகம் திருந்திய சாதிகள் அல்லர்," என்பதை அங்குள்ள குரங்ககள் எனக்கு அடிக்கடி ஞாபகமூட்டி வந்தன. சந்தையிலே குரங்கை ஆட்டிப் பிழைக்கும் குறவனுக்கும், என்னை இந்தக் காட்டிலே ஆட்டும் வித்தியாபகுதிக்கும் யோசித்துப் பார்க்கும்பொழுது அதிகம் வித்தியாசமில்லை.

எனக்கு அங்கே போன நாட்தொடக்கம் நெஞ்சுப் படபடப்பு ஒருநாளும் குறைவதில்லை. கரடி, புலி, யானை என்ற எண்ணம் என்னை விட்டு அகலவுமில்லை. நித்திரையிலும் கரடியையோ புலியையோ, யானையையோ கண்டு அலறுவேன்.

அவ்வூரவர்கள் புது உபாத்தியாயர் என்று என்னை உபசரித்து, "நீங்கள் மிருகங்களுக்குச் சற்றும் பயப்படவேண்டாம். அவைகள் மனிதரை ஒன்றும் செய்யமாட்டா" என்று ஆறுதல் கூறி, எனக்கு வேண்டுவன புரிந்தார்கள். வேறு என்னதான் அவர்களாற் செய்ய முடியும்.

## 4. நிஜமயில் பாடக்கேட்டேன்

காதலியார் சம்மளங்குளம் மிகவும் பெரியகுளம்; அகலமான கட்டு; பார்க்க மிகவும் அழகாக இருக்கும். மறுநாள் மாலை குளக்கட்டு வழியே உலாவிக்கொண்டு சென்றேன். நீரை அளாவிக்கொண்டு வரும் குளிர்ந்த காற்று மிகவும் சுகமாக இருந்தது. ஒரு பக்கம் பச்சைப் பசேலென்ற வயல் வெளியும், மறுபக்கம் இருண்ட நீர்நிலையும், மனதுக்கு ஒரு அமைதியைத் கொடுத்தது.

கொக்குகளுக்கும் மனிதர்களுக்கும் ஏதும் கோபம் உண்டோ தெரியவில்லை. கொக்குகளுக்கு எருமைக்கடா வாகனம் என்பதைக் குளக்கரைகளில் கண்ணாற் கண்டும், "இயமனுக்கு எருமைக்கடா வாகனம்" என்று சொல்லுகிறார்களே.

இதைப்பற்றிச் சிந்தித்திக் கொண்டு செல்கையில் சில மயில்கள் தோகை விரித்து ஆடக்கண்டேன். என் சீவியத்தில் முதன்முதற் கண்ட

அபூர்வக்காட்சி. கடவுள் மனிதன் கவலையின்றிச் சீவிக்க வேண்டுமென்று எத்தனையோ இயற்கைக் காட்சிகளைப் படைத்தார். தனது முழுச்சக்தியையும் கூட்டித் தோகைமயிலைப் படைத்தார். தோகை மயில் ஆடும்பொழுது மெய்மறந்த ஆனந்தம் எவர்க்கும் உண்டாகும்.

குளக்கரையில் தோகைமயில் அழகாக ஆடிக்கொண்டிருக்கும் பொழுது, குளக்கட்டில் அழகாக வளைந்துசென்ற அழுத்தமான மருதமரக்கொப்பில் இருந்துகொண்டு ஒரு நிஜமயில் பாடக்கேட்டேன். மயில் ஆடுமேயல்லாமல் பாடமாட்டாதென்பது எனது புத்தக அனுபவம். மயில் பாடுகிறதே என்று ஆச்சரியத்தால் விழித்தேன். "அக்கினியென்ற றியாயோ கற்புடைய மங்கையரை" என்று அழுத்தியது அந்த மயில். திரும்பியோடிவிடலாமா, என்று யோசித்தேன். வனமோகினியாற்றான் அகப்பட்டுக்கொண்டேன்; காட்டிற் திரியும் மோகினித் தெய்வத்திற்கு சாவித்திரியில் நாரதரின் பாட்டு எப்படித் தெரிய வந்தது?

நெஞ்சு படபடக்கக் கால்கள் கிடுகிடுக்க நின்றேன், சிறிது தூரத்தில் என்னை நோக்கி ஒரு கரடி வந்த கொண்டிருந்தது. எனது நிலைமையை நீங்களே யோசித்துப் பாருங்கள். இன்னும் உயிர் உடலை விட்டுப் பிரியவில்லையென்பது மாத்திரம் எனக்கு நிச்சயமாகத் தெரிந்தது. இந்த நிலைமையில் மரக்கொப்பில் இருந்த நிஜமயில் கீழே குதித்தது. புன்சிரிப்போடு "நீங்கள்தானோ புது உபாத்தியார்" என்று கேட்டது. என்னால் ஒன்றும் பேச முடியவில்லை. கறுப்புக் கோட்டும் நீள மீசையுமாக, அந்த நிஜக்கரடி "போகலாமா அம்மா" என்று கேட்டுக் கொண்டு வந்தது. கரடியும், மயிலும் போய் மறையும்வரையில் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டு நின்றேன். "கற்புடைய மங்கையரை அக்கினியென்றறியாயோ" என்ற கானம், பின்பும் என் காதில் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

## 5. புலியும், மயிலும்

அன்றிரவு என் சிந்தனையை விட்டு அந்த நிஜமயில் அகலவே யில்லை. காலையில் எழுந்து என் அறைக்கு வெளியே வந்தேன். என்னை நோக்கி ஒரு புலி வந்துகொண்டிருந்தது. அறைக்கு உள்ளே போய்க் கதவைப் பூட்டிக்கொள்வதுதான் வழி. நல்லவேளையாக அப்படிச் செய்ய முன் புலிக்குப் பின்னால் வந்த அந்த நிஜமயிலைக் கண்டேன். புலியும் மயிலும் கூடித்திரியும் தர்ம இராச்சியம் என்று யோசிப்பீர்கள்!.

எனது பாடசாலைக்கருகில் நிலம் அளக்கும் சேவையர் கூடாரமடித் திருந்தார். அவரின் பெயர் முத்துக்குமாரு. அவரது சொந்த ஊர்

யாழ்ப்பாணத்து நல்லூர் செட்டித்தெரு. அவரது முகமும், முறுக்கிய மீசையும், வெண்தலையும், அவருடைய புலிவரிப் போர்வையும், எனது மனத்திகிலும் அவரைப் புலியென நினைக்கச் செய்தது. அவர் தனது மகளுடன் அங்கே இருந்தார். மகளின் பெயர் வனலட்சுமி. வனங்களில் சஞ்சாரம் செய்பவர் ஆகையால் தனது மகளுக்கும் வனலட்சுமி எனப்பெயர் வைத்து விட்டார்போலும். சுருக்கமாகக் கூப்பிடுவதற்காக "வனா" என்று கூப்பிட்டு, அது பின் திரிந்து "வானா" என்றாகி விட்டது. இனி "நிஜமயில்" என்னும் எனது பெயரை மாற்றி "வானா" என்று அவர்கள் பெயரையே வைத்துக் கொள்ளுவோம். முதனாள் கண்ட கரடி அவரின் அத்தியந்த வேலைக்காரன்.

நானும், சேவையரும், மகளும் காலை, மாலைகளில் கூடிச் சம்பாஷிப்பது வழக்கமாகிவிட்டது. அவர்களுடைய சம்பாஷணை தந்தையும், மகளும் போலல்லாது, நண்பர்கள் மாதிரி இருந்தது. எதையும், வெளிதிறந்து தெளிவாகப் பேசினார்கள்.

## 6. நெருப்புப்பெட்டி வியாச்சியம்

ஒரு நாள் மாலை நாங்கள் மூவரும் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, எங்கள் கவனத்திற்கு அவ்வூரிலுள்ள ஒரு தம்பதிகளால் கொண்டு வரப்பட்ட நெருப்புப்பெட்டி சம்பந்தமான வழக்கு ஒன்று கொண்டு வரப்பட்டது.

சேவையருக்கு ஆறு சிங்கள வேலையாட்கள் உண்டு. அவர்களுக்குச் சிறிதும் தமிழ் தெரியாது. நிலம் அளக்கும் தொழிலில் உதவி புரிவதற் காக அவர்கள் இருந்தனர். அவர்கள் இன்னொரு கூடாரத்தில் இருந்தனர். அவர்களில் ஒருவன் அவ்வூர் வீடு ஒன்றில் இரவில் புகுந்திருக்கிறான். அவ்வூரில் ஆண்கள் இரவில் வீட்டில் தங்குவதில்லை. வயற் காவலுக்குச் சென்று விடுவார்கள். சிங்கள வேலைக்காரன் சென்று வீட்டில் உள்ள பெண்ணைக் கூப்பிட்டிருக்கிறான். அவள் விளக்குக் கொழுத்த நெருப்புப் பெட்டியை எடுத்திருக்கிறாள். சிங்களவன் நெருப்புப்பெட்டியைப் பறித்து மடிக்குள் வைத்துக் கொண்டான். அந்த ஊரில் நெருப்புப்பெட்டி, அருமை யானதும், கிடைத்தற்கருமையானது மென்று அவனுக்குத் தெரியாது. அவள் சத்தம் போட்டிருக்கிறாள். சிங்களவன் நெருப்புப்பெட்டியுடன் ஓடி விட்டான். இந்த வழக்கு அவளாலும் அவள் புருஷனாலும் எங்கள் முன்னிலையில் கொண்டு வரப்பட்டது. அவர்களுடைய நெருப்புப்பெட்டி சிங்களவருடைய கூடாரத்தில் கண்டெடுக்கப்பட்டது. வழக்கு ருசுவாகி வருகிற சந்தர்ப்பத்தில், சற்றும் எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது.

## 7. சோத்துப் பொக்கன் வாழ்க

சேவையரின் வெண்தலை மத்தியில் ஒரு பயங்கரமான பிராணி பாய்ந்து வந்து இருந்து கொண்டது. சேவையர் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்திருக்க முயன்றார். அப்பிராணி உடனே என்னைக் குறி பார்த்துப் பாய்ந்தது. நான் போர்க்களத்தில் துரிதமாக நிற்கும் போர் வீரனைப் போலக் குறி பிழைக்கும்படியாகச் சிறிது சாய்ந்து கொடுத்தேன். நான் இருந்த மூன்றுகாற் கதிரை சரிந்து விழவே நான் "வானா" வின் மேல் விழும் பாக்கியம் அடையப் பெற்றேன். மிகவும் தாக்கமான விழுக்காடானபடியால் உடனே எழுந்திருக்க முடியவில்லை. இந்த அமளியில் அந்தப் பயங்கரப் பிராணி எங்கோ மறைந்து விட்டது. சிங்களவர் போல்க் கம்பு (போல்க் கம்பென்பது வெண்ணிறமும், செந் நிறமும் மாறி மாறிப் பூசப்பட்ட நீளத்தடி; நில அளவையில் உபயோகி க்கப்படும் கருவிகளில் ஒன்று), கத்தி, அலவாங்கு இவைகளுடன் அந்தப் பிராணியைத் தேடினர். வழக்குக் கொடுக்க வந்த மனிதன் "அதைக் கொல்லக் கூடாதையா, அதன் பெயர் "பொக்கன்" என்றான். அவன் மனைவி, "இல்லை; அதன் பெயர் சோத்துப் பொக்கன்; அது வீட்டினுள் இருப்பது செல்வம்" என்றாள். சோத்துப் பொக்கன் வாழ்க.

"சோத்துப் பொக்கன் என்ற" அந்தப் பயங்கரப் பிராணி என்ன? என்று நீங்கள் யோசிப்பீர்கள். அது ஒரு பெரிய தவளை, மிகவும் பெரிய தவளைகளை அந்த ஊரவர்கள் "சோத்துப் பொக்கன்" என அழைக்கின்றனர்.

## 8. விவாகம் வேண்டாம்

இன்னொருநாள்; சேவையர் தனது மகள் "விவாகம் வேண்டாம்" என்று சொல்லுகிறாள்; என்று சொன்னார். இவள் எனக்கு எதிர்மறையாக இருக்கிறாள். நான் "விவாகம் வேண்டும்" என்று வெளிச்சமாகச் சொல்லுகி றவன் அல்லவா? அடிப்படை மனப்பான்மையில் இருவருக்கும் வித்தியா சம் இருக்காது என நினைக்கிறேன். இவளுடைய குட்டை வெளிப்படுத்த வேண்டுமென்று மனத்துக்குள் நினைத்துக் கொண்டு, "பிடிமின், பிடிமின்" என்ற கருத்தில், "விடுமின், விடுமின்" என்று கூறும் பெண்களை விளக்கும் கலிங்கத்துப்பரணிச் செய்யுளையும் சேவையருக்கு விளங்கப் படுத்திப் பெண்கள் பல கருத்தை மனத்தில் வைத்துக்கொண்டு "விவாகம் வேண்டாமென்று சொல்லுவார்கள்" என்றேன். "என்னென்ன கருத்தை மனதில் வைத்துக்கொண்டு விவாகம் வேண்டாம், என்று சொல்லுவார்கள்" என்று சற்று விபரமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டார்.

அது பாருங்கள்; ஒவ்வொருவர் விஷயத்தில் ஒவ்வொரு வகையாக இருக்கும். விரிப்பிற் பெருகும்; இரண்டொரு விஷயங்களைப் பிரதானத்தைக் கொண்டு பொதுவாக எடுத்துச் சொன்னால் பெண்கள் தாம் ஒருவர்மேல் காதல் கொண்டிருக்கும்பொழுது, பெற்றோர் வேறு புருஷர்களைப் பேசிக்கொண்டு வந்தாலும் "விவாகம் வேண்டாம்" என்று சொல்லுவார்கள். பேசிவந்த புருஷன் அழகில்லாதவனாக இருந்தாலும் "விவாகம் வேண்டாம்" என்று சொல்லுவார்கள். பெண்கள், பெரிய உத்தியோகஸ்தர்களை நினைத்துக் கொண்டு இருக்கும் பொழுது வெறும் ஆசிரியர்களைப் பேசிக்கொண்டு சென்றாலும் "விவாகம் வேண்டாம்" என்று சொல்லுவார்கள். இப்படிப்பல; என்று இழுத்து முடித்தேன்.

"வானா" "அப்படியானால் இந்த நியாயங்கள் ஆண்களுக்கு விதிவிலக்கானவையா? என்று கேட்டாள்.

நியாயங்கள் "பெண் ஆண் கட்சி தோரணையில் செல்கிறது; ஆபத்தாகவும் முடியலாம்; என்று நினைத்து, "என்னைப் பொறுத்த வரையில் இவைகள் விதிவிலக்கானவையே; ஆனால், இவையெல்லாம் விதியைப் பொறுத்தவையே; நிகழவேண்டியதற்கு எவ்விடத்தும் வாயில்கள் உண்டு?" என்று குறிப்பாக முடித்தேன்.

பின்பு விவாதம், விதி, மதியைப்பற்றிச் சென்றது. நான் எழும்பி வரும்பொழுது அவள் என்னைப் பார்த்துச் செய்த குறுநகை, அன்று என்னை நித்திரை கொள்ள விடவில்லை.

## 9. காய்ச்சலில் ஒரு புதுவகை

நானும், "வானா" வும் மறுநாள் மாலை குளக்கட்டில் உலாத்தும் பொழுது, "தனக்குக் காய்ச்சல் காய்கிறதா?" என்று தொட்டுப் பார்க்கும்படி கேட்டாள். நான் தொட்டுப் பார்த்து விட்டு. "அக்கினியென்றறியாயோ, கற்புடைய மங்கையரே" என்றேன்.

வானா கலகலவென்று சிரித்துவிட்டு "அன்று நீங்கள் ஏன் பயந்துபோய் நின்றீர்கள்" என்று கேட்டாள்.

"அக்கினி" என்று, எச்சரிக்கை செய்யும்பொழுது, எப்படிப் பயப்படாமல் நிற்கலாம்?

"வானா," சிறிது யோசித்து விட்டு "அக்கினிக்கும், காதலுக்கும் ஏதும் சம்பந்தம் உண்டா" என்று கேட்டாள்.

"அக்கினிக்கும், காதலுக்கும் சம்பந்தம் இருக்கலாம்; ஆனால் ஒரு ஆசிரியருக்கும் காதலுக்கும் எழுத்தளவில் தவிர ஒரு சம்பந்தமுமிராது; என்பது நிச்சயம்?

அப்படியானால் ஆசிரியர்களுக்குக் காதல் என்பதே கிடையாதா?"

"ஆசிரியர்களுக்குக் காதல் இருக்கலாம்? ஆனால் ஆசிரியர்களைக் காதலிப்பவர்கள் தான் ஒருவருமில்லை."

"சரி, நான் உங்களைக் காதலிக்கிறேன்; என்று வைத்தால்?..."

"வைக்கலாம்; ஏனெனில் இந்த ஊரின் பெயர் காதலியார் சம்மளங்குளம்?"

இந்த நேரத்தில் (சிவபூசையில்) கரடி குறுக்கிட்டது. "வானா" வின் அந்த அத்தியந்த வேலைக்காரன் "காதலியர் சம்மளங்குளம்" அல்ல; "கலியாணம் முடித்த சம்மளங்குளம்" என்று சொல்லுங்கள். ஒவ்வொரு வீடாகத் திரிந்தும், ஒரு தோடம்பழம் "தரமாட்டேன்" என்று விட்டார்கள் என்று சலித்துக் கொண்டு வந்தான்.

## 10. ஐம்பதுக்கைம்பது

மறுநாள் காலை, "ஐம்பதுக்கைம்பது" கொள்கையைப் பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டுக்கொண்டு "வானா" வந்தாள்.

"சிங்களருக்குச் சைவசித்தாந்தம் தெரியாமல் இருக்கலாம்; ஆனால் தமிழனுக்குத் தெரிவது நூதனமல்ல."

"சைவசித்தாந்தத்திற்கும், ஐம்பதுக்கைம்பதுக்கும் என்ன சம்பந்தம்?"

"சைவசித்தாந்தமே ஐம்பதுக்கைம்பது மயமானது. சைவசித்தாந்தத் தின்படி கடவுளே, சிவனும் சக்தியுமாக ஐம்பதுக்கைம்பது மயமானவர். உலகமே ஐம்பதுக்கைம்பது மயம். ஸர்வம் ஐம்பதுக்கைம்பது மயம் ஜகத்".

"ஒரு கோணத்திலிருந்து மற்றொரு கோணத்திற்குக் கதையை இழுத்துக்கொண்டு போக, ஆசிரியர்கள் எல்லாருக்குந் தெரியுமா?"

"ஒரு பெண், அப்புக்காத்துக்கள், டாக்குத்தர்கள், இஞ்சினியர்கள் இப்படிப்பட்டவர்களோடு பேசிக்கொண்டிருக்கிற நேரத்தில், ஒரு வெறும் ஆசிரியருடன் பேசிக்கொண்டிருக்கிறாள், என்றால் ஆசிரியர்களுக்குத்

திரிகோண சாஸ்திரமல்ல; சர்வகோண சாஸ்திரமும் தெரிந்திருக்க வேண்டும்."

"எவளாயினும், வாழ்க்கை முழுவதும் சந்தோஷமாயிருப்பதை விரும்புவாளா? அப்புக்காத்துக்கள். டாக்குத்தர்கள். இஞ்சினியர்கள், என்ற பெயரைக் கண்டு விரும்புவாளா?"

எனக்கு விஷயம் தலைக்கேறி விட்டது. "அது நிற்க, ஐம்பதுக் கைம்பது நியாயத்தை இழுக்கவேண்டிய காரணமென்ன?" என்றேன்.

"இன்றைக்கு நான், அரைவாசிப் பிள்ளைகளைப் படிப்பிக்கப் போகிறேன் நீங்கள் அரைவாசிப் பிள்ளைகளைப் படிப்பியுங்கள்."

"முடியாது; முழுப்பிள்ளைகளையும் நீங்கள் படிப்பியுங்கள்; நான் இன்று நித்திரை கொள்ளப் போகிறேன்."

"அப்படியானால் நானும் நித்திரைகொள்ளப் போகிறேன்."

இந்தநேரத்தில் பழையபடியும் கரடி நுழைந்தது. வானா கோப்பியை வாங்கி,"ஐம்பதுக்கைம்பது; இந்தாருங்கள், சாப்பிடுங்கள்" என்று தந்தாள்.

அரசியல் மொழிகள் ஐம்பதுக்கைம்பதில் தோற்றுப் போனாலும், எங்கள் வாழ்க்கையில் ஐம்பதுக்கைம்பது இம்மி அளவும் தவறாமல் நடைமுறைக்குச் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

(ஈழகேசரி - 23-1-49)

# மணி ஓசை

பசு மாடு ஒன்று வாங்கவேண்டுமென்று எனது மனைவி இராஜம் வெகுநாட்களாகச் சொல்லி வந்தாள். அவள் சொல்லுகின்ற அவ்வளவு விஷயங்களும் அவசியம் செய்யப்பட வேண்டியனவாகும். ஆதலால் எது முதலில் செய்ய வேண்டும்? எது பின்னர் செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கின்ற தொல்லை இராது. மாடு வாங்கும் பிரச்சினையும் அவசியம் செய்யப்படவேண்டிய பிரச்சனைகளுள் அடக்கி வைக்கப்பட்டு, இரு வருட காலமாக அப்படியே இருந்து வருகிறது.

இந்தப் பிரச்சனை எனது நண்பன் இரகுபதியின் உதவியால் தீர்த்து வைக்கப்பட்டது. இரகுபதி வவுனியாப் பகுதியிற் கடமை பார்க்கும் ஒரு சிறிய அரசாங்க ஊழியன். இரகுபதி எனது வீட்டுக்கு வந்தபொழுது, பால்மாடு ஒன்று அவசியம் தேவையாய் இருப்பதை இராஜம் வெளியிட்டாள். இரகுபதி ஒரு வெள்ளைப் பசுவையும் கன்றையும் உடனே அனுப்பி விட்டான்.

சாதாரணமான ஒரு பசுமாட்டிற்குத் தவங் கிடந்த இராஜம், அழகான வெள்ளைப் பசுவைக் கண்டாற் சொல்லவும் வேண்டுமா? வெள்ளைப் பசுவுக்கு இராஜோபசாரம் நடந்தது. பசு மாத்திரம் "எனக்குக் கால் வலிக்கிறது; காலை உருவிவிடுங்கள்" என்று வாயால் கேட்குமானால், நாலு காலுக்கும் நால்வரை நிறுத்த இராஜம் தயாராக இருந்தாள். காலையில் எழுந்தவுடன், எனக்கு கோப்பி தருவதில் ஓடி ஆடித்திரியும் இராஜம், எழுந்தவுடன் ஓடோடியும், பசு கட்டியிருக்கும் இடம் சென்று அதற்குத் தீனி போட்டு, அதனுடைய இடத்தைச் சுத்தி செய்ததின் பின்தான் அடுக்களைப் பக்கம் போகிறாள். காலையில் எழுந்து நான் கோப்பிக்குக் காவல் இருக்க, அவள் அவளுடைய சகோதரி,

வண்டிக்காரப் பண்டாரி, அவன் மனைவி, நால்வருமாக பசுவில் உட்கார்ந்திருக்கும் மூன்று ஈக்களைப் பிடிக்கப் பிரயத்தனஞ் செய்கின்றனர். அதோ, இதோ என ஓடி வளைந்து, இருந்து, எழுந்து, நுழைந்து, தவழ்ந்து, மூன்று ஈக்களைப் பிடிப்பதற்காக நால்வரும் கஜகர்ணம் போடுகின்றனர். நால்வரும் போதாதென்று, என்னையும் அதிகாரத்துடன் குடி முழுகிப் போகும் காரியம் போல அழைக்கின்றனர். இரகுபதி எனக்கு உதவி என்று செய்கிற ஒவ்வொரு காரியங்களும் இப்படித்தான் எனக்குத் தீமையாக முடிவது வழக்கம். பசுவை ஓட்டித் துரத்தத்தான் எனக்கு மனம் வந்தது.

இத்தனை இராஜோபசாரங்களும் அந்தப் பசுவுக்குப் போதாதென்று, அதன் கழுத்தில் ஒரு மணியும் கட்ட வேண்டுமென்பது இராஜத்தின் கட்டளை. இது கட்டளையாகப் பிறப்பிக்கப்பட்டது. கட்டளையை மீறினால் விபரீதம் நடப்பது வழக்கந்தானே.

நல்ல வேளையாக மணி, ஒன்றுக்கு நான் கடைக்குத் திரியாமல், எனது பழைய இரும்புச்சாமான்கள் போட்ட, பெரிய பெட்டியின் அடிப்பாகத்தில் ஒரு மணி ஒன்று இருந்தது. அது எனக்கு ஞாபகம் வரவே, அந்தப் பெட்டிக்குள்ளே கையைவிட்டுத் துழாவி மணியை எடுத்துக் கொடுத்தேன். அதற்குள் இருக்கும் ஒவ்வொரு பழைய சாமான்களுக்கும் ஒவ்வொரு கதை உண்டு. ஆனால் இந்த மணியின் கதை பெரிய கதை. அது இரகுபதியின் கதை. இரகுபதியால்தான் இந்த மணியும் அதற்குள் வந்தது.

இரகுபதி தந்த பசுவுக்கு, இரகுபதி தந்த மணியையே கட்டினோம். அந்த மணி என்னிடம் வந்த கதையை ஆதியிலிருந்து சொல்லுகின்றேன்.

"யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே" என்பது போல மணியின் கதைக்குப் பின்னால் ஒரு யானையின் கதையைச் சொல்லுகிறேன். ஆனால் சொல்லப் போகிற யானைக்கு மணியில்லை; காட்டு யானை. கரு முகிலென நடு றோட்டில் நின்றது, காட்டு மத்தியில் நின்றது.

"யானைக்கு நான் நல்ல வீரன்; யானை அடியைக் கண்டால் கிட்டவும் நில்லேன்" என்பது கூட எனது நண்பன் இரகுபதி விஷயத்தில் கூடிவிட்டது. நாங்கள் இருவரும் மெல்ல மெல்ல நடந்து பேசிக் கொண்டு வந்தோம்" எனக்கு இந்தக் காட்டுப் பக்கங்களில் நல்ல பழக்கம்; ஒன்றுக்கும் பயமில்லை. கரடியென்ன, யானையென்ன எவற்றிற்கும் பயப்படமாட்டேன்" என்று இரகுபதி சொல்லி முடிப்பதற்கிடையில்

காலுக்குள் "விர்" என்று ஒரு இரைச்சல் கேட்டது. இரகுபதி துள்ளிப் பாய்ந்து "ஆ" "ஊ" என்று சத்தம் போட்டு அப்பால் போய் நின்றான். அவனுடைய பரபரப்பைத் தொடர்ந்து றோட்டருகில் உடையாரின் புலவுக்குள், வேலிக்கருகில் "களுக்" என்ற சிரிப்பின் ஒலியும் கேட்டது.

நாங்கள் நடந்து செல்லும்பொழுது றோட்டில் ஒரு பெரிய எருமைச் சாணக்கும்பம் கிடந்தது. அதில் மொய்த்திருந்த ஈக்கள், நாங்கள் கிட்டப் போனதும், இரைச்சலோடு எழுந்தன. இந்த இரைச்சலுக்குத்தான் இவ்வளவு ஆரவாரமும். இதற்கு இவ்வளவு ஆரவாரமானால் சாட்சாத் யானையையே நேரில் கண்டால் இரகுபதி என்ன பாடுபடுவான் என்பதை நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள்.

எருமைச் சாணத்தால் தப்பிப் பிழைத்துக் கொண்டு, றோட்டின் ஒரு முடக்கால் திரும்பும் பொழுதுதான், நடு றோட்டில் சாட்சாத் யமராசன் போல ஒரு யானை நின்றது.

யானை தானே? யானையாய் இருக்காது. யானைதான். இருதயம் ஒரு "செக்கன்" நின்றது. கால் கைகள் நடுங்கின. மரண விபர்வை வெயர்த்தது. சரீரத்தின் சர்வ கருவிகளும் தன்செயலற்றன. இரகுபதி என்னைப் பார்த்தான். நான் அவனைப் பார்த்தேன். இவையெல்லாம் ஒரு கணம்.

யானை நின்றது கால்மைல் தூரத்துக்கப்பால்; எங்களுக்கு முன்னால் நிற்பது போலத்தான் தெரிந்தது. "ஏறடா மரத்தில்" என்று நான் சொல்லிவிட்டு அருகில் நின்ற ஆத்தி மரத்தில் தாவினேன். செயலற்று நின்ற இரகுபதிக்கு வேறு மரம் ஒன்றும் கண்ணில் படவில்லை. எனக்குப் பின்னே தொடர்ந்து ஏறினான். நான் பிடித்த உக்கல் கொப்பு முறிய, அதே தருணத்தில் இரகுபதி என் காலைப் பிடிக்க, யாருக்கு மேல் யார் விழுந்ததென்று தெரியாமல் உருண்டு புரண்டு, நிலத்தில் வீழ்ந்தோம். அதே தருணத்தில் சடசடவென்று மரங்கள் முறியும் சத்தம் யானை நின்ற பக்கத்திற் கேட்டது. எங்களுக்கு அறிவு கெட்டுவிட்டது.

அந்தநேரத்தில் இரகுபதி என்ன நினைத்தானோ தெரியாது. "எனது மரணத்தை எனது மனைவி மக்களுக்கு யார் அறிவிப்பார்கள்?" என்று தான் நான் நினைத்தேன். இன்னும் என்னென்னவோ?

விழுந்து கிடந்தபடியே கடைக்கண்ணால் யானை நின்ற திக்கை நோக்கினேன். யானை அங்கேயில்லை; நன்றாய்ப் பார்த்தேன். யானை யில்லை. பழைய துணிவு நெஞ்சில் வந்து விட்டது. கணநேரத்திற்கு

முன்பு நடந்ததை சட்டை செய்யாத நெஞ்சம்போல் என் மனம் இருந்தது. கண நேரத்திற்கு முன்பு உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தோம் என்பதை நெஞ்சம் மறந்து விட்டது. மனத்தில் தோன்றிய தெய்வங்களின் எண்ணமெல்லாம் எங்கோ மறைந்து விட்டன. வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தோம். வயிற்றில் உரஞ்சியதும், காலில் தடி கீறினதும் அதன் பிறகு தான் விறுவிறுத்தது. அந்தக் காயங்களைப் பார்த்து மனம் கேலி செய்தது. "அட இந்த அற்ப சம்பவத்திற்கு இவ்வளவு அமர்க்களமா?" என்று மனம் பரிகசித்தது. "இந்த அமர்க்கள நேரத்தில் நீ எங்கே ஓடி ஒளிந்தாய்?" என்றுதான் மனத்தைக் கேட்கச் சொல்கிறது.

நாங்கள் இருவரும் எங்கள் மாலைக்கால உலாவுதலை முடித்துக் கொண்டு வந்த வழிக்குத் திரும்பினோம். "இன்றைக்குத் தப்பிப் பிழைத்தது ஏதோ ஈஸ்வர கடாட்சம் என்று நான் சொன்னேன்."

"இதற்கு இவ்வளவு பயப்படத்தேவையில்லை. இதெல்லாம் இந்த நாட்டில் சகஜம். இதைவிட எத்தனை பெரிய ஆபத்துக்களைச் சமாளிக்க வேண்டி வரும்" என்று இரகுபதி சொன்னான். சில மனிதர்கள் எவ்வளவு தோல்வியடைந்தாலும் தோல்வியடையாத மனப்பான்மையை விடமாட்டார்கள்.

வெண்கலச் செட்டிகுளம் என்பது மதவாச்சியிலிருந்து மன்னார் போகும் பாதையிலுள்ள ஒரு சிறு கிராமம். அங்கே ஒரு புகையிரத ஸ்தானமும், ஒரு பாடசாலையும், பி.டபிள்யூ.டி. ஓவசியர் பங்களாவும், பத்துக் குடியாட்டங்களும் இருக்கின்றன. அந்த ஊருக்கு புதிதாக மாற்றபட்டு வந்தவன் நான். நான் ஓவசியர். இரகுபதி சப் ஓவசியர். அவன் எனக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் வந்தவன். அவனும் நானும் மாலை நேரத்தில் சிறிது உலாவப் போனபொழுதுதான் மறக்க முடியாத, எங்கள் நெஞ்சின் துணிவை அளக்கும் "மீற்றர்" போன்ற, யானையின் தரிசனமும் எங்களுக்கு கிடைத்தது.

இதிலும் பார்க்க மிகவும் விஷேசமான இன்னொரு சம்பவம் நடந்ததை வாசகர்தள் அவதானித்திருப்பீர்கள். எருமைச் சாணக் கும்பத்தடியில் கேட்ட ஒரு சிரிப்பொலியைப் பற்றித் தான் குறிப்பிடுகிறேன்.

ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொண்டு வருகிறேன். படபடத்துக் கொண்டு நிற்கும், மேல் மடலும் அவற்றில நீண்ட உரோமங்களும் உடைய கண்கள், கடைந்து விட்டாற்போன்று நுனியில் மழுங்காமலும் கூராகாமலும் உறுப்பாய் அமைந்த மூக்கு. காதிலே மின்னும் குச்சுக்க ளுடன் விளையாடும் கன்னத்தில் வளர்ந்த மயிர்கள். ஒழுங்காகவும்

வரிசையாகவும் உடைய சிறு பல்வரிசை. செவ்வனே வளரவிடாமல் காற்றிலே அசையும் கூந்தல். சட்டை ஒன்று, போடும் மரபிற்காக இருந்ததேயன்றி, அது சிறிது மார்பின் வளர்ச்சிக்கு இடையூறாக நில்லாது தானே கிடக்க, வளர்ந்து தோன்றிய மார்பு. தங்க விக்கிரகம் ஒன்றிற்குச் சிறுபிள்ளைகள் பொருத்தமில்லாது செய்தது போன்ற உடையலங்காரம், நாகரீக வாசனை அவளில் சிறிதும் வீசாவிட்டாலும் அவளுடைய இயற்கையழகு எவரையும் கவரும் தன்மை வாய்ந்தது. அவள் குப்பையிற் தோன்றிய குண்டு மணி.

இரகுபதி தனக்குக் காட்டுப் பக்கங்களில் நல்ல பழக்கமென்றும், தான் எவற்றுக்கும் பயப்படுவதில்லை என்றும் சொல்லிக் கொண்டு வந்த எல்லாவற்றையும் அவள் கேட்டுக்கொண்டு நின்றிருக்கிறாள். அவன் "ஆ" "ஊ" என்று துள்ளிப் பாய்ந்த கட்டத்தை அவளால் அடக்கமுடியாமல் "களுக்" என்று சிரித்து விட்டாள். நாங்கள் அவளைத் திரும்பிப் பார்த்ததும் அவள் விடுவிடென்று போய்விட்டாள்.

நாங்கள் யானையைத் துரத்திவிட்டுத் திரும்பி வந்தபொழுது, அந்த எருமைச் சாணத்தடியில் வந்ததும், இருவரும் ஒருவருக்கொருவர் தெரியாமல் அவள் நின்ற திக்கை நோக்கினோம். அங்கே அவள் இல்லை. அவள் யாரென்று நான் இரகுபதியைக் கேட்டேன். "எனக்கும் யாரென்று தெரியாது. ஒவ்வொரு நாளும், இந்த நேரத்தில் இங்கே நிற்கிறாள்" என்று சொன்னான்.

"ஓகோ இதற்காகவா என்னையும் வலிந்து உலாவ என்று கூட்டிக்கொண்டு வந்தாய். இதை நீ முன்னமே சொல்லக் கூடாதா?" இரகுபதியின் புன்சிரிப்பில் ஒரு வெற்றி பிரதிவிம்மித்தது. "உன்னைக் கூட்டிக்கொண்டு வந்ததால், அவள் இன்று இவ்வளவு விரைவாகப் போய்விட்டாள்" என்று சிறிது கவலையுடன் சொன்னான்.

"மன்மதன் போன்ற உன்னைக் கண்ட கண்ணுக்கு நான் ஒரு மாதிரியாகத்தான் இருக்கும்" என்று சொன்னேன். "அதற்காகச் சொல்லவி ல்லை; நீ புதிது. அதனால் போய்விட்டாள்" என்று சமாதானம் சொன்னான்.

இரகுபதி நான் வருவதற்கு முன்பு ஒவ்வொருநாளும் உலாவ வந்திருக்கின்றான். உலாவுவதற்கல்ல; அவளின் அழகைக் கண்டு இரசிப்பதற்காக வந்திருக்கிறான். அவளும் இலவசமாகத் தனது அழகைப் பார்த்து இரசிக்க, இரகுபதியின் மீது தயை கூர்ந்து இருக்கிறாள். நாள் தவறாமல் தன்னை அலங்கரித்துக்கொண்டு, பட்டணத்திலே

கடற்கரைக்குப் போகும் வாலிபனைப் போல இரகுபதி அந்த றோட்டுக்கு மாலையில் உலாவப் போவான். அவளும் நாள் தவறாமல் தனக்குத் தெரிந்த அலங்காரத்தோடு, மாலையில் அந்தப் புலவுக்குப் போவாள். அவள் புலவுக்குப் போவது குருவி கலைக்க. அவன் உலாவப் போவது பட்டிணத்துப் பழக்கம். இது வெளிஉலகில் அவர்களுக்குள்...?

எனது பங்களாவுக்கு எதிரில் இருப்பது ஒரு பாடசாலை. அதில் படிப்பிக்கும் ஆசிரியர் எனக்கு முன்பே தெரிந்தவர். அவர் ஒரு தமிழ்ப் பண்டிதர். அவ்வூரில் நெடுங்காலமாக வசித்து வருகிறார். அவருக்கு அங்கே காணி, பூமி, மாடு, கன்று; எல்லாமுண்டு. சுருங்கச் சொன்னால் அவரும் அவ்வூர் வாசியே.

அவர் ஒரு இடமும் வெளிப்படமாட்டார். ஆனால் அவர் அங்கே இருந்துகொண்டு அவ்வூர்ப் புதினம் முழுவதும் அறிந்து கொள்வார். அவ்வூர், அயலூர்ப் பெரிய மனிதரெல்லாம் அவரிடம் நல்ல மதிப்பு. அவரிடம் நாங்கள் போனோம். அவர் இரகுபதியின் மாலைக்கால உலாத்தைப்பற்றி அவதானித்து இருக்கிறார். எல்லோரையும் போல் பட்டிணத்துப் பழக்கம் என்று அவர் நினைக்கவில்லை.

"இந்த றோட்டால் இரகுபதி போகலாம். ஆனால் ஓவசியர் போவது நல்லாயில்லை. இது இரகுபதிக்கும் இடைஞ்சலாக இருக்கும். என்ன இரகுபதி" என்று அவர் இரகுபதியைக் கேட்டதும் இரகுபதி ஏங்கிப் போனான்.

வன்னிப் பகுதிகளிற் புதிதாக உத்தியோகத்திற்குப் போகிறவர், அவ்வூரில் உடையாரையோ, விதானையாரையோ அந்த ஊரில் பிரசித்தியாய் இருப்பவரைப் போய்க் காணவேண்டும். இந்த மரபு தெரியாமல், யாரும் தவறினால் அவர்கள், அந்தப் பிரசித்தி பெற்றவர்களின் உதவியை ஒரு போதும் பெறமாட்டார்கள். இவ்விஷயத்தை அந்தப் பாடசாலை ஆசிரியர் எனக்குச் சொன்னார்.

அவரின் வேண்டுகோட்படி நாங்கள் மூவரும் அவ்வூர் உடையாரின் வீட்டுக்குச் சென்றோம். உடையாரின் வீடு ஒரு கால்மைல் தூரம் இருக்கும். அங்கே நாங்கள் போக இருட்டுக் கட்டிவிட்டது.

ஒருவருடைய வீட்டுக்குள் திடுதிப்பென்று நுழைவது; அநேகமாகச் சிவபூசையில் கரடி நுழைந்த நியாயமாய் முடியும். பல புத்திசாலிகள் தூரத்திலேயே ஒரு செருமலையோ, செருமல் என்று தொடந்து இருமலையோ, வரவழைத்து தங்கள் வரவை உணர்த்துவதன்றித் தாங்கள்

நோயாளர்கள் என்றும், காட்டவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுகின்றது. இப்படியான ஒரு கஷ்டமும் இல்லாமல், எங்களுக்கு அவ்விடத்து நாய்கள் உதவி புரிந்தன.

எல்லா நாய்களுமாகக் கூடி தாங்கள் கண்ட புதிய பிராணிகளாகிய எங்களை, அங்கே இங்கே தவறவிடாமல் சுற்றி நின்று குலைத்து, உடையார் வளவுக்குள் விட்டுவிட்டுப் போய்விட்டன. நாய்களின் அபாயச்சங்கு கேட்டவுடனேயே, இதற்கென ஆயத்தமாக நின்றவர்கள் போல அவ்வூர்ச் சிறுபிள்ளைகள் இன்னார் இன்னார் வருகிறார்கள் என்று உடையாருக்கு ஓடிப்போய்த் தகவல் தெரிவித்து விட்டார்கள்.

உடையார் தனது வளவு வாசல் அளவில் வந்து, "வாருங்கள் உபாத்தியாயர். வாருங்கள் ஐயா," என்று எங்களை வரவேற்றார். அவர் சொல்லித்தான் விடவேண்டும் என்பது போல "அடிபோ" என்ற அதட்டலின் பின்தான் கடைசியாகக் குரைத்த நாயின் சத்தமும் ஓய்ந்தது. எங்களுக்கும் மனத்தில் ஒரு நிம்மதி ஏற்பட்டது.

சிலர் வீட்டுக்குத் தக்கதாகத் தேவைகளை ஏற்படுத்திக் கொள்கிறார் கள். சிலர் தேவைக்குத் தக்கதாக வீடுகளைக் கட்டிக்கொள்ளுகிறார்கள். வன்னிப் பக்கத்தில் தேவைகளுக்குத் தக்கதாக வீடுகளைக் கட்டிக் கொள்கிறார்கள். அங்கே வீடு கட்டும் வசதிகள் அதிகம் இருந்தும். அவர்கள் கூடியளவு சுருக்கமாகவே வீடு கட்டுவார்கள். சமையல் செய்கின்ற தொழிலை அதிகமாக வெளியில் வைத்துக் கொள்வார்கள். அதனுடைய சுகம் வன்னிப்பக்கத்துப் பெண்களுக்குத்தான் தெரியும். மனிதரை வரவேற்று உபசரிக்க ஒரு வீடு கட்டிக்கொள்வார்கள். அதற்குச் "சார்" என்று பெயர்.

உடையாருடைய சாருக்குள் இரண்டு திண்ணைகள் இருந்தன. அவற்றின் மேல் மான்தோல் போடப்பட்டிருந்தன. பெட்டியோடு கூடிய படுக்கை வாங்கு ஒன்றும், ஒரு கதிரையும், மேசையும் அங்கே இருந்தன. முகட்டுக்கப்பிலுள்ள மூலையிற் கலண்டர் ஒன்று தொங்கியது. பத்துத்தலை இராவணன் கைலாசமலையைத் தூக்கிக் கொண்டு நிற்கும் ஒரு பழைய வர்ணப்படம் ஒன்று பலகையில் ஒட்டப்பட்டு அதன் அருகில் தொங்கியது. நல்லதங்காள் கூத்து நோட்டிஸ் வளையில் ஒட்டிக் கிடந்தது. வீடு அப்பொழுதுதான் பெருக்கிச் சுத்தமாய் இருந்தது.

நாங்கள் மூவரும் திண்ணையில் உட்கார்ந்து கொண்டோம். இரகுபதி இருந்த இடம் கேந்திரஸ்தானமாக அமைந்து விட்டது. அவன் இருக்குமிடத்திலிருந்து கொண்டால் சமையல் வேலை செய்யும் இடத்தில்

என்னென்ன நடக்கிறதென்பது துலாம்பரமாகத் தெரியும். தனக்குத் தந்த தேநீருள் இரண்டாம்முறையும் சீனி போட்டுக் கலக்கினதை நான் கண்ணாலே கண்டேன், என்று பிறகு எனக்குச் சொன்னான்.

அவள் தேநீர் கொண்டு வந்தபொழுது, அவளின் கண்களும், இரகுபதியின் கண்களும் நன்கு சந்தித்தன. இதைப் பண்டிதர் பாராததுபோல் நன்கு பார்த்தார். அவரிடம் கொண்டு போன தேநீரை முதலில் இரகுபதியிடம் கொடுக்குமாறு அவர்தான் அவளுக்குச் சொன்னார். என்னால் புன்முறுவலை அடக்க முடியவில்லை. இரகுபதி என்னைப் பார்த்துப் பல்லைக் கடிந்தான். நான் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டேன்.

யானையைக் கண்ட அதேநாள், புலவுக்குள் கண்ட அதே பெண்தான், தேநீர் கொண்டு வந்திருக்கிறாள் என்பதை நீங்களும் ஊகித்திருப்பீர்கள் என நினைக்கின்றேன்.

வெண்கலச் செட்டிகுளம் உடையாருக்கு ஒரேயொரு மகள். அவள் பெயர் மனோன்மணி. படிப்பிலே கெட்டிக்காரி. தமிழ் ஐந்தாம் வகுப்புவரை படித்தவள். தகப்பனுடைய பெருவாரியான சொத்துக்கள் அனைத்திற்கும் வாரிசானவள் அவள்தான். இவையெல்லாம் பண்டிதர் பிறகு எங்களுக்குச் சொல்லியவை.

கடவுள் எப்பொழுதுமே காதலரின் பக்கம். இதில் சிலருக்குச் சந்தேகம் இருந்தாலும், கதையில் வரும் காதலர்களுக்கு கடவுள்தான் பக்கபலம் என்பதை ஒத்துக்கொள்வார்கள். ஆனால் இரகுபதி மனோன்மணி விஷயத்தில் கடவுள் எந்தப் பக்கத்திலும் துணைபுரிய மறுத்துவிட்டார். இரகுபதி உடையாரின் வீட்டுக்கு அடிக்கடி போனாலும், அவளோடு பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடையாது. இனி அடிக்கடி உடையார் வீட்டுக்கு அலுவல் இல்லாது போய்வர அவர் என்ன நினைப்பார். மாலைநேரத்திற் புலவுக்குள் நிற்கும் அவளுடன் "இன்று எப்படியும் பேச வேண்டும்" என்று ஒவ்வொரு நாளும் எண்ணிக் கொண்டு போவான். அவளை நேரே கண்டதும் அவளுடன் பேசுவதற்கு சக்தியற்றுப் பேசாது வெறும் பார்வையோடு திரும்பி விடுவான்.

தினமும் சாயந்தரம் உலாவி வரப்போவான். என்னையும் வா என்று சம்பிரதாயத்துக்காகக் கேட்பான். "நான் வரவில்லை" என்று இழுத்ததும் மேலே நெருக்காது சென்று விடுவான். ஒவ்வொரு நாளும் போய் அவன்தான் வெட்டி விழுத்துவது என்ன? புலவுக்குள் மனோன்மணி நிற்பாள். பார்த்துக்கொண்டு போவான். பார்த்துக்கொண்டு திரும்பி வருவான். இவ்வளவுதான்.

ஒரு நாளைக்கு வந்து சொல்வான்; இன்றைக்கு என்னைப் பார்த்துச் சிரித்தாள் என்று இன்னொருநாள் சொல்வான்; நான் நின்ற பக்கத்தில் றோட்டில், குருவிக்கெறிவது போல் கல் எறிந்தாள் என்று; இன்னொருநாள். பூவைப் பிடுங்கி என்னைப் பார்த்துக்கொண்டு மணந்தாள் என்று சொல்வான். அவளுக்குப் பயித்தியமோ? அவளைப் பார்த்து கற்பனை செய்கின்ற இவனுக்குப் பயித்தியமோ? யார் அறிவார்.

காதல் என்பது ஒரு நோய். தொற்றுநோயுங்கூட. இரகுபதி ஒவ்வொரு நாளும் வந்து நான் கோளாமலே அவளுடைய சம்பவங்களைக் கூறுவான். அவற்றைக் கேட்டுக் கேட்டு எனக்கு இப்பொழுது அவன் சொல்லா விட்டாலும் அறிய ஆவலாயிருக்கிறது. அவர்களுடைய சம்பவத்தை அறிவதில் ஒரு காதல் நோய் எனக்கு ஏற்படலாயிற்று.

இரகுபதி மாதக் கணக்கில் அவளைப் பார்த்து வாயை நனைத்துக் கொண்டு திரிந்தானேயன்றி, வேறொன்றும் செய்யவில்லை. மேற்கொண்டு செயலில் இறங்க வழியில்லை. அவன் மூளை ஓடவில்லை.

இரகுபதியின் நோய் இப்படி நாளாந்தம் ஏறிக் கொண்டு வந்தது. ஈற்றில் என்ன முடிவில் வருகிறதோவென்று நான் பயந்தேன். ஆனால் இரகுபதிக்கு அந்த உலகப் பிரசித்தி பெற்ற ஹிட்லர் வந்து சிறிது துணைபுரிந்தார்.

ஹிட்லர், இரகுபதிக்கு இங்கே வந்து துணை புரியவில்லை. தனது இடத்தில் - ஜேர்மனியில் இருந்து கொண்டே துணை புரிந்தார். அதாவது இரண்டாவது உலகமகா யுத்தத்தைத் தொடங்கினார்.

இரண்டாவது உலக மகாயுத்தம் தொடங்கியதும் உடையார்மாருக்கும் வேலை கூடியது. நெல்வயல்களின் இடாப்பு, விளைவு மதிப்பு, கூப்பன் புத்தக இடாப்பு, ஆங்கிலத்திற் பிரதி. தினமும் வரும் காகிதங்கள், சுற்று நிருபங்கள், இத்தியாதி வேலைகளுக்கெல்லாம், உடையாருக்கு எங்களின் உதவி பெரிதும் தேவைப்பட்டது. அவருக்குச் செய்ய வேண்டிய உதவிகள் எல்லாவற்றையும் நான், இரகுபதியின் பெயரிலேயே பொறுப்பித்து விட்டேன். இரகுபதி காதால் கேட்க தலையால் செய்யவும் ஆயத்தமாக இருந்தான். அவருடைய வேலைகளை அவர் கேட்காமலிருந்தாலும் தானே நினைப்பூட்டி விசாரித்துச் செய்து வந்தான். இப்பொழுது இரகுபதியை உடையாரின் ஒரு "கிளாக்கர்" என்றும் சொல்லலாம். உடையார் உத்தியோகத்தை இரகுபதியே பார்த்து வந்தான் என்று கூறினாலும் தகும்.

இரகுபதி புலவுப்பக்கம் மாலையில் உலாவச் செல்வதோடு, உடையாரின் வீட்டிற்கு அடிக்கடி போகவும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஆனால் இந்தப் புதிய சந்தர்ப்பத்தையும், இரகுபதியால் நன்கு உபயோகித்துக் கொள்ள முடியவில்லை.

"இன்றைக்கு எனக்குத் தேநீர் கொண்டு வந்து தரும் பொழுது ஒரு புன்சிரிப்போடு தந்தாள். இன்றைக்கு என்னை கூறு குறிப்பாகப் பார்த்தாள்; இன்றைக்கு எனக்குத் தேநீர் தரும்பொழுது அவளுடைய சிறுவிரல் என் கையில் பட்டது" என்று இம்மாதிரியான சாதாரண சம்பவங்களை, ஏதோ பெரிய புதினம் போல இரகசியமாகவும், ஆர்வமாகவும். சந்தோஷத்துடனும் சொல்லுவான்.

"நீ அவளோடு ஏதும் பேசினாயோ" என்று கேட்டால், "அது எப்படிப் பேசுவது. அவளைத் தனியே கண்டாற்றானே. அப்படி அருமையாகத் தனியே கண்டாலும் பேசுவதற்குத் தைரியம் வருகிறதில்லை. தைரியத்தை ஒன்று கூட்டுவதற்கிடையில் யாரோ? வந்து விடுவார்கள்" என்று அழாக் குறையாகச் சொல்லுவான்.

பண்டிகைகள் மனிதருக்கு வாழ்கையில் ஏற்பட்ட சலிப்பை மறைத்துப் புது உற்சாகம் கொடுக்கின்றன. புதிய போக்கில் மீண்டும் வாழ்க்கையோடு போராடுகிறார்கள். இவ்வாழ்க்கையிலே புதுவருடப்பிறப்பு முக்கியமானது.

அன்று தமிழரின் புதுவருஷப்பிறப்பு. உடையாரின் மனைவி ஐந்து மைல் தூரத்திலுள்ள சிவன்கோயிலுக்கு மாட்டு வண்டியில் போய் விட்டாள். உடையாரும் மகளும் தான் வீட்டில் இருந்தார்கள். அரசாங்க ஊழியர்களுக்கு இந்தப் பண்டிகைகள் ஒன்றும் சோபிப்பதில்லை.

அன்று நண்பகல். உடையார் ஏதோ எழுதுவதற்காக இரகுபதியை வந்து அழைத்துப் போனார். வருஷப்பிறப்பில் அவனுக்கு ஒரு நல்ல விருந்து அளிப்பதற்குமாய் இருக்கலாம்.

இரகுபதிக்கு உதவி செய்வதற்காகத் தானோ? குறிப்பறிந்து உதவி செய்யும் உண்மை நண்பனைப் போல, பண்டிதர் உடையாரை அழைப்பித்தார். பண்டிதர் அழைத்தால் உடையார் போகாமல் இருக்க மாட்டார். இரகுபதிக்குச் செய்ய வேண்டிய வேலையைக் காட்டிவிட்டு, உடையார் போய் விரைவில் வருவதாகக் கூறிப் போய்விட்டார்.

இரகுபதியும் மனோன்மணியும் தனியே விடப்பட்டனர். இரகுபதிக்கு அளவற்ற மகிழ்ச்சிதான். ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தை எப்படி

உபயோகிப்பதென்று; அவனுக்குத் தெரியவில்லை. பண்டிதர் சொல்லி வைத்த மாதிரி உடையாரை அதிக நேரம் தாமதப்படுத்தினார்.

மனேன்மணி அந்த வீட்டிற்குள் போனாள். இந்த வீட்டுக்குள் போனாள். இரகுபதியின் கண்ணிற் படக்கூடியதாக அப்படியும் இப்படியும் போனாள். கடைசியாக வெற்றிலைத் தட்டைக் கொண்டு வந்து இரகுபதியின் மேசையில் வைத்தாள். இரகுபதிக்கு மேலே மூளை ஓடவில்லை.

எந்த நோயையும் முற்றிய நிலையில் சன்னி என்று கூறுவது வழக்கம். காதல் நோய் சன்னி நிலைக்கு வந்தால் பைத்தியம் என்று சொல்லுவார்கள். இந்தச் சன்னி நிலைக்குக் காதல் நோய் வரமுன், ஒரு விறுவிறுப்பும், துணிகரமும் நிறைந்த நிலை ஒன்று உண்டு. இந்த நிலையிற் தோல்வியடைந்தால் நரம்பு அறுந்து பைத்தியம் ஏற்படும். இரகுபதிக்குக் காதல் நோய் சன்னிக்கு முந்திய நிலையை அடைந்தது.

தனியே விடப்பட்ட இரகுபதியும், மனோன்மணியும் இந்தச் சந்தர்ப் பத்தை உபயோகிக்க வேண்டுமென்று மனத்திற்குள் பரபரப்படைந்தனரே யன்றி, செய்வதறியாது தத்தளித்தனர். சிறந்த ஒரு சந்தர்ப்பத்தைத் தகுந்தவாறு உபயோகிக்க, அவர்கள் மூளை வேலை செய்து கொடுக்கவில்லை.

மனோன்மணி, இரகுபதி தகுந்தவாறு அச்சந்தர்ப்பத்தை உபயோகிப் பான்; இச்சந்தர்ப்பத்தை அவன் தவறவிட்ட அநேக சந்தர்ப்பத்தைப்போல் தவறவிடமாட்டான் என்று நினைத்தாள். தனது ஆவலைத் தெரிவிக்கவும், அவனைச் செயலில் இறங்கச் செய்யவும் போலும், அவள் அப்படியும், இப்படியும் போய்க் காட்டினாள். இரகுபதியின் நரம்புகளோ அந்தளவு கூட வேலை செய்யவில்லை.

வானத்தின் அமைதி, புழுக்கம், பெருமழைக்கு அறிகுறியாய் அமைவது போல, ஒன்றும் ஓடாதிருந்த இரகுபதிக்கு திடீரென, காதல் நோய், நான் மேற்கூறிய சன்னிக்கு முந்திய நிலையை அடைந்தது. அசாத்தியத்துணிவு, சர்வ பகுத்தறிவுகளையும், அடக்கிக்கொண்டு பீறிட் டெழுந்து, வெறிகண்டு, எழுந்து சென்று மனோன்மணியை முத்தமிட்டான்.

அவள் இதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அவனும் எதிர்பார்க்க வில்லைத்தான். இது நோயின் கூறு. அவள் அவன் சம்பாஷணையைத் தொடங்குவான் என்ற கருத்தில்தான், அவள் ஓடியாடித் திரிந்து கடைசியில் வெற்றிலைத் தட்டைக் கொண்டு வந்து அவன் மேசையில் வைத்ததும். ஆனால் அவன் இப்படி முரட்டுத்தனமாக நடக்கவே,

ஏற்கனவே, அவர்கள் பரஸ்பரம் காதல் முற்றியிருந்ததால் இயற்கைப்படி அவள் கூச்சல் போட்டோ, வேறு விபரீதமோ செய்யவில்லை.

"சீ விடுங்கோ" என்று மனோன்மணி அவன் பிடியை விடுவிப்பதற்கும், "பிள்ளை" என்று உடையார் கூப்பிடுவதற்கும் சரியாக இருந்தது. உடையாரின் பெரிய வீட்டுக்குள் நின்ற காதலர்கள் இருவரினதும், கால்களும், மார்புகளும், படபடத்தன. தேகம் முழுவதும் வெயர்த்தன. சாயம் வெளுக்கப் போகிறதேயென்று முகம் வெளுத்தன.

பெண்களுக்குச் சமயோசித புத்தி அதிகம் என்று பலர் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அது உண்மையோ பொய்யோ தெரியாது. ஆனால் மனோன்மணிக்குச் சமயோசிதபுத்தி அதிகம் என்பது மாத்திரம் உண்மை.

இரகுபதியை வீட்டினுள்ளே இருக்குமாறு சமிக்ஞை செய்துவிட்டு, வெளியே மனோன்மணி வந்தாள். இரகுபதி எங்கே என்று உடையார் கேட்டார். "அவர் உங்களைக் காணவில்லையென்று வந்துவிட்டார்" என்று மனோன்மணி சொன்னாள். அவன் செய்த வேலை குறையாய் இருக்கவே அவனைக் கூட்டி வருவதற்காக உடையார் திரும்பிப் போனார்.

அவர் சென்று சில நிமிஷங்களால் இரகுபதி, உடையார் போய்ச் சேரமுன் தான் போய்ச் சேருவதற்காக வேறு பாதையால் ஓடினான்.

பெரிய பட்டிணங்களில் மனிதர் நடந்து செல்வதற்கும், வாகனங்கள் செல்வதற்கும் என்று பாதைகளை வெவ்வேறாகப் பிரித்திருப்பார்கள். காட்டுப் பக்கங்களில் இப்படி வெவ்வேறாக வகுப்பதற்கு அவசியம் இல்லையேயாயினும் காலடிப்பாதை என்றும் இயற்கையாகவே வெவ்வேறாக அமைந்து விடுகின்றன. பள்ளங்கள் திடர்கள் முதலியவற்றை விலக்கி, வளைந்து சுற்றி வண்டிற் பாதைகள் செல்ல, நேரே ஊடறுத்துக் கொண்டு காலடிப்பாதை செல்லும்.

உடையார் காலடிப்பாதையால் செல்ல, இரகுபதி எஞ்சிய வண்டிற் பாதையால் ஓடினான். அவனை இன்னொரு இடையூறு குறுக்கிட்டது. உடையாரின் மனைவி கோயிலில் இருந்து வண்டியில் வரும்பொழுது இரகுபதி ஓடிப் போனதைப் பார்த்துக் கொண்டு சென்றாள். இரகுபதி தனக்கு ஆரம்பத்திலேயே எல்லாம் விபரீதமாக நடப்பதைக்கண்டு அச்சப்பட்டான். அவன் நெஞ்சு பட பட என்று அடித்துக் கொண்டது.

நல்ல வேளையாக மேற்படி இடையூறுகள் ஒன்றும், இரகுபதியின் காதல் நாடகத்தில் குறுக்கே வந்து அசம்பாவிதம் செய்யவில்லை.

இரகுபதி தனது வாழ்க்கையின் முதல் வெற்றியாகக் கருதினான். வெற்றியின் பெறுபேறு மனிதனின் மூளையில் சென்று தாக்கி மேலும் துணிகரச் செயல்களைச் செய்யத் தூண்டி விடுகின்றன. ஒரு செயல் ஒருவனை ஏற்றுகிற அளவு இறக்கி விடவும் சக்தி வாய்ந்தது.

ஒருமுறை கொலை செய்தவன் பின்னர் செய்யக் கூசமாட்டான். ஒருமுறை மனச்சாட்சியை அடக்கியவன் பின்னர் பலமுறையும் மனச்சாட்சியை அடக்குவான். ஒரு காலத்தில் மனச்சாட்சி தன் செயல் அற்று விடும்.

இரகுபதியினதும், மனோன்மணியினதும் தொடர்பு தங்கு தடையின்றி இதன் மேல் வளர்ந்து வந்தது. அவர்கள் சந்தர்ப்பம் வாய்க்குந்தோறும் கூச்சமின்றிச் சம்பாஷித்து வந்தனர்.

எனது அறைக்குப் பக்கத்தில் உள்ள அறைக்குள்தான் இரகுபதி படுப்பது வழக்கம். ஒரு நாள் காலையில் எழுந்து பார்த்தபொழுது இரகுபதியைக் காணவில்லை. காலை வெகுநேரமாகியும் அவன் காணாமற் போகவே நான் மிகவும் பரபரப்படைந்தேன்.

கதவுகளுக்கு ஒரு தாழ்ப்பாள் போதாதென்று, இரண்டு தாழ்ப்பாள்கள் பலர் போடுகிறார்கள். இது கள்ளருக்கு விசேஷ கவலையைக் கொடுக்கும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் இது காதலர்களுக்கு வாய்ப்பாய் முடியுமென்று, எந்தத் தொழிலாளியும் எண்ணிச் செய்திருக்கமாட்டான்.

முன்னொரு காலத்திலே சோழ தேசத்து இராணி ஒருத்தி, தனது ஊடலின் வேகத்தைக் காட்டுவதற்கு, இரண்டாவது தாழ்ப்பாள் உபயோகிக்கப்பட்டதாகச் சரித்திரம் கூறுகிறது. காதலர் உலகத்தில்-களவியலில்-மனோன்மணி இரகுபதியால் இந்த இரட்டைத்தாழ்ப்பாள் புதுவகையில் உபயோகப்பட்டது.

மனோன்மணி இரவில் உறங்குவது, பெரிய வீட்டு அறைக்குள். அவள் தான் அதற்குள் தனியே உறங்குவது. அவள் படுக்கப் போனதும், கதவை உள்ளுக்கு இரண்டு தாழ்ப்பாளும் போட்டுப் பூட்டிவிட்டுப் படுப்பது வழக்கம்.

இப்பொழுது இரகுபதியின் சந்திப்பின் பிறகு. அவள் முதலாவது தாழ்ப்பாளைப் போட்டு, அதே தாழ்ப்பாளைத் திறந்து விடுவாள். கதவு திறந்தபடி இருக்கும். சத்தத்தைக் கேட்பவர்களுக்கு இரண்டு தாழ்ப்பாள் போட்டுப் பூட்டின மாதிரிக் கேட்கும். இரவு பத்துமணியின் மேல், ஊர்

உறங்கியதன் மேல், இரகுபதி சந்தடியின்றி, அடிமேல் அடி வைத்து, மெதுவாகத் துணிவோடு, மனோன்மணியின் அறைக்குள் நுழைந்து விடுவான். கோழி குரல் காட்ட எல்லோரும் துயில் எழும்பு முன் இரகுபதி, மெதுவாக வெளியே வந்து, தனது படுக்கையில் படுத்து விடுவான். இந்த வழக்கம் மிகவும் கெட்டித்தனமாகச் சில நாட்கள் ஒரு வித இடையூறுமின்றி அவர்களுக்குள் நடந்து வந்தது.

நித்திராதேவி இன்று வரை எத்தனையோ பேருக்கு மகத்தான நஷ்டத்தை செய்து வருகிறாள். காதலர்கள் பக்கத்தில் நித்திராதேவி என்றுமே தலைகாட்டியதில்லை. அவளுடைய கெட்டித்தனம் ஒன்றும் காதலர்கள் விஷயத்தில் பலிக்காது.

ஆனால் இரகுபதியின் சரீரத்திற்கு ஒரு பகல் முழுவதும் நடுக்கத் தைக் கொடுத்த கெட்டித்தனம் நித்திராதேவியைச் சேர்ந்தது. தவறாது கோழி குரல் காட்ட, எழுந்து தனது விடுதிக்கு வருகிற இரகுபதி அன்று நித்திராதேவிக்கு அடிமைப்பட்டுவிட்டான். மனோன்மணியும் அவனைக் குறித்த நேரத்தில் அனுப்பத் தவறி நித்திரை வசமானாள்.

மனோன்மணியின் தாய் "பிள்ளை, பிள்ளை", என்று கூப்பிட்டதும் சத்தத்திற்குத்தான் இருவரும் விழித்தனர். இரகுபதிக்கு அப்பொழுது தொடங்கிய நடுக்கம்...

இரகுபதி வெளியே போக முடியாது. நன்றாக நிலம் வெளுத்து விட்டது. அவர்கள் சாயமும் வெளுக்கப் போகிறது. இருவரும் மனம் கலங்கினர். மனோன்மணியின் சமயோசித புத்தி நிரம்பிய மூளைக்குக்கூட ஒன்றும் தோன்றவில்லை. வெளியே தாய் கூப்பிட்டுக்கொண்டு நின்றாள். கதவை வந்து தள்ளிப் பார்த்தாளானால் கதவு தானே திறந்து விடும்.

ஆபத்து நேரத்தில் அதிசய புத்திகள் பெண்களுக்குத் தான் வரும். அவர்கள் அறைக்குள் ஒரு பக்கத்தில், சாமான்கள், பெட்டிகள், ஆகியன வைக்கும் "கோற்காலி" என்று அவர்களால் அழைக்கப்படும் ஓர் பதிந்த பரண் இருந்தது. அதன் கீழே இரகுபதியை நுழைந்து இருக்கும்படி கட்டளையிட்டு விட்டு, மனோன்மணி கதவைப் பூட்டித் திறந்து கொண்டு வெளியே சென்றாள்.

இரகுபதி "கோற்காலின்" கீழ் கிடந்து நடுங்கினான். மனோன்மணி நிமிஷத்திற்கு நிமிஷம். பெரிய வீட்டுக்குள் அம்மா போகிறாளா? அப்பா போகிறாரா? என்று கவனித்த வண்ணம் திகிலோடு தனது வேலையைச் செய்தாள்.

மனோன்மணி தான் தயாரித்த தோசைகளில் சிலவற்றை இரகசியமாகக் கொண்டுவந்து இரகுபதிக்குக் கொடுத்தாள். இரகுபதி கோற்காலின் கீழ் படுத்துக்கொண்டு தோசையை மிண்டி விழுங்கினான். பூதாக்கலம் பரிமாறும் கட்டம் இது. இப்படியே பகலுணவும், இரவுணவைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

உடையார் குடும்பம் அவர்கள் பெரிய வீட்டுக்குள் போவது மிகக் குறைவு. அந்த வீட்டுக்கு யன்னல் கிடையாது. பகலிலும் இருட்டாக இருக்கும். மனோன்மணியே அதற்குள் அதிகம் போவாள். அங்கேயுள்ள சாமான்களை அவள்தான் குறிப்பாக வைத்த இடத்தில் குறிப்பாக எடுப்பாள். இரகுப்தி அதிகம் பயப்படத் தேவையில்லையெனினும் அவன் கோற்காலியின் கீழ் மடங்கி ஒடுங்கிக் கிடந்த நிலை மிகவும் பரிதாபகரமானது.

நான் இரகுபதியைக் காணாது பரபரப்படைந்தேன். பொழுதுபட என்னோடு பேசிவிட்டு இரவு எட்டு மணிவரையில் படுக்கைக்குப் போனவன், விடியவும் வேலைக்காரன் கோப்பியைக் கொண்டு போய்ப் பார்த்தால் ஆளைக் காணவில்லை. வெளியில் போயிருப்பான் என்று நான் நினைத்து முதலில் பரவாய் பண்ணவில்லை. நேரம் செல்லச் செல்ல நான் மிகவும் பயப்பட்டேன்.

முதலில் நான் சென்று பண்டிதரிடம் விஷயத்தைச் சொன்னேன். பண்டிதர் என்னைப் போல் பரபரப்படையவில்லை. பதிலுக்குச் சிரித்தார். கவலைப்படவேண்டிய விஷயத்திற்குச் சிரிக்கிறாரே என்று நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன். "ஏன் சிரிக்கிறீர்கள்?" இரகுபதி எங்கேயிருக்கிறான் என்று உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டேன்.

சந்திர கிரகணத்தோடு சந்திரன் அஸ்தமித்தால், மறுநாள் சந்திரோதயம் வரையும் சைவர்கள் சாப்பிடமாட்டார்கள். மறுநாள் சந்திரன் ஒரு ஊறுமின்றி உதயமாகிறானா? என்று பார்த்த பின்தான் சாப்பிடுவார்கள்.

இரகுபதி ஒரு இரவு காணாமல் போனால் மறுநாள் இரவுவரை காத்திருக்கவேண்டும் என்று பண்டிதர் பொடி வைத்துக் கதைத்தார். "நீங்கள் சொல்வது எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே" என்று நான் சொன்னேன்.

"சரி விளங்கப்படுத்துகிறேன் வாருங்கள்" என்று சொல்லி என்னை உடையார் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு சென்றார். நாங்கள் உடையார் வீட்டுக்குச் சென்ற தருணம் உடையார் அங்கேயில்லை. அவரின்

மனைவியும் மகளும் தான் அங்கேயிருந்தனர்.

பண்டிதர் உடையார் வீட்டு வாயிலுக்குக் கிட்டச் சென்றதும், பரபரப்பாக ஓடி, பெரிய வீட்டுக்குள் ஒரு விஷப்பாம்பு நுழைகிறது என்று சொல்லி ஒரு தடியும் எடுத்துக்கொண்டு பெரிய வீட்டுக்குள் நுழைந்தார். நானும் பின்னாலேயே சென்றேன்.

காய், சூய் என்று சத்தம் போட்டுக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தோம். "கோற்காலி" யின் மேல் இருந்த "ட்ரங்" பெட்டி மேலெழுந்து எழுந்து ஆடியது. (இரகுபதியின் நடுக்கத்தினால் ஏற்பட்ட அசைவு தான் அது). நாங்கள் கோற்காலியின் கீழ் குனிந்து பார்த்தோம். மிரள, மிரள ஏக்கத்தோடு நோக்கும் இரு பெரிய விழிகள் உருளுவதைக் கண்டோம். முதல் ஆந்தையைப் போல் காணப்பட்டது.

"பாம்பு வெளியால் ஓடுகின்றது" என்று சொல்லிப் பண்டிதர் வெளியில் ஓடினார். நானும் அவரைப் பின்பற்றினேன். பாம்பு வெளியில் செடிக்குள் மறைந்து விட்டதென்ற முடிவோடு நாங்கள் திரும்பி வந்தோம்.

"விஷப்பாம்புகள் இவ்வூரில் அதிகம்" என்றும் அவர்களோடு சில பேசிவிட்டு, உடையார் வர நேரஞ்செல்லுமெனவே, நாங்கள் அங்கே அதிக நேரம் நில்லாமல் திரும்பி வந்தோம். அந்தச் சிறிது நேரத்தில் நான் சிரிப்பை அடக்கிக்கொண்டு முகபாவத்தை வித்தியாசப்படுத்தாது இருக்கப் பெரிதும் பாடுபட்டேன்.

பழைய தமிழ் நூல்கள் களவுக்குரிய காலம் இரண்டு மாதம் என்றும், அதன் மேல் கற்பு நிகழவேண்டுமென்றும் வரையறுத்துக் கூறுகின்றன. இதை இரகுபதி படியாவிட்டாலும் அவனுடைய மேலதிகாரிகள் படித்திருந்தனர். அவர்கள் இரகுபதியை நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள மன்னார்ப் பட்டினத்திற்கு மாற்றி விட்டார்கள்.

பிரிவுத் துன்பம் என்பது பொல்லாத துன்பம் என்று தமிழ்நூல்கள் விதந்தோதுகின்றன. பிரிந்தோரின் நெஞ்சு பாலைவனமாகி விடுமென்பதை அறிந்து போலும். பாலைத்திணை என பிரிவுக்குப் பெயர் வைத்தனர். இந்தக் கொடிய பாலைவனத்தில் இரகுபதியையும், மனோன்மணியையும் பிரவேசிக்க விடாது பண்டிதர் முதலியோர் அவர்கள் மீது தயை காட்டினர். அவர்களுக்கு மணம் பேசினர்.

சுபயோக சுபமுகூர்த்தத்தில் இரகுபதி மனோன்மணிக்கு முறைப்படி மாங்கல்யதாரணம் செய்தான். விதி அவர்களைப் பாலைத்திணையை

அநுபவிக்கச் செய்தது. மன்னார்ப் பட்டினத்தில் இரகுபதி தம்பதிகள் வசிக்க வசதியான வீடு அகப்படவில்லை. இரகுபதி தனியே சென்று கடமையைச் செய்துவிட்டு வாரமுடிவில் மனோன்மணியிடம் திரும்பலானான்.

பண்டிதர் நல்ல ஜாதிப் பசு மாடுகள் வளர்த்தார். நல்ல ஜாதிப் பசு மாடுகளைப் பரப்புவதற்காக ஒரு பெரிய காளை மாடு வளர்த்தார். அந்தக் காளைமாடு முழுமுதற் கடவுளாகிய பரமசிவனுடைய வாகனமோ என்று நான் சில சமயங்களில் ஐயுறுவதுண்டு. அவ்வளவு அழகும், கொழுப்பும், கெம்பீரமும் வாய்ந்தது. அதன் கழுத்தில் ஒரு மணியும் கட்டப்பட்டிருந்தது.

ஒரு சனிக்கிழமை இரவு இரகுபதி பண்டிதரின் காளைமாட்டின் கழுத்தில் கட்டியிருந்த மணியை அறுத்துக்கொண்டு என்னிடம் வந்தான். "ஏது? ஒரு மணி" என்று நான் இரகுபதியைக் கேட்டேன்.

இரகுபதி ஒன்றும் பேசமல் மணியைக் கொண்டுபோய் எனது பழைய ஆயுதங்கள் இருக்கும் பெட்டிக்குள் வைத்தான்.

"பண்டிதருடைய மாட்டின் மணி போலிருக்கிறதே" என்று கேட்டான்.

"ஆம் அவருடையது தான்"

"இப்படி நீ செய்யலாமா?"

"வேறு வழி இல்லை"

"என்னத்திற்கு?"

"அவரின் காளைமாடு, இரவில் பசுமாட்டுப் பட்டியில் மணியைச் சப்திக்கச் செய்வதால், தனக்கு நித்திரை வருவதில்லை என்று மனோன்மணி எனக்கு எழுதுகிறாள்" என்று இரகுபதி சொல்லிவிட்டு அவன் நிற்காமற் போய்விட்டான். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

மறுநாள் நான் பண்டிதரிடம் போனேன். அவர் சில சமயங்களில் எனக்குப் பழைய பாடல்களைச் சொல்லி விளங்கப்படுத்துவது வழக்கம். அன்று;

"செறியிருங் கறுப்பொடு
பெருந் தோணிவிச்
செறிவளை நெகிழச்
செய்பொருட் ககன்றோர்

அறிவர் கொல் வாழி
தோழி பொறிவரி
வெஞ்சின வரவின்
பைந்தலை துமிய
உருவுரு முரறு
மரையிருண்டு நாள்
நல்லேறியங்கு தோ றியம்பும்
பல்லான் றொழுவத்
தொருமணிக் குரலே"

- குறுந்தொகை 190

என்ற செய்யுளை விளங்கப்படுத்தினார். இரகுபதியின் செயல் புதிதன்று; நியாயமானதும் என்று இதன் பின் எனக்குப்பட்டது.

இந்த மணியைத்தான் நான் இப்பொழுது எனது பழைய ஆயுதப் பெட்டியிலிருந்து எடுத்து இராஜத்திற்குக் கொடுத்தேன்.

இரகுபதி இப்பொழுது தனது ஓவசியர் வேலையை உதறித் தள்ளிவிட்டுத் தனது மாமனாரின் வாரிசாக அதே ஊரில் கிராம விதானையாராக இருக்கிறான். நானும் இவ்வூருக்கு உத்தியோக மாற்றமாகிவிட்டேன்.

(ஈழகேசரி - 1-1-50)

# "யார் பேசுகிறது?"

● 'ராதா சத்தமின்றி மரத்தின் கீழ் வந்து நின்றாள். தியாகராசா உருக்கமாகப் பாடிக்கொண்டிருந்தான்"!

ஒற்றை மாட்டு வண்டியிற் பூட்டப்படும் மாடுகளுக்கு இரண்டு பக்கமும் நாணயக்கயிறு கோக்கப்பட்டிருக்கும். இரட்டை மாட்டு வண்டியிற் பூட்டப்படும் எருதுகளுக்கு ஒரேயொரு நாணயக்கயிறுதான் உண்டு. எமது நண்பர், ஆராய்ச்சி நிபுணர் ஒருவர், தனித்தியங்கும் தன்மையுள்ள பெண்கள் இரட்டைப்பின்னலும், சோடியோடு இயங்கும் பெண்கள் ஒற்றைப் பின்னலும் வைத்துக் கொள்ளுகிறார்கள் என்ற முடிவுக்கு வந்துள்ளார். ஆராய்ச்சிமணியின் இந்த முடிவு அம்பிகாபுரம் விஷயத்தில் மிகவும் சரியானதென்று கடைத்தெருச் சோமு அனுவதிக்கிறார்.

அம்பிகாபுரம் அரிசி "மில்" மனேஜர் சோமசுந்தரம்பிள்ளையின் ஒரேயொரு மகள் ராதாதேவி கடைத்தெருவில் எப்பொழுதும் இரட்டைப்பின்னலுடன் திரிவதைப் பலரும் பார்த்திருப்பார்கள். இன்னும் நுட்பமாகப் பார்ப்பவர்கள் அவளுடைய இரண்டு பின்னல்களும், சிலநேரம் முன்னுக்கும், சிலநேரம் பின்னுக்கும், சிலநேரம் ஒன்று முன்னுக்கும், ஒன்று பின்னுக்குமாக வெவ்வேறு நிலைகளில் இருப்பதை அவதானித்து இருப்பார்கள். எந்த நேரத்தில் முன்னுக்கு இருக்கும்? எந்த நேரத்தில் பின்னுக்கு இருக்கும்? எந்த நேரத்தில் மாறி இருக்கும்? என்ற இரகசியம் பலருக்குத் தெரியாது. அவைகளின் நிலைக்குத் தக்கபடி அவளின் உணர்ச்சியும் மாறுபட்டிருக்கும் என்பது தியாகராசா ஒருவனுக்குத்தான் தெரியும்.

ராதாதேவியின் அந்த இரண்டு பின்னல்களுள்ளும் அகப்படாமல் இரு கன்னங்களிலும் சுருண்ட கூந்தல் காற்றில் விளையாடிக்கொண்டிருக்கும் காட்சி, பரந்த முற்றவெளியிற் பட்டப்பகலில் இரண்டு நாய்கள்

ஓடிக் குதித்து விளையாடுவதை ஞாபகம் ஊட்டும். அவளுடைய அந்த அகன்ற விழிகள் இரண்டும் நல்லவேளையாக ஒருவரையும் கூறுகுறிப்பாகப் பார்ப்பதில்லை.

எல்லாவகையாலும் அழகுபடைத்த ராதாதேவியிடத்துச் சிலர் ஒரேயொரு குறை மாத்திரம் சொல்லுவார்கள். "நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியும்" என்று பழையகதை வசன நடைகளிற் கூறப்படுவதுண்டு. இது ராதாதேவிக்கு மிகவும் பொருத்தமானது. தச்சு வேலையில் அடிமுடி கண்டவர்கள் சிலர் பதினாறு பலகையும் இரண்டு புறவெட்டும் என்று சொல்லுவார்கள். பகிரங்க வேலைப்பகுதியார் இரண்டுசோடி மாடு பூட்டி இழுக்கும் உருளை என்பார்கள். இரட்டை நாடி விழுந்துள்ள அவளின் சரீரத்தைக்கண்டு புடைவைக்காரர் உள்ளூற மகிழ்ந்திருப்பார்கள். ஆனால் "றிக்ஷா" இழுக்கும் முனிசாமி மனதிற்குள்ளாவது திட்டாமலா இருப்பான்? கல்லூரியிலிந்து வீட்டுக்கும், வீட்டிலிருந்து கல்லூரிக்கும் மாறிமாறி ராதாதேவியை இழுத்துத் திரிபவன் முனிசாமியல்லவா?

அம்பிகாபுரம் இந்துக்கல்லூரியில் எஸ்.எஸ்.ஸி. முதலாவது வருட வகுப்பில் ராதாதேவி படித்தாள். ராதாதேவி படிப்பில் ஆக விசேஷம் இல்லாவிட்டாலும் அவ்வளவு குறைவானவளன்று. ஆனால் பெரிய வாயாயடி. எல்லோரையும் சரியாகக் கிரகித்துக் கொள்வாள். எல்லோருடனும் மரியாதையாகப் பழகி அவர்களின் தன்மைகளை அறிந்து கொள்ளுவாள். அவளுக்குக் கல்லூரியில் ஒரேயொரு எதிரி இருந்தான். எல்லாருக்கும் விருப்பு வெறுப்பின்றி ஒவ்வொரு பட்டம் சூட்டுகின்ற தியாகராசா ஒரு நாள் ராதாதேவியை உருளை என்று சொல்லி விட்டான். பெண்கள் பக்கத்திலிருந்து பெரிய அக்களிப்போடு கூச்சல் கிளம்பியது. எவரோடும் மரியாதையாகவும் அடக்கமாகவும் பழகும் ராதாதேவிக்கு எவரும் பட்டம் கட்டத் துணியமாட்டார்கள். அவள் அக்கல்லூரியிலேயே பெரியவளாயுமிருந்தாள். அவள் உடனே கல்லூரிப் பிரதம ஆசிரியருக்கு முறைப்பாடு பண்ணுவாள் என்று தியாகராசா நினைத்துப் பயந்தான். ஆனால் அவள் அப்படி முறைப்பாடு செய்யவில்லை. அன்றிலிருந்து தியாகராசாவின் முகத்தை ஏறெடுத்தும் அவள் பார்ப்பதில்லை. இருவருக்கும் தெறித்துவிட்டது. தியாகராசா இச்சம்பவத்தோடு எல்லோருக்கும் பகிடி சொல்வதைக் குறைத்துக்கொண்டான். அவனுடைய போக்கே மாறிவிட்டதென்றும் கூறலாம்.

இந்தத் தியாகராசா அம்பிகாபுரம் இந்துக்கல்லூரியில் எஸ்.எஸ்.ஸி வகுப்பிற் படித்துக்கொண்டிருந்தான். அவன் அம்பிகாபுரம் டி.ஆர்.ஓ. நடராசாவின் சொந்தத் தம்பி. அவன் விவேகம் குறைந்தவனல்லன்.

படிக்கிறவகையில் அவனுடைய விவேகம் தொழிற்படவில்லை.

அவனுடைய விவேகத்தின் பெரும்பகுதி அவனுடைய மீசை விஷயத்திலேயே கழிந்தது. அவன் தனது மீசையிற் செலவழிக்கும் ஊக்கத்திற் கால்வாசி ஊக்கத்தைப் படிப்பிற் செலவழித்தால் அவன் நிச்சயம் பரீட்சையிலே தேறி இருப்பான். புதிதாக ஒரு கட்டடம் நிருமாணிப்பவன் எவ்வளவு முன் ஆயத்தத்தோடும் கூரிய அவதானத்தோடும் தனது வேலையைத் தொடங்குகிறானோ, அதே மாதிரித் தியாகராசாவும் தனது மீசையைத் சிருட்டிப்பான். சத்திர சிகிச்சை செய்யும் ஆங்கில வைத்தியர் எத்தனை வகைக் கருவிகளோடு சிகிச்சை செய்யத் தொடங்குகிறாரோ, அதேமாதிரி அவனும் மீசையைச் சிருட்டிக்கத் தொடங்குவான்.

கடைவாயின் பக்கங்களிலிருந்து நூலிலும் சிறிதாக, மெல்லிய உருக்குக் கம்பிபோல் ஆரம்பிக்கும் மீசை, மிகவும் குறைந்த பிரமாணத்திற் சிறிதாகப் பெருத்துச் சென்று மூக்குக்கு அண்மையில் ஒரு வளைவு போட்டு அகன்று, மத்திம பாகத்திற் சந்திக்கின்றது. இதை நான் மிக இலேசாக எழுதிவிட்டேன். பிரமாணந் தப்பாமல் அதைச் சிருட்டிக்கும் தியாகராசாவுக்கல்லவா அதன் கஷ்டம் தெரியும்.

டி.ஆர்.ஓ. நடராசா தன் தம்பியைக் கொழும்பிலுள்ள கல்லூரிகளிலும் சேர்த்துப் பயனின்றிப்போகவே, தனது கண்காணிப்பிலிருந்து படிக்கட்டும் என்று நினைத்தே வேலை பார்க்கும் ஊரில் அம்பிகாபுரம் இந்துக்கல்லூரியிற் கொண்டு வந்து சேர்த்தார். நடராசா பார்க்கும் நேரமெல்லாம், தன் தம்பி படித்துக் கொண்டிருப்பதையே காண்பார். கல்லூரி ஆசிரியர்களை இடைக்கிடை கண்டு தனது தம்பியின் படிப்பைப்பற்றி விசாரிப்பார். டி.ஆர்.ஓ. முகத்தைப் பார்த்து அவரின் தம்பியைக் குறைகூறக் கல்லூரி ஆசிரியர்கள் விரும்பவில்லை. "மகா கெட்டிக்காரன்" என்று சொல்லிவிட்டால் டி.ஆர்.ஓ. சந்தோஷப்படுவார் என்று அவர்கள் நம்பினார்கள்.

டி.ஆர்.ஓ. நடராசாவை ஊரவர்கள் எல்லோரும் புகழ்ந்தபோதிலும், அவருக்குக்கீழ் வேலைபார்க்கும் விதானைமாரும், அவரின் தம்பி தியாகராசாவும், அவருக்கு வேலை பார்க்கத் தெரியாது என்று ஏகோபித்து முடிவுசெய்துவிட்டார்கள்.

டி.ஆர்.ஓ. என்ற சுருக்கமான பெயர் சமீபகாலத்தில் ஏற்பட்டது. அதற்குமுன் மணியகாரன், வன்னியனார், அதிகாரம், முதலியார், றட்டமஹாத்மய என்று வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு பெயரோடு அந்தக் காலத்திற் கிராமங்களை ஆட்சி புரிந்துவந்தனர். அவர்கள் ஆட்சி முறை வேறு, இவர்கள் முறை வேறு. அவர்களின் ஆட்சியின் கீழ்

விதானைமார் பழக்கி எடுக்கப்பட்டவர்கள். தோடம்பழம், நெய், தேன், முட்டை ஆகியனவற்றை விதானைமார் அவர்களுக்கு மாதந்தோறும் காணிக்கையாகக் கொடுப்பார்கள். அதற்குப் பதிலாக விதானைமார் சனங்களின் மேல் ஆதிக்கம் செலுத்தினர். டி.ஆர்.ஓ.காலத்தில் இவைகள் எல்லாம் இல்லாமற்போய் விட்டது. "ஆடின காலும் பாடிடு மிடறும்" சும்மா இருக்கமாட்டா என்பதுபோல், எவ்வளவுதான் நல்லவராய் இருந்தாலும், தங்கள் காணிக்கைகளை ஏற்க மறுப்பதினால், டி.ஆர்.ஓ. மீது விதானைமாருக்கு விருப்பம் செல்வதில்லை. விதானைமாரின் குறையைத் தியாகராசா ஒரு அளவில் திருப்திசெய்து வந்தான். முட்டை, தோடம்பழம் ஆதியனவற்றை விதானைமாரிடமிருந்து தியாகராசா தன் தமையனாருக்குத் தெரியாமற் பெற்றுவந்தான்.

தியாகராசா விதானைமாருக்குத் தோழன். டி.ஆர்.ஓ. வுக்கு அடக்க ஒடுக்கமாகப் படிக்கும் மாணவன். கல்லூரி ஆசிரியர்களுக்குப் பொது நலத்தொண்டன். ராதாதேவிக்குப் பகைவன்.

டி.ஆர்.ஓ. இருக்கும் வீடும், கந்தோரும் ஒரு இடத்திலேயே இருந்தன. அவரின் கந்தோரில் "ரெலிபோன்" என்னும் பேசும் தந்தி இருந்தது. மாலை நேரத்திற் கந்தோரில் எவரும் இருக்கமாட்டார்கள். தியாகராசா மாலை ஐந்தரை மணிக்குத் தனது நண்பர்களுடன் "ரெலிபோன்" பேசுவது வழக்கம். அன்றும் வழக்கம்போலவே பேசுந் தந்திக்கருவிக்கு முன்னால் இருந்துகொண்டு இலக்கங்களைச் சுழற்றினான்.

"ஹலோ!"

"ஹலோ!"

"யார் பேசுகிறது?"

"நான்தான் தியாகராசா"

"எந்த?"

"டி.ஆர்.ஓ கந்தோர்; பாலா! என்ன இப்பொழுதுதான் நித்திரையால் எழுந்து நிற்கிறாயா? ஏன் யாரென்று உனக்குத் தெரியவில்லையா?"

ராதாதேவிக்கு இப்பொழுதுதான் தான் யாருடன் பேசுகிறேன் என்று தெரிந்தது. தனது பகைவன் தியாகராசனுடனே பேசுகிறேன் என்பதை அவள் உணர்ந்தாள். அவன் தன்னை அவனுடைய நண்பன் பாலா என்று எண்ணிக்கொண்டு பேசுவதையும் அவள் உணர்ந்தாள்.

தியாகராசா இலக்கங்களைச் சுழற்றும்பொழுது ஏதோ ஒரு இலக்கத்தை மாறிச் சுழற்றிவிட்டான். தியாகராசா தன்னுடன் பேசுவது பாலா என்றே நினைத்தான். குரல் வித்தியாசத்தைத் தியாகராசா கூர்மையாக அவதானிக்கவில்லை. ராதாவின் குரலும் சிறிது கடினமானதுதான்.

ராதா, தியாகராசா மேலும் என்ன பேசுகிறான் என்பதை அறிய விரும்பினாள். அந்த நோக்கத்தோடு தியாகராசா கேட்ட கேள்விக்கு "இல்லை" என்று சிரித்து ஒரு மாதிரி மழுப்பினாள். மேலும் சம்பாஷணை தொடர்ந்தது:

"வயற்கரைப் பக்கம் உலாவ வருகிறீரா?

"இன்றைக்கு எனக்கு வரவசதியில்லை".

"ஏன்?"

இன்று நான் "மில்" மனேசர் வீட்டுக்குப் போக வேண்டியிருக்கிறது"

"நானும் வரட்டா?"

"உன்னுடன்தானே அவள் பேசுவதில்லையே".

"எனக்கு அவளிற் கோபமில்லை. நான் அன்று உருளை என்று சொன்னது அவளுக்குக் கேட்டுவிட்டது. அவள் அன்று தொடங்கி என்னுடன் பேசுவதில்லை. என்ன இருந்தாலும் அவள் நல்ல குணசாலி. அவள் என்னைப்பற்றி ஆசிரியருக்கு அறிவிக்கவில்லை."

"என்ன குணசாலியானாலும் ஆள் உருளைதானே".

"உருளை என்றால் என்ன?" அவள் எவ்வளவு அழகானவள். சோழகக் காற்றுக்கு அடித்து விழுகிற நவ நாகரீகப்பெண்கள் என்னத்துக்கு உதவும்".

"மெல்லிய பெண்களிலும் தடித்த பெண்கள் விசேஷம் என்று சொல்லுகிறாயா?"

"தடையென்ன? தடித்த பெண்கள்தான் குடும்பத்துக்குத் தகுதியானவர்கள் - மெல்லிய பெண்கள் சும்மா காட்சிக்குத்தான்."

"அப்ப அவளை உருளை என்று ஏன் பழித்தாய்?"

"நான் பழிக்கவில்லை. பகிடிக்குச் சொன்னேன். அது அவளுக்குக் கேட்டுவிட்டதடா"

"அப்ப நீ அவளைக் காதலிக்கிறாய் போலிருக்கிறது?"

"வேறென்னடா! உனக்கு நான் அன்றைக்கு என்ன சொன்னேன்."

"நான் பகிடிக்கு என்று நினைத்தேன். அப்ப அவளுக்கு ஒரு காதற் கடிதம் எழுதிப் பார்க்கிறதுதானே!"

"போடா, நல்ல புத்தி சொல்லுகிறாய்? அவள் அதை அதிபரிடம் காட்டிவிட்டால் என் கதி; அண்ணர் என்ன செய்வார் தெரியுமா?"

"அவள்தான் நல்லவள் என்று சொன்னாயே!"

"நல்லவள் என்றால் காதற் கடிதத்தைப் பெற்றுக்கொள்வாளா? ஒரு அளவுக்குத்தானே எல்லாம்.

"அப்ப என்ன செய்யப்போகிறாய்?"

"நீதான் ஒரு புத்தி சொல்லேன்".

"என்னைக் கேட்டால், நீ அவளிடம் சென்று உனது குறைகளை முறையிடு என்றுதான் சொல்லுவேன்."

"நல்ல புத்தி சொன்னாயடா! அட, நான் இப்பொழுது உன்னிடம் வரட்டா?"

"சரி, விரும்பினால் வா. ஆனால் அவள் அங்கே இருப்பாளோ? வயற்கரைப் பக்கம் உலாவப் போய்விடுவாளோ தெரியாது. நீ வயற்கரைக் குப் போ. நான் மனேச்சரைக் கண்டுகொண்டு அங்கே வந்து சேருகிறேன்."

"சரி"

"சரி".

பேசும் தந்தியின் குரல் இணைப்பை டக் என்று வைத்துவிட்டு ராதா அறைக்குள்ளே சென்று கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தாள். அவளுடைய முகத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி தாண்டவமாடியது. ஒருவருக்குத் தன்னைப்பற்றிப் பிறர் புகழ்ந்து பேசுவதைக் கேட்கும் பொழுது எவ்வளவு இன்பமாயிருக்கும். அதுவும் பெண்களுக்கு. அதுவும் அவர்களின் அழகைப்பற்றிச் சூரியபிம்பம் சந்திரபிம்பம் என்றாற் கேட்பானேன். ராதாவுக்குத் தியாகராசாமேல் ஒரு பாசம் தொட்டுவிட்டது. "உருளை" என்று சொன்னதற்காக அவள் வெறுத்தாளேயன்றி மற்றப்படி அவனுடைய போக்குகளில் அவளுக்கு வெறுப்பேயில்லை. இன்று தியாக ராசாவின் உண்மையான கருத்தைக் கேட்டதும் அவளுக்கு அவன்மேல் நிரந்தரமானதோர் அன்பு ஏற்பட்டுவிட்டது. அவனின் செயல்களை மேலும் கவனிக்க அவள் வயற்கரைக்குப் புறப்பட்டாள்.

தியாகராசனுக்கு எவ்வித யோசனையும் தோன்றவில்லை. வழக்கம் போல வயற்கரைக்கு உலாவப் புறப்பட்டான். அந்நேரம் அங்கே ஒருவரு மில்லை. வயற்கரையிலே தாமரைக் குளத்தின் அருகிலுள்ள மருதமரத் தின்மேல் ஏறி இருந்துகொண்டான்.

"ராதே உனக்குக் கோபமாகாதடி" என்ற பழைய சிந்தாமணிப் பாட்டைத் தியாகராசன் மெதுவாகப் பாடிக் கொண்டிருந்தான். ராதா, சத்தமின்றி மரத்தின்கீழ் வந்து நின்றாள். தியாகராசன் உருக்கமாகப் பாடிக்கொண்டிருந்தான். ராதாவுக்குச் சிரிப்பு அடக்க முடியவில்லை. சிரித்தும் விட்டாள். தியாகராசன் திரும்பிப் பார்த்தான். அவனுக்குச் சிறிது அவமானமாகவும் இருந்தது. மரத்தின் நின்றும் கீழே இறங்கினான். ஆனால் ராதா நிற்கவில்லை. அப்பால் நிற்கும் தனது சிநேகிதிகளை நோக்கிப் போய்க்கொண்டிருந்தாள். தியாகராசன் அவள் போகும் திக்கைப் பார்த்துக்கொண்டே நின்றான். அவள் இப்பொழுதும் சிரித்துக் கொண்டே போனாள் என்பது அவள் கன்னங்களில் விழுந்த சுருக்குகளைப் பின் நின்று பார்த்தபோது சிறிது புலப்பட்டது.

நாட்கள் கழிந்தபோதிலும் தியாகராசன் ராதையின் குறிப்பைச் சரியாக அறிந்து கொள்ளவில்லை. அவன் அவள் முன்போல் தன்னை அடியோடு வெறுக்கவில்லை என்பதை உணர்ந்தான். தான் கவனியாத நேரத்தில் தன்னைப் பார்க்கிறாள் என்பதையும் அவதானித்தான்.

பெற்றோர்களையும் பிள்ளைகளையும் பள்ளிக்கூடங்களையும் அல்லோலகல்லோலப்படுத்தும் எஸ்.எஸ்.ஸி பரீட்சைப் பெறுபேறுகள் அன்று வெளியாயின. தியாகராசனின் விஷயத்தில் அது சிறிதும் வித்தியாசமின்றி வழக்கம்போலவே வந்தது.

அன்று மாலை ஐந்தரைமணிக்கு உண்மையாகவே பேசும்தந்தி மூலம் தியாகராசா ராதாவைக் கூப்பிட்டான். ஆனால் அவனுக்குப் பதிலளித்தது ராதாவின் தகப்பனார் என்பது அவனுக்குத் தெரியாது.

"ஹலோ!"

"ஹலோ!"

"யார் ராதாவா?"

ஆ. ஆமாம். யார் பேசுகிறது?"

"நான்தான் தியாகராசன். டி.ஆர்,ஓ.வின் தம்பி. இன்று இரவு தற்கொலை செய்யத் தீர்மானித்துவிட்டேன்."

"ஏன்?"

"ஏனா?" பரீட்சை வாய்க்கவில்லை என்பது ஒரு காரணம். ஆனால் அதையும் தாங்கியிருப்பேன். எனது காதலும் நிறைவேறுவதாகக் காணவில்லை. என்னால் அரைக்கணமும் இனி உயிர்வாழ முடியாது",

மனேச்சருக்கு இதைக் கேட்டதும் ஒரே அதிசயமாக இருந்தது. மனேச்சர் தனது மகளை மிகவும் ஒழுக்கமானவள் என்று இதுவரை தனக்குள்ளே பெருமைப்பட்டுக் கொண்டிருந்தார். நண்பர்கள் சிலருடனும் மகளின் ஒழுக்கத்தைப்பற்றிப் பேசிவந்தார். இதைக் கேட்டதும் திகைத்துப்போனார்.

சோமசுந்தரம்பிள்ளை தனது ஒரேயொரு மகளுக்குப் பெரிய உத்தி யோகஸ்தன் ஒருவனையே விவாகம் செய்துவைப்பார்கள் என்று அம்பிகாபுரம் வாசிகள் நினைத்தனர். ஆனால் அவர் தனது வியாபாரம் பிழைபடாமல் நடப்பதற்கு ஊக்கமுள்ள தனக்கு அடக்கமான ஒரு பையனைத் தனது மகளுக்கு விவாகஞ் செய்து வைக்க வேண்டுமென்று தனக்குள் முடிவு செய்துகொண்டார். டி.ஆர்,ஓ. வின் தம்பியைத் தனது மகள் காதலிக்கிறாள் என்று நினைத்ததும் அவருக்கு அது அநுகூலம் போலவும் தோன்றியது. டி.ஆர்.ஓ.வின் சலுகைகள் தாராளமாகக் கிடைக்குமல்லவா?

பதில் வரச் சிறிது தாமதிக்கவே அவள் பயந்துபோனாள் என்று நினைத்துத் தியாகராசா குரல் இணைப்பை (றிசீவர்) வைத்துவிட்டுப் போய்விட்டான். இணைப்பு அறுபட்ட சந்தத்தைக் கேட்ட சோமசுந்தரம் பிள்ளை தானும் அதை வைத்துவிட்டு மேலும் சிந்திக்கலானார். எல்லாவற்றுக்கும் முன்னர் அந்தப் பையன் வீணாக உயிரைப் போக்கப் போகிறானே என்று பதை பதைத்தார். அவனைத் தற்கொலை செய்யாமல் முதலில் தடுக்க வேண்டும் என்று நினைத்தார்.

சோமசுந்தரம்பிள்ளை உடனே புறப்பட்டு டி.ஆர்.ஓ. வின் வீட்டுக்குப் போனார். டி.ஆர்.ஓ. வும் சோமசுந்தரம்பிள்ளையும் அம்பிகாபுரம் விதானையாரும் அங்கே பேசிக் கொண்டிருந்தனர்.

தியாகராசா பேசுந் தந்தி இருந்த இடத்தை விட்டகன்று உடனே வயற்கரைக்குப் போய்விட்டான். தனியே இருந்து ஆலோசிப்பதற்கு அது சிறந்த இடமல்லவா? ராதாதேவி அன்றும் வழக்கம் போல, அவன் இருக்குமிடத்தைக் கடந்துகொண்டு கவலையின்றி அப்பாற் போவதைத் தியாகராசனால் சகிக்க முடியவில்லை. அந்த குளத்தில்

விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ளலாமா என்று நினைத்தான். தான் இறக்கப் போகிறேன் என்று சொன்னபின்பும், தன்னைக் காதலியாவிட்டாலும், தனக்கு ஆறுதல் மொழி கூறாது அப்பால் போகிறாளே என்பதை நினைக்க அவனுக்கு அழுகைகூட வந்துவிட்டது. முதலிற் பகிடிக்குச் சொன்னவன் இப்பொழுது மெய்யாகவே தற்கொலை செய்வதென்று தீர்மானித்துவிட்டான்.

ஆனால், அம்பிகாபுரம் விதானையார் வயற்கரைப்பக்கம் சென்ற தியாகராசனைக் கூட்டிக்கொண்டு போகாவிட்டால், அவன் நிச்சயம் தற்கொலை செய்திருப்பானோ என்பது என்னாற் கூறமுடியாது.

இதற்கிடையில் ஒழுங்குகள் எல்லாம் நடைபெற்றுவிட்டன. சொக்கட்டான் பந்தல் போடும் பொறுப்பு முழுவதும் ஒரு விதானையார். சாப்பாட்டுப் பந்தி விஷயங்கள் முழுவதும் மற்றொரு விதானையார். சோடனை விஷயம் முழுவதும் இன்னோர் விதானையார். மேள விஷயம் முழுவதும் வேறோர் விதானையார். அம்பிகாபுரத்தில் முதல்தரமான கலியாணவீடு.

எனக்குச் சமஸ்கிருத சுலோகங்கள் தெரியாது. இருந்தபோதிலும் அந்த மங்கள வைபவத்தின்போது இடைக்கிடையே என் காதில் விழுந்ததை இங்கு எழுதுகிறேன். "கன்னியாம் கனகசம்பன்னாம்... வல்லிபுரம் பௌத்ராய, வைரவப்பிள்ளை புத்ராய, தியாகராஜ நாம்னாய... கணபதிப்பிள்ளை பௌத்ரீம, சோமசுந்தரம்பிள்ளை புத்ரீம், ராதாதேவி நாம்னீம்" - அடி மேளத்தை!.

(ஈழகேசரி - 2-7-50)

# மிஸ் அன்னபூரணி

- 'மதுபானக்கடையில் பலருக்கும் கள் வாங்கிக் கொடுத்துத் தானுமுண்பவன் மறுபிறப்பில் தென்னை மரமாகப் பிறப்பான்".

- கருட புராண ஆராய்ச்சியாளர் குறிப்புரை.

"சுந்தரமூர்த்தி! உனக்குப் பென்ஷன் வந்துவிட்டதா?" என்று கேட்டுக் கொண்டே அவன் நண்பன் பாலகிருஷ்ணன் வந்தான். அவர்கள் இருவருக்கும் இருபது வயதுக்கு மேலிராது. இருபது வயதுக்குமேலிராத சுந்தரமூர்த்திக்கு என்ன பென்ஷன் என்று நீங்கள் அதிசயப்படுவீர்கள். அது ஒரு பெரிய கதை.

அம்பிகாபுரத்துக் கறுத்தாரை அந்தக்காலத்தில் ஒரு வள்ளல் என்றுஞ் சொல்வார்கள்.

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று"

என்னும் வள்ளுவர் குறளை இலட்சியமாகக் கொண்டு, கள்ளுக் கடையில் எத்தனை பேர் நின்றாலும், அத்தனை பேருக்கும் கள் வாங்கிக்கொடுத்துத் தானும் அருந்தும் வள்ளல் கறுத்தார்.

யாழ்ப்பாணப் பகுதியிலே மரவரி ஏற்பட்டுக் கள்ளுக்கடைகள் மூடப்பெற்றபின் கறுத்தாரின் வள்ளன்மை பிரசித்தமற்றுப் போயிற்று. அத்தோடு அவரின் கையும் வரண்டு போனதாகக் கேள்வி.

கறுத்தாரின் மகன் சுந்தரமூர்த்தி இப்பொழுது வாலிபப் பருவத்தினன். அவனுக்குக் குடிப்பழக்கம் இல்லாமையைக் கண்டு உலகம் அதிசயப் படுகிறது. அவனுக்குப் பென்ஷன் கிடைப்பது அதிலும் அதிசயமல்லவா?

அம்பிகாபுரம் புகையிலைத்தரகர் அருணாசலம்பிள்ளையும், அவர்தம் தர்மபத்தினி அன்னம்மாளும் காலைப் போசனம் முடித்துக்கொண்டு தமது மகளின் விவாகத்தையிட்டு ஒரு தரம் காரசாரமாக விவாதித்தனர்.

"சொன்னாலும் கேளாய் நீ, சொந்த அறிவுமில்லாய்" என்ற அன்னம்மா வின் பழைய பல்லவியோடு விவாதம் முடிவுக்கட்டத்திற்கு வர, அம்பலவாணர் துண்டைத் தோளிற் போட்டுக்கொண்டு சீட்டாட வெளியே கிளம்பினார். அன்னம்மாள் ஆட்டுக்குக் குழைதேட அரிவாளைத் தேடினாள்.

விவாதத்தின் ஆதி தொடங்கி அந்தமீறாகக் கேட்டுக் கொண்டிருந்த அவர்களின் அருமைப்புத்திரி அன்னபூரணி, ஒன்றுங் கேளாதவள் போல் "என்னம்மா தேடுகிறாய்?" என்று அவ்விடத்திற்கு வந்தாள்.

இச்சமயத்தில் "மிஸ் அன்னபூரணி" என்று தபாற்காரன் விழித்து ஒரு கடிதத்தை எறிந்துவிட்டுப் போனான். தபாற்காரர்கள் இப் பூவுலகில் ஒரு தனி இனம். எத்தனை பெரிய புதினங்களையும் சுமந்துகொண்டு வந்து அலட்சியமாக வீசி விட்டுப் போவார்கள். அவற்றின் பலாபலன்க ளைப்பற்றி அவர்களுக்குத் துளிக்கூடக் கவலை கிடையாது.

ஒரு போதும் இல்லாத வழக்கமாக "மிஸ் அன்னபூரணி" என்று தபால் வந்ததைக்கண்டு தாயும் மகளும் ஒரு முழம் வளர்ந்துவிட்டனர். அதற்குள் இருக்கும் விஷயம் அவர்கள் வாழ்க்கையை எவ்வளவு தூரம் மாற்றப்போகிறதென்று அவர்களுக்கு அப்பொழுது தெரியாது.

மிஸ் அன்னபூரணி அம்பிகாபுரம் இந்துக்கல்லூரியில் சிரேஷ்ட தராதரப்பத்திர பரீட்சை தேறியவள். மேற்கொண்டு படிக்க அங்கே வசதியின்மையால் அத்தோடு படிப்பை முடித்துக் கொண்டாள்.

ஊரிலுள்ள எல்லோருக்கும் தேடி உதவிபுரியும் கந்தையா உபாத்தியாயர், மிஸ் அன்னபூரணியை உபாத்தியாயினியாகப் படிப்பிக்க விருப்பமோ என்று கேட்டு, அவளைக்கொண்டு விண்ணப்பமும் எழுதிப் போடுவித்தார்.

இலங்கையில் இப்பொழுதிருக்கும் அரசாங்கமென்ன, எந்த அரசாங்கம் வந்தாலும் கிலுவங்குலத்தைப் பற்றிக் கேள்விப்பட நியாயமில்லை. எந்த அரசாங்கமென்றாலென்ன? பாராளுமன்ற அங்கத்தவரென்றாலென்ன? கிலுவங்குலம் கிராமத்தைச் சீர்திருத்த முன்வராவிட்டாலும், இலங்கை அரசாங்கத்தின் வித்தியாகந்தோரிற் கடமை பார்க்கும் ஒரு இலிகிதர்

அக்கராமத்தின்மேற் கண்ணோட்டங் கொண்டார். கண்ணோடியதுமல்லா மல், அக்கிராமத்துப் பெண்களின் மேல் கருணை கொண்டு அங்கேயுள்ள பாடசாலையில் மிஸ் அன்னபூரணியைத் தையல் படிப்பிக்கச் செல்லுமாறு கட்டளையும் பிறப்பித்தார்.

அன்னபூரணிக்கு உபாத்தியாயினி வேலை கிடைத்துவிட்டது என்பது நொடிப்பொழுதில் அம்பிகாபுரம் இராஜவீதி முழுவதும் பரம்பி விட்டது. மிக விரைவாக அருணாசலம் வீட்டில் ஒரு மகாநாடு கூட்டப்பெற்றது. அன்னபூரணியைப் படிப்பிக்க விடுவதா, இல்லையா என்பதைப்பற்றி மகாநாட்டில் அலசி ஆராயப்பட்டது. பெண்கள் பகுதியும், ஆண்களில் வயதிற் குறைந்தவர்களும் படிப்பிக்க விடவேண்டும் என்ற கட்சியை ஆதரிக்கவே, அன்னபூரணியின் ஆவலும் பூர்த்தியாயிற்று. அதன்பின் அன்னபூரணியுடன் அன்னம்மாளும் கூடச்சென்று சிலநாள் அவளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து வரவேண்டுமென்றும், அற்றை நாள்வரையும் அருணாசலமும் அவர்தம் இளையமகள் அன்னலட்சுமி யும் வீட்டிலுள்ள ஆட்டை மிகக்கவனமாக வளர்க்கவேண்டுமென்றும் மகாநாட்டில் தீர்மானமாயிற்று.

மகாநாடு குலைந்தது. ஆனால் கிலுவங்குலம் எங்கேயுள்ளது? எப்படிப் பட்ட ஊர்? என்பதைப்பற்றி எவராவது மகாநாட்டில் பிரஸ்தாபிக்கவில்லை. உபாத்தியாயினி வேலை கிடைத்த மகா மகிழ்ச்சியில் மிஸ் அன்னபூரணி கூட அதை விசாரிக்கச் சிலநாள் மறந்து விட்டாள்.

மிஸ் அன்னபூரணியும், அன்னம்மாளும், அருணாசலமும் காலையில் எழுந்து இராத்திரிவரையும் அதே கவலையாகக் கிலுவங்குலத்தைப்பற்றி விசாரித்ததும் எல்லோரும் கைவிரித்துவிட்டனர். அம்பிகாபுரத்திலேயுள்ள பூமிசாஸ்திர நிபுணர்கள் அத்தனைபேரும் கிலுவங்குலத்தைக் கேள்விப் பட்டதில்லையென்று ஒரே முகமாகக் கூறினர். இலங்கைப் பூமிசாஸ்தி ரத்தில் விற்பன்னர் என்று சொல்லப்படுகின்ற அம்பிகாபுரம் அண்ணாச்சாமி ஐயர் கிலுவங்குலம் என்று ஓர் ஊர் பூமண்டலம் முழுவதிலும் இல்லை யென்று காரணகாரியத் தொடர்புகாட்டி நிலை நிறுத்தினார்.

அண்ணாச்சாமி ஐயரின் நிபுணத்துவத்திற்கும் பிழையின்றி, அன்னபூர ணியின் ஆவலுக்கும் பங்கமின்றித் தபாற்காரன், மிஸ் அன்னபூரணியெ ன்று இரண்டாவது முறையாக ஒரு தபாலை வீசியெறிந்துவிட்டுச் சென்றான்.

"கிலுவங்குலம்" என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டுவந்த அந்தப் பெயர், கிழுவங்குளம் என்று விளங்கக்கூடியதாகக் கிழுவங்குளம் என்று

தமிழில் எழுதி, கிழுவங்குளத்திற்குச் செல்லும் பாதை தொடக்கம் கிழுவங்குளத்தில், பசுப்பால் பணமின்றிக் கொடுப்பார்கள் என்பதீறாக எல்லாம் விளக்கமாக எழுதியிருந்தார் அப்பாடசாலைத் தலைமை ஆசிரியர்.

பசுப்பால் வேண்டிய அளவு இனாமாகக் கிடைக்கும் என்பதை அறிந்த அருணாசலம், தனது தர்மபத்தினியை அங்கே நிறுத்தித் தான் மகளோடு செல்ல விரும்பினார்.

தகப்பனார் கூடவந்தால் சமையல் தன்மீது பொறுத்துவிடுமென்ற கருத்தால் அன்னபூரணி அதை ஆதரிக்கவில்லை. உத்தியோகம் பார்த்துக் கொண்டு சமையல் வேலை செய்வது கௌரவக்குறைவென்பது அவள் கருத்து. அங்கே சீட்டாடுபவர்கள் இருப்பார்களோ என்ற சந்தேகத்தில் அருணாசலமும் அவ்வளவாகத் தெண்டிக்கவில்லை. அன்னபூரணியுடன் அன்னம்மாள் சென்றால் கேள்வி முறையில்லாமல் சில நாளைக்காவது சீட்டாடலாம் என்ற ஒரு இன்ப நினைப்பும் அவருக்குண்டு.

கிழுவங்குளம் பாடசாலை, அங்கு படிக்கும் பிள்ளைகள், அங்கே படிப்பிக்கும் ஆசிரியர்கள், தான் நடந்து கொள்ளும் பாவனை ஆகியவற்றைப்பற்றி அன்னபூரணியின் இருதய ஆகாயத்தில் மண்டபங்கள் பல பல்வேறு திக்கிலும் பரந்து சென்றன. அவற்றிற்கு எல்லாம் நடுநாயகமாக அங்கே படிப்பிக்கும் ஆசிரியர்களில் ஒருவராவது விவாகஞ் செய்யாத இளைஞராயிருப்பார், அவர் தன்னைக் காதலிக்க முற்படுவார்; தான் இலேசில் விட்டுக் கொடுக்கக் கூடாது என்ற மணி மண்டபம் பொலிந்து விளங்கியது.

முப்பதுமைல் புகையிரதத்திலும், முப்பதுமைல் பஸ் வண்டியிலும், முப்பதுமைல் மாட்டுவண்டியிலும், மூன்றுமைல் கால்நடையிலும் மாரிகாலப் பருவநிலைக்கூடாகக் கிழுவங்குளத்தைச் சென்றடைகிற வரையில், சர்வ மண்டபங்களும் இடிந்து பொடியாகி, நடுநடுவே விளங்கிய அந்த மணிமண்டபம் மாத்திரம் ஆட்டங்கண்டு நின்றது.

அங்கேயுள்ள தலைமைஆசிரியர் மிஸ் அன்னபூரணியையும், அவரின் தாயாரையும் வரவேற்றுப் பேசியபொழுது, அன்னபூரணியின் அந்த ஒரு ஆகாய மணிமண்டபம் ஆட்டமின்றிச் சிறிது உறுதியாய் நின்றது.

கிழுவங்குளம் பாடசாலையில் தானும் தலைமைஆசிரியருந்தான் ஆசிரியர்கள் என்பதையும், அங்கே ஐம்பது மாணவர்கள் வரையில்

கல்வி கற்கின்றனர் என்பதையும், அறிந்த அன்னபூரணி வாட்டமடைந்தன ளேயெனினும், தனது தலைமை ஆசிரியர் அழகுள்ள ஒரு இளைஞரா யிருந்தது அவளுக்கு ஒரு சிறு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

மிஸ் அன்னபூரணி தனது தலைமை ஆசிரியர் விவாகஞ் செய்தவரோ செய்யாதவரோ என்பதை அறிந்து கொள்ள முடியாமல் தவித்தாள். உண்மையில் அதை அறிந்து கொள்வதற்கு அவள் பெரிதும் பயப்பட்டாள். அவர் விவாகஞ்செய்தவராயிருந்தால் அவளது சர்வ இன்ப நினைப்புகளும் மண்ணோடு மண்ணாய்ப் போய்விடுமல்லவா?

அவர் தன்னோடும் தனது தாயோடும் சம்பாஷிக்குந்தோறும், எங்கு அவர் தான் விவாகஞ் செய்தவர் என்று சொல்லி விடுகிறாரோவென்று அவள் நெஞ்சம் "படக் படக்" என்று அடித்துக்கொள்ளும். பரீட்சைப் பெறுபேறு வெளிப்படுங்காலம் நெருங்கநெருங்க, மாணவர் நெஞ்சம் படும் அவஸ்தைபோல மிஸ் அன்னபூரணியும் அவஸ்தைப்பட்டாள். ஒவ்வொரு வார முடிவிலும் பரீட்சைப் பெறுபேறு வெளிவராததைக்கண்டு, பெருமூச்சுவிடும் மாணவரைப் போல அன்னபூரணியும் தன்னோடு தனது தலைமைஆசிரியர் கதைத்துவிட்டுப் போகும்பொழுது நெட்டுயிர்ப்பாள்.

## 2

- **பெண்களிற் பலர் அந்நியரின் இழவு வீட்டில், தங்களின் நெருங்கிய உறவினரின் பிரிவை நினைத்துக் கொண்டு, தேம்பித் தேம்பி அழுவார்களாம். - கொண்டோடி**

மிஸ் அன்னபூரணி கிழுவங்குளம் பாடசாலைக்கு வந்து பல நாட்களா கியும், அவளின் தலைமை ஆசிரியர் விவாகஞ் செய்தவரோ? செய்யாத வரோ என்பதைப் பற்றிச்சிறிதும் அவளால் அறிந்து கொள்ள முடியவி ல்லை. அவரும் தன்னைப்பற்றி ஒன்றுங் கூறாது அடக்கமாகவே இருந்து கொண்டார். அவரின் பேச்சுக்கள் அளவாகவும் நிதானமாகவும் இருந்தன.

அன்னபூரணி வசிப்பதற்கு அவ்வூரில் வசதியான ஒரு இடமும் கிடைக்கவில்லை. வசதியான இடம் கிடைக்கும் வரையும் தனது வீட்டின் ஒரு பகுதியில் வசிப்பதற்குத் தலைமை ஆசிரியர் இடங் கொடுத்தார்.

பாடசாலையோடு சேர்ந்தாற்போலிருந்த அவ்வீடு பிள்ளைகள் ஒளித்து விளையாடுவதற்கென் அமைக்கப்பட்டதுபோல, மிகவும் சிறியதாகவும் ஒன்றிலிருந்து ஒன்றிற்குச் செல்லக் கூடியதாகவும் அமைந்த அறைகளை உடையதாக இருந்தது.

அதுவரை மாணவர்கள் ஆக்கிய அறுசுவை உண்டிகளை உண்டுவந்த தலைமையாசிரியர் அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, அன்னம்மாளின் தீஞ்சுவை உண்டிகளைச் சுவைக்கத் தொடங்கினார்.

தலைமையாசிரியர் தன்னைப்பற்றிய ஒரு தகவலும் வெளியிடா திருந்தபோதிலும், அன்னம்மாள் ஓய்ந்த நேரங்களில் அவருடன் பேசி அவரின் வரலாறுகளை அறிந்து, தனது மகளுக்கும் சொல்லி வந்தாள்.

தில்லையம்பலம் என்ற பெயரிலேயே ஒரு சாந்தம் பொலிகின்றது. கிழுவங்குளம் பாடசாலைத் தலைமையாசிரியர் தில்லையம்பலம் ஒரு சாதுவானவர். கடமையைச் செவ்வனேபுரியும் குணம் படைத்தவர். சங்கீதம், சித்திரம் முதலிய இன்பக்கலைகள் கைவரப் பெற்றவர். இனிமையாகப் படிப்பிப்பார். தெய்வபக்தி நிரம்பியவர். காலையும் மாலையும் தனது அறையில் உள்ள முருகன் படத்தின் முன்னாலிருந்து தியானஞ் செய்பவர். எதற்கும் முருகன் செயல் என்று சொல்லிக் கொள்பவர்.

தில்லையம்பல உபாத்தியாருக்கு யாழ்ப்பாணத்திலே பெரிய குடும்பப் பொறுப்பிருந்தது. மாதந்தோறும் எடுக்குஞ் சம்பளத்தில் பெரும் பகுதியை அவர் வீட்டிற்கு அனுப்பி விடுவார். வயது சென்ற தாயும் தகப்பனும், விவாகஞ் செய்யாத ஒரு சகோதரியும் ஊரிலிருந்தனர். அவர்களைப் போஷிப்பதோடு தனது சகோதரியைத் தகுந்த இடத்தில் விவாகஞ் செய்து வைக்கவேண்டிய பொறுப்பும் அவருக்கு இருந்தது.

இவைகள் எல்லாவற்றையும் விட, மூன்று பெண் குழந்தைகள் அவருக்கு இருந்தன. தனது மனைவி மக்களைப்பற்றி ஏனோ அவர் அன்னபூரணிக்கோ, அவள் தன் தாய்க்கோ கூறவில்லை,? அவர் தானாய்க் கூறாது விட்டாலும் அன்னம்மாள் எல்லாம் அவரிடம் விசாரித்து அறிந்து கொண்டாள்.

தில்லையம்பல உபாத்தியாயரும் அன்னம்மாளும் சம்பாஷிக்கும் பொழுது இருவருக்கும் மனத்தில் வெவ்வேறு கருத்துக்கள் இருந்தன. தில்லையம்பல உபாத்தியாயர் தனது சகோதரிக்கு ஒரு மாப்பிளை அன்னம்மாளின் பகுதியில் அகப்படுமோ என்பதை ஆராய்வதில் நோக்க முள்ளார். அன்னம்மாள், தனது மகளுக்கு இவரைப் பொருத்தலாமோ என்பதை ஆராயும் நோக்கமுள்ளாள்.

தில்லையம்பல உபாத்தியாயரின் குடும்ப விஷயங்களையறிந்த அன்னம்மாள் முதலில் பெரிதும் கலவரமடைந்தாள். தான் எண்ணிய

எண்ணங்களெல்லாம் மண்ணாயினவே என்று வருந்தினாள். ஆனால் அவள் அன்றிரவு யோசித்தபொழுது, அதுவும் ஒரு வகையில் நல்லதென்று திருப்திப்பட்டுக் கொண்டாள். தில்லையம்பல உபாத்தியாயர் நற்குணசாலியென்பது அவள் முன்னரே முடிவு செய்துகொண்டது. அத்தோடு அவர் பிள்ளை குட்டிக்காரனாயிருப்பதால், தனது மகள் பயமில்லாமல் அங்கே படிப்பிக்கலாம், தேவைப்பட்டால் இரண்டொரு நாட்களுக்கு வீட்டுக்குப் போயும் வரலாம் என்று அன்னம்மாள் எண்ணினாள்.

தில்லையம்பல உபாத்தியாயரின் குடும்ப விஷயத்தைக் கேள்வியுற்ற அன்னபூரணிக்கு அன்று இரவு நித்திரையே வரவில்லை. குருடன் கண்பெற்று இழந்ததைப் போலப் பெரிதும் பரிதவித்தாள். இந்தக் காட்டூரில் வசிப்பதிலும் பார்க்க உத்தியோகத்தைக் கைவிட்டுப் போனால் என்ன என்று கூட ஆலோசித்தாள்.

விடிய எழுந்த அன்னபூரணியின் பெருத்த கண்கள் இன்னுஞ் சிவந்து பெருத்துப் போயிருந்தன. அக்கோலமும் அவளுக்கு ஒரு அழகையே கொடுத்தது. துக்கத்திலேயமிழ்ந்திருந்த அன்னபூரணிக்கு மூன்றாவதாக "மிஸ் அன்னபூரணி"யென்று ஒரு தந்தி வந்தது.

அன்னபூரணியின் சகோதரி அன்னலட்சுமிக்கு காய்ச்சல் கடுமையென்றும், "அன்னம்மா உடனே புறப்பட்டு வரவேண்டு"மென்றும் தந்தியிற் கண்டிருந்தது.

தந்தியைக் கண்ட தாயும்மகளும் பரபரப்படைந்தனர். பின்னர் அப்பரபரப்பு அமர்ந்து, செய்ய வேண்டியதைப் பற்றி யோசிக்க சிலமணி நேரமாயிற்று. அன்னபூரணி தானும் கூட வருவதாக வாதாடினாள். வேலையாகி ஒரு மாதமும் செல்லாமையால் "லீவு" எடுத்தாற் சம்பளம் இல்லையென்று தில்லையம்பல உபாத்தியாயர் கூறினார். பிள்ளை முதன்முதல் வேலையாகி ஒரு மாதத்திற்குள் அபசகுனம் போலத் திருப்பிக் கூட்டிக்கொண்டு போக அன்னம்மாள் விரும்பவில்லை. அத்தோடு அம்பலவாணரின் தந்தியிலும், அன்னம்மாளைக் கூட்டிவருமாறு காணப்படவில்லை. தில்லையம்பல உபாத்தியாயருடன் எந்தக் குமர்ப்பிள்ளையையும் விட்டுப்போகலாமென்பதும் அன்னம்மாளின் கருத்து.

தந்தியை வாசித்தபின் தில்லையம்பல உபாத்தியாயரின் முகத்தில், அலாதியாக அவருக்கே விருப்பமின்றித் தோன்றிய ஒரு புன்னகையை அன்னபூரணி கடைக்கண்ணால் கண்டுவிட்டாள். ஒரு சமயம் அவர் விவாகஞ் செய்தவர் என்று சொன்னது பொய்யாயிருக்குமோவென்று அவள் மனம் அங்கலாய்த்தது.

அன்னம்மாள் தனது மகளுக்குப் பலவிதமாக ஆறுதல் தேறுதல் கூறி, அவள் நடக்க வேண்டிய முறைகளையும் கற்பித்ததோடு தான் மிக விரைவில் திரும்பி வருவதாகவும் கூறித் தில்லையம்பல உபாத்தியாயரிடமும் "எனது மகள் உங்கள் அடைக்கலம்" என்று சுருக்கமான வார்த்தைகளில் முடித்து, அவரிடம் பணமும் மாறிக்கொண்டு, கெச்சிதமாகப் புறப்பட்டாள்.

அவள் சென்ற பின்னர், தனது மூத்த மகள் சரியாக அன்னபூரணியின் சாயலைப்போன்றவள் என்றும், குணமும் அப்படித்தான் என்றும், தில்லையம்பல உபாத்தியாயர் அன்னபூரணியிடம் கூறினார்.

தில்லையம்பல உபாத்தியாயரிடம் தனியே விடப்பட்ட அன்னபூரணிக்குத் தில்லையம்பல உபாத்தியாயர் ஒரு விவாகஞ் செய்யாதவராயிருந்தால் இப்போதைய நிலைமை, எவ்வளவு இன்பமாயிருக்கும் என்பதை நினைக்க நினைக்க அழுகை அழுகையாக வந்தது. அவள் அழுவதெல்லாம் தாயின் பிரிவையும், சகோதரியின் வருத்தத்தையும் நினைத்து என்று தில்லையம்பல உபாத்தியாயர் பெரிதும் வருந்தினார். அதைக் கண்ட அவரின் கண்ணும் கலங்கியது. அவர் தன்னைத்தான் திடப்படுத்திக்கொண்டு அன்னபூரணியைத் தேற்ற முற்பட்டார்.

## 3

- **இரவிற் காதலர் உலகத்திலிருந்து முதலில் விடை பெற்றுக்கொள்வது நித்திரைதான். மானம் மரியாதையெல்லாம் அதன் பின்னரே. - கதாசிரியர்**

நித்திரையாகக் கிடப்பவனை எழுப்பலாமேயன்றி நித்திரைபோலக் கிடப்பவனை எழுப்ப முடியாது, அன்னபூரணியினது சோகத்தின் காரணம் வேறு. தில்லையம்பல உபாத்தியாயர் தாயின் பிரிவாலும் சகோதரியின் வருத்தத்தினாலும் அன்னபூரணி வருந்துகிறாள் என்று நினைத்துத் தான் கற்ற வித்தையெல்லாவற்றையுங் கைக்கொண்டு அவளைத் தேற்ற முயன்ற போதிலும் சித்தியெய்தவில்லை.

அன்னபூரணியின் தாயார் காலை பதினொரு மணிக்குப் புறப்பட்டவள். மதிய உணவையும் சமைத்துவைத்து விட்டே சென்றாள். ஆகையால் மதிய உணவைப் பற்றிய கவலை அவர்களுக்குக் கிடையாது, அடுத்த வீட்டுப்பிள்ளை அங்கே ஐந்தாம் வகுப்புப் படிப்பவள்; அழகம்மா என்று பெயர். அவளைத் துணைக்குக் கூப்பிட்டு வைத்துக்கொள்ள வேண்டுமென்பதும், தில்லையம்பல உபாத்தியாரின் உணவைப்

பாத்திரத்திற் போட்டு, அழகம்மாவிடம் கொடுத்து அவரின் அறைக்கு அனுப்பிவிடவேண்டுமென்பதும் அன்னம்மாள் போகும்பொழுது மகளுக்குச் சொல்லிவிட்டுச் சென்ற புத்திமதிகளில் முக்கியமானவை.

ஆனால், காரியங்கள் நேர்மாறாக நடந்தன. அன்று மாலை இரண்டு மணிவரையிற் பள்ளிக்கூடம் பள்ளிக்கூடமாயில்லை. செத்தவீடு மாதிரிக் காட்சியளித்தது. பாடசாலைவிட்டு மாணவர்கள் சென்றபின்பு, அன்னபூரணியின் அழுகை சிறிது ஓய்ந்தது. ஆனால் இருந்த இடத்தால் அவள் எழும்பவில்லை. தில்லையம்பல உபாத்தியாயருக்குப் பசியோ தாங்க முடியவில்லை. அவர், தானே எழுந்து சென்று சமைத்து வைத்திருந்த சாப்பாட்டை இரு பாத்திரங்களில் எடுத்துக்கொண்டு வந்து, அவளுக்கு ஒன்றைக் கொடுத்துவிட்டுத் தானும் ஒன்றை எடுத்துச் சாப்பிடத் தொடங்கினார். அனேகமாக உத்தியோகம் பார்க்கிற பெண்களை விவாகஞ் செய்கிறவர்கள் பாடு இப்படித்தான். எனினும் தில்லையம்பல உபாத்தியாயர் அந்நியப்பெண் ஒருத்திக்கு இப்படிப் பணிவிடை செய்யவேண்டி ஏற்பட்டது பரிதாபத்திற்குரிய காரியம்.

தில்லையம்பல உபாத்தியாயர் தனது சுய கௌரவத்தையும் பாராது அன்னபூரணிக்கு உணவு பரிமாறியபோதிலும் அன்னபூரணி சாப்பிடுவதாகக் காணவில்லை. சிறுபிள்ளைகளுக்குத் தாய்மார் உணவு ஊட்டுவது போலத் தானும் ஊட்டவேண்டி வருமோ என்று தில்லையம்பல உபாத்தியாயருக்கு உள்ளூர ஒரு சிறு பயமும் தட்டியது. தான் நினைத்ததை வெளியாகச் சொன்னார். "நீ இன்னுஞ் சாப்பிடாவிட்டால், இளையபிள்ளைகளுக்குச் செய்வதுபோல் நான் அள்ளித் தீற்றவேண்டிவரும்" என்று தில்லையம்பல உபாத்தியாயர் சொன்ன பொழுது, அதுவரை கண்ணீர் வடித்த அன்னபூரணி "களுக்" என்று ஓர் அதிசயச் சிரிப்புச் சிரித்தாள். இது கோடைகாலத்திற் பெய்த மழைபோலத் தில்லையம்பல உபாத்தியாயருக்கு இருந்தது.

அன்னபூரணியின் தாய் வரும்வரை அவளோடு எவ்விதம் காலங் கடத்துவது என்று ஏங்கிய தில்லையம்பல உபாத்தியாயரின் மனதில் ஒரு புதிய களிப்புத் தோன்றியது. கரு மேகத்தினிடையே தோன்றிய மின்னல்போல அவளின் அழுத முகத்திலே தோன்றிய சிரிப்பின் புத்தழகு தில்லையம்பல உபாத்தியாயரை வெகுவாகக் கவர்ந்துவிட்டது. அதுவரை இருந்த சூழ்நிலை மாறிப் புதிய சூழ்நிலை தோன்றியது.

அன்னபூரணி அழைக்காத போதிலும், ஆபத்துக்காலத்திற் குறிப்பறிந்து உதவி புரியும் வன்மை நண்பனைப்போல அடுத்த வீட்டு அழகம்மா

வந்து சேர்ந்தாள். அழகம்மாவும், அன்னபூரணியுமாக இராச்சமையலைத் தொடக்கினர். அழகம்மா, அன்னபூரணிக்கும் தில்லையம்பல உபாத்தியா யருக்கும் இடையிலே தூதாக நின்று உதவி செய்தாள். தில்லையம்பல உபாத்தியாயர் தண்ணீர் அள்ளிக் கொடுப்பது முதல் தேங்காய் துருவு வது ஈறாக உள்ள முட்டாள் வேலையனைத்தையும் செய்து கொடுத்தார்.

இராச்சாப்பாட்டிற்கு முன்னரே அவர்கள் இருவரின் மனதிலும் இராப் படுக்கையைப் பற்றிய எண்ணங்கள் இருந்தன. எதிரெதிரேயிருந்த இரு அறைகளில் ஒரு அறையில் தில்லையம்பல உபாத்தியாயரும் எதிர் அறையில் அழகம்மாவும் அன்னபூரணியுமாகப் படுத்தனர். படுத்துச் சிறிதுநேரத்திற்கெல்லாம், அழகம்மா தில்லையம்பல உபாத்தியாயரைக் கூப்பிட்டு "எங்களைக் கூப்பிட்டீர்களோ" என்று கேட்டாள். அவர் தான் கூப்பிடவில்லையென்று மறுத்ததும் மீண்டும் படுத்துக் கொண்டனர்.

பூனை குறுக்கே போவது அபசகுணம். ஆனால் பூனை முகட்டில் ஏறுவதும், அதைக்கண்டு எலிகள் கூச்சலிடுவதும் வேறு விதமான சகுனமாய் முடிந்தது.

சிறிது நேரத்தால் மீண்டும், அன்னபூரணியின் அறை திறபட்டது. தில்லையம்பல உபாத்தியாயரும் அழைக்கப்பட்டார். அவர்கள் இருவரின் அறைக்கும் இடையில் ஒரு இடைவெளியிருந்தது. அவ்விடத்தில் நின்றுகொண்டே தில்லையம்பல உபாத்தியாயரைக் கூப்பிட்டனர். அவர் அறையைத் திறந்ததும் இருவரும் ஒரே முகமாக, யாரோ தங்களை "அம்மா" என்று மெல்லிய குரலில் அடிக்கடி கூப்பிட்டதாகவும், பின்னர் யாரோ முகட்டில் ஏறி நடமாடியதாகவும் பதட்டத்துடன் கூறினர். தங்களுக்குப் பெரிய பயமாயிருக்கிறதென்றும் படபடத்தனர்.

தில்லையம்பல உபாத்தியாயருக்கு என்ன செய்வதென்றே புரிய வில்லை. 'அவர்களைத் தனது அறையிற் படுக்க அனுமதிப்பதா? அல்லது, அவர்களைப் பயப்படாமல் அவர்கள் அறையிலேயே படுக்கும்படி தூண்டுவதா? என்று அவர் ஒன்றும் விளங்காமல் விழித்தார். ஒருவாறு அன்னபூரணிக்குத் தேறுதல் கூறிப் படுக்கத் திருப்பியனுப்பலாமென்றால், அழகம்மா தான் அங்கே படுக்கமாட்டேன் என்றும் தன்னை வீட்டில் கூட்டிக்கொண்டு போய் விடும்படியும் நின்றாள். அழகம்மாள் அவர்கள் மாணவியென்றாலும், வயது வந்தவள். பருவமடைகிற வயதானவள். அவளை அதட்டி அடக்க முடியாது.

தில்லையம்பல உபாத்தியாயர் தனது படுக்கையில் இருக்க அன்னபூரணியும், அழகம்மாவும் அறையின் நடுவே நின்றனர்.

இந்த இக்கட்டான நிலையில் வானத்தில் ஒரு பெரிய இடிமுழக்கம் பள்ளிக்கூடத்தின் கூரையைத் தொடுவதுபோல முழங்கியது. பாடசாலை மண்டபம் முழுவதும் அதிர்ந்தது.

"அம்மாடி" என்று அழகம்மா அன்னபூரணியைக் கட்டிப்பிடித்தாள். அன்னபூரணி அழகம்மாவைக் கட்டிப்பிடித்தாள். இந்தக் காட்சியைத் தில்லையம்பல உபாத்தியாயர் பார்த்துச் சுவைத்தார்.

இதன்மேலும் அவர்களைத் திருப்பி அனுப்பத் தில்லையம்பல உபாத்தியாயர் துணியவில்லை. அன்னபூரணி ஓர் அருகிலும், அழகம்மா நடுவிலுமாகப் படுக்க வசதியளித்தார். மூவரும் படுத்தவுடன் மழையும் சோவெனப் பொழிந்தது. விளக்கு மங்கலாய் எரிந்தது. ஒருவர் பேசுவது ஒருவருக்குக் கேளாதபடி மழை இரைச்சலாயிருந்தது. எல்லோரும் நித்திரை போலக் கிடந்தனரேயன்றி ஒருவரும் நித்திரை கொள்ளவில்லை.

## 4

- **மனிதனை நல்லவனாக்குவதற்குக் கடவுள் எத்தனையோ சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறார். ஆனால் மனிதன் அவற்றையெல்லாம் பயன்படுத்திக் கொள்வதில்லை. - அனுபவவாக்கியம்**

அறிவிற் குறைந்த தூக்கணாங்குருவி சிறுதும்புகளால் ஆக்கிய கூட்டை எந்தப் பெரும் மழையும் அசைக்க முடியாது, ஆனால் மனிதன் இயற்றிய பல வீடுகளிற் பெருமழைக்கு ஆங்காங்கே சிறுதுளிகள் சிந்துகின்றன.

கிழுவன்குளம் அரசினர் பாடசாலை தென்னங்கீற்றுக்களால் வேயப்பட்டிருந்தது. தென்னங்கீற்றினூடே நுழைந்த ஒரு மழைத்துளி, தில்லையம்பல உபாத்தியாயரின் படபடக்கும் மார்பில் விழுந்தது. அதைத்தொடர்ந்து பல துளிகள் விழவே, கிடுகுகளை இழுத்து இடம்மாற்றி விட்டால் தண்ணீர் ஒழுகாது என்னுங் கருத்தோடு தில்லையம்பல உபாத்தியாயர் எழுந்தார்.

தில்லையம்பல உபாத்தியாயர் சத்தஞ்செய்யாது எழுந்து உயரநின்று கிடுகுகளை இழுத்து இடம்மாற்றினார். அதனால் அவருடைய படுக்கைக்கு நேரே தண்ணீர் சிந்தாது வேறு இடத்திற் சிந்தியது. அன்னபூரணியின் கொதிக்கும் மார்பில் தண்ணீர் சிந்தவே அவள் துள்ளி எழுந்தாள்.

"என்ன அங்கேயும் சிந்துகிறதா?" என்று தில்லையம்பல உபாத்தியாயர் கேட்டார்.

"இது ஒரு ஓட்டைப் பள்ளிக்கூடம்" என்று சொல்லிவிட்டு அர்த்தமில்லாமல் சிரித்தாள்.

"இந்தப் பெரிய மழைக்கு எந்த வீடுதான் சிந்தாது?"

"இதுமாதிரித்தான் இங்கே பெருமழை எப்பொழுதும் பெய்யுமோ?"

"நான் இங்கே வந்ததற்கு இப்படிப் பெருமழை ஒரு நாளும் பெய்யவில்லை?" என்று தில்லையம்பல உபாத்தியாயர் சொல்லும்பொழுது, மங்கிய வெளிச்சத்திலே தோன்றிய அன்னபூரணியின் உருவம், அவர் மனதை மயக்கியது. சிறிது யோசித்துவிட்டுச் சம்பாஷணை புரிந்து கொண்டுசென்ற மனதின் கடிவாளக்கயிறுகளை இழுத்து நிறுத்திச் சிறிது கஷ்டத்தோடு வேறுபாதையில் தட்டிவிட்டார். கரடுமுரடான பாதையிற் சம்பாஷணை சென்ற போதிலும், அது அவருக்கு ஒரு இன்பமாயிருந்தது. கரடுமுரடான கல்லுத்தரையில் வண்டி விழுந்து எழுந்து செல்வதைப்பார்க்கச் சிலருக்கு விருப்பம் அதிகம்; அதுபோலவே இதுவும் இருந்தது.

இரவும், தனிமையும் மனிதனை மிருகமாக்குவது இயற்கை. சூரிய வெளிச்சம் மனிதனைத் தினமும் புடம் போடுகின்றது. இரவில் மிருகமாக நடந்த மனிதன், ஒவ்வொரு பகலிலும் தான் மிருகமாக நடந்ததை நினைத்து வெட்கப்படுவான். அது சூரியகிரணசக்தி.

தில்லையம்பல உபாத்தியாயரைச் சாதாரண உலகம் நல்லவர் என்று சொன்ன பொழுதிலும், அவரின் உள் மனதைக் கண்டவர் யார்? அவரின் உள்மனம் அவரையுந்தெரியாமல் பிழையான சூழ்நிலையைத்தானே ஏற்படுத்திக்கொண்டது. சூழ்நிலை ஏற்பட்டவுடன் மனிதன் தவறுவது ஆச்சரியமன்று.

தில்லையம்பல உபாத்தியாயர், பெருமழையைப் பற்றிச் சொல்லிக் கொண்டு போனவர், "நாங்கள் நித்திரையாகியிருந்தால் இவ்வளவு மழை பெய்கிறதென்பதை அறிந்திருக்க மாட்டோம்" என்றார். அதற்கு அன்னபூரணி ஒன்றுங் கூறவில்லை. அவர் மீண்டும், "நீ படிப்பிக்க வராமல் ஊரிலிருந்திருந்தால் இந்த மழையைக் கண்டிருக்கமாட்டாய்" என்று சொன்னார். அன்னபூரணிக்கு அவரின் கதை ஒரு அலுப்பைக் கொடுத்தது. "இந்தப் பெருமழையைப் பார்த்து என்ன சுகம்" என்று அவள் பதிலுக்குக்கேட்டாள்.

"அப்படிச்சொல்லாதே, மனிதன் பெறுகிற ஒரு தருணத்தைப் பிறகு பெறமாட்டான்" என்று சொன்னார். அவர் பேசுகிற கருத்தை அவளால் அறிந்துகொள்ள முடியவில்லை. "நீங்கள் சொல்லுகிறது விளங்க வில்லை" என்று அவள் பயமுறுத்துவது போலத் துணிந்து கேட்டாள். தில்லையம்பல உபாத்தியாயர் உள்ளம் என்ற வண்டியைச் சிறிது மெதுவாக வேதாந்தவிசையிலே தட்டிவிட்டார்.

"இன்றைக்கு நாங்கள் இப்படி இருந்து கதைக்கிறோம். நாளைக்கு உயிரோடு இருப்போமென்று எங்களுக்கு இப்பொழுது தெரியுமா?" இந்தப் பேச்சு அன்னபூரணியின் உற்சாகத்தைக் குறைத்தது.

"நாளைக்கு இருப்போம்; இல்லை; அதற்கு இப்பொழுது வந்ததென்ன?

"தூங்குகிறபோது வாங்குகிற மூச்சுச் சுழிமாறிப் போனாலும் போச்சு; சற்று முந்தி முழங்கிய முழக்கம் பள்ளிக்கூடக் கூரையில் விழுந்தால் இப்பொழுது எங்கள் கதி என்ன?"

இதைக்கேட்டதும் அன்னபூரணி உண்மையிற் கலங்கிவிட்டாள். நிலையாமையைப்பற்றிய உணர்ச்சி அவள் உள்மனதைச் சென்று தொட்டது. அதை உணர்ந்த தில்லையம்பல உபாத்தியாயர் விடாது தொடர்ந்து, "இன்று கிட்டுகிற இன்பம் நாளைக்குக் கிட்டும் என்று காத்திருக்கலாமா? ஒருவன் தனக்குக் கடவுளால் கொடுக்கப்படுகிற அரிய சந்தர்ப்பத்தை நழுவவிட்டால் அதைவிடப் பேதமை வேறுண்டோ?" என்று சொல்லி முடித்தார். அன்னபூரணி விளங்கியதும் விளங்காததும் போல அவரைக் கூறுகுறிப்பாகப் பார்த்தாள். தில்லையம்பல உபாத்தியாயரின் முகத்தில் ஒரு கொடூரச் சிரிப்புத் தோன்றி மறைந்தது. அன்னபூரணியின் முகத்தில் இரத்தப் பசையற்ற ஒரு சிரிப்புத் தோன்றியது.

விட்டில் ஒன்று விளக்குள் விழுந்து தான் இறந்ததுமன்றி விளக்கையும் அணைத்தது.

விளக்கணைந்துவிட்டது என்ற சொல்லித் தில்லையம்பல உபாத்தி யாயர் எழுந்தார். அன்னபூரணியும் எழுந்தாள். அடுத்தகணம் படுத்திருந்த அழகம்மாவின் மீது தடக்கி விழுந்தார். அழகம்மா "ஆ" என்று சத்தமிட் டாள். விழுந்த தில்லையம்பல உபாத்தியாயரின் கையை முற்றாய் விழவிடாமல் அன்னபூரணி தூக்கினாள். "மூவருமொன்றாயினரென்றேயதை யுஞ் சுருதி" என்பதுபோல் யாரை யார் பிடிக்கிறேன், யார் யாருக்குமேல், என்று தெரியாது அல்லோல கல்லோலப்பட்டனர். முடிவில் அன்னபூரணி நெருப்புக்குச்சியைக் கிழித்தாள். அந்த ஒருகணநேரமும் மனித சமுதாய த்தைமறந்து இனந்தெரியாத ஒரு உலகத்தில் திகழ்ந்த அவர்கள்

தத்தம் நிலையை அடைந்தனர்.

சில நிமிஷநேரம் ஒவ்வொருவரும் தன்னிலே நினைத்து இடியிடி என்று சிரித்தனர். கடந்த ஒருகண நேரத்தில் ஏன் செய்தோம்? என்ன செய்தோம் என்று தெரியாமற் செய்த பைத்தியக்காரத்தனத்தை நினைந்து பித்துப்பிடித்தவர்கள் போற் சிரித்தனர்.

அவர்களுடைய சிரிப்புக்கு முற்றுப்புள்ளி வைப்பது போல் "உபாத்தியாயர்" என்று அதட்டிக் கூப்பிடும் சத்தம் ஒன்று கதவருகில் கேட்டது. அப்பொழுதுதான் மழையும் ஓய்ந்திருந்தது. ஒவ்வொருவருடைய தேகமும் சலஞ்சலமாக வெயர்த்தது. உபாத்தியாயரின் தேகம் நடுங்கியது. விழுந்துவிடாமல் கால்களை இறுக மிதித்துக்கொண்டு எழுந்து நின்றார்.

## 4

- **சூலைக்கட்டி என்ற ஒரு வருத்தம் பல பெண்களை வாட்டுகின்றது என்பது உண்மை. ஆனால் பல பெண்களின் மானத்தைச் சில நாட்களுக்காவது அவ்வருத்தம் காப்பாற்றுகின்றது. - வைத்திய கேசரி**

மிஸ் அன்னபூரணியோடு துணைக்குப் படுத்திருந்த அழகம்மாவின் வீடு பாடசாலைக்குச் சிறிது தூரத்திலேயே இருந்தது. அழகம்மாவின் சிறிய தம்பிக்குக் காய்ச்சல் கடுமையாயிருந்ததால், அழகம்மாவைக் கூட்டிக்கொண்டுபோய் வீட்டிலே தாயோடு துணைக்குவிட்டுத் தான் ஏழுமைல் தூரத்திலிருக்கும் சுதேசவைத்தியரை அழைத்து வரும் நோக்கத்தோடு அவளின் தகப்பனார் வந்து "உபாத்தியாயர்" என்று கூப்பிட்டார். தான் தனது மகளைக் கூட்டிக்கொண்டுபோனால் அன்ன பூரணிக்குத் துணையில்லையென்று அவர் சிறிதும் யோசிக்கவில்லை. ஒவ்வொருவருக்கும் தமக்குக்கஷ்டம் வந்தால், பிறரின் கஷ்டங்கள் ஒன்றும் அவர்களுக்குத் தோன்றுவதில்லை. தமது துன்பமே அவர்களுக்குப் பெரிதாகப்படும். தனது பிள்ளையின் வருத்தத்தில், அழகம்மாவை ஏன் அங்கே படுக்க விட்டோம்? அழகம்மா இல்லாவிட்டால், அவர்களுக்கு யார் துணை? என்பவைகளைப் பற்றியோசிக்க அழகம்மாவின் தகப்பனாரால் முடியவில்லை.

தில்லையம்பல உபாத்தியாயர் பயந்துகொண்டுதான் கதவைத் திறந்தார். யாரும் அங்கே நடந்த சம்பவங்களை எல்லாம் நின்று பார்த்துவிட்டுத்தான் எழுப்புகிறார்களோ என்று அவர் நினைத்துப் பயந்தார். ஆனால் அவர் நினைத்ததுபோல வந்தவர் அவர்களை ஒரு விசாரணையும் செய்யவில்லை.

தனது பிள்ளையின் கடுமையான சுகயீனத்தைப்பற்றிச் சொல்லிக் கொண்டு அழகம்மாவை அழைத்தார். அவர்களுடைய பதிலுக்குக் காத்திராமலும், அதிகம் சுணக்கம் இல்லாமலும் அழகம்மாவையும் அழைத்துக் கொண்டு விடுவிடென்று சென்றுவிட்டார்.

அவருடைய மகனுக்குக் கடுமையான வருத்தம் போலும் என்று அன்னபூரணியும் தில்லையம்பல உபாத்தியாயரும் கதைத்துக் கொண்டனர். அவர்கள் இருவரும் தனிமையில் விடப்பெற்றனர்.

கலியாணமான மணமகனும், மணமகளும் தங்கள் முதலிரவைக் கழிப்பதற்குத் தனிமையை விரும்புகின்றனர். ஆனால் அவர்களின் அறையைச் சுற்றிலும் ஜனநடமாட்டம் குறைவதில்லை. தம்மை அறிந்தவர்களிடமிருந்து பிரிந்து மணமகனும், மணமகளும் தூர இடங்களுக்குச் சென்று "தேன்மதி" நாட்களைக் கழிக்க விரும்புகின்றனர். ஆனால் அங்கேயும் அவர்கள் விரும்புகின்ற பூரணதனிமை கிட்டுவதில்லை.

ஆனால், தில்லையம்பல உபாத்தியாயருக்கும் அன்னபூரணிக்கும், அவர்கள் எதிர்பாராதவாறு பூரண தனிமை கிடைத்துவிட்டது. சுற்றுவட்டாரத்தில் ஜனநாடமாட்டமேயில்லை. மழைக்கால இருட்டு, மழைத்தூற்றல் இவ்வித அகோர தனிமையில் அவர்கள் விடப்பட்டால் அவர்களின் நிலைமையை மேலும் எவ்வாறு விபரிப்பது!

சரியாக ஐந்து நாட்களின் பின்னர் அன்னபூரணியின் தகப்பனார் அம்பலவாணபிள்ளை அங்கே வந்து சேர்ந்தார்.

அங்கே அவருக்குச் சர்வ உணவு வசதிகளும் இருந்தபோதிலும் சீட்டுக்கச்சேரி இல்லாதது மகிழ்ச்சியைக் கொடுக்கவில்லை. அம்பலவாணபிள்ளை இரவில் அதிகமாக ஜலபாதைக்குப் போகும் நோய் உள்ளவர். அதனால் அவர் அறையில் படுத்திருக்க விரும்பாது வெளியில் பாடசாலை வாங்குகளின் மேல் படுத்துக்கொண்டார். அன்னபூரணியும் தில்லையம்பல உபாத்தியாயரும் அம்பலவாணபிள்ளையைத் திருப்திப்படுத்துவதற்காகத் தனித்தனியறையில் படுப்பதுபோலக் காட்டிக் கொண்டனர்.

மிஸ் அன்னபூரணிக்கு மாதவிலக்கு வந்து முப்பத்தொரு நாட்களாயிற்று. இருவர் மனதிலும் திகிலும் வந்து புகுந்து கொண்டது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிஷமும் மாதவிலக்கு ஏற்படாதோ என்று அங்கலாய்த்தனர். ஆனால் நாற்பது நாட்களாயிற்று. இனிமேல் தகுந்த நடவடிக்கை எடாது இருப்பது தவறெனத் தில்லையம்பல உபாத்தியாயர் உணர்ந்தார்.

நாற்பத்தைந்தாவது நாள் அரைமைல் தூரத்திலுள்ள அரசினர் மருந்துச்சாலையில் மிஸ் அன்னபூரணி பூச்சிப்பேதி வாங்கிக் குடித்தாள்.

வயிற்றிலிருந்த அழுக்குகள் நீங்கிப் பிரதான உறுப்புகள் வலுவடைந்து, அதன்மேல் மிஸ் அன்னபூரணியின் கரு தீவிரமாக வளர்ந்தது. இரண்டு மாதமாயிற்று. மருந்துச்சாலையில் சூலைக்கட்டி யென்று சொல்லி மிஸ் அன்னபூரணி மருந்து கேட்டாள். இம்முறை அவளோடு கூடத் தில்லையம்பல உபாத்தியாயரும் அம்பலவாணபிள்ளையுங் கூடச் சென்றனர். தில்லையம்பல உபாத்தியாயரையும், அன்னபூரணியையும், அவர்கள் சூழ்நிலையையும் அறிந்து கொண்ட மருந்துச்சாலை அதிபர் நடந்த சம்பவங்களை ஊகித்து அறிந்துகொண்டார்.

தினமும் ஒவ்வொரு கோழிக்குஞ்சை அறுத்துச் சாப்பிடுகின்ற டாக்குத்தர்கள் கூட ஒரு சிசுவைக் கொல்ல விரும்பமாட்டார்கள். கிழுவங்குளம் மருந்துச்சாலை அதிபர், ஒரு நகைச்சுவையாளர். அன்னபூரணியின் வயிற்றிலிருக்கும் சூலைக்கட்டியைக் கரைப்பதற்கு ஏழுநாட்களுக்கு ஒவ்வொரு நாளும் ஊசி போடவேண்டும் என்றும் அதற்கு ஐம்பதுருபாய் தேவை என்றும் சொன்னார். தில்லையம்பல உபாத்தியாயர் பணத்தைக் கட்டினார்.

ஆனால் சூலைக்கட்டியைக் கரைப்பதற்குப் பதிலாகக் கரு நன்கு வளர்ச்சியடைவதற்கேற்ற ஊசியை மருந்துச்சாலை அதிபர் தினமும் போட்டு வந்தார். ஏழு ஊசிகளும் போட்டு முடிந்தபின், இனி அந்தக் கருவை இலேசில் அழிக்க முடியாதென்றுணர்ந்த மருந்துச்சாலை அதிபர், அதைக் கரைக்கத் தன்னிடம் மருந்தில்லையென்று கையை விரித்தார்.

வயிற்றிலே கரு வளர வளர அன்னபூரணியினதும், தில்லையம்பல உபாத்தியாயரினதும் மனதில் திகிலும் வளர்ந்துகொண்டே வந்தது. உண்மையாகவே அது சூலைக்கட்டியாக இருந்துவிடக் கூடாதோ என்று ஏங்கினர்.

ஏக்கமேயுருவாகக் காட்சியளித்த அன்னபூரணிக்கு நான்காவது முறையாக "மிஸ் அன்னபூரணி" என்று தபால்காரன் ஒரு தபாலை வீசி எறிந்தான். "அன்னபூரணியை அரசினர் நிரந்தர சேவையில் அமர்த்தப் போகிறார்களென்றும், அதற்காக வைத்திய பரிசோதனை செய்து அனுப்ப வேண்டும் என்றும்" அக்காகிதத்தில் கண்டிருந்தது.

அம்பிகாபுரம் வைத்தியசாலையில் வைத்தியசோதனை செய்து கொள்வதற்காக மிஸ் அன்னபூரணியும், அம்பலவாணபிள்ளையும் புறப்பட்டனர். அம்பிகாபுரம் வைத்தியசாலையில் இருந்த டாக்குத்தர், அங்கேயுள்ள மருத்துவத் தாதியின் உதவியுடன் மிஸ் அன்னபூரணியின் உடலைப் பரிசோதித்தனர். முடிவில் அம்பலவாணபிள்ளையைப் பார்த்து அன்னபூரணியின் புருஷன் எங்கே என்று கேட்டார்.

அம்பலவாணபிள்ளைக்கு அளவில்லாத கோபம் வந்துவிட்டது. "வைத்தியசோதனைக்கு வந்தாற் கேலி பண்ணுகிறீர்களா? இங்கே உள்ள பெண்களைப் போலக் கண்டவர்களுடன் திரிகிறவளா என்னுடைய பிள்ளை? என்று வாயில் வந்தபடி திட்டக் கிளம்பிவிட்டார். டாக்குத்தர் அவரைப் பணிவுடன் இருக்குமாறு வேண்டிக்கொண்டு உங்கள் மகளுக்குப் புருஷன் இல்லையென்றால் மெத்தச்சரி. ஆனால் இங்கே ஒவ்வொரு மாதமும் வந்து கையெழுத்துப்போட்டு விட்டுச் செல்ல வேண்டுமென்று டாக்குத்தர் சொன்னார்.

## 4

● **மிஸ் அன்னபூரணியைப்போல எத்தனையோ பரிபூரண தேவதைகள் உலகில் உண்டு. புத்தியுள்ளன புத்தியில்லாதவை என இரண்டு ஜாதியாய் உலாவுவதுதான் அவைகளுள் வித்தியாசமாகும்.**

நாடுபடு திரவியம், காடுபடு திரவியம், கடற்படு திரவியம், மலைபடு திரவியம் எனத் திரவியங்களைச் சூடாமணி நிகண்டு பகுத்துக்கூறும். யாழ்ப்பாணம் படுதிரவியம் என்று ஒன்று அந்நிகண்டில் கூறப்படாவிடினும், பாணிப்பனாட்டு, புகையிலைச் சுருட்டு என்ற பொருள்களின் மேல் எங்கே செய்யப்பட்டவையென்று எழுதவே தேவையில்லை. புகையிலைச் சுருட்டைக் கடையிலெ வாங்கிப் புகையாமல் தாங்களே வாங்கிச் சுருட்டிப் புகைக்கும் பழக்கம் உள்ளவர்கள் யாழ்ப்பாணத்தில் அநேகர்.

கிழுவங்குளத்தில் நல்ல புகையிலை கிடைப்பது அரிதினும் அரிது. அருமையாகக் கிடைக்கக்கூடிய புகையிலையும் எரியாது. அப்பலவாண பிள்ளை இராச் சாப்பாட்டின் பின் ஒரு புகையிலைச்சுருட்டுப் புகையாவிட்டால் அன்றிரவு அவருக்கு நித்திரையில்லை. ஒவ்வொரு இரவும் நித்திரையின்றி இருக்க வேண்டிய அம்மனுஷனை நித்திரை கொள்ளச் செய்தவர் தில்லையம்பல உபாத்தியாயர். தூரதேசத்திலிருந்து திறமான தோலன் புகையிலையைச் செலவைப் பாராமல் தில்லையம்பல உபாத்தியாயர் எடுப்பித்துக் கொடுத்து வந்தார். இந்நன்றியை நினைக்குந்தோறும் அப்பலவாணபிள்ளையின் உள்ளம் குளிரும்.

அம்பலவாணபிள்ளைக்குப் புகையிலைச்சுருட்டு எப்படி அவசியமோ, அப்படியே அவர் மனைவி அன்னம்மாவுக்கு நாறல்பாக்கு. வெற்றிலையோடு நாறல்பாக்குக் கலந்து மெல்லாவிட்டால் அன்று முழுதும் அன்னம்மாளுக்கு அவப்பொழுதாயிருக்கும். அன்னம்மாள் நின்ற

நாட்களில் அவளுக்கு நாறல்பாக்கு எடுப்பித்துக்கொடுத்த கைங்கரிய மும் தில்லையம்பல உபாத்தியாயரைச் சார்ந்ததாகும்.

மகாபாரத யுத்தத்திலே கன்னன் இறக்குந்தருணத்தில் அவன் செய்த தருமம் வந்து துணைசெய்தது. அதே போலத் தில்லையம்பல உபாத்தியாயரின் புகையிலைச் சுருட்டுத்தர்மமும் நாறல்பாக்குத் தர்மமும் தக்க தருணத்திலே துணைபுரிந்தன.

மிஸ் அன்னபூரணிக்கு உத்தியோகம் கிடைத்த சம்பவம் எப்படிக் கணப்பொழுதில் அம்பிகாபுரம் இராசவீதி முழுவதும் பரம்பினதோ அதே மாதிரி அவள் கர்ப்பவதியென்ற சம்பவமும் கணப்பொழுதில் அம்பிகாபுரம் இராசவீதி முழுவதும் பரம்பியது. இரண்டாவது முறையாக அம்பலவாண பிள்ளை வீட்டில் மகாநாடு கூடியது. காரசாரமாகக் கூடிய அம்மகாநாட்டில் பழையபல்லவி முதலில் மீட்கப்பெற்றது.

தில்லையம்பல உபாத்தியாயரை ஒருகை பார்க்கவேண்டுமென்று மகாநாட்டில் தீவிரவாதிகள் விவாதித்தனர். அவரின் பற்கள் முழுவதையும் கழற்றுவது நல்லதென்று ஒரு நிபுணர் தெரிவித்தார். மகாநாட்டை ஒத்திவைத்துவிட்டுச் சிலர் உடனேயே கிளம்பவேண்டுமென்று விவாதித்தனர். அந்நேரத்தில்தான் அவர் செய்த புகையிலைச் சுருட்டுத் தர்மமும், நாறல்பாக்குத் தர்மமும் வந்து தோள்கொடுத்தன. "மிரித்த இடத்துப்புல் சாகாத பசுபதி" என்று அம்பலவாணபிள்ளையும், அன்னம்மாவும் அவரை வருணித்தனர். "எங்கள் கஷ்ட காலமேயன்றி அவர்மேல் குற்றமில்லை" என்று பரிந்துபேசினர்.

"வயது வந்த பிள்ளையைப் படிப்பிக்க வேண்டாமென்று நாங்கள் முன்னர் சொன்னோம்; நீங்கள் கேட்கவில்லை; இப்பொழுது அனுபவியுங் கள்" என்று அதுவரை பேசாதிருந்தோர் எழுந்தனர்...

பழைய பல்லவியை உடனே நிறுத்துமாறு புள்ளிவிபரப் பகுதித் தலைவர் கட்டளையிட்டுவிட்டுத் தமது அறிக்கையை வெளியிட்டார். இன்னின்ன ஊர்களில், இன்னின்ன வயதில் கன்னிப்பெண்கள் கருத்தரித் திருக்கிறார்கள். இன்னின்ன பெண்கள், தாழ்ந்த சாதியாரோடு கூடிக் கருவுண்டாகியிருக்கிறார்கள் என்று ஆதார பூர்வமாக எடுத்துக் காட்டப் பெற்றது. மிஸ் அன்னபூரணியின் குற்றம் இக்காலத்தில் சாதாரணமானது என்று தீர்ப்புக் கூறப்பெற்றது.

அன்னபூரணியின் குற்றம் பெரிதாயினும், சிறிதாயினும், இனிமேல் அவளுடைய வாழ்க்கை எப்படிக் கழியப் போகிறதென்று ஒரு புத்திசாலி கேட்டார்.

இந்த நேரத்தில் கந்தையா உபாத்தியாயர் மகாநாட்டிற் பிரவேசித்தார். அவரின் புத்திமதிப்படி காரியங்கள் நடைபெற்றன. அன்னபூரணியைச் சுந்தரமூர்த்திக்கு விவாகப்பதிவு செய்யப்பட்டது. அதற்குப் பிரதி உபகார மாக அன்னபூரணி அவனுக்கு மாதம் இருபதுரூபாய் அனுப்பிவரவேண் டும். அதுவும் அன்னபூரணிமீது பொறுக்காமல் கந்தையா உபாத்தியாயர், தில்லையம்பல உபாத்தியாயரிடம் சென்று அவரை அப்பணத்தைக் கொடுக்குமாறு ஒழுங்கு செய்து கொண்டு வந்தார். அன்னபூரணி பிள்ளை பெற்றபின் விவாகரத்துச் செய்து கொள்ளவேண்டுமென்றும் தீர்மான மாயிற்று. பழையபடியும் அவள் மிஸ் அன்னபூரணியாக விளங்குவாள்.

சுந்தரமூர்த்தி இதைப் பெரியதொரு தியாகமென்று சொல்லி வருகி றான். அவன் தந்தை அம்பிகாபுரம் கறுத்தார், கள்ளுத்தவறணைகளில் தருமஞ் செய்த பலன் அவர் மகனுக்குப் பென்ஷன் வருகிறது என்று விஷயம் அறிந்தவர்கள் பேசிக்கொள்ளுகிறார்கள்.

நாறல்பாக்குத் தருமத்தையும், புகையிலைச் சுருட்டுத்தருமத்தையும் விட. இது புதுத் தருமம்.

இத்தனைக்கும் தில்லையம்பல உபாத்தியாயர் மீதோ, அன்னபூரணி யின் மீதோ கிழுவங்குளம் வாசிகள் வெறுப்படையவில்லை. "இப்படி நல்ல உபாத்தியாயர்கள் எங்களுக்குக் கிடைத்தது பூர்வபுண்ணிய வசத்தினால்" என்று அவர்கள் பேசிக்கொள்ளுகிறார்கள். ஏதோ பெரிய இடத்தில் நடந்த சின்ன விஷயத்தைப்பற்றி எங்களுக்கென்ன என்ற நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். "எழுத்தறிவித்தவன் இறைவனாம்" என்று அவர்கள் தாங்கள் கற்ற சுலோகத்தைத் தங்கள் குழந்தைக ளுக்குச் சொல்லியும் வருகிறார்கள்.

பிரஜோற்பத்திக் கட்டுப்பாடு என்று இப்பொழுது உலகெங்கும் பேசப் பட்டு வருகிறதே, சந்தான விருத்தியைக் குறைக்க இயற்கை செயற்கை முறைகள் என்று புத்தகம் புத்தகமாய் எழுதித் தள்ளுகிறார்களே, இந்தப் பிரஜோற்பத்திக் கட்டுப்பாடு என்ற சாஸ்திரத்தையும், ஆசிரிய கலாசாலைகளில் கற்பிக்க வேண்டும் என்று கல்விப் பகுதியைத் தாங்கிக் கொள்ளுகிறவர்கள் கருதாமலிருப்பதேனோ?

(ஈழகேசரி - 25-11-51)

# நூலும் நூற்கயிறும்

## 1

### பஞ்சகல்யாணி

வசந்தகாலத்து மாந்தளிர் நிறம் என்று "பஞ்சகல்யாணி" யின் நிறத்தை அம்பிகாபுரம் இந்துக்கல்லூரித் தமிழ்ப்பண்டிதர் வருணிப்பார். நல்லெண்ணெய்க் கறுப்பு என்று "ஸயன்ஸ்" உபாத்தியாயர் கூறுவார். கீரைக்கொட்டைக் கறுப்பு என்பது, கறுப்பு விசேடங்களைக் குறிக்க அவர் உபயோகிக்கும் இன்னொரு தொடர் ஆகும். அதே கல்லூரியிற் படிக்கும் தங்கராஜனைப் "பஞ்சகல்யாணியின் நிறம் என்ன?" என்று கேட்டால் "அது சொல்லமுடியாத புதிர்" என்று கூறுவான். சிலசமயம் றோசாப்பூ நிறமோ எனத் தோற்றுவாள். சில சமயம் சைவ வீட்டுச் சருவக் குடம் போலவும் இருப்பாள். இப்படித் தங்கராஜனின் புராணம் நீண்டு கொண்டே செல்லும்.

அவளுக்குப் பஞ்சகல்யாணி என்பது பட்டப்பெயர். இப்பட்டப் பெயர் அக் கல்லூரியின் ஒரு விளையாட்டு விழாவின்போது முற்கூறிய தமிழ்ப் பண்டிதரால் மனமுவந்து அளிக்கப் பெற்றது; அதன் சரியான பொருள் கல்லூரியில் ஆசிரியர் மாணவர் ஒருவருக்குமே தெரியாது. ஏதோ அவள் மேலுற்ற ஈடுபாட்டினாற் பண்டிதர் அப்பெயரை வைத்திருக்கிறார் என்று ஆசிரியர் தமக்குள் நினைத்துக்கொண்டார்கள். பெண்களுக்குரிய ஐந்து இலட்சணங்களும் பொருந்தியவள் என்பதனால் அப்பெயரை வைத்தார் கள் என்று தங்கராஜன் தனது பரிவாரங்களுக்குச் சொல்லிக் கொள்வான். ஐந்து பேரைக் கலியாணம் செய்யக்கூடியவள் என்று தங்கராஜனின்

எதிர்ப் பரிவாரங்கள் பறைசாற்றும்.

"பஞ்சகல்யாணி" என்று வழங்கப்படும் தங்கமணி செல்லப்பா, அம்பிகாபுரம் இந்துக்கல்லூரியில் உயர்தர வகுப்புப் படிக்கும் ஒரு மாணவி. மலாயாப் பென்ஷனியர் செல்லப்பாவின் ஒரேயொரு மகள். தனது மார்பிலிருந்து மூக்கு வரை உயர்ந்த புத்தக அடுக்கும் அதன்மேல் மடித்து வைத்த நூற்கயிறும் முன்னேவர, அவள் நடந்து வருகிறாளோ, ஓடி வருகிறாளோ என்று சொல்ல முடியாதபடி கல்லூரியை வந்தடைவாள். தங்கராஜன் அவளுடைய நடையைத்தான் அன்னநடை என்று புலவர்கள் குறிப்பிட்டார்கள் என்று வாதாடுவான். அவளுடைய நடையை நன்கவதானித்த தமிழ்ப்பண்டிதர், விளையாட்டு விழாவின் போது வாய்த்த சந்தர்ப்பத்தையும் நன்குபயோகித்து, சர்வ இலட்சணங்களுமமைந்த குதிரை என்னும் பொருள் படப் "பஞ்சகல்யாணி" என்று பட்டமளித்தார். குதிரை நடையையுடைய நமது கதாநாயகியைப் பற்றி இன்னுஞ் சில குறிப்பிடவேண்டியிருக்கிறது.

அவளுக்குக் கண்களிலே ஒரு வருத்தம் உண்டு. அதுவும் கருவிழியிலே. கருவிழி பெரிதென்பது மாத்திரமல்ல; அக்கருவிழிகளின் குணத்தையறிந்து, இறைவனால் போதிய இடப் பரப்புடன் அமைக்கப்பெற்ற விழியின் கண், அக்கருவிழிகள் சுழன்று சுழன்று திரியுமியல்புடையன. ஒரு வெட்டு, ஒரு சிமிட்டு, ஒரு வெறிப்பு, ஒரு எதிர்ப்பு என்று தமக்கென அமைந்த பல்வேறு கதியில் அவை சுழன்று திரியும்.

நயன பாஷை தெரிந்தவர்களுக்கும் தங்கராஜனுக்கும் மாத்திரந்தான் அக்கருவிழிகளின் கதி வேறுபாட்டுப் பொருள் வேறுபாடுகள் புரியும். தங்கராஜன் எவ்வளவு தூரத்தில் நின்றபொழுதிலும், அவனை இருத்தி எழுப்பித் தோப்புக்கரணம் போடுவிக்கவல்லன அக்கருவிழிகள். சிவபிரானின் நெற்றிக் கண்ணுக்கடுத்தபடி சக்தி வாய்ந்தனவென்றுங் கூறலாம், அக்கண்களை. அக்கண்களின் மகத்துவத்தை இனிமேல் வருங் கதையில் அறிந்து கொள்ளலாம்.

வேளாளனுக்குக் கலப்பை நுகம் போலவும், செட்டியாருக்குத் தராசு படி போலவும், பிராமணனுக்குத் தருப்பைப் புல் போலவும், மரமேறிக்குத் தளைநார் போலவும், நாவிதனுக்குக் கத்தரிக்கை (இக்காலத்தில் மயிர் அரி கருவி) போலவும் தங்கமணி செல்லப்பாவுக்கு நூற்கயிறு. இவ்வுவமைகளெல்லாம் மிகச் சரி என்று கூறுவதற்கு ஒரேயொரு உதாரணம் மட்டும் கூறுகிறேன். ஷ தொழிலாளர்களெல்லாம் புரட்டாதி மாதத்தில் விஜயதசமியின் போது நடக்கும் ஆயுதபூசையில், தங்கள் தங்கள் கருவிகளை வைத்துப் பூஜிப்பதுபோலத் தங்கமணி செல்லப்பாவும்

தனது நூற்கயிற்றை வைத்துப் பூஜித்தாள்.

மலாயாப் பென்ஷனியர் செல்லப்பா அவர்கள் தனது மகள் விஷயத்தில் இருவிஷயங்களைப் பெருமையாகச் சொல்லுவார். அதில் ஒன்று ஷ நூற்கயிறாகும். பன்னிற நூல்களால் திரிக்கப்பட்ட அக்கயிற்றின் இரு அந்தத்திலும் (திரு. செல்லப்பா அவர்கள் கூட இருந்து தமது மேற்பார்வையில் பெயர்பெற்ற ஆசாரியார் மூலம்) நகாசு வேலைகள் செய்யப்பெற்ற உழண்டிகள் இரண்டு தொடுக்கப்பட்டிருந்தன.

அந்நூற்கயிற்றின் கருணையினாலேயே தமது மகள் உடல் வலுவும், வடிவழகும் பெற்று விளங்கினாள் என்று பென்ஷனியர் தன்னிடம் பொழுது போக்கும் ஏனைய பென்ஷனியர்களுக்கு கூறிக் கொள்வார். ஆங்கில பாஷையில் நுண்ணிய உச்சரிப்பு விசித்திரங்கள் எல்லாம் அவளுக்கு நன்கு வருவது அந்நூற்கயிற்றினாலேயே என்று அவர் வாதாடுவார். சுருங்கச் சொன்னால் அவளுடைய திறமைகள் எல்லாவற்றிற்கும் காரணம் அந்நூற்கயிறே என்பது அவரது திடமான அபிப்பிராயம். கயிறு சுழற்றி ஓடுவதில் தமது மகள் மாகாணத்திலேயே முதற் பரிசைப் பெற்றது வேறு பெருமை, பஞ்சகல்யாணிக் குதிரையின் கடிவாளக் கயிறுபோன்று, அவளுக்கு நூற்கயிறு பொருத்தமாக அமைந்திருந்தது.

நூற்கயிற்றுப் பெருமையினாலேயே காலத்தைத் தள்ளிவந்த பென்ஷனியருக்கு தேசத்திலேயே மிகச் சிறந்த உதைபந்தாட்டக்காரனில் ஒருவனும், கம்பி மீசையின் புகழ் விளங்கவேண்டுமென்றே பிறந்தவனும், கணிதமொன்று தவிர மற்றைய பாடங்களில் குற்றமில்லையென்று சொல்லக்கூடியதாக விளங்கியவனும், பஞ்சகல்யாணியின் விழி ஆட்சியின் குடைநிழலிருந்து வாழ்பவனுமாகிய தங்கராஜனைப் பற்றி ஒன்றுமே தெரியாது.

## 2

## நூலிலே தந்தி

அம்பிகாபுரம் இந்துக்கல்லூரியில் விஞ்ஞான சாஸ்திர ஆசிரியர், பேசுந் தந்தியின் மூலாதார விதிகளை விளங்கப்படுத்தும் பொருட்டு இருநூறு யார் நீளமான ஒரு நூற்பந்தைச் செலவழித்தார். இரு பேணிகளின் அடித்தட்டிலே துவாரஞ் செய்து நூலின் இரு அந்தங்களையும் அத் துவாரங்களுள் நுழைத்துக்கட்டி, அப்பேணிகளின் வாயில் ஒருவர் வாய் வைத்துப்பேச இன்னொருவர் காதை வைத்துக் கேட்கும்படி விஞ்ஞான சாஸ்திர ஆசிரியர் பணித்தார்.

நூலின் ஓர் அந்தத்திலே தங்கராஜனையும், மறு அந்தத்திலே தங்கமணி செல்லப்பாவை (பஞ்சகல்யாணியை)யும் முதலிலே தந்தி பேசுமாறு ஆசிரியர் கேட்டுக்கொண்டார். பஞ்சகல்யாணிக்கு என்ன விதமான செய்தியை அனுப்புவதென்று தங்கராஜன் ஆலோசித்துக் கொண்டே சென்றான். தங்கராஜன் துணிந்து "நான் உன்னைக் காதலிக் கிறேன்" என்ற செய்தியை அனுப்பினான். அங்கேயிருந்து "நானும் அப்படித்தான்" என்ற செய்தி சிறிது தாமதித்து வந்தது. "உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணிக்கிறேன்" என்று ·தமிழ்ப்பண்டிதர் நடையைக் கையாண்டு அடுத்த செய்தி அனுப்பினான். "வானமும் பூமியும் உள்ளளவும்" என்ற அடுத்த செய்தி இயற்கை சாஸ்திர ஆசிரியரின் நடையில் வந்தது. "மலை பெயரினும் நிலையிற் பெயரேன்", "உயிரிழக்கினும் உறுதியிழவேன்", "விடுதந்தியை, மற்றச்சோடி போகலாம்" என்று ஆசிரியரின் இரண்டாம் உத்தரவு வந்தது. சாதாரணமா கக் காதலர்கள் கதைமுடிந்து பிரிவார்கள். இது பிரிந்து நின்று பேசிவிட்டு ஒன்று சேர்ந்தார்கள். அதாவது வகுப்புக்கு வந்தார்கள். கற்பழிக்கப் பட்டவள் முகம் போலப் பஞ்சகல்யாணியின் முகத்தில் அசடு வழிந்தது. அதை யார் கவனித்தார்கள். அன்றுதான் பஞ்சகல்யாணியின் கருவிழிக ளின் குடை நிழலின் கண் தங்கராஜனை விசுவாசமுள்ள பிரஜையாகப் பிரகடனப்படுத்திய முதலாவது தேதியாகும். இப்பிரகடன வைபவம் சிறிதும் ஆரவாரமின்றி அமைதியாகப் பேசுந்தந்தி மூலம் செய்து முடிக்கப்பெற்றது.

பென்ஷனியர் செல்லப்பா அவர்கள் தமது மகளின் பெருமையை இரு பொருள்களின் மூலம் எடுத்து விளக்குவார் என்றும், அதில் ஒன்று நூற்கயிறென்றும், முதலிற் சொன்னேன். மற்றது சாதாரண தையல் நூலாகும். இலங்கையிலே பள்ளி மாணவிகளுக்குச் செலவாகும் அத்தனை நூல்களினளவு தமது மகளுக்குஞ் செலவாகிறதென்று அவர் பெருமையாகச் சொல்வார். தையல் என்ற கலையிலே எவரும் தமது மகளைத் தாண்ட முடியாதென்பதும், அதற்காதாரம், அவள் செலவழிக்கும் நூல் என்பதும் அவரின் வாதமாகும்.

நூல் தையற்கலைக்கு ஆதாரமானதென்பது, எல்லோரினதும் முடிபாகும். பேசுந்தந்திக்கு மூலாதாரமானது நூல் என்பது விஞ்ஞான சாஸ்திர ஆசிரியர் முடிவு. ஆனால் இதே நூலை வைத்து ஆராய்ச்சி செய்து நூதன கருவியொன்றைக் கண்டுபிடித்த பெருமை பஞ்சகல்யாணியையும், தங்கராஜனையும் சேரும்.

பென்ஷனியர் செல்லப்பா தனது மகளின் தையற்கலைத் திறமையை

ஒருபாற் பிரசாரஞ் செய்யப் பஞ்சகல்யாணி தினேதினே ஒவ்வொரு நூற்பந்தாக வேறொரு கலைக்கு உபயோகப்படுத்திக் கொண்டிருந்தாள். அதுதான் காதற்கலை.

தங்கராஜன் மூன்றாவது முறையாகப் பிரவேசிக்கப்போகின்ற பரீட்சைக்குக் கச்சை வரிந்துகட்டிக் கொண்டு நின்றான். புதிய "பிக்பென்" மணிக்கூடு, நான்கு "கிளாஸ்" கொள்ளக்கூடிய பெரிய சுடுநீர்ப்போத்தல் ஆகிய இரண்டும். புதிதாக வரவழைக்கப்பட்டன. தனியறை, தளபாடம் இவை வழக்கமாக உள்ளன. கற்கண்டும் பாலும் கலந்த பாகு சுடுநீர்ப்போத்தலுள் நிரம்பவிட்டு இரவு பத்துமணிக்கு அவனுடைய அறைக்குப் போகும். "பிக்பென்" கடிகாரத்தின் முள்ளு, ஒன்று என்ற இலக்கத்தைக் காட்டிக் கொண்டு நிற்கும். இரவு ஒரு மணிக்குமுன் அவனுடைய அறைக்கு யாரும் போனால் அவன் நல்ல நித்திரையாக இருப்பான். ஒரு மணிக்கு எழும்பிப் படிக்கப் போகிறான் என்பது அப்பொழுது கருத்து. ஒரு மணிக்குப்பின் யார் போனாலும் நித்திரையாக இருப்பான். ஒரு மணி வரையும் படித்துவிட்டுப் படுத்திருக்கிறான் என்பது அப்போதய கருத்தாகும்.

ஆனால், ஒரு மணிக்கும் இரண்டு மணிக்கும் இடையில் யாரும் போய்ப்பார்த்தால் ஆளைக் காணக்கிடையாது. சுடுநீர்ப் போத்தலும் வெறுமையாயிருக்கும். மலகூடத்திற்குச் சென்று விட்டான் என்பது அப்போதைய கருத்தாகும்.

பாலையும் பருகிப் பருகிப் பாடநூல் ஆராய்ச்சி செய்கிறான் என்று பிறர் நினைக்க அவன் சீலைநூல் ஆராய்ச்சிசெய்து வந்தான். சரியாக ஒரு மணிக்குக் கடிகாரமணி அடித்ததும், தங்கராஜன் நித்திரை யினின்றும் துடிதுடித்து எழுந்து, முகங்கழுவிக்கொண்டு பாலையுங் குடித்துவிட்டு மூன்று வீடு தள்ளி அப்பாலுள்ள பஞ்சகல்யாணியின் வீட்டை நோக்கி நடப்பான்.

பென்ஷனியர் செல்லப்பா வளவின் தென்மேற்கு மூலையிற் பெரிய ஒரு நாவல் விருட்சம் நின்றது. அது அகத்திலுள்ளார்க்கும், புறத்திலுள் ளார்க்கும் நாவற்பழங்களை நனிநல்கி வந்தது. அர்த்தஜாமத்தில் நாவற்பழம் விரும்பி நாவல் மரத்தில் ஏறுவோர். இன்றெனினும் தங்கராஜன் அம்மரத்தில் ஏறுவதை யாருங் கண்டால் வேறு என்ன காரணந்தான் அவன் சொல்ல முடியும்? நாவற்பழங்களை நயந்து பாலரை இன்புறுத்திய அந்நாவல்மரம் தங்கராஜனுக்கு வேலி கடக்கவும் உதவியது.

வேலி கடந்து அடிக்கு மேல் அடி வைத்துப் பஞ்சகல்யாணியின்

படுக்கையறையின் சாளரவாயிலின் அருகே வந்து நிற்பான். கதவுகள் பூட்டப்பெற்ற சாளரத்தின் ஒரு சிறு பலகை நீக்கலுக்குள்ளால் புத்தம் புதிய சீலைநூல் தொங்கிக்கொண்டிருக்கும்.

மீன்பிடிகாரன் தூண்டிலை வீசி எறிந்துவிட்டு மிதவை சிறிது ஆடியதும், கயிற்றைச் சிறிது சுண்டிப்பார்ப்பான். கயிறு சிறிது தாக்கமாக இருந்தால் மீன்படப்போகிறதென்பதை அவன் உணர்ந்து கொள்வான். அதுபோலத் தங்கராஜனும் நூலிலே கை போட்டுச் சிறிது வலிப்பான்.

பஞ்சகல்யாணியின் சின்ன விரலிலே மாட்டப்பெற்ற நூல், அவளுடைய நித்திரையைக் கலைக்க, அவள் கையைத் தூக்குவாள். தங்கராஜனின் கையில் இருக்கும் நூல் சுண்டும்.

சிறிது நேரத்தில் பஞ்சகல்யாணியின் அறை சத்தமின்றித் திறந்து சாத்தப்படுவதும், இருவர் நடுஜாமத்தில் நாவற்பழம் விரும்பி நடந்து செல்வதையும் காணலாம். நாவல்மரத்தின் கீழே இருக்கும் அவ்விருவரின் இன்பப்போதைக்குப் பென்ஷனியர் செல்லப்பாவின் குறட்டைச் சத்தம் சுதி கூட்டும்.

## 3

### பாசக்கயிறு

புதிய ஸைக்கிள் வண்டியின் சில்லு மிக இலகுவாகச் சுழலுவதோடு ஓர் இனிய ஓசையையும் எழுப்பிக் கொண்டிருக்கும். அதுபோலத் தங்கராஜனினதும், பஞ்சகல்யாணியினதும் நூலிலாடிய வாழ்க்கைச் சக்கரம் தங்கு தடையின்றிச் சுழன்றதோடு ஓர் இன்ப நினைப்பையும் அவர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருந்தது.

காதலர்களுக்கு இடையூறுகள், பகைவரால், கள்வரால், விலங்குகளால் சம்பவிப்பது வழக்கம். அதுவும் கதையுலகில் சொல்லத் தேவையில்லை. இங்கே மேற்கூறிய இடையூறுகள் ஒன்றும் சம்பவியாது, பரம சாதுவான ஒரு பூனையினால் ஒரு இடையூறு ஏற்பட்டது.

சாளரப் படியிலிருந்த பூனை எதிர்ப்பக்கத்துக் கூரையிலுலாவிய ஒரு எலியை நோக்கிக் குறி வைத்துக்கொண்டிருந்தது. பூனை எவ்வளவு அமைதியாக எலிக்கு இலக்கு வைத்தபோதிலும், அதன் வால் அதற்கு அமைவதில்லை. அது அப்படியும், இப்படியும் அசைந்து கொண்டேயிருந்தது. அந்த அசைவு சாளரத்துக்கூடாக வெளியே சென்ற நூலை அசைத்து அசைத்து இழுத்துவிட்டது.

இரவு ஒரு மணி அடித்ததும், வழக்கம்போல் உற்சாகமாகப் புறப்பட்ட தங்கராஜன், சாளரத் திரையில் வந்ததும் நூலைக் காணாது திகைத்தான். பஞ்சகல்யாணி தன்னை ஏமாற்றிவிட்டாள் என்று நினைத்துக் கோபத்தோடு வீட்டுக்குச் சென்று படுத்தான். அதிகாலையில் எழுந்த பஞ்சகல்யாணியும் தங்கராஜன் வராததுகண்டு வருந்தினாள். தங்கராஜனுக்கு அன்று கல்லூரியிற் கொடுப்பதற்கென்று ஒரு காகிதத்தை வரைய மேசையருகில் போயிருந்தாள். அப்பொழுது அவளுக்குக் குடலைப் பிடுங்கிக் கொண்டு வாந்தி வந்தது. வாந்தி எடுத்துவிட்டுப் பின்பு வந்திருந்தாள். அடுத்த அறையில் தனது சிறிய தாயாரும் சிறிய தந்தையாரும் சம்பாஷித்தது அப்பொழுது அவள் காதில் விழுந்தது.

"தங்கமணி விடிய எழுந்தவுடன் வாந்தி எடுக்கிறாளே! ஏதும் சுகமில்லையோ?"

"அவளுக்கு இந்தமாதம் மாதவிலக்கும் வரவில்லைப்போலிருக்கிறது; எனக்கு முந்தியல்லவா அவளுக்கு வருவது வழக்கம்; நான் வந்து முழுகியும் விட்டேனே!"

"இதை நீ ஒரு சாதாரண சம்பவம்போல் சொல்லுகிறாயோ?"

"நான் என்ன செய்யலாம்; அவள் அப்பாவுக்குச் செல்லப்பிள்ளை. நீங்கள் வேண்டுமானால் அவருக்கு இப்படி விஷயம் என்று சொல்லிப் பாருங்கள்".

"வித்தியாசமாக நினைப்பதற்கு ஒரு இடமுமில்லையே. நாங்கள் நினைப்பது போலானால் எப்படி நடந்திருக்கும்".

"எனக்கு ஒன்றுமே தெரியவில்லை; இனி அவதானித்துப் பார்க்கிறேன்."

இந்தச் சம்பாஷணை தங்கமணிக்குக் கேட்டதோடு அதற்கடுத்த அறையில் படுத்திருந்த பென்ஷனியர் செல்லப்பாவுக்கும் கேட்டது. தான் ஒரு கர்ப்பிணியாயுமிருக்கலாம் என்ற எண்ணம் அப்பொழுதுதான் அவளுக்கு முதல் முதல் அவள் மனத்தில் தோன்றியது. உடனே அவளுக்கு ஒரு அதிர்ச்சி வந்தது. கண்கள் கலங்கின. அக்கலக்கத்தினுடனேயே காகிதமும் எழுதத் தொடங்கினாள்.

இன்று இரவு பதினொரு மணிக்கு நாவல் மரத்தின் கீழே நிற்பேன்; என்னை வந்து அழைத்துப் போகவேண்டும். இனி அரைக்கணமும் இவ்வீட்டில் தங்க முடியாது. நீங்கள் என்னை வந்து அழைத்துப்போகா விட்டால், எனது பெயர் பாடசாலையில் விளங்கவும், என்னை நீங்கள்

காதலிக்கவும் ஏதுவாயிருந்த நூற்கயிறே எனக்குப் பாசக்கயிறாக முடியும். எந்த நாவல் மரத்தின் மூலம் நீங்கள் எங்கள் வளவுக்குள் நுழைவீர்களோ? அந்த நாவல் மரத்தின் கொப்பில், எந்த நாவல் மரத்தின் கீழ் நாங்கள் இருவரும் சல்லாபிப்போமோ, அந்த நாவல் மரத்தின் கீழ் பிணமாய்த் தூங்குவேன். இவ்வளவுநாளும் எந்த ஆட்டுக்கடா எங்கள் நிகழ்ச்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்ததோ, அதே ஆட்டுக்கடா நான் தூங்குவதையும் பார்த்துக்கொண்டிருக்கும். இதுதான் அக் கடிதத்தின் சுருக்கம். இக்கடிதத்தை எழுதிப் புத்தகத்துள் வைத்துவிட்டுப் பல் தேய்த்துக் குளிப்பதற்கு வெளியே சென்றாள்.

தனது தம்பியும் மனைவியும் சம்பாஷித்ததைக் கேட்ட பென்ஷனியர் செல்லப்பாவுக்கு உடனே இரத்த அமுக்கம் என்று சொல்லப்படுகின்ற கிறுதி ஒன்று சிறிதாக வந்து பின் தெளிந்து குறுவெயர்வையோடு இருந்து அவர் ஆலோசித்தார். பின்னர் எழுந்து தங்கமணியின் அறைக்குள் போனார். அங்கே அவள் இல்லை. மேசைமீதிருந்த புஸ்தகங்களைப் புரட்டிப் பார்த்தார். அவைகளுக்குள் ஷ காகிதம் தோன்றியது. எடுத்து வாசித்துப் பார்த்தார். இரண்டாம் முறையும் கிறுதி வந்தது. அப்படியே புத்தகத்துள் வைத்துவிட்டுத் தமது அறைக்குத் திரும்பிச்சென்று படுக்கையில் படுத்துக் கொண்டு ஆலோசித்தார். ஒன்றும் விளங்கவில்லை.

எழுந்து தமது நண்பரொருவரிடம் சென்றார். எல்லா விஷயங்களையும் அவரிடம் சொன்னார்.

அவர் "உமக்குப் பெரிய அதிர்ஷ்டம்" என்று சொன்னார்.

"என்ன அதிர்ஷ்டம்?"

"ஒரு பெண்ணுக்குச் சீதனம் கொடுத்துச் செய்வதானால் எவ்வளவு தொகைப் பணம் வேண்டும். இப்பொழுது ஒரு செலவும் இன்றிக் காரியம் கைகூடுகிறதே!"

"ஆனால் ஆள் எப்படிப்பட்ட ஆளோ?"

"உமது மகள் அப்படியொன்றும் பிழை விடமாட்டாள்; கல்லூரியிற் படிப்பவனாய்த்தானிருக்கும்; கலியாணத்தை முடித்துக்கொண்டு நீர் பின்னர் படிப்பித்தால் சரியாய்ப் போச்சுது?"

"நான் அதிகம் எண்ணியிருந்தேன்?"

"நாம் எண்ணுகிறபடி எல்லாம் நடந்து வருகிறதா? இதில் வேறொன்

றும் செய்ய இயலாது. மாதவிலக்கும் வரவில்லையென்று சொல்லுகிறாய். இதற்குமேல் தடுத்தால் எல்லாம் விபரீதமாக முடிந்துவிடும். கிடைத் ததைக் கொண்டு திருப்தியடைவதுதான் சரியான வழி. இவ்வளவோடு அவர்கள் இவ் விஷயத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி கட்டி விட்டனர்.

அன்று பூரணை; புரட்டாதி மாதம், பூரட்டாதி நட்சத்திரம்; சனிக்கிழமை, உமாமகேசுவர விரதமுங் கூட. இவ்வளவுங் கூடிய சுபதினத்திலே, அன்றைய இராப்பொழுதிலே எத்தனையோ விஷயங்கள் நடக்கப் போகின்றன. முழுவதற்கும் பின்னணியிற் காட்சியாகக் காய்த்துப் பழுத்த நாவல் மரம் விளங்கப்போகின்றது.

பென்ஷனியர் செல்லப்பா சிவன் கோயிலுக்குப் போய் மறுநாட்கா லையே வருவதாகக் கூறி மாலையில் வெளியே போய்விட்டார். அவரின் தம்பியும், மனைவியும் "ஓரிரவு" என்ற படம் பார்க்கக் கிளம்பிவிட்டார்கள். அவர்கள் பார்க்கப் போகின்ற ஓரிரவைத் தூக்கப் போகிறது இங்கே நடக்கப்போகிற ஓரிரவு என்று அவர்களுக்குத் தெரியாது.

வீட்டில் தங்கமணியும் இராமசாமி என்னும் வேலைக்காரனுமே மிச்சம். தங்கமணி தனக்குத் தலையிடி என்று படத்திற்குவர மறுத்து விட்டாள். வீட்டிலும் ஆட்களில்லை என்று அவர்கள் தெண்டியாது விட்டுவிட்டனர். இப்படியான ஒரு சந்தர்ப்பத்தையே வேலைக்கார இராமசாமியும் எதிர் நோக்கியிருந்தான்.

பென்ஷனியர் செல்லப்பாவின் பெட்டிக்குள் இருக்கும் ரொக்கப் பணத்தைத் திருடிக்கொண்டு ஓடிவிட அவன் திட்டம் போட்டான். எப்போது அன்றைய இரவு வரப்போகிறதென்று இராமசாமி நிமிஷங்களையும் எண்ணிக் கொண்டிருந்தான்.

பஞ்சகல்யாணியோ அன்றைய இரவு வரக்கூடாதென்று எண்ணிக் கொண்டிருந்தாள். அவளுக்குத் தங்கராஜனோடு ஓடிவிடவும் விருப்ப மில்லை. நூற்கயிற்றிலே தூங்கவும் விருப்பமில்லை. ஆனால் இரண்டில் ஒன்றை அவள் அன்று செய்தாகவேண்டும்.

இவ்வளவு பிரச்சினைகளையும் வைத்துவிட்டுச் சூரியன் மேற்கே அஸ்தமித்தான். பகலில் போடுகிற திட்டங்கள் இரவில் சரிவருவது மில்லை. இரவில் போடுகிற திட்டங்கள் பகலில் சரிவருவதுமில்லை. இது பொதுவான வழக்கம். திட்டமே போடாமல் காரியங்கள் செய்கிற, அழகுசுப்பர் என்னும் அதிசயபுருடன் பனங்கள்ளினாற் குடிக்கப்பட்ட வராகப் பென்ஷனியர் செல்லப்பாவின் வீட்டு ஒழுங்கையால் சென்றார்.

நாய்க்கு மோப்பந் தெரிவது போலவும், புலிக்கு மானினத்தின் மெல்லிய சத்தமும் புரிந்துவிடுவதுபோலவும், பென்ஷனியர் செல்லப்பாவின் வளவுக்குள் கேட்ட ஒரு ஒலியைக்கேட்டு அதைத் தனதுடைமையாக்கும் நோக்கத்தோடு ஏற்ற சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி அழகுசுப்பர் நாவல் மரத்தில் ஏறிக் கொண்டார்.

அதே நாவல்மரத்தில் ஏறுவதற்காக மறைந்து மறைந்து வந்த இன்னொரு உருவம் தனது திட்டத்தை மாற்றவேண்டி நேரிட்டதோடு, அழகுசுப்பர் நாவல்மரத்தில் ஏறும் பொருள் தெரியாது மயங்க வேண்டியும் ஏற்பட்டது.

## 4

## காதல் தூங்கியது

அம்பிகாபுரம் வைரவர்கோயில் வேள்விக்காகப் பென்ஷனியர் செல்லப்பா அவர்களால் ஒரு பெரிய ஆட்டுக்கடா வளர்க்கப்பெற்றது. அதைச் சமயத்திற்குத் திருக்கல் வண்டியிலும் பூட்டலாம் என்ற யோசனை பென்ஷனியர் செல்லப்பாவுக்கு இருந்ததோ?" என்னவோ? தெரியாது. ஆனால் அதைப் பாரவண்டியிலும் பூட்டலாம், என்று பார்த்தவர்கள் சொல்வார்கள்.

வைரவரே நேரில் வந்துநின்று, தனது கண்காணிப்பில் அந்த ஆட்டுக்கடாவை வளர்த்தாலும்; அவ்வளவு திறமையாக வளர்த்திருக்க முடியாது, பஞ்சகல்யாணியைப் பார்த்தவர்கள் சிலசமயம் மறுபக்கந் திரும்பினாலும், அவ் ஆட்டுக்கடாவைப் பார்த்தவர்கள் எந்தப் பக்கமும் திரும்பமுடியாது,

அந்த ஆட்டுக்கடாவுக்கு இற்றைநாள்வரை, இல்லற தருமத்தில் பிரவேசிக்கும் - காதல் உலகில் சஞ்சாரஞ் செய்யும் - தருணம் ஒன்று கிடைத்திருக்க நியாயமில்லை. ஆனால், நூற்றுக்கு நூறு தத்ரூபமாக, ஒரு காதல் நாடகத்தை இடைவிடாது பார்த்துவந்த சந்தர்ப்பம் அதற்குண்டு. அதே காதல் நாடகத்திற்கு முடிவுகட்டும் ஒரு கருவியாகத் தான் இருப்பேன் என்று அது கனவிலும் எண்ணவில்லை.

அன்று இரவானதும், பஞ்சகல்யாணிக்கு வேலைக்கார இராமசாமி எப்பொழுது நித்திரைபோவான் என்பதில் கண். வேலைக்கார இராமசாமிக் குப் பஞ்சகல்யாணி எப்பொழுது நித்திரைபோவாள் என்பதிற் கண். அவள் இன்னுஞ் சிறிதுநேரத்தால் மரத்தில் தூங்கப்போகிறாள் என்று

அவனுக்கு எப்படித் தெரியும். இப்படி ஒருவரையொருவர் பார்த்து இரவு வெகுநேரமாகி விட்டது. முடிவில் இராமசாமிக்கு ஒரு உபாயந் தோன்றியது. தான் தூங்குவது போலக் குறட்டை விட்டான். குறட்டை ஆழ்ந்த நித்திரைக்கு அறிகுறியென்பதைத் தனது தந்தை மூலம் அறிந்த பஞ்சகல்யாணி, விறு விறு என்று நூற்கயிற்றையும் - பாசக் கயிற்றையும் - எடுத்துக்கொண்டு நாவல்மரத்தை நோக்கி நடந்தாள். அப்பொழுது மணி பதினொன்றேகால்; ஆகையால் தனக்காகத் தங்கராஜன் காத்திருப்பான் என்ற எண்ணத்தோடு அவள் நடந்தாள்.

அவள் செல்வதை மறைந்துநின்று கவனித்த இராமசாமி, இதுவே தக்க தருணமெனக் கண்டு. பென்ஷனியர் செல்லப்பாவின் உரொக்கப் பெட்டியைக் காலியாக்கிக்கொண்டு, நாவல் மரத்திற்கு அப்பாற் சிறிது தூரத்தில்நின்ற புளியமரத்தின் சிறு பொந்தை நோக்கி நடந்தான்.

தங்கராஜனுக்குப் பஞ்சகல்யாணியின் கடிதம் கிடைத்த நேரந் தொட்டு மனதில் அமைதியேயில்லை. என்ன செய்யலாம்? அவளைக் கூட்டிக்கொண்டு போய்த்தான் எவ்வாறு காப்பாற்றலாம் என்ற யோசனை. அன்று கல்லூரியாற் சென்றதும் வீட்டிலே ஒரு வேலையும் பாராது, வயற்பக்கமாகச் சென்று ஒரு மரத்தின்கீழ் இருந்துகொண்டு ஆலோசித்தான். பரீட்சை முடியும்வரையும் அவளை வழக்கம்போல் இருக்குமாறு வேண்டிக்கொள்ள வேண்டுமென்ற ஒரு தற்காலிக முடிவோடு வீடு திரும்பினான்.

அவனைத் தேடிய அவன் தந்தை, மாலையில் புத்தகமும் கையிலின்றி அவன் ஆடி அலைந்து வருவதையும், முதனாள் இரவு அவன் அறையை இரவு பத்துமணிக்குப் பார்த்தபொழுது அவன் அயர்ந்து தூங்குவதையும் கண்டு அப்பொழுது கடுங் கோபங் கொண்டார்.

அன்று அவன் அறைக்குள்ளே போயிருந்துகொண்டு, அவன் படிப்பதைக் கண்காணித்தார். இரவு பதினொரு மணியின்மேற் பொது அறிவு சம்பந்தமான சில குறுக்குக் கேள்விகளும் கேட்டுவிட்டுப் பதினொன்றேகால் மணிக்கு அவ்விடத்தைவிட்டகன்றார். பத்துமணி தொடங்கியே தனக்கு நித்திரை வருகிறது; கிறுதி வருகிறது என்று எத்தனையோ விதமாகத் தங்கராஜன் சொல்லிப் பார்த்தும் அவன் தந்தை அறையை விட்டு அகலவேயில்லை. முடிவில் மலசலங்கழிக்கப் போவதற்கு என்று சொல்லியே அவன் எழுந்தான். இந்த அற்புதமான புத்தி பதினொன்றேகால் மணிக்கு முன்பு அவனுக்கு வரவில்லை. அவன் நாவல் மரத்திற்குச் சிறிது தூரத்திற் போகவே அவள் நூற்கயிற்றில் தூங்கும்

காட்சியைக் கண்டான். அவள் தூங்கும் இடத்திற்கும் தனக்கும் இடையேயுள்ள வேலியும், முள்ளுப்பற்றையும், அப்பொழுது இருந்த இடத்தை விட்டு அகன்றனவோ? அன்றி அவையனைத்தையும் தாண்டிப் பாய்ந்தானோ? கணப்பொழுதில் அவள் தூங்கின இடத்தில் நின்றான்.

தங்கமணி அன்று ஓடப்போகிறாள் அல்லது சாகப்போகிறாள் என்பதை அறிந்த பென்ஷனியர் செல்லப்பா, அவள் தூங்கினால் அதைத் தடுப்பது, அவனோடு ஓடினால் அதைத் தடுத்து அவர்களைத் தம்பதிகளாக்குவது என்ற கருத்தோடு, ஏலவே சிவன்கோயிலுக்கு என்று சொல்லி வீட்டைவிட்டுக் கிளம்பிச் சுற்றிக்கொண்டு நாவல்மரத்திற்கு வந்தார். நாவல்மரத்தில் அழகுசுப்பர் ஏறுவதைக் கண்ட பென்ஷனியர் செல்லப்பா, திகைத்து அதற்கப்பாலுள்ள புளியமரத்தில் ஏறியிருந்து கொண்டார்.

பஞ்சகல்யாணி நூல்கயிற்றோடு நாவல்மரத்தை நோக்கி வருவதைப் பென்ஷனியர் செல்லப்பாவும், பார்த்தார்; அழகுசுப்பரும் பார்த்தார். ஆனால் அழகுசுப்பருக்குத் தன்னைக் கண்டுவிடப் போகிறாளேயென்று பயந்தட்டி விட்டது. சிறிதும் மரக்கிளை அசைவதற்கிடங்கொடாது சித்திரப் பாவைபோல் இருந்துகொண்டார்.

பத்துமணிக்கே வந்து காவல் நிற்பான் என்று நினைத்துச் சென்ற பஞ்சகல்யாணி தங்கராஜனைக் காணாது மனக்கொதிப்படைந்தாள். சுற்றுமுற்றும் பார்த்தாள். தனது திட்டப்படி நூல்கயிற்றை லாவகமாக வீசி நாவல்மரத்தின் ஒரு கொப்பிற் கட்டியிழுத்தாள்! அதே கொப்பில் இருந்த அழகுசுப்பர் தனக்குத்தான் கயிறு வீசுகிறாளென்று குறுவெயர்வை வியர்க்க நெஞ்சம் படபடக்க இருந்தார். ஆனால் அவள் ஒரு தலைப்பை மரத்தில் கட்டி இழுத்து இறுக்கிக்கொண்டு மறு தலைப்பில் உருவுதட்டம் போட்டாள்.

ஆட்டுக்கடா கட்டியிருந்த கட்டையில் பிடித்துக்கொண்டு ஆட்டுக்கடாவின் முதுகின்மேல் ஏறி நின்றுகொண்டு கழுத்தை உருவு தடத்தில் மாட்டினாள். ஆட்டுக்கடாவும் பாரந்தாங்கமாட்டாது அப்பாற் சென்றது. அவள் தூங்கினாள். இவ்வளவு காட்சிளையும் அழகுசுப்பர் பார்த்துக் கொண்டேயிருந்தார். பென்ஷனியர் செல்லப்பாவும் பார்த்துக் கொண்டே யிருந்தார். ஆனால் அவர் எல்லாவற்றையும் ஆயத்தப்படுத்தி வைக்கிறாளேயன்றி இவ்வளவு விரைவில் தூங்குவாள் என்று எதிர்பார்க்க வில்லை. அவள் தூங்குவதைக் கண்ட பென்ஷனியர் செல்லப்பா செய்வ தறியாது கலக்கமடைந்து புளியமரத்தில் நின்று உடனே குதித்தார். அவர் பணத்தைத் திருடிவந்த இராமசாமியின் மீது விழுந்ததுமன்றி அவனைப் பாட்டில் விழுத்தி அவன்மேல் தானும் விழுந்தார். அவன் "ஐயோ

எசமான் இனிமேல் ஒழுங்காக நடக்கிறேன்" என்று தீனக் குரலிற் கதறினான். இவன் ஏதடா குறுக்கே என்று கஷ்டப்பட்டு எழுந்து நொண்டி நொண்டி மகளிடம் ஓடினார்.

பாய்ந்து வந்த தங்கராஜன் அவளின் அரையிற் கட்டிப்பிடித்து அவளை மேலே உயர்த்தினான். ஆனால் அதே சமயத்தில் மரத்தில் கட்டியிருந்த தலைப்பும் கீழேவிழுந்தது. அவளை அப்படித் தூக்கிக்கொண்டு நிற்பதில் ஒரு இன்பத்தைக்கண்ட தங்கராஜன் அப்படியே தூக்கிக்கொண்டு நின்றான். தனக்கு இன்னும் உயிர் இருக்கிறது என்பதைக் காட்டத் தங்கமணி, "யாரோ வருகிறார்கள், என்னைக் கீழே விடுங்கள்" என்று சொன்னாள். "ஆடு திருடுங் கள்வனுங் கூட நின்ற நன்மையால்" என்று சொல்லிக்கொண்டு பென்ஷனியர் செல்லப்பா நொண்டி நொண்டி முன்னால் வந்தார். வைரவரையே ஏமாற்றப்பார்த்த அழகுசுப்பர், நூற்கயிற்றையும் வில்லுக்கத்தியால் அறுத்துவிட்டு. மேலேயிருந்து முழித்தார். புளியின் கீழே "எசமான்! எசமான்!!" என்று இராமசாமி விழித்தான். நூற்கயிற்றிலேயாடிய பஞ்சகல்யாணியின் உயிர் நூலிடையே தப்பியது.

(ஈழகேசரி - 17-2-52)

# இராசமணி

**பொலிஸ் இராசையாவுக்குப் பரதநாட்டிய அறிவு இல்லாவிட்டாலும், காலிமுக மைதானத்து இளங்காற்று அவனுடைய தொழிலை நாட்டியத்தோடு இணைத்தது.**

## 1. இரும்புப் படலை

வேறா ஹிட்லரின் வீசை மறு அவதாரம் எடுத்தது போன்று, அவனுடைய அழகிய உருண்டைமுகத்தில் அந்த வீசை காட்சியளித்தது. அவனுடைய உத்தியோகஉடுப்பும், நிமிர்ந்த நடையும், மிடுக்கான பார்வையும், அந்ந வீசையும் ஒன்றையுமே இலட்சியம் செய்யாத வீரவாகுவைக்கூடச் சிறிது கலங்கச்செய்தது. உலக விஷயங்கள் ஒன்றிலும் தலையிடாது தானும், தன்பாடுமாகச் சீவிக்கின்ற வீரவாகுவின் படலையைத் திறந்துகொண்டு ஒரு பொலீஸ்காரன் இராணுவ நடையில் சென்று வணக்கம்சொல்லிவிட்டு, 'ஜம்' என்று ஒரு கதிரையில் உட்கார்ந்தான். என்ன விளக்கமோ? என்ன விசாரணையோ? வென்று வீரவாகு அசந்துபோனார்.

வீரவாகுக்கு மிகவும் பழக்கமானதும், ஆபத்து நேரங்களில் கைகொடுத்து உதவுவதும், உணர்ச்சி மிகுந்து அவசரபுத்தி தோன்றுங் காலங்களில் அவரின் உணர்ச்சியை அடக்கி நிதானமடையச் செய்வதுமான ஓர் ஆயுதம் அவரிடம் எப்பொழுதும் கைவசம்இருந்தது. தனது முகத்தை மலரச் செய்து ஒரு புன்சிரிப்பை வரவழைத்து எந்த இக்கட்டான நிலமையையும் சமாளித்துவிடுவார். அதே ஆயுதத்தைக் கையாண்டு தமது உணர்ச்சியைச் சமாளித்துக்கொண்டு, அந்தப் பொலீஸ்காரனை நிமிர்ந்து பார்த்தார்.

'என் பெயர் இராசையா. நான் இரகசியப் பொலீசுப்பகுதியைச் சேர்ந்தவன். இவ்வூருக்கு ஒரு வழக்கு விஷயமாக வந்திருக்கிறேன். இவ்வூரிலே தங்க வசதியான இடம் இல்லை. சில நாட்களுக்கு மாத்திரம் உங்கள் முன் விறாந்தையில் இரவில் படுத்துக்கொள்வதற்கு சிறிது இடந்தர வேண்டும். நீங்கள் மறுக்கமாட்டீர்கள் என்ற துணிவுடன் கேட்கிறேன்' என எடுத்த எடுப்பிலேயே விஷயத்தை மடமடவென்று சொல்லி முடித்தான்.

அவன் சொன்னவற்றையெல்லாம் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த வீரவாகு, அவன் கேள்விக்கு இசையவும் விருப்பமின்றி, மறுக்கவும் முடியாது, சிறிது திகைத்துப் பின், தனது வழக்கமான புன்னகையை வருவித்துக்கொண்டு, ஒரு முறுவலுடன், 'நீங்கள் தங்குவதைப்பற்றி எனக்கு ஆட்சேபனையில்லை. ஆனால் இது பெண்கள் உள்ளஇடம்' என்று வசனத்தை முடிக்காமல் இழுத்தார்.

அவர் வசனத்தை முடிக்கமுன்னரே, பொலீஸ் இராசையா முந்திக் கொண்டு, 'அதைப் பற்றிப் பரவாயில்லை. இங்கே ஒரு காவாலியும் என்னுடன் வரமாட்டான். எனக்கு இங்கே தெரிந்தவர்களும் ஒருவரு மில்லை. நான் உங்களுக்கு ஒரு பாதுகாப்பாகவும் இருப்பேன். நான் இப்பொழுது சற்று வெளியில் போய் வருகிறேன். இதோ இதிலிருக்கும் பழக்கூடை உங்களுக்கு. எடுத்துப் பிள்ளைகளுக்குக் கொடுங்கள். எனது பெட்டி இருக்கட்டும்' என்று சொல்லிக்கொண்டு எழுந்து போய்விட்டான்.

அவன் போன திக்கையே பார்த்துக்கொண்டு, வீரவாகு இருந்தார். 'ஐயா' என்று கூப்பிட்டுக்கொண்டு அவர் மூத்தமகள் இராசமணி வந்து அவருடைய சிந்தனையைக் கலைத்தாள்.

'தலைவிக்கு இவ்வேறுபாடு எற்றினால் ஆயிற்றுக் கொல்?' என்று ஆராயப்புகுந்த செவிலித்தாய்க்கு, 'இதற்குச் சில காரணமுமுண்டு; ஒருநாள் நானும் தலைவியும் புனத்தில் விளையாடும்பொழுது, ஒரு வேங்கைப்புலி வந்தது; அப்புலியை ஒருவன் வந்து கொன்று தலைவியைக் காத்தான். அன்றுதொட்டு அவன் நினைவாகவே தலைவி இருக்கிறாள்' என்று தோழி சொல்வாள். தோழியின் இக்கூற்றை 'அறத்தொடு நிற்றல்' என்ற துறையாக அகப்பொருள் இலக்கணம் கூறும். தன்னிலும் பிழையில்லாமல், தலைவியிலும் பிழையில்லாமல், ஒழுக்கத்திலும் பிழையில்லாமற் கூறும் ஒரு தந்திரமான சமயோசிதமுள்ள கூற்றாகும் அறத்தொடு நிற்றல் என்பது.

இராசமணி என்ற எமது இத்தலைவிக்கு அறத்தொடு நிற்கத் தோழியர் ஒருவருமிலர். எனவே அவள் தானே தன் தந்தைக்கு அறத்தொடு நின்றாள்.

'ஐயா! இதில் வந்து போனவரை எனக்கு கொழும்பில் முன்பு சிறிது தெரியும். மிகவும் நல்லமனிதர். நான் கொழும்பில் பஸ்ஸுக்கு ஒருநாள் காத்து நிற்கும்பொழுது ஒரு கார்க்காரன்வந்து, தான் கொண்டுபோய் விடுவதாகவும், காரில் ஏறும்படியும் நெருக்கினான். பிறகு இவரே தலையிட்டு, அவனிடமிருந்து என்னைத் தப்புவித்து, என்னைப் பஸ்ஸில் அனுப்பினார். பிறகு பஸ்ஸில் ஒவ்வொரு நாளும் போய்வருவது நன்றல்ல என்று சொல்லி, பைசிக்கில் ஓடத் தெரியுமா என்று என்னைக் கேட்டுத் தெரிந்துகொண்டு, எனக்குக் கட்டுக்காசுக்கு ஒரு பைசிக்கிலும் கம்பனியில் எடுத்துத்தந்தார். பிறருக்கு உதவி செய்வதில் விருப்பமுள்ளவர்.' இவ்வாறு இராசமணி உண்மையோ பொய்யோ சொல்லி அறத்தொடு நின்றாள். அவளுடைய கூற்று எத்தனையோ சிக்கல்களை நீக்கியது.

அவள் சொல்லிக்கொண்டு வரவர, அவள் தாய் பொன்னம்மாள் தன் தலையிலிருந்து ஒரு பாரம் மெல்ல, மெல்ல விலகுவது போன்ற ஒரு உணர்ச்சியடைந்தாள். தன் மகளின் வேறுபாடு எற்றினால் ஆயிற்றுக் கொல் என்ற விளங்காத வினாவுக்கு விடைகண்டாள். முன்பின் தெரியாத ஒருவன் வந்து படுக்க இடங்கேட்டானே என்று திகைத்த வீரவாகுவின் சிக்கலை இது நீக்கியது.

இராசமணி வீரவாகுவினதும், பொன்னமாவினதும் மூத்த புதல்வி. அவளுக்கு வயது இருபத்து மூன்று. அவள் பிறக்கும்பொழுது சாதகம் கணித்த சோதிடன், அவள் நாட்டியக்கலையில் ஒப்புயர்வற்று விளங்கப் போகிறாள் என்று கூறினான். அவன் கூற்றை நம்பி அவளை அத்துறையில் அவளுடைய பெற்றோர்கள் இறக்கவில்லை. அதற்கு வசதியுமில்லை. அவளால் எஸ்.எஸ்.ஸி வகுப்பிற்கு மேற் படிக்கவும் முடியவில்லை. 'ரைப்' அடிக்கும் கலையைப் பயின்ற இராசமணி, கொழும்பில் ஒரு கம்பனியில் 'ரைப்பிஸ்ட்' ஆகச் சேர்ந்து, தனது குடும்பத்திற்குப் பாரமில்லாது உழைத்து வந்தாள்.

இராசமணி கொழும்பில் ஒரு பெண்கள் விடுதியில் தங்கிக்கொண்டு, ஒவ்வொருநாளும் பைசிக்கிலில் உத்தியோகத்திற்குப் போய் வந்தாள்.

இராசமணிக்கு நாட்டியம் ஆடத் தெரியாவிட்டாலும், நாட்டியத்தில் மிகுந்த பற்றுடையவள். நாட்டியத்தைப் பார்த்துச் சுவைக்க அவளுக்கு

நன்கு தெரியும். இராசமணி பைசிக்கிலில் ஒவ்வொருநாளும் உத்தியோகத்திற்குப் போகும்பொழுது, ஒரு பரதநாட்டிய விருந்தையும் பார்த்துச் சுவைத்துக்கொண்டே போவாள்.

கொழும்பிற் காலிமுகமைதானத்திற் காலைவேளையில், இளங்கடற் காற்று வீசும். அந்த நேரம், அதில் நிற்கும் எல்லோருக்கும், மெல்லிய சுகந்தோன்றும். காலிமுக மைதானத்துச்சந்தியில் வாகனங்கள் ஒன்றோடொன்று அடிபடாமல் இலகுவாகச் சிக்கெடுத்து அனுப்பி விடுவதற்கு ஒரு பொலீஸ்காரன் நிற்பான். அந்தப் பொலீஸ்காரனுக்குச் சிறிது பரதநாட்டிய அறிவும் இருக்குமானால், அவன் தொழில் கலையோடு பொருந்தியதாகவுமிருக்கும்; பார்ப்பதற்கும் அழகாயிருக்கும்.

பொலீஸ் இராரசயாவுக்குப் பரதநாட்டிய அறிவு இல்லாவிட்டாலும், காலிமுக மைதானத்து இளங்காற்று அவனுடைய தொழிலை நாட்டியத்தோடு இணைத்தது. அவன் ஓரு பக்கத்தால் வரும் வாகனங்களைப் போகும்படி ஒரு கையை நீட்டி, மறுபக்கத்தால் வரும் வாகனங்களை நிற்கும்படி, மறுகையை மடித்துக்காட்டுபவன். தீடீரென ஒரு துள்ளுத் துள்ளி, முன் நீட்டிய கையை மடக்கிக் காட்டி, முன் மடக்கிய கையை நீட்டிக் காட்டினான். இதை ஓரிடத்தில் நின்று கவனித்துப் பார்த்தாற்றான், அவன் புரிவது தொழிலல்ல. பரத நாட்டியம் என்பது நன்கு புலனாகும்.

இந்த இலவசக் காட்சியை நாட்டிய இரசிகையான இராசமணி, அன்று காலை பைசிக்கிலில் வந்து பார்த்துக்கொண்டு நின்றாள். அவன் அவளைப் போகும்படி கை காட்டினதையும் கவனியாது, அவன் தாளம் பிழையில்லாமல் கை பாவனையைக் கையாளுவதைப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

பொலிஸ் இராசையா, கை காட்டினவுடன் அவள் போகாமல் இருந்ததால், அவளின் தாளம் பிழைத்தது. பின்னால் வந்த வாகனங்களும் தடைப்பட்டன. அவன் இராசமணியைக் கோபத்துடன் விழித்து, அவளின் விலாசத்தைக் கேட்டுப்புத்தகத்திற் குறித்துக் கொண்டான்.

பொலீஸ் இராசையா இராசமணியைப் பலதடவை பார்த்த பொழுதிலும், அவளின் அழகை இரசிக்க அவனுக்கு நேரமிருக்கவில்லை. அன்று அவன் அவளைக் கோபத்துடன் விழித்து, விலாசங் கேட்ட பொழுது பரிதாபமாகப் பார்த்த அவள் பார்வையையும் அழகையும் கண்டு, அவன் ஒரு இனந்தெரியாத வேதனையை அனுபவித்தான். அன்று அவன், தனது காலிமுக மைதானக் கடமை முடிந்ததும், நேரே இராசமணியின் காரியாலயத்திற்குச் சென்றான்.

'சந்தியில்' வாகனங்களைத் தடைபண்ணிக்கொண்டு, பைசிக்கிலிலே நின்ற குற்றத்திற்காக அவளை ஸ்ரேசனுக்கு வருமாறு அழைத்தான். அவள் 'இனிமேல் அப்படிச் செய்யமாட்டேன்' என்று மன்றாடினாள். பொலீஸ் இராசையா 'இன்று ஏன் அப்படி நின்றாய்?' என்று கேட்டான். அவன் அதை அறிவதற்காகத்தான், உண்மையில் அவ்வளவு அவசரமாக வந்தான். அவள் சொல்லத் தயங்கினாள். அவன் நெருக்கினான்.

'நீங்கள் குறை நினைக்க மாட்டீர்களே' என்று இராசமணி கேட்டாள்.

'சொல்லாவிட்டாற்றான் குறை நினைப்பேன்.'

'நீங்கள் கை காட்டியது ஒரு நாட்டியக் கச்சேரி மாதிரி இருந்தது. அந்த அழகைப் பார்த்துக்கொண்டு...'

இருவரும் ஒரே நேரத்தில் சிரித்தனர். யார் முன் சிரித்தனர் என்று கூறமுடியாது. அன்று தொடங்கிய அவர்கள் நட்பு காதலாக மாறியது.

சித்திரை லீவு வந்தது. தான் ஊருக்குப் போவதாக இராசமணி கூறினாள். தானும் வருவதாக இராசையா கூறினான். தன்னோடு வந்தால் பெற்றோர் என்ன சொல்லுவார்களோ? என்று இராசமணி கூறினாள். 'எல்லாம் எனக்குத் தெரியும்' என்று இராசையா சொன்னான்.

பொலீஸ் இராசையாவின் திட்டப்படி அவனும் இராசமணியும், இராசமணியின் ஊருக்குப் புகையிரதத்தில் புறப்பட்டனர்.

புகையிரத நிலையத்தில் இறங்கி, இராசமணியை முதலில் அனுப்பி விட்டுச் சில மணித்தியாலங்களின் பின், பொலீஸ் இராசையா இராசமணி யின் வீட்டுக்கு வந்தான். அவன் வந்து வீரவாகுவுடன் பேசிவிட்டுச் செல்ல, இராசமணி வந்து அவருக்கு மிகுதிக் கதையைச் சொல்லி அறத்தொடு நின்றாள்.

பொலீஸ் இராசையா மீண்டும் அங்கே வந்தபொழுது, 'தம்பி சாப்பாட்டையும் இங்கேயே விரும்பினால் வைத்துக்கொள்ளலாம்' என்று வீரவாகு கூறினார். உள்ளறையில் ஜன்னலில் நின்று, அவனையே பார்த்துக்கொண்டு நின்ற இராசமணியின் கண்களும், பொலீஸ் இராசையாவின் கண்களும் ஒன்றையொன்று பார்த்தன.

வீரவாகுவுக்கு ஒரு தொழிலுங் கிடையாது. அவரது சொந்த நிலபுலங்களிலிருந்து வருகிற சொற்ப வருவாய், அவர்களின் சீவியத்தை ஓரளவு தாங்கிச் சென்றது. அவர் தனது வீட்டு முற்றத்தில் ஓர் அழகான தோட்டம் வைத்திருந்தார். அதிலிருந்து போதிய காய்கறி அவர்களுக் குக் கிடைத்தது. பெரிய கத்தரிக்காய்களும், நீண்ட புடலங்காய்களும்,

பால் போன்ற பாகற்காய்களும் பார்ப்பவர்களை பரவசத்தில் ஆழ்த்தின.

வீரவாகுவின் வீட்டுப்படலை தகரத்தாலானது. அதைத்திறந்து உள்ளே வருவோரும் வெளியே போவோரும், படலையின் மேலேயுள்ள கயிற்றுத் தடத்தாற் படலை திறபடாமற் கொழுவிச் செல்லவேண்டும். இது பொலீஸ் இராசையாவுக்குப் பழக்கமில்லை. அன்றியும் அவன் அடிக்கடி வெளியே போவதும் வருவதுமாகத் திரிந்தான். அவன் வெளியே சென்ற பொழுது படலையைத் திறந்த நிலையில் விட்டுவிட்டுச் சென்று விட்டான்.

இச்சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து வெளியே நின்ற இரு வெள்ளாடுகள், சடுதியாக உள்ளே நுழைந்து, காய்ந்த மாடு கம்பில் விழுந்தது போலத் தமது ஒட்டிய வயிற்றை நிரப்பிக் கொண்டன. அக்காட்சியைக் கண்ட வீரவாகுவின் வயிறு பற்றியெரிந்தது. 'முன்பின் தெரியாத பிறத்தியாரை வீட்டில் அண்டினால், எப்படியும் நட்டமேயாகும்' என்று வீரவாகு கதறினார். அவரின் கதறலை அடக்கிய பொன்னம்மா, 'ஆள் ஒரு நாவூற்றுக்காரன்' என்று மெல்லச் சொன்னாள். இராசமணியின் காதில் இது எப்படியோ கேட்டுவிட்டது.

அன்று மாலை பொலீஸ் இராசையாவும் இராசமணியும் பேசிக் கொண்டிருக்கும் பொழுது, 'உங்கள் நாக்கை நீட்டுங்கள்' என்று இராசமணி கேட்டாள்.

'ஏன்?'

'நீட்டுங்கள் சொல்லுகிறேன்'

'சொன்னாற்றான் நீட்டுவேன்'

'உங்கள் நாக்கில் கறுப்பிருக்கிறதா என்று பார்க்க'

'கறுப்பிருந்தால் என்ன?'

'அடுத்த வீட்டுப் பாட்டி சொன்னாள், உங்கள் நாவூற்றாற்றான் தோட்டம் அழிந்ததென்று'

இதைக் கேட்டதும் இராசையா பெரிதும் வருந்தினான். தான் நாவூற்றுக் காரன் என்றதாலல்ல தனது கவலையீனத்தாற்றான் அந்த அழகிய வருமானமுள்ள தோட்டமழிந்ததென்று அவன் பெரிதும் வருந்தினான். சிந்தித்துக்கொண்டு சென்ற அவன் மனதில் ஒரு யோசனை தோன்றியது. உடனே, மகிழ்ச்சியுடன் 'அதற்கு நான் பிராயச்சித்தம் செய்கிறேன்' என்றான்.

'என்ன? என்ன?' என்று இராசமணி நெருக்குவதற்கும், வீரவாகு வருவதற்கும் சரியாயிருந்தது. இராசமணி உள்ளே ஓடிவிட்டாள்.

பொலீஸ் இராசையாவும் வீரவாகுவும் பேசலாயினர். பேச்சின் நடுவில், 'நீங்கள் ஏன் இன்னும் பிள்ளைகளுக்குக் கலியாணம் செய்து வைக்க வில்லை?' என்று கேட்டான்.

'மூத்தமகளின் விவாகத்தால் மற்றவர்களின் விவாகமும் பின்போடப் பட்டு வருகிறது' என்று வீரவாகு சொன்னார்.

'நான் இப்பொழுதும் ஆயத்தம்' என்று மேலும் பச்சையாகக் கூறினான். அவன் சொன்ன சொற்களை வீரவாகு விளங்கச் சிறிது நேரமாகி விட்டது. அவர் எழுந்து சென்று, தன் மனையாளோடு பேசிவிட்டு, வெளியே சென்று, அடுத்த வீட்டுக்காரராகிய விவாகப்பதிவுகாரனைக் கூட்டி வந்து, இராசையாவுக்கும், இராசமணிக்கும் விவாகப் பதிவு செய்ய ஒழுங்கு செய்தார்.

அடுத்தநாட்காலை வெளியே சென்ற பொலீஸ் இராசையா ஒரு 'லொறி' யுடன் திரும்பினான். 'லொறி'யிலிருந்து சீமெந்தும் கற்களும் பறிபட்டன.

வெளிப்படலை பிடுங்கியெறியப்பட்டது. அழகான வேலைப்பாடமைந்த படலைத் தூணும், மதிலும் கட்டப்பட்டன. தூண்களில் 'வீரவிலாசம், இராச கிருகம்' என்று எழுதப்பட்டன. இரும்புப் படலை பூட்டப்பட்டது.

சித்திரை லீவு முடிந்தது. இராசமணியும் பொலீஸ் இராசையாவும் தம்பதிகளாகக் கொழும்பு சென்றனர்.

## அடுத்த சகோதரி செல்லமணி

### 2. வீட்டுத் தளபாடங்கள்

வீரவாகுவின் இரண்டாவது புதல்வி செல்லமணி என்பவள். அவள் இராசமணியிலும் பார்க்க இரண்டு வயதுக்கிளையவள். அவள், வீரவாகு வின் புதல்விகள் எல்லோருள்ளும் அழகிலே சிறந்தவள். அவளுடைய கண்கள் அசாத்திய சக்தி வாய்ந்தவை. அவளுடைய செந்நிறத்திலே கருவிழிகள் பிரகாசமாக மிளிர்ந்தன. அவ்விழிகள் மாத்திரம்தான் முகத்தில் இருக்கின்றன என்று சொல்லக்கூடியதாகப் பெரியதாக இருந்தன. அவ்விழிகளின் இமைகளில் உள்ள மயிர்கள் ஐதாகவும், நீளமாகவும் இருந்தன. அவ்விழிகளுக்கு அளவிறந்த சக்தியிருந்தன.

செல்லமணி ஓர் அரசினர் வைத்தியசாலையில் தாதியாக இருந்தாள். அவ் வைத்தியசாலையில் வேலைசெய்யும் உத்தியோகத்தர்

ஒவ்வொருவரும், அங்கே வரும் நோயாளிகளும், நோயாளிகளைப் பார்க்க வருபவர்களும் அவளுடைய பார்வைக்கு இலக்காகித் துடித்தனர். அவளுடைய போக்கு நிதானமாகவும், மிடுக்காகவும் இருந்தது.

புதிதாக வைத்தியக் கல்லூரியிலிருந்து வந்த டொக்டர் செல்லையா என்பவர் வந்த புதிதில் எல்லோருடனும் மிகவும் கடுமையாக நடந்துகொண்டார். அவரின் கீழுத்தியோகத்தர்கள் எல்லோரும் அவரைக்கண்டு அஞ்சி நடுங்கினர். ஆறடி உயரமும் நாலடிச் சுற்றுமுள்ள அவர் நடந்து சென்றால், ஒரு பனைமரம் நகர்ந்து வருவது போலத் தோற்றும். பழைய இராவணவம்சபரம்பரையிலே தோன்றியவரோ என்று நினைக்கத் தோன்றும். அவர் நடந்து செல்லும் பொழுது, இராணுவ வரிசை தாளத்திற்கிசைய நடைபோட்டுச் செல்வதுபோலச் சத்தங்கேட்கும். 'டொக், டொக்' என்று அவர் நடந்துவரும் ஒலி கேட்டு, அவ்வைத்தியசாலையின் சடப்பொருள்கள் கூட அஞ்சும்.

தனது கடமையைச் சரியாய்ச் செய்யும், செல்லமணி, அவருக்குச் சிறிதும் அஞ்சாதவள் போலவே நடந்துகொண்டாள். எனினும் அவளுக்கும் அவரைக்கண்டால் ஒரு பயம் இருக்கவே செய்தது. அவருடைய நன்மதிப்பைப் பெறுவதற்காகச் செல்லமணி மிகவும் கவனமாகவே நடந்தாள். அது ஓரளவு பலனையும் கொடுத்தது.

ஒருநாள் டொக்டர் செல்லையா, மிஸ் செல்லமணியை உடனே வருமாறு ஆள் அனுப்பினார். செல்லமணி என்னவோ? ஏதோவென்று பயந்து நடுங்கிப் பதுங்கிப் பதுங்கிச் சென்றாள். அன்றுதான் அவர் அவளை நேரே ஏற இறங்கப் பார்த்தார். அவளுடைய கால்கள் பயத்தினால் சிறிது துடித்தன. டொக்டர் செல்லயைாவின் முகத்தில் புன்முறுவல் மூன்றாம் பிறை மாதிரி அருமையாகத் தோன்றும். அது தோன்றினால், அவர் முகம் மிகவும் அழகாக இருக்கும்.

டொக்டர் செல்லையா ஒரு புன்முறுவலுடன், 'நான் ஐம்பது மைல் தூரத்திற்கப்பால் இருக்கும் ஒரு நோயாளியைப் பார்க்கச் செல்ல வேண்டும். நீயும் என்னுடன் கூடவரவேண்டும். வருகிறாயா?' என்று கேட்டார். செல்லமணிக்கு இதழ்கள் எப்பொழுதோ காய்ந்து இறுக மூடிக் கொண்டன. வார்த்தைகள் வெளிவரவில்லை. கண்களை அகலவிரித்து 'ஆம்' என்பதற்கு அறிகுறியாகத் தலையசைத்தாள். அவளையே பார்த்துக்கொண்டு நின்ற டொக்டர் செல்லையா அவளுடைய விழிப் பார்வையாகிய பொறிக்குள் விழுந்துவிட்டார். மறுகணம் தன்னைச் சமாளித்துக்கொண்டு, அந்த அதிர்ச்சியில் சிறிது கடுமையாகத் 'தலையை ஆட்டினால் என்ன அர்த்தம்?' என்று கேட்டார். கடுமையாகக் கேட்ட

பொழுதிலும், அவளுடைய விழிப்பார்வைக்குள் விழுந்தேவிட்டார். தற்காலிகமாக அவர் தன்னைச் சமாளித்த பொழுதிலும், அவள் பார்வை, அவரின் உள்ளத்தின் அடிப்பாகத்திலே சென்று வியாபித்துக்கொண்டது.

டொக்டர் செல்லையாவும் செல்லமணியும் பிரயாணமாயினர். வழியில் அவர்கள் இருவரும் மௌனமாகவே சென்றனர். டொக்டர் செல்லையா காரைச் செலுத்திக்கொண்டு சென்றார். செல்லமணி பின் ஆசனத்தில் இருந்தாள். கார் செல்லமணியின் வீட்டைத் தாண்டிச் சென்றது.

'இதுதான் எனது வீடு' என்று செல்லமணி, தனது வீட்டை டொக்டருக்குச் சுட்டிக் காட்டினாள். 'திரும்பி வரும்பொழுது அங்கே போகலாம்' என்று டொக்டர் சொன்னார்.

டொக்டர் செல்லையா குறித்த நோயாளியைப் பார்த்துவிட்டுத் திரும்பி வரும்பொழுது 'உனது வீடு வந்தவுடன் சொல்' என்று முன்னரே சொன்னார். அப்படியே அவள் காட்டக் கார் அவள் வீட்டுவாசலிலே நின்றது. நானும் உன்னுடைய வீட்டுக்கு வரலாமா என்று டொக்டர் செல்லையா கேட்டார். 'வாருங்கள்! நாங்கள் மிகவும் ஏழைகள்' என்று செல்லமணி சொன்னாள். 'ஏழைகளின் வீடுதான் எனக்கு மிகவும் பிடிக்கும்', என்று சொல்லிக்கொண்டே, செல்லமணியின் பின்னே நடந்தார்.

வீரவாகு பழைய புன்சிரிப்புடனே டொக்டரை வரவேற்றார். டொக்டரை உட்காரும்படி வீரவாகு வேண்டிக்கொண்டு தானுமிருந்தார். தாங்கள் ஒரு நோயாளியைப் பார்த்துக்கொண்டு வரும் சம்பவத்தை டொக்டர் சொல்லிக் கொண்டிருந்தார்.

டொக்டர் செல்லையா இருந்த கதிரை, ஒரு பழையகதிரை. அவர் இருந்த உடனேயே 'நெறுக்' என்று ஒரு சத்தங்கேட்டது. அதை அவர் பொருட்படுத்தவில்லை. அந்தக் கதிரை தனது சீவியத்தில் அவ்வளவு பாரமுள்ள மனிதனைக் கண்டிருக்க முடியாது. ஏழைகளான, பாரங்குறைந்த மனிதரைத் தாங்கிவந்த கதிரை, தனது வயோதிப காலத்தில் ஒரு செல்வனைத் தாங்க முடியுமா?

செல்லமணி டொக்டருக்குக் கோப்பி கொண்டுவந்து கொடுத்தாள். அவர் கோப்பியைக் கையில் வாங்குவதற்கும், கதிரை மடமடவென்று முறிவதற்கும் சரியாக இருந்தது. டொக்டரின் பால்போன்ற வெண்ணிற ஆடைமுழுவதும், கோப்பிக்கறை படிந்துவிட்டது. டொக்டருக்குக் கோபம் வந்ததோ, சிரிப்பு வந்ததோ? என்ன உணர்ச்சி தோன்றியதென்று ஒருவராலும் சொல்ல முடியாமலிருந்தது.

அவர் தன்னைச் சமாளித்துக்கொண்டு எழும்பி நிற்பதற்கும், சோவென மழை பொழிவதற்கும் சரியாய் இருந்தது. சிறிது சிறிதாக மழை கூடி, யுகாந்த மழைபோலப் பேரிரைச்சலுடன் பொழிந்தது. அத்துடன் சுழல் காற்றும் அடித்தது. மழையையே உற்றுப் பார்த்துக்கொண்டு அதிக நேரமாக இருந்த டொக்டர், அருகில் நின்ற செல்லமணியிடம் 'இன்று இரவு படுக்கையும் உனது வீட்டில்தான்' என்று சொன்னார்.

'ஐயா! நாங்கள் ஏழைகள். எங்களிடம் ஒரேயொரு சாக்குக் கட்டில்தான் இருக்கிறது.' என்று செல்லமணி அரைக்குரலில் கூறினாள். 'சாக்குக் கட்டிலானாலும் பரவாயில்லை. ஆனால் உக்கல் இல்லாமல் பெலமானதாயிருக்கவேண்டும். இல்லாவிட்டால் நான் நிலத்தில் படுத்து விடுவேன்' என்று டொக்டர் சொன்னார்.

'ஐயா! எங்களிடமிருந்த கதிரைகள் எல்லாம் ஒவ்வொன்றாக முறிந்து விட்டன. ஒரு கதிரைதான் மிகதியாக இருந்தது....' என்று சொல்லிச் செல்லமணி, மேலே ஒன்றும் சொல்லமாட்டாமல் தேம்பித் தேம்பி அழுதாள்.

'தற்செயலாக முறிந்ததற்கு நீ என்ன செய்கிறது. நீ அழுவதைப் பார்க்க எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. நான் நிலத்திற் படுத்து நித்திரை செய்வேன்.' என்று டொக்டர் சொன்னார்.

'நிலத்தில் பூச்சி புழுக்கள் உலாவக்கூடும்' என்று செல்லமணி சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே, வீரவாகு சாக்குக் கட்டிலைக் கொண்டுவந்து வைத்தார். டொக்டர் அதை எழுந்து பார்த்துவிட்டு அது நல்ல கட்டில் என்று சொன்னார். டொக்டருக்கு அதில் படுக்கை விரிக்கப்பட்டது. செல்லமணி என்று அழகாக எழுதப்பட்ட தலையணைகளும், படுக்கை விரிப்புகளும் நல்ல காட்சியாக இருந்தன.

மறுநாட் காலை, டொக்டர் செல்லும் பொழுது, அந்தத் தலையணை யும், படுக்கை விரிப்பும் தனக்கு வேண்டும் என்று செல்லமணியிடம் இரகசியமாகச் சொன்னார். அவைகளும் காரில் வைக்கப்பட்டன.

வைத்தியசாலையில் இருக்கும் உத்தியோகத்தர்கள், செல்லமணியும் டொக்டரும் ஒரு இரவு வெளியே தங்கியதையிட்டு வித்தியாசமாகக் குசுகுசுத்தனர். அவ்வார்த்தைகள் செல்லமணியின் காதிலும் அடிபட்டன. அதை அவள் டொக்கரிடம் துணிந்து சொல்லிவிட்டாள். டொக்டருக்கும் செல்லமணிக்கும் உள்ள தொடர்பு சிறிது சிறிதாக அபிவிருத்தியடைந்து காதல் ரூபத்தை அடைந்துவிட்டது.

டொக்டர் செல்லையா வந்து சென்றபின் வீரவாகு வீட்டிற் கதிரை இல்லை. சில நாட்களின் பின் ஒரு லொறியில் வீட்டுத் தளபாடங்கள் வந்து வீரவாகு வீட்டிற் பறிபட்டன. டொக்டர் செல்லையா ஓடர் கொடுத்து விலாசமுங் கொடுத்ததாக அதைப் பறித்த கொம்பனிக்காரர்கள் கூறினார்கள். கதிரைகள், மேசைகள், சோபாக்கள், கண்ணாடி அலுமாரிகள், கட்டில்கள் எல்லாம் முதற்றரமான மரத்தில் செய்யப்பட்டன.

அத்தளபாடங்கள் பறிக்கப்பட்டது செல்லமணிக்கே தெரியாது. அவளும் டொக்டரும் தங்கள் விவாகப்பதிவிற்காக அவள் வீட்டிற்குச் சென்ற பொழுதுதான், அவைகளை அவள் கண்டாள்.

## இரண்டாவது சகோதரி நேசமணி

### 3. 'ஏ போட்டிக்' கார்

நடுக்காட்டிலே பஸ் 'ரயர்' வெடித்து நின்றது. வந்த வழிக்குப் போனாலும், முன்னுக்குப் போனாலும் பத்துமைல் செல்லவேண்டும்; ஒரு கடைத்தெருவை அடைவதானால். அந்த பஸ்ஸில் நின்ற ஒவ்வொரு பிரயாணியும் அவசரமான அலுவல் நிமித்தம் போவதாகவே கதைத்துக் கொண்டனர். ஒருவராவது, 'பஸ் எப்படியானாலும் போய்ச் சேர்ந்தாற் போதும்' என்று சொல்லவில்லை. எல்லோருக்கும் அவசரமானால், அவர்கள் எவர்களின் அவசரமாவது பஸ்சாரதியினது காதில் ஏறினதாகத் தெரியவில்லை.அவன் தன்பாட்டிலே சென்று ஒரு மரநிழலில் படுத்துக் கொண்டான். 'பஸ் கொண்டக்டர்' அவ்வழியால் வந்த ஒரு காரில் ஏறிக்கொண்டு சென்றுவிட்டான்.

அந்த பஸ் பிரயாணிகளில் நமது வீரவாகுவும் ஒருவராவர். அவர் ஒரு தந்தியைக் கையில் வைத்துக்கொண்டு, எல்லோருக்கும் அதைக் காண்பித்துக்கொண்டு சென்றார். அதில் 'அவசரம் உடனே புறப்பட்டு வரவும் நேசமணி" என்று கண்டிருந்தது. அந்தத் தந்தியைப் படித்த ஒருவராவது அவருக்குத்தான் எல்லோரிலும் அவசரம் என்றாவது, ஓர் அனுதாப வார்த்தையாவது கூறவில்லை. அவர் 'என்ன உலகம்' என்று மனம் நொந்துகொண்டு போய் ஒரு மரநிழலில் இருந்தார். அந்த பஸ் அப்படித் தாமதித்து நிற்பது, அவருக்குப் பின்னால் ஓர் 'ஏ போட்டிக்' கார் சொந்தமாய் வரப்போகிறதற்குக் காரணமாய் இருக்கப்போகிறதென்பது, அவருக்கு எப்படித் தெரியும்?

வீரவாகுவின் மூன்றாவது புத்திரி நேசமணி என்பவளாகும். அவள் பெரிய தபாலாபீஸில் தூரபாஷினியாகக் (ரெலிபோனிஸ்ட்) கடமை

புரிந்தாள். அதே கந்தோரில் நேசரத்தினம் என்னும் வாலிபனும் கடமை புரிந்தான். அவனுக்கு அவளோடு பேச்சுத்தந்தியிற் பேசுவதில் ஒரு காரணமில்லாத விருப்பம் இருந்தது. அவளுடன் பேச்சுத்தந்தி மூலம் பேசுவதில் ஓர் அலாதியான இன்பத்தை அவன் அனுபவித்தான். யாழ், குழல் முதலியவற்றிற்கில்லாத ஒரு நாதசுகம் அவனுக்கு அவள் ரெலிபோனில் பேசும் தொனியில் தோன்றியது. பலபல இசைக் கச்சேரிகளில் ஒன்றும் கொடுக்கமுடியாத இன்பத்தை, அவளின் தந்திப்பேச்சு அவனுக்குக் கொடுத்தது. 'ஹலோ' என்று அவள் முதலிற் கூப்பிடுவது வீணையின் நரம்பைத்தட்டிச் சுதி கூட்டுவது போல அவனுக்குத் தோற்றும். அவனுக்கும் அவளுக்கும் பேச்சுத்தந்தியில் இடையிடையே சம்பாஷனை நடைபெறும். ஆனால் அவன் அவளோடு நேரில் கதைக்க அஞ்சினான். அவளை நேரில் கண்டால், பற்கள் கிட்டி, இதழ்கள் மூடி, சொற்கள் வெளிவராது. நா வேலை நிறுத்தம் செய்துவிடும். அவன் நினையாத கேள்விகள் எல்லாவற்றையும், பேச்சுத்தந்தியிற் கேட்பான். இந்த முறையில் பேச்சுத் தந்தியிலேயே அவர்கள் காதலும் வளர்ந்தது. பேச்சுத்தந்தியிலேயே பேசி ஒழுங்கு செய்துகொண்டு, ஒருவருக்கும் தெரியாமல், விவாகப்பதிவும் செய்துகொண்டனர்.

நேசரத்தினத்திற்குத் தாய்தந்தையர் இல்லை. மூன்று தமையன்மார் இருந்தனர். அவர்கள் அவன் விவாகத்தை வெறுத்தனர். நேசமணியை விவாகம் செய்யக் கூடாதென்று ஒரேபிடியாகச் சொல்லிவிட்டனர். அவன் அவர்கள் சொல்லைக் கேட்கவில்லை. கலியாணம் என்பது தன் சொந்த விஷயம் என்ற வாலிப சித்தாந்தத்தை அழுத்தம் திருத்தமாகப் பல்வேறு விதமாக விளங்கப்படுத்தி எழுதிவிட்டான். அதன் பேறாக, அவனுக்கும் சகோதரர்களுக்குமிடையில் முறிவு ஏற்பட்டது. பாகப்பிரிவினை செய்யப்பட்டது. அதன் பயனாக, அவனுக்குக் கிளிநொச்சியில் இருபது ஏக்கர் வயலும், வேறுசில காணிகளும் கிடைத்தன. அவைகளை மேற்பார்வை செய்ய உத்தியோகம் பார்க்கும் நேசரத்தினத்தால் முடியவில்லை. அக்காணிகளை வீரவாகுவின் பொறுப்பில் பார்வைக்குவிட நேசமணியும், நேசரத்தினமும் திட்டங் செய்துகொண்டு, வீரவாகுவை உடனே வருமாறு அவசரத்தந்தி கொடுத்தனர். அத்தோடு அக்காணிகளை அப்பொழுது பார்ப்பவனையும் அழைத்திருந்தனர். அவன் அவர்களிடம் சென்றுவிட்டான். ஆனால் வீரவாகு நடுக்காட்டில் நின்று தவித்தார்.

நேசரத்தினம் 'உன் தந்தை ஓர் அக்கறையில்லாதவர் போல் தோற்று கிறார். உனது தந்திக்கு உடனே வரவில்லையே' என்று கோபித்தான். மறுநாள் அவர் வந்த பொழுது 'உயிர் தப்பி வந்ததே பெரிய காரியம்' என்று அங்கலாய்த்தான்.

பஸ்ஸில் போக்குவரவு செய்து, தனது காணிகளைப் பராமரிக்க முடியாது என்று நேசரத்தினம், வீரவாகுவுக்கு ஓர் ஏ போட்டிக் காரும் எடுத்துக் கொடுத்து ஒரு சாரதியும் பிடித்துக் கொடுத்து எல்லா விபரங்களையும் சொல்லி அனுப்பினான்.

ஒரு புதிய காரில் போய் இறங்கிய வீரவாகுவைக் கண்டதும், பொன்னம்மாள் பெரிதும் அதிசயப்பட்டாள். தான் பெண் பிள்ளைகளைப் பெற்ற பொழுதும், தன்னைக் கடவுள் கைவிடவில்லை என்று உணர்ந்தாள். ஆனால் இன்னும் இரண்டு பெண்கள் இருக்கிறார்களே என்ற எண்ணம் மறுகணம் அவள் உற்சாகத்தை மறைத்தது.

## மூன்றாவது சகோதரி சுவர்ணமணி
## 4. *மாடமாளிகை*

சித்திரைமாதம். அதிகாலை இளந்தென்றல் அசைந்து கொண்டிருந்தது. தூரத்திலே ஒரு குயில் வசந்த புருஷனுக்குக் கட்டியம் கூறிக்கொண்டிருந்தது. முதல்நாள் சித்திராபூரணை. அன்றய இரவு சனங்கள் அதிக நேரம் விழித்திருந்து திருவிழாக் கொண்டாடினமையாற் சூரியோதயமாகியும் ஊர் நிசப்தமாயிருந்தது. ஆனால் வீரவாகுவின் வீடோ இதற்குப் புறநடையாக இருந்தது.

வீரவாகுவின் வீட்டைச் சுற்றி சில தடியர்கள் வட்டமிட்டார்கள். வாசலில் இரண்டு மூன்று தடியர்கள் இருந்தார்கள். எல்லோரும் கையிற் குண்டாந்தடிகள் வைத்திருந்தார்கள். ஒரு பெரிய பற்றைக்கள் துரத்திச் சென்ற பன்றி நுழைந்துவிட்டால், அந்தப் பற்றையைச் சுற்றிச் சுற்றி வேடுவர்கள் வருவதுபோல வீரவாகுவின் வீட்டைச் சுற்றி வட்டமிட்டார்கள். அவர்களின் பொருள் ஒன்று, வீரவாகுவின் வீட்டினுள் நுழைந்துவிட்டது போலத் தோன்றியது. அல்லது வீரவாகு, அவர்களின் பொருள் ஒன்றைக் களவாடிக்கொண்டு வந்திருக்கிறார். பார்ப்பவர்கள் இப்படிப் பலவாறாக யோசிக்கலாம்.

சொக்குப்பொடி என்று ஒரு பொருள் இருந்தால், அது வீரவாகுவின் மனைவி பொன்னம்மாவிடம் உண்டு என்று எல்லோரும் நம்பினர். வீரவாகு தம்பதிகளுக்கு ஐந்து பெண்கள். ஆண் குழந்தைகள் கிடையாது. பெண்குழந்தைகள் ஒன்றைவிட ஒன்று அழகாயிருந்தன. பூர்வீகச் சொத்தோ, பெருமுயற்சியோ, உயர்ந்த குலப்பெருமையோ, நாட்டாண் மையோ இவைகளுள் எவ்வனுகூலமுமின்றியிருந்தும் தங்கள் பெண்களு க்கு ஏற்ற வரன்கள் தேடிப்பிடித்து விடுகிறார்களே. இதில் ஏதோ

மருந்தோ மாயமோ இருக்கிறதென்று, அவ்வூர்வாசிகள் வீரவாகு தம்பதிகளைப் பற்றிக் குசுகுசுத்தனர்.

வீரவாகு தம்பதிகளின் நான்காவது மகள் சுவர்ணமணி. பெயருக்கேற்ற அவள் சுவர்ணவிக்கிரகம் போன்றிருந்தாள். சுவர்ணமணி ஓர் உபாத்தியா யினி. அவள் அவ்வூரிலுள்ள பிரபல கல்லூரி ஒன்றில் கல்வி கற்பித்தாள். அவளுடைய வீட்டிற்கும் கல்லூரிக்குமிடையில், கால்மைல் தூரம் இருக்கும். அந்தக் கால்மைல் தூரமும் ஒரு காட்சிச்சாலையாக அமைந்திருந்தது. சுவர்ணமணி கல்லூரிக்குப் போகும் பொழுதும், வரும் பொழுதும், எல்லோரும் அவளை ஒரு காட்சிப் பொருளாக நினைத்துக் கண்கொட்டாது பார்த்தனர்.

அக்கிராமத்தில் இரு மரபுந்துய்ய மாப்பாண முதலியார் கோத்திரத்துத் தோன்றியவரும், நட்பு, நாட்டாண்மை, அடிமை, குடிமை முதலிய வேளாள இலட்சணங்கள் வாய்க்கப் பெற்றவரும், பெரிய தனவந்தருமாகிய சிவசுப்பிரமணியபிள்ளைக்கு மக்கள் எழுவராவர். அவர்களில் ஏழாவது புத்திரன் சுவர்ணலிங்கம் என்பவன். சுவர்ணலிங்கம் இந்தியாவிலுள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் பி.ஏ பட்டம் பெற்று, தனது தந்தையின் முகாமையின் கீழுள்ளதும், சுவர்ணமணி படிப்பிப்பதுமாயுள்ள, அவ்வூர்க் கல்லூரியில் கல்வி கற்பித்தான். அவனுடைய தமையன் அறுவரில் நால்வர் விவாகஞ் செய்துவிட்டனர். இருவர் விவாகஞ் செய்யவில்லை. ஆகையால் சுவர்ணலிங்கத்திற்கு அண்மையில் விவாகத்தைப் பற்றி நினைக்கத் தேவையில்லை. ஆனால் மனிதனுடைய கட்டுப்பாடுகளையும், சட்ட திட்டங்களையும் இயற்கை சிலசமயங்களில் மீறிவிடும்.

சுவர்ணலிங்கத்தின் பருவமும், தன்னிச்சையான போக்கும், தனக்குத் தமையன்மார் இருவர் விவாகஞ் செய்யாமல் இருக்கிறார்கள் என்பதையும், தான் உயர்குடிப்பிறந்தோன் என்பதையும் நினைவூட்டவில்லை. அதற்கு மாறாகச் சுவர்ணமணியை அடைவதற்குத் தான் ஏழு பிறப்புகளிலும் தவம் செய்திருக்கவேண்டும். அவளை அடைவதானால், தனக்குச் சுவர்க்கமும் தேவையில்லை என்று நினைக்கச் செய்தது.

சுவர்ணலிங்கம் தினமும் நீள நீள யோசித்தான். எழுதிப் பார்த்தான். குட்டிக்கரணம் போட்டான். சுவர்ணமணியுடன் எப்படித் தொடர்பு கொள்வ தென்று அவனுக்கு ஒன்றுந் தோன்றவில்லை. கடைசியாக அவன் தனக்குத்தெரிந்த ஒரு செய்யுளின் இரண்டு வரியை எழுதி, இச்செய்யுள் எங்கே வருகிறதென்று மறந்துவிட்டேன்; தெரியுமா? என்று ஒரு காகிதத்தில் வரைந்து அனுப்பினான்.

"மாசாலமோ மணிவாய்
நோதமே நும்மாபியலின்
ஆசாரமோ விரதத் தடையோ" என்ற வரிகளே அவன் எழுதி அனுப்பியதாம்.

'கண்ணோடு கண்ணினை நோக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனுமில" என்ற குறளை எழுதி இந்தக் குறள் எந்த அதிகாரத்தில் வருகிறதென்று சுவர்ணமணி பதிலுக்குச் சுவர்ணலிங்கத்தைக் கேட்டிருந்தாள். அவளுடைய உள்ளத்தைச் சுவர்ணலிங்கம் விளங்கிக் கொண்டான்.

இதிலிருந்து சுவர்ணலிங்கத்திற்கும், சுவர்ணமணிக்கும் தொடர்பு ஆரம்பமாகியது. தொடர்பு காதலாக மாறியது. அவர்கள் காதல் முதலில் மாணவர்களுக்கும், பின் அவ்வூர் வாசிகளுக்கும், ஏனைய ஆசிரியர்களுக்கும், கல்லூரி அதிபருக்கும், இறுதியில் சுவர்ணலிங்கத்தின் சகோதரர், தந்தை முதலியோருக்கும் படிப்படியாகத் தெரியவந்தது. உரியவர்கள் எல்லோரும் நயமாகவும், பயமாகவும் கண்டித்தும், சுவர்ணலிக்கத்தின் போக்குச் சிறிதும் மாறுதலடையவில்லை. வரவர அவர்கள் காதல் முற்றிக்கொண்டு வந்தது. குறித்த சித்திரை மாதத்திற் கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. அவர்கள் கூடிச் சினிமா பார்க்கப் போகிறார்கள், என்றும் கூடித் திரிகிறார்கள் என்றும் எங்கும் கதைபரவியது.

குறித்த சித்திரா பூரணையன்று இரவு, சுவர்ணலிங்கம் தனது வீட்டிற் குச் செல்லவில்லை. அவன் சுவர்ணமணியின் வீட்டை நோக்கிப் போன தாக சிவசுப்பிரமணியபிள்ளைக்குத் தகவல்எட்டியது. விடியும் வரைக்கும் சுவர்ணலிங்கம் வராமற்போகவே, சிவசுப்பிரமணியபிள்ளை காரியம் முற் றிப் போய்விட்டதென்று நினைத்தார். அவனைக் கட்டிக் காவிக்கொண்டு வந்தாவது உடனே தனது உறவிலுள்ள ஒரு பெண்ணுக்கு விவாகப்பதிவு செய்துவைத்துவிடவேண்டுமென்று சிவசுப்பிரமணியபிள்ளை திட்டமிட்டார். குலத்திற் குறைந்த சுவர்ணமணியை தனது மகன் விவாகஞ் செய்யின், தனது மானம் அழிந்துவிடுமென்று சிவசுப்பிரமணியபிள்ளை கருதினார்.

வீரவாகுவின் வளவைச்சுற்றிக் காவல்வைத்துவிட்டுத், தனது மக்களை உள்ளே ஏவிச் சுவர்ணலிங்கத்தைப் பிடிக்க வேண்டும். வேறு இரகசிய வழிகளால் வெளியேறிவிடாமல் சுற்றிக் காவல் வைக்கவேண்டும் என்பது சிவசுப்பிரமணியபிள்ளையின் திட்டம். அத் திட்டத்தின்படியே அன்று காலை வீரவாகுவின் வீட்டைச் சில தடியர்கள் சுற்றிச் சுற்றி வந்தார்கள். உள்ளே சிவசுப்பிரமணியபிள்ளையின் மூத்தமகன் ஞானலிங்கமும்,

இன்னொருவனும் சென்று, வீரவாகுவைப் பயமுறுத்தி வீட்டின் ஒவ்வொரு அறையையும், மூலைமுடுக்குகளையும் காட்டும்படி கேட்டுப்பார்த்து வந்தார்கள்.

வீரவாகுவும் பயந்தவர்போல நடித்து, 'நன்றாகப் பாருங்கள்' என்று எல்லா அறைகளையும் திறந்துவிட்டார். உதவிப்படை வருவது நிச்சயமாகத் தெரிந்தால், இருக்கும் படை சொற்பமேயெனினும் உற்சாகமாகப் போரிடும். வீரவாகுவுக்கும் உதவி மிக விரைவில் வந்து சேரும் என்ற துணிவில் பயந்தவர் போலக் காட்டிக்கொண்டாரேயன்றி பயப்படவில்லை.

ஞானலிங்கமும் அவன் கையாளும் ஒவ்வொரு அறையாகப் பார்த்துக் கொண்டு சென்றனர். வாசலில் ஒரு கார் வந்து நின்றது. தனக்கு உதவி வந்துவிட்டதென்று வீரவாகு புன்னகை புரிந்தார். ஆனால் அந்தச் சமயத்தில் எவரும் எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது.

வீரவாகு நின்ற அறைக்குமேலே, தீராந்திமரங்களின் மேலே, பலகைகள் பரவப்பட்டு அதன்மேல் பல சாமான்கள் வைக்கப்பட்டிருந்தன. அப்பலகைகள் சடசடவென்று முறிந்து சாமன்களுடன் வீரவாகுவின் வெண்தலைமேல் விழுந்தன. விழுந்த சாமான்களின் நடுவேயிருந்து சுவர்ணலிங்கம் எழுந்து நின்றான். வீரவாகுவுக்குப் பலமான அடிபட்டு, அறிவுமயங்கி விழுந்துவிட்டார். சுவர்ணலிங்கம் ஓடிச்சென்று வீரவாகுவைத் தூக்கி நிறுத்த முயற்சித்தான். சுவர்ணலிங்கத்தின் கையை ஆளுக்கொரு பக்கத்தில் ஞானலிங்கமும், அவன் கையாளும் பிடித்தனர். அவர்கள் இருவரின் கைகளை பொலீஸ் இராசையாவோடு வாசலில் வந்துநின்ற காரினின்றும் இறங்கிய பொலீஸ் படையினர் பிடித்தனர். இவ்வளவும் நொடிப் பொழுதில் நடந்தன.

வீரவாகுதேவர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டார். சுவர்ண லிங்கத்தையும், சுவர்ணமணியையும் பொலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று சட்டப்படி விவாகப்பதிவு செய்யப்பட்டது. அவர்கள் இருவரும் சில நாள்.... பொலீஸ் பாதுகாப்பில் இருந்து, பின்னர் சுவர்ணமணியின் தமக்கை செல்லமணியும் அவள் புருஷன் டொக்டர் செல்லையாவும் உத்தியோகம் பார்க்கும் நகரத்திலுள்ள ஒரு கல்லூரிக்குப் படிப்பிக்கச் சென்றனர்.

சுவர்ணலிங்கத்தின் தாய் இளமையில் இறந்துவிட்டாள். அவளுடைய பெருந்தொகையான சொத்துக்கள் கோட்டார் பொறுப்பிலிருந்தன. அச்சொத்தில் தனது பாகத்திற்குச் சுவர்ணலிங்கம் வழக்குப்போட்டான். இருபதினாயிரம் ரூபாய் அவனுக்குக் கிடைத்தது. அந்தப்பணத்தோடு, இன்னுந்

தனது பணத்தையும் சேர்த்து, வீரவாகுவின் விழுந்து முறிந்த மாடியையு டைய பழைய வீட்டையிடித்து ஓர் அழகான மாடிவீட்டைச் சுவர்ணலிங் கம் கட்டுவித்தான். அதற்குச் சுவர்ண மாளிகை என்று பெயரிடப்பட்டது. வீரவாகுவும் பொன்னம்மாவும், அந்தப் பெரிய சுவர்ணமாளிகையில் வசித்தனர்.

## சின்னமணி

### 5. வானொலிப்பெட்டி

நகங்களுக்கும், இதழ்களுக்கும் சிவப்புச் சாயம், நெற்றியில் நீண்ட சாயப்பொட்டு கண்களுக்குக் கறுப்புச்சாயம். கன்னங்கள் இயற்கையா கவோ செயற்கையாகவோ செந்நிறமாயிருந்தன. கூந்தல் நெளிந்து நெளிந்து பின்னே வெகு தூரத்திற்கு விடாமல் ஓரளவிற்கு விட்டுக் கத்தரித்திருந்தன. முழங்கால் வரை தொங்கும் கவுண் அணிந்திருந்தாள். ஒரு கையில் ஒரு கைக்கடிகாரம். உருண்டு திரண்ட அவள் கைகளில் அது மிகவும் சிறிதாகக் காட்சியளித்தது. கழுத்தில் ஒரு சிறிய முத்துமாலை. வேறு ஆபரணங்களும் அவள் அணிந்திருக்கவில்லை. குதி உயர்ந்த சப்பாத்து அணிந்திருந்தாள். அச்சப்பாத்துப் பச்சை நிறமாயிருந்ததால், புற்றரையில், மிதிக்கும்போது தோற்றப்படவில்லை.

வானத்திற் கந்தருவமக்கள் வசிப்பதாகப் புராணங்கள் கூறும். அவர் கள் அழகிற் சிறந்தவர்கள்தான். ஆனால் அவர்களை யாம் கண்டதில்லை.

அந்த விமானநிலையத்தில் விமானம் ஒரு சுற்றுச்சுற்றிவிட்டு மெதுவாக வந்துநின்றது. அதிலிருந்து இறங்குவதற்கு ஏணி கொண்டு போய் வைக்கப்பட்டது. விமானத்தின் கதவு திறக்கப்பட்டது. பிரயாணிகள் ஒவ்வொருவராய் இறங்கி வந்தனர். கடைசியாக நான் முதலில் வருணித்த நங்கை இறங்கினாள். அவளோடு, அந்த விமானமோட்டியொருவனும் இறங்கினான். அவர்கள் இருவரும் கைகோத்து நடந்து வந்தனர். அவனுடைய கையைப்பற்றிக்கொண்டு வராவிட்டால், அவளுடைய சிறிய இடை, குதி உயர்ந்த சப்பாத்தோடு அப்படியும், இப்படியும் கால் எடுத்து வைக்கும் பொழுது முறிந்துவிடுமோ என்று எண்ணவேண்டியிருந்தது.

அவர்கள் இருவரும் தயாராக நின்ற காரில் ஏறிக்கொண்டனர். கார் சிட்டுக்குருவிபோல் பறந்தது. கார் வீரவிலாசம் ராஜகிருகம் என்று பெயர் பொறிக்கப்பட்டிருந்த இரும்புப் படலையைத் தாண்டிச் சுவர்ண மாளிகைக்குள் 'எலெக்றிக் ஹொரன்' இராகம் மீட்க, 'ஜம்' என்று போய்

நின்றது. பொன்னம்மாவும், வீரவாகுவும் அவர்களை வரவேற்றனர். அவர்கள் தான் வீரவாகு தம்பதிகளின் கடைக்குட்டி சின்னமணியும், அவள் கணவன் சின்னத்துரையும்.

சின்னமணியும் சின்னத்துரையும் கந்தருவர்கள் போன்று ஆகாயத்திற் சஞ்சரிப்பவர்கள். சின்னம்மணி ஆகாயவிமானப்பயணிகளுக்கு விமானத்தில், அன்னபானாதிகள் ஊட்டி ஆதரிப்பவள். சின்னத்துரை ஆகாய விமானமோட்டி.

அவர்கள் இருவரும் தங்கள் ஞாபகமாக அந்தச் சுவர்ணமாளிகையில் ஒரு வானொலிப் பெட்டியைப் பூட்டி அதைப் பூரணத்துவம் அடையச் செய்தார்கள். அவர்களின் மனைவியோடு வீரவாகு தம்பதிகளின் வாழ்க்கையும் பூரணத்துவம் அடைந்தது.

வீரவாகுவும், பொன்னம்மாவும் நடுத்தரக் குடும்பத்திலே பிறந்து வளர்ந்து, தங்கள் வாழ்க்கையை ஆரம்பித்தார்கள். சொல்லி வைத்தது போல ஐந்து பெண்களை இவ்விரண்டு வருஷத்திற்கு ஒன்றாகப் பொன்னம்மா பெற்றெடுத்தாள். சொல்லிவைத்தாற் போல் ஐந்து பெண்களுக்குமேல் அவர்களுக்குக் குழந்தைகள் தோன்றவில்லை.

ஐந்து பெண்களைப்பெற்ற அவர்கள், அவர்களை எப்படிக் கரை சேர்க்கப்போகிறோம் என்று ஒருவருக்கொருவர் வாய்விட்டுச் சொல்லாது தனித்தனியே பயந்திருந்தனர். அவர்கள் என்ன பாடுபட்டும், எழுவரின் வயிற்றை வளர்ப்பதே கஷ்டமாயிருந்தது. அவர்கள் இருவரின் காதுகளிலும் ஐந்து பெண்களைப் பெற்ற அரசனும் ஆண்டியாவான் என்னும் கீதம் எந் நேரமும் ஒலித்துக்கொண்டேயிருந்தது.

ஆனால் இப்பொழுது அவர்கள் அந்த ஐந்து பெண்களினாலும், அவ்வூரில் ஒரு அரசகுடும்பம் போலக் காட்சியளித்தனர். அழகான இரும்புப்படலை, பெரிய மாளிகை, மினுமினுப்பான தளபாடங்கள், வீட்டிற் பொழுதுபோக்க வானொலிப்பெட்டி, விரும்பின இடத்துக்குச் செல்ல புத்தம்புதிய கார்.

அவர்களைக் குறித்தோ நகைச்சுவை அரசன் என். எஸ். கிருஷ்ணனின் பாட்டின் நடையில் ஈடுபட்ட தன்மையோ தெருவாற் செல்லும் சிறுவன் ஒருவன்:

“ஐந்து பெண்களைப் பெற்ற அரசனும் ஆண்டியாவான் அந்தக்காலம்.
ஐந்து பெண்களைப் பெற்ற ஆண்டியும் அரசனாவான் இந்தக்காலம்”
என்று பாடிக்கொண்டு சென்றான். இது எவ்வளவு உண்மை.

(ஈழகேசரி - 5-7-53)

# ஒரு சொட்டுக் கண்ணீர்

- கண்டுவிடப் போகிறாளே - வள்ளியம்மை
கண்டுவிடப் போகிறாளே
கசச்கிப் பிழியப் போகிறாளே - வள்ளியம்மை
கசக்கிப் பிழியப் போகிறாளே

## 1. நடையுடை பாவனை

நேர் உச்சிபிரித்து அழுத்தமாக இரண்டு பக்கமும் தலையை வாரி விட்டுக்கொண்டு, எந்நேரமும் மடிப்புக் குலையாத சால்வையை இரு தலைப்புகளும் முழங்கால்வரையும் தொங்க விட்டுக்கொண்டு திரிபவர் யாரென்றுகேட்டால், பூலோகசிங்க உபாத்தியாயர் என்று எந்தக் குழந்தைப்பிள்ளையும் அந்த ஊிலே சொல்லும். அவர் நிமிர்ந்து நடக்க வலிந்து தெண்டிக்கிறார் என்று நெஞ்சைநிமிர்த்திக் கழுத்தை நீட்டுவதிலிருந்து எவரும் சொல்லலாம்.

பூலோகசிங்க உபாத்தியாயருக்கு, தான் சமூகத்தின் மத்தியில் ஓர் உயர்ந்தவீரன் என்றோ, அஞ்சா நெஞ்சன் என்றோ, தலைசிறந்த எழுத்தாளன் என்றோ, பேச்சாளன் என்றோ, ஏதேனுமொருவகையில் மதிக்கப்படவேண்டுமென்று ஓர் ஆசை அந்தரங்கத்தில் உண்டு. அன்றியும் பொருளீட்ட வேண்டுமென்ற பொது ஆசையும் அவரிடம் தடிப்பாக இருந்தது. நியாயமாகப் பார்க்கப் போனால் அஞ்சா நெஞ்சன் என்றோ, எழுத்தாளன் என்றோ, பேச்சாளன் என்றோ பேரெடுக்கவேண்டுமென்ற எண்ணம், பொருளீட்டும் குணமுள்ள ஒருவனுக்கு இருக்கமுடியாது. அப்படிப்பட்ட எண்ணமும், மாப்பிளைக் கோலத்தோடு எந்நேரமும் திரியும் தன்மையும் அவருக்கு உற்பத்தியானதற்கு வேறு ஒரு இரகசியம் இருக்கிறது.

ஆசிரியர்களுக்குக் கொடுபடும் அற்ப சம்பளத்தை எடுத்து நான் எப்படி மிச்சம் பிடிக்கப் போகின்றேன், எப்படி வீடு கட்டப் போகின்றேன் என்று யோசித்துக் கொண்டிருந்த பூலோகசிங்க உபாத்தியாயருக்கு ஒரு நல்ல யோசனை தோன்றியது. தான் ஓர் ஆசிரியையை விவாகஞ் செய்தால், இரட்டைச் சம்பளம் பெறலாம் என்று நினைத்தபொழுது அவர் தன்னையுமறியாமல் சிரித்துவிட்டார்.

## 2. அசட்டுப் பட்டம்

மிஸஸ் வள்ளியம்மை பூலோகசிங்கம் என்றால், அந்த ஊரில் தெரியாதாரில்லை. அவள் அவ்வூரின் மாதர்சங்கத்துக் காரியதரிசி. வள்ளியம்மைக்குப் "பெண்கள் முன்னேற்றம்" என்றால், அதைப்பற்றி முற்றுத்தரிப்பு இல்லாமல் அரை மணித்தியாலம் சொல்லத் தெரியும். பெண் கல்வி, பெண் சமூகம், பெண் பெருமை, பெண் கடமை என்று தொடக்கத்தக்க ஒவ்வொன்றைப்பற்றியும், அவளுக்கு ஒவ்வொரு அத்தியாயம் தலைகீழ்ப்பாடம். வள்ளியம்மையின் வீட்டு வாசலில் ஒரு நாளைக்கு டி.ஆர்.ஓ. வின் கார் நிற்கும். இன்னொரு நாளைக்கு டி.ஆர்.ஓ. வின் "மோட்டார் சைக்கிள்" நிற்கும். இன்னும் பற்பல ஊரிலிருந்தும் பலர், அவளைத் தங்கள் சங்கத்திற்குத் தலைமை வகிக்கவோ, தங்கள் சங்க விழாக்களில் சொற்பொழிவாற்றவோ, அழைத்துப் போக வேனும். சம்மதம் கேட்க வேனும் வந்து நிற்பார்கள்.

பூலோகசிங்க உபாத்தியாயருக்கு வள்ளியம்மை, வீடு வாசல் என்ற அக்கறையின்றித் திரிவதைப் பார்க்கப் புகைச்சல்தான். "சதக்காசுக்கு உபயோகமில்லாத வேலை" என்று பூலோகசிங்க உபாத்தியாயர், தப்பித் தவறிச் சொல்லிவிட்டால், "அவ்வளவு தான் நீங்கள் படித்த அழகு; உங்களைப் படிப்பித்தவனுக்குத் துடைப்பக் கட்டையாற்றான் அடிக்க வேண்டும்; தெருவில் நிமிர்ந்து நடக்கத் தெரியாது; நாலுபேரோடு இலட்சணமாகக் கதைக்கத் தெரியாது; சரியாக வேட்டி சால்வை கூடக் கட்டத் தெரியாது;" என்று அவர் முகத்தில் கரியைப் பூசி, அவரை ஒரு மூலைக்குள் இருத்திவிட்டு, வள்ளியம்மை காரில் ஏறிப் பிரசங்கத்திற்குப் போய்விடுவாள். பூலோகசிங்க உபாத்தியாயருக்கு அழுகை, அழுகையாய் வரும். ஆனால் குடித்தனத்தைக் குலைத்துத் தாம் ஈட்டிய பொருள்களைக் கரைக்க மனமின்றி, கண்ணைக் கசக்கிக் கொண்டு வீட்டுக் கருமங்களில் ஈடுபடுவார்.

## 3. முடிவான தீர்மானம்

வள்ளியம்மையின் செல்வாக்கினால் கிணறுகட்ட, மலசலகூடம் கட்ட அரசினர் நன்கொடைகள் சிரமமின்றிக் கிடைப்பதையும், தன் சினேகிதர்களுக்கு மேலே பார்க்கவேண்டிய கருமங்கள் தன்மூலம் இலகுவாவதையும், தனது செல்வாக்குத் தனது மனைவியின் மூலம் உயருவதையும், காணக் காணப் பூலோகசிங்க உபாத்தியாயருக்குத் தனது மனைவி மீது சிறிது சிறிதாகப் பக்தி ஏற்பட்டது. வள்ளியம்மையும், தனது கணவன் ஆகமக்குப்பிளாஸ்திரியாகத் திரிவது தனக்கு மகிமை இல்லை என்று எண்ணி, அவரைச் சீர்திருத்தும் முயற்சியில் ஈடுபட்டாள். அதன் பலனாகவே முதலில் வருணிக்கப் பெற்ற பூலோகசிங்க உபாத்தியாயரின் மாப்பிளைக்கோலம் தோன்றியது. அவருக்குக் கூட்டங்களில் நாலு வார்த்தைகள் பேசி, உஷாராக நின்று, அப்படியும் இப்படியும் ஒரு மாதிரியாகத் தானும் தன் மனைவிக்குத் தோல்வியில்லாமல் நடக்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது.

கிராம முன்னேற்றச் சங்கம், கிராமசேவாசங்கம், பண்டகசாலைச் சங்கம் ஆதிய சங்கங்களுக்குள், பூலோகசிங்க உபாத்தியாயர் தானும் தன் மனைவியைப் போலப் போய் நுழைந்தார். அச் சங்கங்களின் சிறு கூட்டங்களில், இரட்டை படிப்புச் சால்வையைச் சரியாக இழுத்து விட்டுக் கொண்டு, தலையை நீட்டி, நிமிர்ந்து நின்று சிறு பிரசங்கங்கள் செய்து பழகினார். அவர் ஒரு சிறுபிரசங்கி என்று அவருடைய சுற்றாடல் நினைக்கத் தொடங்கியது. ஆனால் அவருடைய பிரசங்கத்தை அவருடைய தர்மபத்தினி ஒருநாளும் கேட்கவுமில்லை; அவர் பிரசங்கம் செய்வார் என்று அவள் ஒத்துக் கொள்ளவுமில்லை. அவரை ஓர் எழுத்தாளனாகப் பழக்கலாமென்று வள்ளியம்மை முதலில் தெண்டித்தாள். முதலில் இரண்டொரு கட்டுரைகள் எழுத வந்தனவே யன்றிப் பின்னால் அவருக்குப் பேனையைத் தொடவே பயமாயிருந்தது. பூலோகசிங்கத்திற்கு மூளையில்லையென்று, தனது முடிவான தீர்மானத்தை வள்ளியம்மை அவருக்குத் தெரிவித்தாள். தன்னடைய பிரசங்கத்தை எல்லோரும் புகழ்கிறார்கள் என்று அவர் தனது மனைவிக்குச் சொன்னார். வள்ளியம்மை கட கட வென்று சிரித்து விட்டு, “ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூச் சர்க்கரை” என்றாள்.

## 4. உத்தியோக வாழ்க்கை

பூலோகசிங்க உபாத்தியாயரும், வள்ளியம்மையும் அந்தக் கிராமத்திலுள்ள பெண்கள்கல்லூரி ஒன்றிற் படிப்பித்தார்கள். அங்கேயுள்ள

இருவரைத்தவிர மிகுதி இருபது ஆசிரியர்களும் பெண்களாவர். பூலோகசிங்க உபாத்தியாயர் "தனது மனைவிக்குப் பயம்" என்பது அங்கேயுள்ள அத்தனை பேரினதும் அபிப்பிராயமாகும். இவ்வபிப்பிராயம் அவருடைய காதில் விழுந்தாலும் கேட்காத மாதிரிப் போய்விடுவார். தனது கணவன் தனக்குப் பயம் என்பது எல்லோருக்கும் தெரியும் என்று வள்ளியம்மைக்கு ஒரு பெருமை உண்டு. தான் ஒரு சுதந்திரப்பூச்சி என்று அவள் தன்னுள் இறுமாந்திருப்பாள். வள்ளியம்மைக்குக் கிடைத்ததுபோல், எங்களுக்கு ஒரு அப்பாவிக் கணவன் கிடைக்கவில்லையே என்று மற்றவர்கள் சொல்லும்பொழுது வள்ளியம்மைக்கு உச்சி குளிரும்.

"கணவன் மனைவியின் புத்திமதிப்படி நடப்பது நன்று" என்று ஒரு தர்க்கத்தை அக்கல்லூரியின் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் மன்றத்தில் நடத்த ஒழுங்கு செய்தார்கள். இத்தர்க்கத்தின் பிரதிவாதியின் பாகத்தைப் பேசுவதற்குப் பூலோகசிங்க உபாத்தியாயர் கேட்கப்பட்டார். பூலோகசிங்க உபாத்தியாயர், தான் ஒரு பேச்சாளன் என்பதை அங்கேயும் நிருபிக்க வேண்டுமென்ற ஆசையில் சம்மதித்துவிட்டார். அவர் சம்மதித்ததைக் கேள்வியுற்ற வள்ளியம்மை திடுக்குற்றாள். அவர் பேசமாட்டாமற் தத்தளிக்கத் தன்னைக் கேலி பண்ணுவார்கள் என்று அவள் பயப்பட்டாள். வள்ளியம்மையைத் தர்க்கத்தில் வாதியாக நிற்கும்படி காரியதரிசியும் பிறரும் மன்றாடியும் அவள் கண்டிப்பாக மறுத்துவிட்டாள்.

உங்களுடைய பேச்சைக்கேட்டுக் .கல்லூரியில் யாரும் என்னைப் பரிகாசம் பண்ணினால் அன்றோடு வேலையை விட்டுவிடுவேன் என்று வள்ளியம்மை தனது கணவனைப் பயமுறுத்திவைத்தாள். அத்தோடு தர்க்கம் நடந்த அன்று, அவள் தனக்குச் சுகமில்லையென்று லீவு எடுத்துக்கொண்டு, நின்று விட்டாள். தான் அவமானப்பட வேண்டிவரும் என்பது அவள் எண்ணம்.

எந்த விஷயத்தையும், திருக்குறளிற் பார்க்கலாம் என்று தன் ஆசிரியர் சொல்லிக்கொடுத்தது பூலோகசிங்க உபாத்தியாயருக்கு நினைவுக்கு வந்தது. திருக்குறளை எடுத்துப் பெண்புத்தி கேட்டுநடப்பது கூடாது என்று சொல்லுகின்ற அதிகாரத்திலுள்ள விஷயங்களைக் கட்டுரை போல எழுதினார். இன்னும் விவேகசிந்தாமணி முதலிய நூல்களிலிருந்தும் உதாரணங்களைப் பொறுக்கினார். அவர் மனைவி எச்சரித்தது அவருக்கு மேலும் உற்சாகத்தைக் கொடுத்தது. "ஆண்மகன் என்பான் தன் சொந்தக் கருத்தின்படி நடவாது பெண்புத்தி கேட்டு

நடப்பானாயின் அவன் ஆண் மகனல்லன் என்று கட்டுரையை முடித்து, அதை மனனஞ் செய்து கொண்டார். பின் மேசையில் தட்டவேண்டிய இடங்கள், கைவிரல் காட்ட வேண்டிய இடங்கள், முஷ்டி காட்டவேண்டியஇடங்கள் ஆகியவற்றை அவதானித்து, அபிநயத்துடன் மூன்று சுரங்களிலும் பேசப் பழகிக்கொண்டார். தனது வாழ்க்கையில் இதைவிடப் பெரிய காரியம் ஒன்று தான் சாதிக்கவேண்டியவைகளில் இல்லை என்பது அவர் எண்ணம்.

## 5. ஆண்பிள்ளைச்சிங்கம்

பூலோகசிங்க உபாத்தியாயருடைய இயற்கையான ஆண்மை, பொருட்பற்றினாலும், சூழலினாலும் அடங்கி ஆழத்தில் கிடந்தது. அன்று அவர் மனைவியும் வராமற்போகவே, அதிசயிக்கத்தக்க விதமாகப் பீறிட்டெழுந்து, சொற்பொழிவாகப் பிரதிபலித்தது. பூலோகசிங்க உபாத்தியாயர் தான் பேசுகிறாரோ என்று எவ்லோரும் அதிசயப்பட்டார்கள். அரைமணிநேரம் வெளு வெளு என்று வெளுத்து வாங்கிவிட்டார்.

"உன் கணவர் ஒரு ஆண்பிள்ளைச்சிங்கம்" என்று மறுநாள் வள்ளியம்மைக்குச் சக ஆசிரியைகள் சொன்னபொழுது, அவர்கள் தன்னைக் கேலி செய்கிறார்களா என்று அவள் சந்தேகித்தாள். மேலே மேலே அவர்கள் அடுக்கிக்கொண்டு போவதைக்கண்டு அவள் அதிசயப்பட்டாள். "நீ உன் கணவனுக்குச் சரியான பயம்" என்றாள் ஒருத்தி. "அவர் உனக்கு அடிக்கிறவர்கூட" என்றாள் இன்னொருத்தி. "இங்கே அப்பாவி யாகத்திரிகிறார்; ஆள்சரியான ஆள் இல்லையா?" என்றாள் ஒருத்தி. இன்னொருத்தி அவர் மேசையிலே தட்டிப் பேசினதுபோலப் பேசிக் காட்டினாள். ஒருத்தி அவர் சொன்ன வாக்கியம் ஒன்றைச் சொல்லிக்காட்டி "உன்னையும் அப்படித்தானே நடத்துகிறார்" என்று கேட்டாள்.

"உங்களுடைய பேச்சுக் குற்றமில்லையென்று எல்லோரும் சொல்லு கிறார்கள்" என்று வள்ளியம்மை தன் கணவனுக்கு வீட்டிற் சொன்னாள். "நான் சொன்னால் நீ நம்பமாட்டாய்" என்று பூலோகசிங்க உபாத்தியாயர் கூற, "இதுவும் நான் நெருக்கி வேலையைவிடுகிறேன் என்று பயப்படுத்தாவிட்டால் இவ்வளவில் வருமா?" என்று அவள் கேட்டாள்.

## 6. முந்நூற்றுநாலு

பூலோகசிங்க உபாத்தியாயருக்கு உலகத்திலுள்ள எல்லாக் கருமங்களிலும் பார்க்க ஒரேயொரு கருமத்தில் அளவிறந்த பற்று

உண்டு. முந்நூற்றுநாலு விளையாடுவதானால். அவர் எந்த அவசர கருமங்களையும் பின்போட்டுவிட்டு அதில் இருந்துவிடுவார். அவருடைய முந்நூற்றுநாலுப் பைத்தியத்தை இருவர் நன்கு தெரிந்து வைத்திருந்தனர். ஒருவர் பண்டசாலைமனேஜர். மற்றவர் வள்ளியம்மையாவர்.

அவ்வூரின் கூட்டறவுப் பண்டசாலையில் வருடந்தோறும் ஆயிரக்கணக்கான ரூபாய் ஒழுங்காக நஷ்டமாகிக் கொண்டு வந்ததற்கு அக்கடையின் மனேச்சரின் விவேகமும், நிருவாகசபையாரின் பராமுகமுந்தான் காரணம் என்று சொல்லப்பட்டது. ஆனால் உண்மைக்காரணம் வேறு. பண்டசாலைக் காரியதரிசியான பூலோகசிங்க உபாத்தியாயரின் முந்நூற்றுநாலுப் பைத்தியத்தைக் கடை மனேச்சர் நன்கு அறிந்து வைத்திருந்தான். பூலோக சிங்க உபாத்தியாயர் கடைக்குக் கணக்கு எழுதவோ பார்க்கவோ வருகிற தருணங்களில், புதிய கடுதாசிக் கூட்டமும், அவருடன் விளையாடுவதற்கு மூன்று பேரையும் ஆயத்தமாகக் கடை மனேச்சர் வைத்திருப்பான். அதைவிட நன்றியறிதலுள்ள காரியம் பூலோகசிங்க உபாத்தியாயருக்கு வேறு கிடையாது. முந்நூற்றுநாலு விளையாடிவிட்டு மனேச்சர் காட்டுகிற இடத்திற் கையொப்பமும் வைத்துவிட்டுப் பூலோகசிங்க உபாத்தியாயர் வீட்டுக்குத் திரும்பிவிடுவார். சில சந்தர்ப்பங்களில் முந்நூற்றுநாலு விளையாடுகிற இடத்தில் ஆட்கள் நிரம்பஇருந்தால் பூலோகசிங்க உபாத்தியாயாருக்கு இடமில்லாமற் போய்விடும். அப்படியான தருணங்களில் மனேச்சர் வந்து ஒரு ஆளை எழுப்பிவிட்டு அந்த இடத்தில் பூலோகசிங்க உபாத்தியாயரை இருத்தி விட்டுப்போவான்.

பூலோகசிங்க உபாத்தியாயருக்குத் தன்னிலும் பார்க்க முந்நூற்று நாலில் பற்றுஅதிகம் என்று வள்ளியம்மை புகைச்சல் அடைந்தாள். முந்நூற்றுநாலைத் தனது சக்களத்தியாகவே அவள் கருதினாள். தான் வீட்டிலிருக்கிற நேரங்களில் தன்னோடு பூலோகசிங்கமும் இருக்க வேண்டும் என்பது வள்ளியம்மையின் கட்டுப்பாடு. பூலோகசிங்க உபாத்தியாயர் ஒரு நாளைக்கு ஒரு சாட்டுச் சொல்லி மாலை நேரங்களில் முந்நூற்றுநாலு ஆட்டத்திற்குச் சென்று விடுவார். வள்ளியம்மை முந்நூற்றுநாலு ஆட்டத்திற்குச் செல்வதை எப்படியும் நிறுத்தி விடவேண்டும் என்று முயற்சி செய்தாள். இது சம்பந்தமாக அடிக்கடி அவர்களுக்குள் தகராறு நடக்கும். வள்ளியம்மை ஒருநாள் இரவு முழுவதும் தனது கணவனைக் கதவைப் பூட்டிக்கொண்டு வெளியில் நிறுத்திவிட்டாள். ஓயாத தகராறினால் எப்போதாகிலும் ஆயிரத்தில் ஒரு நாளைக்குப் போவதேயன்றி மற்றும்வேளை கடதாசி ஆட்டத்தை அவர் குறைத்துக் கொண்டார். ஆனால் ஆசை அடிமனதிற் பதுங்கிக்கொண்டேயிருந்தது.

## 7. கடைசி ஆட்டம்

ஒரு நாள்; மாலை ஐந்துமணி; "கோப்பி குடித்தால் நல்லது" என்று பூலோகசிங்கஉபாத்தியாயர் சொன்னார். "நீங்கள் போய்த் தண்ணீர் சுடவைத்தால் நான்வந்து ஊற்றித் தருகிறேன்" என்று வள்ளியம்மை சொன்னாள். "நான் மறந்து போனேன்; சங்கக் கடைக்கு "ஸ்ரொக்" எடுக்கப்போகவேண்டும்; நான் போகப் போகிறேன்" என்று சொல்லிக்கொண்டு பூலோகசிங்க உபாத்தியாயர் புறப்பட்டார்.

"சங்கக்கடை, சங்கக்கடை என்று சொல்லி அங்கே கடதாசி ஆட்டம்; பேருக்குக் காரியதரிசி, இலாபமெல்லாம் யாரோ அள்ளுகிறார்கள்" என்று எரிந்து புகைந்தாள் வள்ளியம்மை.

"கடுதாசிக்கூட்டத்தில் நான் இப்பொழுது தொடுவதுகூடஇல்லை. சத்தியமாக "ஸ்ரொக்" எடுக்கப் போகிறேன்" என்று சொல்லிவிட்டுப் பூலோகசிங்க உபாத்தியாயர் வெளியே சென்றார்.

"கடுதாசி ஆடினதென்று அறிந்தேனோ, அன்றைக்கு இரண்டிலொன்று பார்த்துவிடுகிற" தென்று சொல்லிவிட்டு வள்ளியம்மை உள்ளே சென்றாள்.

நாய்க்கு எலும்புத்துண்டை போலவும், பூனைக்குப் பால் போலவும், நரிக்கு இறந்த ஆடு போலவும், பூலோகசிங்கத்திற்குக் கடதாசி ஆட்டம். நாய் வாலை ஆட்டிக்கொண்டு வெறும் எலும்பைக் கடிப்பது போலவும், நரி இறந்த ஆட்டை எட்டி நின்று பார்ப்பது போலவும், பூனை பாற்சட்டி யருகில் கண்ணை மூடிக்கொண்டு இருப்பதுபோலவும், ஆட்டத்தில் இடமில்லாவிட்டாலும் அருகிலே நின்று பார்ப்பார்.

பூலோகசிங்க உபாத்தியாயர் சென்றதும், "ஸ்ரொக்" தான் எடுத்து எழுதிவைக்கிறேன் என்று சொல்லிச் சங்கக்கடை மனேச்சர் முந்நூற்றுநாலு ஆடிக்கொண்டிருந்த ஒருவனை எழுப்பி அந்த இடத்தில் அவரை இருத்தினான். பாவம்! அவர் ஆட்டத்தில் இறங்கிவிட்டார்.

அவர் ஆட்டத்திற்கு இருந்த இடம் ஒரு கேந்திரமான இடம். சங்கக் கடைக்கு எதிரில் ஒரு சேவாசங்க வாசிகசாலை இருக்கிறது. வாசிகசாலைக்கும் சங்கக்கடைக்குமிடையில் றோட்டுச் செல்கிறது. வாசிகசாலை மண்டபத்திற் கடுதாசி ஆட்டம் நடந்தது. பூலோகசிங்க உபாத்தியாயர் இருந்த இடத்திலிருந்துபார்த்தால் றோட்டில் இருபக்கத்திலிருந்து வருகிறவர்களையும், தூரத்திலிருந்து வருகிற பொழுதே பார்க்கலாம்.

பூலோகசிங்க உபாத்தியாயர் சென்றபின் வள்ளியம்மை பெண்கள் கல்லூரிக்குச் செல்லப் புறப்பட்டாள். பெண்கள் கல்லூரிக்குப் பின்னாற் செல்லும் றோட்டிலேயே வாசிகசாலையும், சங்கக்கடையும் இருந்தன. வள்ளியம்மை பூலோகசிங்க உபாத்தியாயரின் களவையும் கண்டு பிடிக்கலாம் என்ற எண்ணத்தில் பெண்கள் கல்லூரிக்குச் சுற்று வழியாற் செல்பவள்போல், அந்த றோட்டால் சென்றாள்.

வள்ளியம்மை வருவதைத் தூரத்தே கண்ட பூலோகசிங்க உபாத்தியாயர் செய்வதறியாது தத்தளித்தார். வாசிகசாலையின் ஒருபக்கம் றோட்டு, மறுபக்கம் பெண்கள் கல்லூரி. ஓடி மறைந்து கொள்வதற்கு ஒரு இடமுமில்லை. அவர் ஆட்டத்தினின்று எழும்பினதும் அதற்கெனக் காவல்நின்ற பலருள் ஒருவன் அந்த இடத்தில் இருந்து விட்டான். அவரைக் கவனிப்பார் ஒருவருமில்லை.

## 8. பரிச ரேகை

பெண்கள் கல்லூரியின் வேலி தென்னங்கீற்றுகளால் வரிசையாக உயர இருந்து ஒழுங்காக அடைக்கப்பட்டிருந்தது. பூலோகசிங்க உபாத்தியாயரின் சமயோசித புத்தியில் பெண்கள் கல்லூரியின் வேலியால் ஏறி உள்ளே மறைந்து இருந்துவிட்டுப் பின்னர் வெளியே வரலாமென்று ஒரு எண்ணந்தோன்றியது. பெண்கள் கல்லூரிக்குள்ளும் அந்நேரத்தில் அந்தப் பக்கத்தில் ஒருவரும் நிற்கமாட்டார்களென்பது அவருக்குத் தெரியும். மறுகணம் வேலியால் தாவி உள்ளே மறைந்தார். அவரின் காரியத்தை ஒருவரும் அங்கே உணர்ந்து கவனிக்கவில்லை. வள்ளியம்மை வாசிகசாலையைக் கடந்து அப்பாற் சென்றுவிட்டாள். அவள் கண்ணிற் பூலோகசிங்க உபாத்தியாயர் படவில்லை.

ஒரு வட்டத்தின் ஒரேயொரு புள்ளியை மட்டும் தீண்டிக்கொண்டு செல்லுகின்ற நேர்கோட்டைப் பரிசரேகை என்று கேத்திர கணிதநூல் கூறும். ஒரு பரிச ரேகைபோலப் பூலோகசிங்க உபாத்தியாயர் ஏறிய வேலி அமைந்திருந்தது. வட்டம் உள்ளேயிருந்த ஒரு கிணறாகும். வட்டத்தைப் பரிசரேகை தீண்டுகிற புள்ளிக்கு நேரேயே பூலோகசிங்க உபாத்தியாயர் ஏறி உள்ளே சென்றார். மற்ற இடங்களில் வேலித்தடிகள் நெருக்கமாக இருந்தன. அவ்விடத்தில் கிணற்றுக்கட்டு இருந்தமையால் தடி போட முடியவில்லை.

பூலோகசிங்க உபாத்தியாயர் வெளியேயிருந்ததுபோல் உள்ளே இறங்குவதற்கு வசதியாக இருக்கவில்லை. உள்ளே நன்றாக இறங்கி

மறையாவிட்டால் வெளியே நின்று பார்ப்பவர்களுக்கு அவரைத் தெரிந்து விடும்.

பூலோகசிங்க உபாத்தியாயரின் நெஞ்சு படக் படக் என்று கடிகாரப் "பெண்துலம்" போல அடித்தது.

"கண்டுவிடப் போகிறாளே -
வள்ளியம்மை
கண்டுவிடப் போகிறாளே
க்சக்கிப் பிழியப் போகிறாளே
வள்ளியம்மை
கசக்கிப் பிழியப் போகிறாளே"

என்று ஒரு குரல் அவருடைய நெஞ்சிலேயிருந்து ரீங்காரமிடுவது அவருடைய காதில் நன்றாகக் கேட்டுக்கோண்டேயிருந்தது.

அவர் கீழே குதிக்க முடியாமல் கிணறு இருந்தது. சிறிது நேரத்திற் குத்தானே என்று அவர் அகப்பட்ட தென்னோலையில் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு காலையும் வேலியில் உதைத்துக்கொண்டு வெளவால்போலத் தொங்கிக்கொண்டிருந்த காட்சி அபூர்வமாயிருந்தது.

## 9. தாளத்தோடொட்டிய காட்சி

பெண்கள் கல்லூரியில் பெண்பிள்ளைகள் வீசும் மிகுதி உணவை உண்டு கொழுத்திருந்த ஒரு நாய் அங்கே தான் ஒரேயொரு ஆண்பிள்ளை யென்ற பெருமையோடு வேப்பமரத்தினடியினிலே, தென்னங்காற்றின் சுகத்தினிலே அரைக்கண் நித்திரையில் படுத்திருந்தது. கிணற்றோரத்தி னிலே, வேலிமீதினிலே மெல்லிய சலசலப்புச் சத்தத்தைக் கேட்டு மெதுவாகக் கண்ணைத் திறந்து பார்த்தது. வேலியினிலே தொங்கிக் கொண்டிருந்த நவீன ஜந்துவைக் கண்டு ஒரு பெண்கள் கல்லூரியிலே அதுவும் தனது பரிபாலனத்திலே இப்படி ஒரு ஜந்து விளையாட்டுக் காட்டவா! என்று சோம்பிக் கிடந்த நாய்க்கு ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது. அது ஆகா! அப்படியா! என்று வேலியை நோக்கிக் கணகண வென்று உச்சஸ்தாயில் குரைத்துக்கொண்டு சென்றது.

பெண்கள் கல்லூரியின் விடுதிச் சாலையிலுள்ள பெண்பிள்ளைகளுக் குக் கோதுமை மாவைக் கரைத்துப் புளிக்கவைத்து அதைத் தோசை என்று காலையில் சுட்டுக்கொடுப்பார்கள். பெண்பிள்ளைகள் ருசி பார்த்து எஞ்சிய தோசையைப் பிய்த்துப் பிய்த்து மேலேயெறிய அத் துண்டுகள் நிலத்தில் விழமுன்னர் அந்தநாய் அவற்றைப் பாய்ந்து கவ்வித் தின்னும்.

இப்பயிற்சி அனேகமாக ஒவ்வொருநாளும் அந்நாய்க்கு அளிக்கப்பட்டுவந்தது. அப்பயிற்சியைப் பிரயோகிக்கவேண்டிய சந்தர்ப்பமும் இப்பொழுது அதற்குக் கிடைத்தது.

கிணற்றுக்கு மேலே தொங்கிக்கொண்டிருந்த பூலோகசிங்க உபாத்தியாயரைக் கிணற்றின் ஒரு பக்கத்தில் சென்று பாய்ந்து கௌவப் போனது. அவர் மறுபக்கத்திற்குச் சாய்ந்தார். நாய் கிணற்றைச் சுற்றிக் கொண்டு மறுபக்கத்திற்கு ஓடிவந்து பாய்ந்தது. அவர் மறுபக்கத்திற்குத் தாவினார். நாய் மறுபக்கத்திற்கு ஓடியது. கைகள் பிடித்த பிடியாக இருக்கக் கால்களை அந்தப் பக்கத்திற்கும் இந்தப் பக்கத்திற்கும் உதைத்துத் தாவி நாயிலிருந்து மாறி மாறித் தப்பி விலகினார்.

பூலோகசிங்க உபாத்தியாயர் வேலியில் தொங்கிக்கொண்டு அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் தாவித் தாவித் தொங்குவதும், நாய் இந்தப் பக்கமும் அந்தப்பக்கமும் கிணற்றைச் சுற்றி ஓடி ஓடிப் பாய்ந்து குரைப்பதுமாகிய தாளத்தோடொட்டிய இந்நடவடிக்கை வர வரத் துரித தாளத்தை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தது. இவையெல்லாம் சில நொடிப்பொழுதில் நடந்த சம்பவங்களே.

## 10 குண்டுக் கனம்

இவ்வபூர்வக்காட்சியை விடுதிச்சாலை மாணவிகள் ஒருவரோடொருவராக வந்து சேர்ந்து கண்டு மகிழ்ந்தார்கள். அவர்கள் நின்ற இடத்திற்கு வள்ளியம்மை வந்து சேர்ந்து, வேலியில் தொங்குவது தனது கணவனேயென்பதையும் நடைபெற்ற சம்பவங்களையும் ஒரு நொடியில் உணர்ந்துகொண்டாள்.

இதற்கிடையில் பூலோகசிங்க உபாத்தியாயரின் இரட்டை மடிப்புச் சால்வை அவர் கழுத்தினின்றும் வழுவிக் கிணற்றினுள்ளே விழுந்தது. வழுவிச் சென்ற சால்லையை, ஒரு கையால் வேலியைப் பிடித்துக் கொண்டு மற்றக்கையாற் பிடிக்கச் சென்றார். பிடித்த ஓலை அறுந்து தலை கீழாகக் கிணற்றினுள்ளே விழுந்தார். அவர் விழுவதற்கு முன்னே மாணவிகள் ஓடிச்சென்று நாயைத் துரத்திவிட்டனர்.

வள்ளியம்மையும் மாணவிகளும் ஓடோடியும் வந்து கிணற்றை எட்டிப் பார்த்தனர். கிணற்றுக்குள்ளே விழுந்த பூலோகசிங்க உபாத்தியாயர் கிணற்றின் அடிவாரத்தைத் தொட்டுக்கொண்டு மேலே மிதந்து கிணற்றுச் சுவரில் நீட்டிக்கொண்டுநின்ற ஒருவேரை ஆதாரமாகப் பிடித்துக் கொண்டு நின்றார்.

மாணவிகள் கிணற்றின் துலாக் கயிற்றைப் பிடித்துக் கிணற்றுக் குள்ளே விட்டனர். பூலோகசிங்க உபாத்தியாயர் கயிற்றைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார். "ஆளைப்பார்த்தால் சிறிய ஆள்; சரியான குண்டுக்கனம்" என்று சொல்லிக்கொண்டு எல்லோரும் சேர்ந்து இழுத்து அவரை வெளியே விட்டனர். இச்சொற்கள் வள்ளியம்மைக்குப் பிடிக்க வில்லை. அன்றியும் நீரில் மூழ்கிய அலங்கோல நிலையோடு தனது கணவனைப் பெண்கள் மத்தியில் வைத்திருக்க மனமின்றி விரைவாக ஒரு காரைப் பிடித்துக்கொண்டு வீட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்ந்தாள்.

வள்ளியம்மை தனது கணவனுக்குச் செய்யவேண்டிய ஆரம்ப சிகிச்சையெல்லாம் செய்து அவரை ஒரு கட்டிலில் படுக்கவைத்துத் தானும் அருகில் இருந்தாள். அப்பாவியான தனது கணவனைக் கலக்கி வீணாக அவலப்படுத்தி விட்டேனேயென்று அவள் நினைத்தபொழுது அவளையும் அறியாமல் அவள் கண்களில் நீர் சுரந்தது.

அவமானந் தாங்கமாட்டாமல் பூலோகசிங்க உபாத்தியாயர் ஒரு கள்ளப் பிடியிற் கண்ணை மூடிக்கொண்டு படுத்திருந்தார். அப்பொழுது அவருடைய முகத்தில் ஒரு சொட்டுக் கண்ணீர் விழுந்தது. உடனே கண்ணை விழித்துப் பார்த்தார். "இன்றோடு கடுதாசி ஆட்டத்திற்கு முழுக்குப் போட்டாயிற்று" என்று சொல்லிப் புன்னகை புரிந்தார். "என் அரசே, நீங்கள் கடுதாசி விளையாடினால் என்ன? எனக்கு உங்களை விட்டு நீண்டநேரம் பிரிந்திருக்க முடிகிறதில்லை; அதனாற்றான்..." என்று அவரின் நெற்றியைத் தடவிக் கொண்டு சொன்னாள்.

வாழ்க! தம்பதிகள்!

(ஈழகேசரி - 25-10-53)

# ஆரம்பசிகிச்சை

- 'ஆரம்ப சிகிச்சை முறைகளைக் கற்றுச் சேவா உணர்ச்சியால் தூண்டப்பெற்று மக்களுக்குதவும் பிரயோசனமுள்ள நகரவாசிகளாவீர்களாக". -

  \- சுவரொட்டி விளம்பரம்

செல்வி வள்ளிப்பிள்ளை ஒரு பள்ளிக்கூட ஆசிரியை. அவள் மெல்லிய வளாக இருந்தபோதிலும் கவரக்கூடிய மாநிறம் பொருந்தியவள். கன்னங் கள் வற்றியிருந்தபோதிலும் அவள் முகத்தில் இளமை ஒளி வீசியது. முதுகு கொஞ்சங் கூனலாக இருந்தபோதிலும் பார்வைக்குச் சுறுசுறுப்பாக இருந்தாள். எல்லாவற்றிற்கும் மேலாக அவள் நடையலங்காரம் ஒருதனி. கையை இலாவகமாகத் தூரத்தால் வீசித் தலையை நேராக விறைப்பாக வைத்துக் காலை ஒருவித தாளக் கட்டுடன் தூக்கிவைத்துச் செல்வது ஒரு தனியழகு நிரம்பியது. இதை ஓய்யார நடையென்றுஞ்சொல்லலாம். பெரிய சீமாட்டிகளுக்குரிய ஓய்யாரநடை இது என்று அவள் எண்ணி அவ்விதம் நடப்பது போல, ஆளைப் பார்த்து மனதை வாசித்தறியக்கூடிய சக்தியுள்ளவர்கள் சொல்லக்கூடும். அந்த நடை இயற்கையன்றிச் செயற் கையேயென்பதையும் அது நடனக் கலையோடு சம்பந்தப்பட்ட தென்பதையும் அவள் அந்த நடையைத் தொடர்பாகவன்றி இடையிடையே கையாளும் சந்தர்ப்பத்தை உற்றுநோக்கியவர்கள் கூறக்கூடும். அந்த நடை எவ்வளவுக்கெவ்வளவு இயற்கையோடு விட்டுக் கொடுக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அவளுடைய தலைவீக்கம் இருக்கும் என்று புள்ளிவிபர அறிவுள்ளவர்கள் கணிக்கக்கூடும்.

தலைவீக்கம் என்ற நோய் முற்றிய நிலையை அடைந்துவிட்டதென்று பெரும்படியாக எதையும் மதிப்பவர்கள் கூறலாம். உண்மையில் அவளுக்

குத் தலைவீக்கம் இருக்கிறதோவென்று எனக்குத் தெரியாது. ஆனால் தலைவீக்கம் என்ற நோய் பற்றக்கூடிய சாத்தியக் குறிகள் அவளுடைய வாழ்விலிருந்தன.

செல்வி வள்ளிப்பிள்ளையின் சொந்த ஊர் ஒரு கிராமம். அங்கே எழுபத்தைந்து வீதமானோர் இன்னும் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். பள்ளிக்கூடப் படிப்பு சோம்பற் கூட்டத்தின் தொழில் என்பது, அக்கிராம வாசிகளின் உறைப்பான கொள்கையாகும். அத்தோடு சிறுவர்களைத் தப்பான வழியில் இறக்கிவிடும் ஒரு பாதை என்று சமீபத்தில் நடந்த சிலசம்பவங்களிலிருந்து, அவர்கள் கொண்ட இன்னொரு கொள்கையாகும்.

அவ்வூர்ப் பாடசாலையும், அவர்களுடைய கொள்கைக்கு இலட்சிய மாக விளங்கியது. அவ்வூர்ப் பாடசாலையென்ன? பொதுவாக இலங்கைப் பாடசாலைகளே, பிள்ளைகளை அடக்கி ஒடுக்கி மடக்கி வைத்திருந்து அவிழ்த்துவிடும் கூடங்களாகத்தானே இருக்கின்றன. பிள்ளைகளின் முளைவிடும் அரும்பன்ன முனைப்பை மழுக்கிச் சோம்பற் கூட்டங்களாக்கி விடுகின்றன. ஆசிரியர்களும் அதே வழியில் வந்தவர்கள்தானே.

செல்வி வள்ளிப்பிள்ளை அந்தக் கிராமத்தில் முதன்முதல் உத்தியோகமானவர். ஆண்களிலும் சரி, பெண்களிலும் சரி, அக்கிராமத்தில் அதற்குமுன் ஒருவரும் உத்தியோகம் வகித்ததில்லை. வள்ளிப்பிள்ளையின் இந்த ஆசிரியை உத்தியோகத்திற்கு அக்கிராமத்திலுள்ளவர்கள் ஒரு "சிவில்" சேவிஸ் உத்தியோகத்திற்குரிய மதிப்புக் கொடுத்தார்கள்.

செல்வி வள்ளிப்பிள்ளை பிறஊருக்கு உத்தியோகம் வகிக்கப் புறப்பட்டபொழுது விவாகஞ் செய்யாத குமர்ப்பெண் இவ்விதம் திரிவது நன்றோ என்று அக்கிராமப்பெண்கள் கூடிமாடிக் குசுகுசுத்தனர். ஆனால் அப் பேச்சுக்கள் எல்லாம் நாளடைவில் மறைந்துவிட்டன.

ஆசிரியர் வல்லிபுரம் அழகு வாய்ந்தவன். கெம்பீரமான தோற்றமுடைய வன். நிதானமான பேச்சும், கூர்மையான கண்களுமுடையவன். ஆனால் அவனுடைய இந்தச் சிறப்புகள் ஒன்றும் வள்ளிப்பிள்ளையின் கண்ணிற் படவில்லை. தன்னுடைய உத்தியோகமும் அழகும் எல்லோரையும் கவரும் என்ற நினைப்பில் அவள் இருந்தாள். வல்லிபுரம் வள்ளிப்பிள் ளையோடு இனிமையாகப் பழகினான். சரளமாகப் பேசினான். குதூகலமாக உலாவினான். அன்போடு பேசினான். ஆசையோடு பார்த்தான்.

தனக்கும் அவனுக்கும் விவாகம் முடிந்ததற்குச் சரியென்று வள்ளிப்

பிள்ளை நினைத்தாள். அவனைப் பரிவோடு உபசரிப்பாள். செல்லமாகக் கோபிப்பாள். கள்ளமாகச் சிரிப்பாள். கனவுலகில் இருப்பாள்.

வள்ளிப்பிள்ளைக்குத் துணையாகச் சிலகாலம் தாயிருப்பாள். சிலகாலம் தந்தையிருப்பார். இம்முறை அவர்கள் இருவரையும் விட்டுத் தனது தோழி ஒருத்தியை அழைத்து வந்தாள்.

தோழியின் பெயர் இலட்சுமி. இலட்சுமி கிராமத்தில் நிலபுலங்கள் நிறைந்த ஒரு சாதாரண கிராமவாசியின் புத்திரி. வள்ளிப்பிள்ளையிலும் பார்க்கச் சொத்துச்சுதந்திரத்தில் கூடியவளானாலும், படியாதவள். தனது தோழியென்று வள்ளிப்பிள்ளை கூட்டி வந்தாளானாலும், வேலைக் காரிமாதிரி அவளைப்பாவித்தாள்.

இருவரும் ஒரு பாராயத்தினராயினும் இலட்சுமியின் நிறம் கறுப்பு. இலட்சுமியும் தானும் நிற்கும்பொழுது. தனது அழகு சோபிக்கும் என்பது வள்ளிப்பிள்ளையின் கருத்தாகும். ஆனால் இலட்சுமியின் கண்களிலிருந்த ஒரு விசேஷத்தை வள்ளிப்பிள்ளை அவதானிக்கவில்லை.

வள்ளிப்பிள்ளையின் பெற்றோர்கள், வல்லிபுர உபாத்தியாயரின் குண விசேஷத்தையும், அவரினதும், அயலாரினதும் பாதுகாப்பையும் நம்பின தோடு படித்தவளாகிய வள்ளிப்பிள்ளையின் அதிகாரவார்த்தைகளை மீற முடியாமையாலும், இரு குமர்ப்பெண்களையும் தனியே செல்ல அனுமதித்தனர்.

வள்ளிப்பிள்ளை தனது காதலைக் கல்யாணமாகிய பூரண நிலையை அடையச்செய்வதற்கு ஒருவித இடையூறுகளும் குறுக்கே இராதிருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, தனது தாய் தந்தையரை விடுத்துத் தனது தோழியை உடனழைத்து வந்தாள்.

தோழியாகிய இலட்சுமியோ, புதிய இடங்களைப் பார்க்கலாமென்றும், தாய்தந்தையரின் பிச்சல் பிடுங்கலின்றிச் சுதந்திரப்பட்சியாகச் சில நாட்களுக்கேனும் திரியலாம் என்ற எண்ணத்தினாலும், புத்தம் புதிய, நவநாகரீக .நடை உடை பாவனைகளை வள்ளிப்பிள்ளையிடமிருந்து கற்கலாம் என்னும் நோக்கத்தினாலும், வள்ளிப்பிள்ளையின் காதற்கதை களைக் கேட்டு மகிழலாமென்னும் அவாவினாலும், வள்ளிப்பிள்ளையோடு வந்தாள்.

பாடசாலை தவணை விடுமுறை முடிந்து இரண்டாம் நாள்; பின்னேரம் நாலுமணி. வல்லிபுரம் இனிய பொழுதுபோக்கின் நோக்கமாகவோ, அன்றி வள்ளிப்பிள்ளையின் தேவைகளை அறிந்து உதவிசெய்யும்

நோக்கமாகவோ, வள்ளிப்பிள்ளையின் வீட்டுக்கு எழுந்தருளினான்.

அன்று நிச்சயம் வருவானென்று வள்ளிப்பிள்ளை எதிர்பார்த்திருந்தாள். அவன் வருவதற்கு முன்பே, குளித்துத் தன்னை அலங்கரித்துக் கொள்ள வேண்டுமென்று விருப்பினால், வழக்கத்திற்கு முந்தியே குளிக்கச் சென்றுவிட்டாள். அத்தருணத்திற்றான் வல்லிபுரம் அங்கே சென்றான். வல்லிபுரத்தை வரவேற்கும் பொறுப்பு இலட்சுமியின்மேல் விழுந்தது.

இலட்சுமியின் கண்கள் சாதாரணமானதாகவன்றிப் பெரிதாகவும், நீளமாகவும் இருந்தன. அந்தப் பரந்த கண்களின் கருவிழிகள், அங்கும் இங்கும் சுழன்று சுழன்று வந்தன. சுழன்று வரும்பொழுது வாலிபர்களின் மனதையும் சுருட்டி ஈர்த்து வரும் ஒரு தன்மை அவ்விழிகளுக்கு இருந்தன.

அந்த விழிகள் வல்லிபுரத்தின் இதயத்தைப் பிடித்துச் சுருட்டி இழுப்பதை அவரின் செயல்களே நிருபித்தன. கதிரையில் சரியாக உட்காராமல் அரைவாசி அருகுக் கதிரையிலிருந்து, திறந்த வாயை மூடாமல், நீட்டிய தலையை இழுக்காமல், இருந்த காட்சி இலட்சுமிக்கு ஒருபுறம் நாணத்தையும், ஒருபுறம் சிரிப்பையும் உண்டாக்கியது.

சூரியகாந்திப் பூவிருக்க ஒரு செவ்வந்திப்பூவை ஒருவரும் விரும்பமாட்டார்கள் என்பது வள்ளிப்பிள்ளையின் சித்தாந்தம், இவ்வெண்ணத்தினால் வல்லிபுரத்தை இலட்சுமி வரவேற்பதையோ, அவனோடு நின்று பேசுவதையோ வள்ளிப்பிள்ளை வெறுக்கவுமில்லை; தடுக்கவுமில்லை.

வல்லிபுரத்தினதும், இலட்சுமியினதும் பேச்சுப் படிப்படியாக முன்னேறி வர; வள்ளிப்பிள்ளை தனது சக்தியெல்லாவற்றையும் பிரயோகித்துத் தன்னைச் சிங்காரித்து, முதலிற் சொன்ன ஓய்யார நடைபோட்டுக் கொண்டுவந்து வல்லிபுரத்திற்கு எதிரேயுள்ள கதிரையில் உட்கார்ந்து, தேநீர் கொண்டுவரும்படி இலட்சுமிக்கு உத்தரவு பிறப்பித்தாள்.

தேவ அரம்பைபோல, மயில்போல அசைந்து நறுமணங் கமழ வந்து, உட்கார்ந்த வள்ளிப்பிள்ளை மீது, வல்லிபுரத்தின் கண்கள் லயிக்காமல் உள்ளே சென்ற அலங்காரமற்ற இலட்சுமியைத் தேடி வட்டமிட்டது ஒரு விந்தையே.

ஊரிலே இருந்து வந்த, கிராமத்துச் சனங்களுக்கு அல்வா போன்று நாக்கிலே ஜலம் ஊறவைக்கும் தன்மைத்தாகிய "அரியதரம்" என்ற ஒருவகைப் பலகாரத்தைத் தட்டிலே சுமந்து, கட்டிலே நில்லாத கண்களைக் கழற்றிக் கொண்டு, இலட்சமி வந்தாள். அடுத்தபடியாகத் தேநீர்க்

கிளாசுகளைக் கொண்டுவந்து, எல்லாவற்றையும் வள்ளிப்பிள்ளைக் கருகில் வைத்துவிட்டுக் கதவைத் துணையாகப் பற்றிக்கொண்டு வாயிலில் நின்றாள்.

வள்ளிப்பிள்ளை வல்லிபுரத்திற்குப் பரிமாறித் தானும் உண்டாள். வல்லிபுரம் இலட்சுமியையும் எடுத்துச் சாப்பிடும்படி கூறினான். இலட்சுமி வல்லிபுரம் கூறும்பொழுது, கதவுக்குப்பின் மறைந்தும், அவன் வள்ளிப்பிள்ளையோடு பேசும்பொழுது வெளியேயும் நின்றாள்.

வள்ளிப்பிள்ளை தேநீர்க் கிளாசை எடுத்து வல்லிபுரத்திற்கு நீட்ட வல்லிபுரத்தின் கண்கள் கதவருகைத் தேட, வல்லிபுரம் வாங்குவது ஒரு கணம் பிந்த, வள்ளிப்பிள்ளை கொடுப்பது ஒருகணம் முந்த, அக் கணத்தைப் பயன்படுத்திக் கொண்டு, தேநீர்க்கிளாசு அவர்களிருவரி லிருந்தும் வெளியேறி, நிலத்தோடு ஐக்கியமானது.

எதோ தான் பிடித்துவிடுவேன் என்ற அவசர புத்தியால் இலட்சுமி "ஆ" என்று ஓடிப் போனாள். காலிலே ஒரு பீங்கான் துண்டு குத்த "ஓ" என்று அலறினாள். இச்சந்தர்ப்பத்தில் வள்ளிப்பிள்ளையின் பிரச்சினை வேறொன்றாக இருந்தது. பாலாடை போன்ற தனது மெல்லிய வெண்பட்டு தேயிலைச் சாயம்பட்டுக் கெட்டுவிட்டதே என்று அவள் வருந்தினாள்.

தேநீர் தேங்கி நின்றநிலம் சிறிது சிறிதாகச் செந்நிறமடைந்து வந்தது. இலட்சுமியின் கால்களிலிருந்து இரத்தம் பெருகுவதைக்கண்ட வல்லிபுரம், நடுக்குற்று, அவளுடைய காலைக் காட்டும்படி வேண்டினான். அவள் பிகுபண்ணவே, வல்லிபுரம் வள்ளிப்பிள்ளைக்கு முறைப்பாட்டைச் சமர்ப்பித்தான். வள்ளிப்பிள்ளை தனது ஆடைகெட்ட அவல நிலையி லிருந்து ஒருவாறு தேறி, அங்கேவந்து இலட்சுமியைக் கட்டிலிற் படுக்கும்படி கட்டளையிட்டாள்.

இலட்சுமி மறுகதை பேசாமல் கட்டிலிற் போய்ப் படுத்தாள். வல்லிபுரம் தான்கற்ற ஆரம்பசிகிச்சை முறைகளை உத்திகளோடு கையாண்டான். எடுத்துக் கைநீட்ட வள்ளிப்பிள்ளை பக்கத்தில் நின்றாள். வல்லிபுரம் அவள் கால்களைப் பக்குவமாகப் பிடித்துச் சேலைகளை ஒதுக்கி, இரத்தத்தைத் துடைத்து ஆரம்பசிகிச்சை வேலைகளை ஆறுதலாக நடத்திக் கொண்டு போனான்.

செம்மறியாடு துள்ளும்; வெருளும்; ஓடும்; உயிரை விடுவதுபோற் கூச்சப்படும். ஆனால் ஆள் பிடித்தபின் அசையாது விழித்துக்கொண்டு நிற்கும். அதுபோன்று இலட்சுமியும் அசையாது படுத்திருந்தாள்.

பீங்கான் குத்தின காயத்தினுள் நுழைந்து இரத்தக்குழாய் வழியாக உள்ளத்தை வந்தடைந்து, ஒருவகை இன்பத்துடிப்பை ஏதோஒன்று உண்டுபண்ணியதை இலட்சுமி உணர்ந்தாள். அதுபோன்ற ஓர் இன்பத்தை அவள் அதற்கு முன் அனுபவித்ததேயில்லை. ஏதோ ஒரு புதியபொருள், அவள் நெஞ்சிற்குள் கள்ளமாக நுழைந்துவிட்டது அவளுக்கு நன்கு தெரிந்தது. இந்த ஆரம்பசிகிச்சை அவள் வாழ்வில் புதிய அத்தியாயம் ஒன்றை ஆரம்பித்துவைத்தது. தேநீர்க் கிளாசு சுக்குநூறாக உடைந்து இரு உள்ளங்களைப் பிணைத்தது ஒரு விந்தைதான். ஆனால் வள்ளிப்பிள்ளையின் வாழ்க்கைக்கு அது ஓர் அபசகுனம் என்று சொல்வார் அங்கில்லை.

வல்லிபுரம் தனது வாழ்க்கையில் இதுவரை இதைவிடப் பெரிய காரியம் ஒன்றும் செய்யவில்லையென்று நினைத்தான். தான் ஆரம்ப சிகிச்சை முறைகளைக் கற்றதனால் பெறக்கூடிய பயன் முழுவதையும் இன்று பெற்றுவிட்டதாக நினைத்தான்.

அவளுடைய காலைப் பிடித்திருக்கும்பொழுது தன் கைகளை வலிந்து இழுக்கும் சக்தி ஒன்று, அந்தக் கரங்களுக்கு இருப்பதை அவன் உணர்ந்தான். அந்தக் கால்களில் ஒரு நூதன வழுக்குத் தன்மையும் ஒட்டுத் தன்மையும் இருந்ததைக் கண்டான். அவனுடைய ஏக்கம் முழுவதும் காயம் கட்டிமுடியப் போகிறதே என்பதுதான். எவ்வளவு ஆறுதலாகக் கட்ட முடியுமோ அவ்வளவு ஆறுதலாகக் கட்டினான். எனினும் முடியப்போகிறதேயென்று அவன் நெஞ்சு படபடத்துக் கொண்டேயிருந்தது.

வள்ளிப்பிள்ளை தன்மேற்கொண்ட அன்பினால் தனது தோழிக்கு இவ்வளவு சிறப்பாக ஆரம்பசிகிச்சை செய்தாரே என்று நினைத்துப் பெருமிதம் அடைந்தாள். அது ஆரம்பசிகிச்சையன்று; காதலின் ஆரம்ப கட்டம் என்று வள்ளிப்பிள்ளையால் உணர்ந்து கொள்ள முடியவில்லை.

அன்றுதொட்டு வல்லிபுரம் நாளும் தவறாது வள்ளிப்பிள்ளையின் வீட்டுக்குச் சென்றான். ஆனால் வல்லிபுரம் என்னதான் கடவுளை வேண்டுதல் செய்தபோதிலும் பின் ஒருபோதும் ஆரம்பசிகிச்சை செய்யக்கூடியதாக ஒரு சந்தர்ப்பம் அவனுக்குக் கிட்டவில்லை. அதனால் அவன் மிக விரைவில் நேரடி நடவடிக்கையில் இறங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

வள்ளிப்பிள்ளை தன்னை வல்லிபுரம் காதலிப்பதாகத் தனது தோழிக்குச் சொன்னாள். அவன் தன்னை மணக்கும்படி வாய்விட்டுக் கேட்டதாக

வும் அவன் ஒவ்வொருநாளும் அதற்காகவே வருவதாகவும் தான் இன்னும் ஒரு மறுமொழியும் கூறவில்லையென்றும் தனக்கு அவர் ஏற்ற மாப்பிள்ளை போலத் தெரியவில்லையென்றும் அவருக்கு ஆங்கில அறிவு இல்லையென்றும், மாட்டேன் என்று சொல்லப் பாவமாய் இருக்கிறதென்றும், தான் என்னசெய்வதென்று யோசித்து வருவதாகவும் அவள் சொல்லிப் புளுகினாள்.

இந்த வார்த்தைகளிற் சில இலட்சுமிக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தன. தனக்கு அவன் நிகரில்லை என்று வள்ளிப்பிள்ளை சொன்னதால் தனக்குத்தான் அவன் சரியான சோடி என்று இலட்சுமி நினைத்தாள். ஆனால் தன்னை அவன் காதலிப்பதாக வள்ளிப்பிள்ளை சொன்னது அவளுக்குப் பெரும் வேதனையைக் கொடுத்தது.

பாடசாலைகளுக்கு ஒரு தவணை என்பது மூன்றுமாதம் கொண்டது. அதை ஒரு பருவம் என்றும் கூறலாம். ஒரு பருவகாலத்திலேயே இந்நிகழ்ச்சிகளெல்லாம் நிகழ்ந்தன. அப்பருவத்தின் கடைசிநாள் நெருங்க நெருங்க வள்ளிப்பிள்ளை துடித்தாள். இப்பருவத்திலேயும் விஷயத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவில்லையே, இனிமேல் இதுபோன்ற சந்தர்ப்பம் கிட்டாதேயென்று வருந்தினாள். அப்பருவத்தின் கடைசிநாளன்று, இன்று ஒரு முடிவான தீர்மானத்தை வாய்விட்டு அவரைக் கேட்க வேண்டுமென்று உறுதியான தீர்மானத்தோடு இருந்தாள். ஆனால் நாள் தவறாமல் அவள் வீட்டிற்கு வருகிற மனுஷன் அன்று சொல்லிவைத்தது போல வரவில்லை. மறுநாட் காலை எல்லோரும் அவரவர் ஊருக்குப் புறப்படவேண்டும். ஆகவே இப்பருவத்திலேயும் ஒரு முடிவுக்கு வரமுடியாது போய்விட்டது. இனிக் காகித மூலம் விடுமுறைக் காலத்தில் வல்லிபுரத்திற்கு எழுதுவோம் என்னும் தீர்மானத்தோடு வள்ளிப்பிள்ளை படுக்கைக்குச் சென்றாள்.

ஆனால் அந்தச் சிரமத்தை வல்லிபுரமும், இலட்சுமியும் வள்ளிப்பிள்ளைக்கு வைக்கவில்லை. அவள் எழுதப் போகும் கடிதத்திற்குப் பதில் அவர்கள் இருவரும் சேர்ந்து எழுதிவைத்திருந்தனர். மறுநாட்காலை எழுந்ததும் அக்கடிதம் அவள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

"எங்கள் இருவரையும் சேர்த்து வைத்ததற்கு உனக்கு எங்கள் மனப்பூர்வமான நன்றி! உன்னை அழைத்துவர நாங்கள் இன்று ஆளை அனுப்புகிறோம். வணக்கம்!

இங்ஙனம்,
வல்லிபுரம் இலட்சுமி

(ஈழகேசரி - 6-3-55)

# பரிமள சுந்தரி

பேசுந்தரமோ காதல் பரவசமானால்...

இரணைமடுக் குளக்கட்டில் நின்று பார்த்தால் கண்ணுக்கெட்டிய தூரம்வரை ஒரே நீர்ப்பரப்பாயிருக்கும். அந்தப்பெரிய நீர்ப்பரப்புத்தான் ஒரு நல்லபிள்ளை போலச் சிறிதும் சலனமின்றி அசையாமல் நிற்கிறது. முப்பதடி ஆழமான அந்தப்பெரிய நீர்ப்பரப்பை இந்தச் சிறிய கட்டுத் தாங்குகிறது என்று எங்களுக்கு அதிசயமாக இருக்கும்.

அக்கட்டின் மேற்பரப்பு வண்டிகள், கார்கள், செல்லக்கூடிய போதிய அகலங் கொண்டதாகும். அக்கட்டின் உட்பக்கத்தில் தவறி வீழ்ந்தால் தண்ணீரில் ஆழ்ந்து போகவேண்டியதுதான். வெளிப்பக்கம் கிடு கிடு பாதாளம். விழுந்தால் எலும்பு கூடக் கிடையாது. உலக வாழ்க்கையிலும் இவ்விதம் பல இன்னல்களுக்கிடையில் நிதானமாகக் கால்வைத்துச் செல்லவேண்டும். இவ்வித சிந்தனையில் நான் அக்குளக்கட்டின் வழியே சென்ற பொழுது, சிறிது தூரத்தே ஒரு குடிசை தெரிந்தது. அந்தக் குடிசையின் நீக்கலுக்கூடாகச் சந்திரன் தோன்றிக்கொண்டிருந்தது.

அது ஒரு குடிசை அல்லவென்றும், அது ஒரு வேலி என்றும், அதிலுள்ள துவாரத்தினூடாகச் சந்திரன் தோன்றுகிறதென்றும், முதலில் நினைத்தேன். நெருங்க, நெருங்க அது ஒரு குடிசையென்பது நன்கு தெரிந்தது. குடிசைக்குள் சந்திரன் நிற்கும் அதிசயமென்ன!

குடிசைக்குள் தோன்றிய சந்திரனின் இமைகள் படபடத்தன. பிரமா இப்படியொரு சிருஷ்டியை இந்தப் பெரிய பட்டினங்கள் எல்லாவற்றையும் தவிர்த்து, இந்தக் காட்டின் மத்தியிற் கொண்டுவந்து படைத்தானே என்னே, அவன் போக்கு!

குடிசையில் தோன்றிய சந்திரன் மீது வைத்த கண்ணை என்னால் எடுக்க முடியவில்லை. குளக்கட்டின் விளிம்பில் கால்களை வைத்து எனது நிலை தளர்ந்த போதுதான் வாழ்க்கையின் முடிவில் நான் நிற்கிறேனென்பதை எனது கண்கள் அறிவுறுத்தின. எனது கண்கள் வாழ்க்கையின் இன்னொரு பக்கத்தைப் புரட்ட முயற்சிக்கும் பொழுது, கால்கள் அவற்றோடு ஒத்துழையாமல் வாழ்க்கையின் முடிவிற்கு வழி தேடின. இருமுயற்சிகளையும் தக்க தருணத்தில் முறியடித்து, நேரிய வழியிற் சென்றேன்.

இரண்டு மூன்றடி வைப்பதற்குள் குடிசையிலே தோன்றிய சந்திரனுக்கு ஆகர்ண சக்தியுமிருக்கிறதென்று எனக்குத் தெரிந்து விட்டது. என்னால் அந்தப் பக்கம் பாராமற் செல்லமுடியவில்லை.

குடிசையின் சிறிய நீக்கலுக்கூடாகத் தோன்றிய சந்திரன், இப்பொழுது கால் கை பெற்றுக் குடிசையின் முன்றலில் வந்து நின்றது. என்னை அறியாமல் எனது கால்கள் அக்குடிசையை நோக்கி நடந்தன. அக்கால்கள் செல்லுந்திசை எனக்குத் தெரிந்தும் நான் அதைத் தடாது பாராமுகமாக இருப்பதுபோல இருந்தேன். கிட்ட நெருங்கியதும், ஏன் வந்தோம் என்று சொல்வதற்கு ஒன்றும் தோன்றவில்லை.

இந்த இக்கட்டமான நிலையில் என் மனதின் உத்தரவைக் காத்திராமல், வாய் நெருப்புப்பெட்டி வேண்டும் என்று கூறிவிட்டது. அவளும் கொண்டு வந்துவிட்டாள். "மடைவாயே உனக்கு மூளையில்லையா? நெருப் புப்பெட்டியை வாங்கி என்ன செய்யப்போகிறாய், பீடி, சுருட்டு ஒன்றும் உன்னிடம் இல்லையே" என்று மனம் கேலிபண்ணியது.

"பரவாயில்லை, மன்னித்துக் கொள்ளுங்கள், எனக்கு நெருப்புப்பெட்டி தேவையில்லை. மறந்து போய்க் கேட்டுவிட்டேன். என்னிடம் பீடி சுருட்டு ஒன்றும் இல்லை என்று சொன்னபொழுது அவள் தனக்கு வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, பீடியும் இருக்கிறது என்று சொல்லி எடுத்து வந்து தந்தாள்.

முதலிற் கண்களும் கால்களும் ஒத்துழைக்க மறுத்தன. பின்னர் வாயும் மனமும் ஒத்துழைக்க மறுத்தன. இதெல்லாவற்றையும் அவள் கண்டும், மூளைக்கோளாறு உள்ளவன் என்று கருதி ஓடிமறையாமல், நெருப்புப் பெட்டியும் பீடியும் தந்தாளே, அதொன்றே நான் இப்பிறவிப்பயன் எய்தியதற்குச் சரியென்று எண்ணினேன்.

அவளிடம் ஏதேதோவெல்லாம் கேட்கவேண்டும் என்று என்மனம்

நினைத்த போதிலும், எதைக் கேட்கவேண்டும் என்று தெளிவாக ஒன்றும் தோன்றவில்லை. "பிள்ளை பிள்ளை" என்று வீட்டின் மறு பக்கத்தில் நின்று யாரோ அழைக்கும் சத்தம் கேட்டபொழுது குருவி வாணம் போல் அவள் பறந்துவிட்டாள். அந்தக் காட்சி என் நெஞ்சில் ஆணியால் கீறிவைத்தமாதிரி என்றும் அகலவேயில்லை. "பிள்ளை பிள்ளை" என்ற அந்தச் சத்தம் "ஓடு, ஓடு" என்று என்னை எச்சரிப்பது போல இருந்தது. அக்குரல் அவ்வளவு கடினமாக இருந்தது.

என் மனதை அவளிடத்தில் விட்டு அதற்கீடாக, அவள் தந்த நெருப்புப் பெட்டியையும், பீடியையும் கொண்டுவந்தேன். அந்த நெருப்புப்பெட்டியும், பீடியும் பெரிய குண்டுப்பாரமாக என்மடியில் கனத்துக் கொண்டேயிருந்தது.

வடமாகாணத்தின் செல்வச் சுரங்கம் போன்ற இரணைமடுக்குளத்தின் கரையில் அரசாங்கம் காட்டையளித்துக் காணியற்ற குடும்பங்களை நூற்றுக்கணக்கில் குடியேற்றியது. இப்புதிய குடியேற்றத்தினால் பல புதிய தொழில்களும் அங்கே தோன்றின. அங்கே குடியேறிய சனங்கள் போக்குவரவு வசதியற்றிருந்தார்கள். பஸ் பாதையிலிருந்து ஏழு எட்டு மைல் உள்ளுக்கு அக்குடியேற்றப்பகுதி இருந்தது. பஸ்ஸைப்போல் உழைக்கக் கூடியதும் காரைப்போல் பாவிக்கக் கூடியதுமான இரண்டுக்கும் இடைத்தரமானதும் வான் என்று வழங்கப்படுவதுமான வாகனத்தைச் சிலர் வாங்கி பஸ்ஸைப்போல் யாழ்ப்பாணத்திலிருந்து ஓட விட்டார்கள். குடியேற்றப்பகுதியில் வசிப்பவர்கள் அந்த வான்களில் ஏறினால்தான் நேரே தங்களுடைய இடத்தில் இறங்கலாம். பஸ்ஸில் ஏறினால் பின்னர் ஏழு எட்டு மைல் நடந்தே செல்லவேண்டும். அன்றியும் பஸ்வண்டி போலன்றி அதிலுள்ள தொழிலாளிகள் தங்கள் முதலாளிக்கு உழைப்புப் பெருக்கித் தங்கள் தொழில் நிலைக்க வேண்டுமென்னும் கருத்தால், சனங்களுடன் மரியாதையாகவும், அவர்கள் வசதிக்கேற்றபடியும் பழகினார்கள். அதனால் பஸ் எல்லாம் வெறுமையாக ஓட, வான் எல்லாம் வெளியிலேயும், மேலேயும் சனங்களைக் கொண்டு சென்றது. பஸ் முதலாளிகளுக்கும், வான்காரர்களுக்கும் இடையில் பகைமை மூண்டது. இப்பகைமையினால் ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சியைப் பின்னர் கூறுகிறேன். மேற்சொல்லப்பட்ட வானில் நான் ஒரு தொழிலாளி. வானைக் கொண்டு வந்து குடியேற்றப்பகுதியில் மாலையில் நிறுத்திவிட்டு உல்லாசமாக இரணைமடுக்குளத்தைப் பார்க்கச் சென்றபொழுதுதான் அந்தக் குடிசை யின் சிறு நீக்கலினூடே சந்திர உதயத்தைக் கண்டேன். சந்திரோதைய நேரத்தில் காதல் உதயம் செய்யும் என்பது எனக்கு அப்பொழுது தெரியாது.

மறுநாள் நாங்கள் வான் கொண்டுவந்து நிறுத்தச் சிறிது நேரம் சென்றுவிட்டது. அதனால் நான் குளக்கட்டுக்கு உலாவச் செல்லவில்லை.

இரணைமடுக்குளத்திலிருந்து ஒரு புதிய வாய்க்கால் அக்குடியேற்றப் பகுதிக்கு ஊடாகச்செல்கிறது. அதில் எந்நேரமும் சலசலவென்று தண்ணீர் ஓடிக்கொண்டேயிருக்கும். நாங்கள் ஒவ்வொரு நாளும் அதில் ஸ்நானஞ்செய்வது வழக்கம். அன்று மாலை நாங்கள் அதில் ஸ்நானஞ் செய்துகொண்டு வருகிறபொழுது ஒரு கடதாசித்தோணி தண்ணீரில் மிதந்து வந்தது. அதை ஒருவரும் கவனிக்கவில்லை. அது நான் நீராடின இடத்தில் நீராடின நீர்ச்சுழற்சியினால் வந்து ஒருமுறை சுழன்று தாமதித்தது. அப்பொழுது அதன் அருகில் நெருப்புப்பெட்டி என்று ஒரு வாக்கியம் எழுதப்பட்டிருந்தமை தெரிந்தது. உடனே என் மனதில் சில கற்பனைகள் எழுந்தன. ஒருவேளை எனது கற்பனைகள் சரியாக இருந்தாலும் இருக்கலாம் என்ற எண்ணத்தில் கடதாசித் தோணியை எடுத்து வெளியில் வீசினேன். அது ஒரு புதரருகில் சென்று விழுந்தது.

அந்தத் தோணியில் ஒரு சினிமாப்பாட்டு எழுதியிருந்தது. கடைசிவரியைப் பார்த்தபொழுது, எனக்காக அதே சந்திரன், நீர்ல்விட்ட காதற் தோணி என்பது தெரிந்தது. அந்தத் தோணி அவளின் புத்தியின் கூர்மையையும், கல்வி அறிவையும், காதலின் ஆழத்தையும் நன்கு புலப்படுத்தியது. அதில் கண்டவரிகள் பின்வருமாறு:

"புதப்பெண்ணின் மனதைத்
தொட்டுப் போறவரே - உங்கள்
எண்ணத்தைச் சொல்லிவிட்
டுப் போங்கோ
இளம் மனதைத் தூண்டி
விட்டுப் போறவரே - உங்கள்
மர்மத்தை சொல்லி விட்டுப்
போங்கோ
நெருப்புப்பெட்டியை வாங்
கிக் கொண்டு போறவரே - எந்தன்
மனதைத் தந்துவிட்டுப்
போங்கோ"

அடுத்தநாளும் எனக்குப் போக வசதியில்லை. அடுத்தநாளும் காதற்றோணி தூது வந்தது. அதில் மேற்கண்ட வரிகளுடன் இரண்டொருவரி கூட எழுதப்பட்டிருந்தது.

"என் மனதைப் - பற்ற
வைத்துப் போறவரே - இங்கு
ஏங்கி - இருப்பதை இத்
தோணி தெரிவியாதோ?"

இந்தத் தோணி என்மனதை உருக்கிவிட்டது. அன்று இரவு அவளிடம் சென்றேன். உண்மைச் சந்திரன் மேலே பிரகாசித்துக் கொண்டுநின்றான். ஒரு வாழை மரத்துக்கருகில் நிறுத்தி வைக்கப் பெற்ற பதுமைபோல ஓர் உருவம் நின்றது. அந்த வாழையையும், அவளையும் மாறி மாறிப் பார்த்தேன். அது வஞ்சனையின்றி நாலாபக்கமும் தனது அகன்ற இலைகளைப் பரப்பி அழகிய குலையொன்றோடு விளங்கியது. அதைப் பக்குவமாக வளர்த்துத் தானே பழுக்கவிட்டு உண்டால் என்ன ருசியாயிருக்கும்! பிஞ்சிலே வெட்டிப் புகை ஊதுவோர் பலர் இருக்கின்றனரல்லவா? தோணிகள் இரண்டும் கிடைத்தன, என்று வாழை மரத்தின் கீழேநின்ற உருவத்திடம் கூறினேன். அப்படியானால் கடவுளும் எங்கள் பக்கம் தான் என்று அந்த உருவம் கூறியது. அச்சந்தர்ப்பத்தில் படலைக்கருகில் கனைப்புச் சத்தத்தைக் கேட்டு அவள் அகன்றாள். நானும் வாழைமரங்களில் மறைந்து வழி தேடிப்பிடித்து வந்துசேர்ந்தேன்.

அடுத்தநாள் நேரத்தோடு குளக்கட்டு நோக்கிச் சென்றேன். முதல் நாள் "பிள்ளை பிள்ளை" என்று கூப்பிட்டதும் இரண்டாம் நாள் படலைக் கருகிற் கனைத்ததும், கொடூரம் நிறைந்த கண்களையுடையதுமான ஒரு உருவத்துடன் குறித்த சந்திரன் குளக்கட்டில் நின்று உலாவியது. பூனையும், கிளியும் போன்று அவ்விருவுருவங்களும் இருந்தன. கிளி பூனையிடம் ஏதோ சொல்லப் பூனை என்னை நீ யார் என்ற தோரணையில் விறைப்பாய்ப் பார்த்தது. நான் யார் என்று சொன்னதும் என்னைப் பெரிதும் வரவேற்பார்கள் என்று நான் நினைத்தேன். அவ்வூரிலுள்ள எல்லோருக்கும் எனது தயவு தேவை. ஆனால் நான் நினைத்ததற்கு மாறாக நான் யார் என்று சொன்னதும் பூனையின் முகம் முன்னரிலும் கடுமையாகியது. அவள் முன்னே செல்ல, அவன் பின்னே செல்ல ராகுவால் மறைக்கப்பட்ட சந்திரன்போல அத்தோற்றம் இருந்தது. நானும் இன்று கிரகணகாலம் என்று நினைத்துத் திரும்பினேன். பின்னொருநாள் நான் அங்கே சென்றபொழுது ஒரு வாலிபன் அவளோடு பேசிக்கொண்டு நின்றான். அவனும் எனக்குத் தெரிந்தவன்தான்.

குடியேற்றப்பகுதியில் குடியேறி வசிப்பவர்களின் சுகதுக்கங்களைக் கவனிக்கவென்று சிலரை அரசாங்கம் நியமித்திருந்தது. அவர்களில் ஒருவனே அவ் வாலிபன். அவன் பெயர் துரைச்சாமி. நான் அவளோடு

பேசிக்கொண்டிருப்பதை அவனும், அவன் அவளோடு பேசிக் கொண்டிருப் பதை நானும் பலமுறை கண்டிருக்கிறோம். வெளியில் ஒரு மாதிரி இன்முகம் காட்டியபோதிலும் உள்ளுக்குள் ஒருவரை யொருவர் உறுமிக் கொண்டேயிருந்தோம்.

துரைச்சாமி தன்னோடு அவசியமின்றிப் பேசிக் கொண்டு நிற்பது தனக்குப் பிடிக்கவில்லையென்றும் அவன் தகப்பனாரின் சினேகிதன் என்றும், அவன் தொந்தரவிலிருந்து எவ்விதம் நீங்குவது என்று தனக்குத் தெரியவில்லை யென்றும் அவள் எனக்குச் சொன்னாள். அவள் என்னைப்பற்றி அவனுக்கு ஏதும் சொன்னாளோ தெரியாது. நான் அங்கே செல்வது அவள் தகப்பனாருக்குச் சிறிதும் பிடிக்கவில்லையென்பதும் அவன் கொண்டு திரிகிற பெரிய கத்தியால் எனது தலையை ஒரு நாளைக்கில்லை ஒரு நாளைக்கு சீவுவான் என்பது எனக்குப் புரிந் திருந்தது. என்ன தெரிந்திரிந்தும் அவள் இடத்துக்கு என்னால் போகாமல் இருக்க முடியவில்லை.

ஒரு நாள் துரைச்சாமி என்னிடம் வந்து நீ அந்த வீட்டுக்குப் போகக்கூடாது. நீ அங்கே தனக்கு விருப்பமின்றி அடிக்கடி செல்வதாக அந்த வீட்டுக்காரன் எனக்கு முறைப்பாடு தந்திருக்கிறான் என்று எனக்குச் சொன்னான். எனக்கு நெஞ்சில் மூண்டிருந்த புகை எல்லாம் அவன் ஊதிய சொற்களால் அள்ளுண்டு பெருங் கனலாக எழுந்தது. நான் போகிற இடத்தைக் காட்ட நீ யார் உன் தலையையும் அவன் தலையை யும் சேர்த்துச் சீவி விடுவேன் கவனமாகத் திரி என்று கத்திவெட்டுப்போல கதையைவிட்டேன். என் சொல் அம்புகள் அவன் உடல் முழுவதும் சென்று தாக்க அவ்விடத்தில் நிற்கலாற்றாது சென்று மறைந்து விட்டான். அங்கே நின்றவர்கள் கைகொட்டிச் சிரித்தார்கள்.

என்ன இருந்தாலும் எனக்கு ஆபத்துத் தொடருகிறது என்பதை எனது அந்தராத்மா கூறியது. என்ன இருந்தாலும் அவள் தொடர்பையும் விடுவதில்லையென்ற ஒரு பிடிவாதமும் வளர்ந்து வந்தது.

அவளை இப்பொழுது சந்திப்பது அரிதாகிவிட்டது. தளர்ந்திருந்த கட்டுக்காவல் எல்லாம் இறுக்கப்பட்டன. இந்நிலையில் அந்தப் பரந்த இரணைமடுக் குளத்துத் தண்ணீர்தான் எங்களுக்கு கைதந்து உதவியது. ஒரு நாளைக்கு ஒரு கடதாசித் தோணியை அது என்கையிற் கொண்டு வந்து சேர்த்தது.

ஒரு நாள் இரவு பத்துமணிவரையில் நான் அவளுடைய வீட்டுக்குச் சென்றேன். ஒழிந்து மறைந்து அவளிருக்கும் அறைக்கருகில் பலகணியின்

பக்கலில் போய்நின்றேன். வெளிவிறாந்தையில் அவள் தகப்பனாரும் துரைச்சாமியும் பேசிக் கொண்டிருந்தார்கள். இரவில் நான் வானுக்குள் தான் படுப்பது வழக்கம். என்னை வானுக்குள் வைத்து நெருப்புக் கொழுத்தி விடுவதென்று அவர்கள் திட்டமிட்டனர். உடனே திரும்பிச் சென்று எனது முதலாளியின் வான் எரிந்து போகாமல் காப்பாற்றுவது எனது கடமை, அதற்காகத் திரும்பிப் போவதற்குக் கால் எடுத்தபொழுது ஜன்னல் திறபட்டது. அவள் எட்டிப்பார்த்தாள். என்னையென்று தெரிந்ததும் எனது கையைப் பிடித்து இழுத்தாள். அரசாங்கம் கட்டிக் கொடுத்த குடிசைகளின் ஜன்னல்களுக்கு என்போன்றவர்களின் இக்கட்டான நிலைமைகளை உத்தேசித்துக் கம்பி போட்டுக் கொடுக்கவில்லை. நான் உள்ளே சென்றுவிட்டேன்.

நான் உள்ளே சென்ற சிறிது நேரத்தில் அடுத்த வீட்டுக் கிழவி ஒருத்தியைக் கூட்டிக்கொண்டு வந்து வெளியில் படுக்க வைத்து விட்டு அவர்கள் இருவரும் சென்று விட்டார்கள். போகும் போது "பிள்ளை பிள்ளை" என்று அவள் தகப்பன் கூப்பிட்டான். அவள் ஒன்றும் பேசவில்லை. எனது அணைப்பில் மெய்மறந்து இருந்தாளோ, அன்றேல் உண்மையில் நித்திரையாகி விட்டாளோ தெரியாது. அவர்கள் போய்விட்டார்கள். எனது முதலாளியினுடைய பெருந்தொகைப் பெறுமதி வாய்ந்த முதல் எரிபடப் போகிறதே, அதைத் தடுக்க வேண்டுமென்ற கடமை ஒருபக்கம், கிடைத்தற்கரிய இவ்வரிய சந்தர்பத்தைக் கைநழுவ விட்டுப் போக முடியாத காதல் ஒருபக்கம்; என்னை அமைதி குலையச் செய்தது. நான் உடனே போகவேண்டும் என்று துடித்தேன். அவள் வான் எரிந்து போனால் பணத்தைத் தேடி இன்னொன்றை, வாங்கிக் கொள்ளலாம். ஆனால் நீங்களில்லாவிட்டால் உங்களைப் போன்ற ஒரு சிறந்த தொழிலாளியை உங்கள் முதலாளி பெறமுடியுமாவென்று வாதாடினாள். அவள் என்ன கூறின போதிலும் அந்த இன்பப் பொழுதை இன்பமாகக் கழிக்க என்னால் முடியவில்லை.

அவள் பெயர் பரிமளம். பரிமளவாசனை அவளிடமிருந்து வீசாவிட்டாலும் அவள் சேர்க்கை பரிமளம் நிறைந்ததுபோன்ற ஓர் உணர்ச்சியை எனக்களித்தது. அவள் ஆபரணங்கள் ஒன்றும் அணிந்திருக் கவில்லை. பட்டுப் பீதாம்பரம் உடுத்திருக்கவில்லை. இருந்தும் அவள் வர்ணிக்க முடியாத அழகுடையவளாகவே இருந்தாள். அவளுடைய பெயர் அவளுடைய அழகுக்கேற்ப நீண்டதாயில்லையென்று நினைத்துப் பரிமளசுந்தரி என்று நான் அழைத்தேன். நெருக்கமாகப் பொருத்தப்படாத ஜன்னற் பலகை இடைவெளிக்கூடாகக் கீறு போல் அவள் கன்னத்தில் பட்ட நிலா வெளிச்சம் எனக்கு ஒரு ஜாலவித்தை காட்டியது. அவள்

கண்கள் குங்கும நிறமோ சந்தன நிறமோ மாந்துளிர் நிறமோ பூந்துணர் நிறமோ யாது நிறமெனக் கூறமுடியாது. மாறி மாறிச் சாலம் செய்தது. முத்துப்போல் பல்லழகும் மூக்கினழகும் நெற்றியும் விழியும் கன்னத்தி லாடும் கூந்தலும் அந்த இருட்டில் தோன்றிய அற்ப வெளிச்சத்தில் அற்புத வித்தை காட்டின. அவள் தன் செம்பவளவாய் திறந்ததும் சிற்றுரையின் சிற்றொலி என் உடல் முழுவதும் பரந்து என்னைப் புஷ்பரித்தது. அவளைப் பேசவிடாது ஆட்விடாது அசையவிடாது பல்லூழிகாலம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்று தோன்றியது.

அந்த வீட்டையும் அந்தச் சூழலையும் இந்த உலகத்தையுமே மறந்து ஒரு புதிய உலகத்தில் இருந்தோம். இவ்விதம் வர்ணிக்க முடியாத நிலையில் நாங்கள் இருக்கும் தருணத்தில் பரிமளசுந்தரியின் தகப்பனும் வேறுசிலரும் அங்கே வந்து சேர்ந்தார்கள். நாங்கள் எங்களை மறந்து இருந்தமையால் எங்கள் சம்பாஷணைகளின் அரவமோ, சிரிப்பின் ஒலியோ வேறு அரவமோ அவர்களுக்குக் கேட்டிருக்கக்கூடும். பரிமளசுந்தரியின் தகப்பன் கதவைத்திற என்று வந்து கதவில் இடித்தான். அவள் நித்திரை போல பாசாங்கு செய்தும் அவன் விடுவதாயில்லை.

பரிமளத்தின் தகப்பனின் பெயர் பழனிச்சாமி. அவன் அங்கேவந்து குடியேறமுன்னர் பஸ்கம்பனி முதலாளி ஒருவரிடம் கூலி வேலை செய்து வந்தான். இப்பொழுது பஸ்கம்பனிக்காரர் உழைப்பை வான்காரர் குறைப்பதால் ஒரு வானைக் கொழுத்திவிட்டால் அதனால் ஏற்படக்கூடிய செலவுகள் எல்லாவற்றையும் தருவதாக பஸ்முதலாளி பழனிச்சாமியிடம் கூறியிருந்தான்.

எனது காதலுக்குப் போட்டியாக வந்த துரைச்சாமியும் தூபம் போட அன்று எங்கள் வானைக் கொழுத்தப் பழனிச்சாமி புறப்பட்டுப் போனான். அன்று நல்லவேளையாக யாருக்கோ வருத்தமென்று ஆஸ்பத்திரிக்குப் போவதற்காக டிரைவர் வானை எடுத்துக் கொண்டு போய்விட்டான். பழனிச்சாமி போனதும் உடனே திரும்பிவந்த காரணம் அதுதான்.

பழனிச்சாமி சிலசமயம் உள்ளேயும் சிலசமயம் வெளியேயும் படுப்பது வழக்கம். பரிமளசுந்தரி தாயில்லாப்பெண். பழனிச்சாமியும் பரிமளசுந்தரியுமே தனியே வசித்து வந்தார்கள். இரவில் வேலைக்குப் போகிற நேரங்களிற் போய்வந்து வெளியில் படுத்து விடுவான். மற்றைய வேளைகளில் உள்ளே படுப்பான். அன்று வெளியில் படுப்பானென்று நாங்கள் நிச்சயமாக நம்பினோம். வழக்கத்துக்கு மாறாக பரிமளம் நித்தரை போலக் கிடந்தும் அவன் கதவிற் தட்டிக் கதவைத்திறக்கும்படி சத்தமிட்டான். நான் அந்தநேரத்தில் ஜன்னலால் குதித்து வெளியே

போவதும் ஆபத்து. எப்படியும் கண்டு விடுவார்கள். வெளியில் பலருடைய நடமாட்டமும் இருந்தது. ஜன்னலருகில் யாரும் நிற்கிறார்களோ தெரியாது. நாங்களிருவரும் பதறினோம்.

தார் வெற்றுப் பீப்பாக்கள் இரண்டை அந்த அறையின் உள் சுவருக் கருகில் நிறுத்தி அதன் மேல் ஒருபலகையைப் போட்டு அதன் மேல் பழனிச்சாமி படுப்பது வழக்கம். அந்தத் தார் வெற்றுப் பீப்பாவுக்குள் என்னை இறங்கி இருக்கும்படி பரிமளசுந்தரி வேண்டினாள். நானும் வேறு வழியின்றி அதற்குள் இறங்கி இருந்துகொண்டேன்.

பரிமளசுந்தரி சென்று கதவைத் திறந்தாள். பழனிச்சாமி உள்ளே வந்தான். எனது சால்வை அவள் படுக்கையில் என்பது எனக்கு அப்போது தான் நினைவு வந்தது. பரிமளம் கதவைத் திறந்தவுடன் ஓடிவந்து சால்வையை மறைத்துக்கொண்டு படுத்துவிட்டாள். பழனிச்சாமி நல்ல வெறியில் வந்தான். வெளியில் நின்றவர்களைப் போகும்படி சொல்லிவிட்டுக் கதவைப் பூட்டிக் கொண்டுவந்து படுத்து விட்டான்.

பழனிச்சாமி வாயில் பெரிய ஒரு புகையிலைச் சுருட்டை வைத்திருந் தான். அதிலுள்ள சாம்பலை வெற்றுப் பீப்பாவுக்குள் விழும்படி தட்டினான். எனது கண்நிறையப் புகையிலைச் சாம்பல். கண் உருட்டி எரிந்தது. இருக்கவோ இடங்காணாது சர்வ எலும்புகளும் முறிவதுபோல் வலித்தது. வானில் மிதிபலகையிலும் அருகுப் பலகையிலும் உள்ளேயும் வெளியேயும் ஒற்றைக்காலிலும் ஒற்றை விரலிலும் கைபிடியிலும் அந்தர நிலையிலும் நின்று ஜாலவித்தை பழகி அனுபவப்பட்டமையால் அந்த வெற்றுப் பீப்பாவுக்குள் அடங்கி இருக்க முடிந்தது. ஏனையோர், அரைக்கணமும் இருக்கமாட்டார்கள்.

இவ்வளவு வேதனையையும் அனுபவித்துக் கொண்டிருந்த எனக்குப் போதாதென்று புகையிலைச் சாய அபிஷேகமும் செய்யப்பட்டது. அவன் வாய் நிறைய வைத்திருந்த புகையிலைச் சாயத்தை எனது முகத்தில் உமிழ்ந்து விட்டான். வெற்றுப் பீப்பாவுக்குள் உமிழ்ந்தான்.

வானில் ஒருமுறை பின்னுக்கு நான் நின்று போன போது முன்பாகத் தில் இருந்த ஒருவன் உமிழ்ந்த எச்சிலில் ஒரு துளி எனது கையில் பட்டுவிட்டதென்று வானை நிறுத்தி அவனை இறங்கும்படி கூறினேன். மற்றவர்கள் வேண்டுதலால் பின் அவனை ஏற்றிக்கொண்டு சென்றேன்.

அவன் எனது முகத்தில் ஒரு கொத்து எச்சிலை உமிழ்ந்தபொழுது இந்த ஞாபகம்தான் எனக்கு வந்தது. ஒரு பரிமளசுந்தரிக்காகச் சர்வ

துர்க்கந்தங்களையும் நரக வேதனைகளையும் அனுபவித்தேன். சிறிது நேரத்தின் பின் நெருப்போடு கூடிய புகையிலைச்சுருட்டும் அவன் வாயிலிருந்து நழுவி எனக்குமேல் விழுந்தது. வெற்றுப் பீப்பாவின் வாய் முழுவதையும் பலகை மூடியிருந்தால் இவ் வேதனைகள் இராது. ஆனால் நானும், மூச்சு விட முடியாது பலகை பீப்பா வாயின் ஓரத்தை மூடாதிருந்தபடியால் அவனுக்கு உமிழவும் எனக்கு மூச்சுவிடவும் வசதியாக இருந்தது.

புகையிலைச் சுருட்டு விழுந்து சிறிது நேரத்தால் பெரிய குறட்டைச் சத்தம் கேட்டது. அது அவன் ஆழ்ந்த நித்திரை என்பதைக் காட்டியது. அப்பொழுது நேரம் அதிகாலை, நான்கு மணியிருக்கும்.

பரிமளசுந்தரி சந்தடியின்றி எழும்பி பழனிச்சாமி படுத்திருந்த பலகையை ஆட்டாமல் அசையாமல் நான் இருந்த வெற்றுப்பீப்பா மூடி வெளியே தெரியும்படியாக ஒரு பக்கமாகச் சிறிது அசைத்தாள். நான் வெளியே வந்ததும் முன்போல் பலகை வைக்கப்பட்டது. அத்தருணம் பார்த்து யாரோ கதவை இடித்தார்கள். கதவைத் திறக்காமல் காலந் தாழ்த்தினால் உள்ளே நித்திரையாயிருக்கும் பழனிச்சாமி எழும்பி என்னை எப்படி உள்ளே வந்தாய் என்று கேட்கக்கூடும். ஆகையால் கதவை உடனே திறந்தோம்.

ஆறு ஏழு மதுபரிபாலன உத்தியோகஸ்தர்கள் கிராமவிதானை சகிதம் நின்றார்கள்.

பழனிச்சாமி கஞ்சாச் செடிகளை உற்பத்தி செய்திருப்பதாகக் கூறி அவனை நித்திரையால் எழுப்பி அழைத்துக் கொண்டு சென்று மலகூட அடைப்பிற்குள் இரண்டு தகர பீப்பாக்களில் நின்ற கஞ்சாச் செடிகளையும் கைப்பற்றி பழனிச்சாமியையும் ஏற்றிக் கொண்டு சென்றார்கள். துரைச்சாமியின் ஏவுதலினால் தான் அந்தக் கஞ்சாச் செடிகளைப் பழனிச்சாமி உண்டாக்கினான். எனது முதலாளியின் செல்வாக்கை உபயோகித்துப் பழனிச்சாமியை நிரபராதியாக விடுதலையாக்கிக் கொண்டு வந்து சேர்த்தேன்.

இப்பொழுது பழனிச்சாமி வெளியில் படுத்துறங்குவது வழக்கம். எனதும் பரிமளசுந்தரியினதும் இன்ப வாழ்க்கையில் எவ்விதத்திலும் அவர் குறுக்கிடுவதில்லை.

(ஈழகேசரி - 8-1-56)

# செய்ந்நன்றி

● **எனக்குச் சிறுவயது தொடக்கம் நாவற்பழத்தில் ஒரு ஆசை. நாவற்பழம் இங்கே காட்டில் கிடைக்கும் ஒரு பழம். எனது குடிசைக்கும் அருகேயுள்ள ஒரு பாடசாலைக்கும் இடையேயுள்ள எல்லை வேலியில் ஒரு பெரிய நாவல் மரத்தில் நிறையப் பழங்கள் இருந்தன.**

எங்களுடைய நாளாந்த வாழ்க்கையில் "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்று இளமையிலே படித்த குறள் மனதில் தோன்றி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உறுத்திக் கொண்டிருக்கிறது. இது சிறப்பானதொரு கீழத்தேசப் பண்பாடாகும்.

இந்தச் செய்ந்நன்றியைப் பற்றி எனக்குப் பல சந்தர்ப்பங்களிற் பெரிய விசாரம் ஏற்படுவதுண்டு. செய்ந்நன்றி என்பதன் சரியான பொருள் அவரவர் மனச்சாட்சியைப் பொறுத்தது தானா? இதோ இந்தக் கதையைக் கேளுங்கள்.

கிரகங்கள் எல்லாம் தாமிருக்கும் வீட்டுக்கு ஏழாம் வீட்டை நோக்கும். சனியின் நோக்குத் தீமையையும் குருவின் நோக்கு நன்மைகளையும் விளைவிக்கும் என்பது சோதிட சாத்திரத்தின் பொதுவிதி. கிரகங்களின் சம்பவம் இப்படியிருக்க மனிதர்களின் நோக்கமும் நோக்கினவரின் தன்மைக்கேற்ப நன்மையோ தீமையோ விளைவிக்கும். எனது நோக்கம் நன்மையோ தீமையோ நோக்கப்பட்டவர்களுக்கு விளையாவிட்டாலும், வாசகர்களுக்கு ஒரு கதை கூறக்கூடிய அளவு ஒரு சிறு நன்மை விளைவித்திருக்கிறது.

நான் இலங்கையின் வடபகுதியிற் கூறாய்க்குளம் என்ற இடத்தில் வசிக்கின்றேன். இப்பகுதி அடர்ந்த காடுகளையுடையது. அரசாங்கம் இப்பகுதிக் காடுகளை அழித்து வீடுகளை அமைத்து, ஏழைச்சனங் களுக்கு கொடுத்து வருகிறது. காடுகளை அழிக்கவும், வீடுகளை கட்டவும் பெருந்தொகையானோர் வேலை கொள்ளப்படுகின்றனர். இங்கேயுள்ள தொழிலாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் வரும் தபால்களை விநியோகிப்பது எனது கடமையாகும். எனது வேலை ஒவ்வொருநாளும் நாலுமணிக்கு முடிந்துவிடும்.

எனக்குச் சிறுவயது தொடக்கம் நாவற்பழத்தில் ஒரு ஆசை. நாவற்பழம் இங்கே காட்டில் கிடைக்கும் ஒரு பழம். எனது குடிசைக்கும் அருகேயுள்ள ஒரு பாடசாலைக்கும் இடையேயுள்ள எல்லை வேலியில் ஒரு பெரிய நாவல்மரம் நின்றது. அந்த நாவல்மரத்தில் நிறையப் பழங்கள் இருந்தன. நான் எனது வேலை முடிந்ததும், நாவற்பழம் தின்பதற்காக நாவல்மரத்தில் ஏறினேன். இந்த நாவல்மரத்தில் இருந்து கொண்டு, மேற்கூறிய கிரகங்களைப் போலப் பாடசாலையின் ஜன்னலைப் பார்த்தபொழுதுதான் இந்தக்கதையின் வித்துத் தோன்றியது.

கூறாய்க்குளம் பாடசாலையிற் படிப்பிக்கும் சின்னத்தங்கம் என்ற ஆசிரியை பொதுப்பார்வைக்கு ஒரு சின்னத்தங்கந்தான். கிட்டப் போய்க் கூர்ந்து பார்த்தால் கண்கள் சிறிது விசாலமானதாகவும், ஒட்டி உலர்ந்த உடலை உடையவளாகவும் தோற்றமளிப்பாள். ஒரு பெண் உயிர் வாழ்வதற்கு எவ்வளவு தசை வேண்டுமோ அதற்குச் சிறிதும் அதிகம் இல்லாமல் அமைந்த தசையையும், எவ்வளவு உயரம் இருந்தாற் குற்றம் என்று சொல்லாமல் இருப்பார்களோ அவ்வளவு உயரத்தையும், தங்கநிற மேனியையும், பருவ எழிலையுமுடையவள் சின்னத்தங்கம். அவளது முழு உடலையும் நோக்கி ஒரு குறிப்புச் சொல்லவேண்டுமா னால், அவளுடைய கண்களிற் பரிதாபகரமான இரத்தல் நோக்குடைய பார்வை தோன்றுவதைக் காணலாம். அவள் எவரோடும் சகசமாகப் பழகுவாள். அந்நியரோடும் கூச்சமின்றி நடமாடுவாள். நடனம், கூத்து ஆகியவற்றை அந்நியரின் மத்திலும் கூச்சமின்றி மாணவருக்குச் செய்து காட்டிக் கற்பிப்பாள். இவைகள் எல்லாவற்றையும் பொதுவாக நோக்கும் ஒருவர், சின்னத்தங்கம் ஆசிரியைத் தொழிலுக்கென்றே படைக்கப்பட்டவள் இல்லற வாழ்க்கை வாழ்ந்து வீட்டுமனைவியாகவிருக்கப் படைக்கப்பட்டவளல்லள் என்று கூறக்கூடும். அவளுடைய அதிகாரிகளும் உடன் ஆசிரியர்களும் "அவளொரு இனம்" "கெட்டிக்கார ஆசிரியை" என்ற அளவிற் பழகினர்.

எங்கள் கந்தோருக்கு அண்மையிலிருந்த பண்டசாலையை இரவிற் பொன்னுத்துரை என்ற ஒரு வாலிபன் காவல் காத்துவந்தான். பொன்னுத் துரை யாழ்ப்பாணத்திற் பெரிய இடத்துப் பையன். இளமையில் தந்தை இறக்கவே, படிப்பைக் குழப்பிக்கொண்டு, காவாலியாகத் திரிந்தான். அவனின் உறவினர் யாரோ அவனை அழைத்து வந்து இந்த வேலையில் சேர்த்துவிட்டனர். அவன் தனது சம்பளத்தை எடுத்துத் தானே செலவழித்து வந்தான். காவற்கார வேலை பார்ப்பவனெனினும் கண்ணியமானவன் போல் வாழ்ந்துவந்தான். கண்ட கண்ட கூட்டங்களிற் சேராமல் மிடுக்காகத் திரிந்தான். நாணயஸ்தனாகப் பழகினான். ஒரு முரட்டுப் பிடிவாதமும் அவனிடம் இருந்தது. அதிகாரிகளும் அவனைக் கண்ணியமாக நடத்தினர். எல்லாரினதும் நம்பிக்கைக்குப் பாத்திரமுள்ளவனாக விளங்கினான்.

அவனுக்கு ஒருநாள் இரவு பாம்பு கடித்துவிட்டது. உடனே அலறிக் கொண்டு மயங்கி வீழ்ந்துவிட்டான். அவனுக்கு இங்கேயாருமில்லை. நான் உடனே அருகேயுள்ள கிராமத்தில் ஒரு வண்டி பிடித்து அவனை ஏற்றிக்கொண்டு பத்து மைல் தூரத்திலுள்ள விஷவைத்தியரிடம் கொண்டு சென்றேன். இரண்டு வாரம் சம்பளமற்ற லீவும் எடுத்துக்கொண்டு இரவுபகல் நித்திரையின்றி அவனைப் பராமரித்துச் சுகப்படுத்திக் கூட்டிக் கொண்டுவந்தேன். இதை அவனுக்குச் செய்த நன்றியாக நான் கருதவில்லை. எனது கடமையாகக் கருதிச் செய்தேன். இச்சம்பவத்தின் பின் அவன் என்னுடைய சினேகிதனாக நெருங்கிப் பழகினான். உண்மையில் நாங்கள் இருவரும் உற்றநண்பர்களாக விளங்கினோம்.

சின்னத்தங்கம் என்ற ஆசிரியை நாங்கள் இருவரும் வசிக்கும் குடிசைக்கு எதிரில் சிறிது தூரத்தில் தனது தாயோடு வசித்து வந்தாள். அவளுடைய வீட்டுக்கு நான் மாலைவேளையிற் போவது வழக்கம். அநேகமாக இரவு எட்டு மணிவரையிலும் அங்கேயே இருப்பேன். அவர்கள் துணையின்றித் தனியேயிருந்தமையால் அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்து கொடுப்பேன். விறகு பிளந்து கொடுப்பேன். தண்ணீர் அள்ளிக் கொடுப்பேன். கடையிற் சாமான்கள் வாங்கிக் கொடுப்பேன். நான் ஒரு நாளைக்குப் போகாவிட்டாலும் அவர்கள் என்னைக் கூப்பிடுவார்கள். நல்ல பண்டஞ் செய்தால் எனக்குத் தராமல் விடமாட்டார்கள்.

அவர்களோடு நான் அந்நியோன்னியமாகப் பழகுவது பொன்னுத்துரைக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் கெட்டவர்கள், அவர்களோடு நீ அதிகம் பழகக்கூடாது, உனது நல்லபெயரும் அழிந்துபோகும் என்று எனக்குச் சொல்வான். நான், என்ன இருந்தாலும் பெண்கள்; துணையற்றவர்கள்; நல்ல பெயரைப் பார்த்து, மனிதனாகப் பிறந்தவன் இத்துணை உதவியா

வது செய்யாதிருப்பதா? சொல்லுகிறவர்கள் சொல்லட்டும் என்று சொல்வேன்.

உண்மையில், அவர்களோடு பழகுவதாற் குசுகுசு கதைகள் பரவியதோடு, கந்தோரில் அதிகாரிகளும் என்னோடு ஒருமாதிரிப் பேசினர். சின்னத்தங்கத்தின் பழக்கவழக்கமும் எனக்குப் பிடிக்கவில்லை. தான் ஒரு இளம்பெண் என்ற நினைப்பு அவளுக்கு இருந்ததாகத் தெரிய வில்லை. அவள் ஆசிரியை. நான் ஒரு தபாற்சேவகன். எங்கள் இருவரையும் சமூகம் இலேசில் தொடுத்துக் கதையாது. ஆனால் அவளின் பழக்கவழக்கம் அப்படிக்கருத இடம் வைத்தது. அவளுடன் சாடைமாடை யாக இதை விளக்கினால் அவள் வெளிதிறந்து பட்டிக்காட்டுச்சனங்கள் பலதும் பேசுவார்கள் என்று எனக்குச் சுடச் சுடக் கொடுப்பாள். அவள் என்னை ஒரு "அநாகரிகப்பூண்டு" என்று நினைக்கப்போகிறாளே என்று நான் மேலே ஒன்றும் பேசமாட்டேன்.

நான் தனியே பழகினால் குசுகுசு கதைகள் மேலும் மேலும் பெருகும் என்று கருதிப் பொன்னுத்துரையையும் சின்னத்தங்கம் வீட்டுக்கு அழைப்பேன். பொன்னுத்துரை அனேகமாக வரமாட்டான். சிலசமயங்களில் எனது வற்புறுத்தலுக்காக வருவான். அவன் ஒரு சங்கோசப்பிராணி; வந்தாலும் அவர்களோடு கலகலப்பாகப் பேசமாட்டான். ஒரு மூலையில் ஊமைபோல் இருந்துவிட்டு அவர்கள் தரும் தேநீரையும் சாப்பிட்டுவிட்டுச் சாட்டுக்கு இரண்டொரு கதை சொல்லிவிட்டு வருவான். அவன் சும்மா சொல்லும் கதைகளிற் பல கருத்து இருப்பன போலத் தோன்றும்.

சின்னத்தங்கமும் தாயும் என்னையும் பொன்னுத்துரையையும் எங்கள் வரலாறு முழுவதும் கேட்டு வைத்திருந்தனர். நான் ஏழைக்குடும்பத்தில் பிறந்தவனாகையால் என்னோடு சகசமாகவும் பொன்னுத்துரை செல்வக் குடும்பத்தில் பிறந்தவனாகையால் அவனோடு கண்ணியமாகவும் நடந்தனர். அவன் காவற்கார வேலை பார்ப்பவனாயினும் பெருந்தொகைச் செல்வத்திற்கு உரிமையுடையவன்; சந்தர்ப்பகோளாறினால் இவ்விதம் இருக்கிறான் என்பது அவர்களுக்குத் தெரிந்தமையாலும், அவன் அருமையாகப் பழகுவதனாலும் அவனோடு மிகவும் கண்ணியமாகச் சின்னத்தங்கமும் தாயும் பழகினர். தாங்களும் என்னைப்போல் ஏழைகள் என்று எனக்குச் சொல்லிக் கொள்வார்கள்.

என்னுடன் சின்னத்தங்கம் வீட்டிற்கு வந்து பழகிய பொன்னுத்துரை, நானில்லாத சமயங்களிலும் சிலசமயம் போய் வருவான். எப்படியெனினும், என்னைப் போல் அவர்களோடு நெருக்கமாக அவன் பழகவில்லை. அன்றியும் அவன் அங்கே சென்றுவருகிற ஒவ்வொரு சமயமும்,

அவர்களில் ஒரு குறை கூறிக்கொண்டே வருவான். தினமும் அவர்களைப் பற்றி ஒரு குறையாவது கூறாவிட்டால் அவனுக்குப் பொழுது போகாது. அவன் வழக்கம்போற் குறை கூறி வந்தபோதிலும், வர வர அவர்களுடன் பழக்கம் கூடிக்கொண்டு வந்தது. அவனுக்குப் பகலில் வேலை கிடையாது. சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பகல் முழுவதையும் சின்னத்தங்கம் வீட்டிலேயே கழித்தான் என்று கூறினும் அதிலே தவறெதுவுமில்லை.

என்னோடு சின்னத்தங்கம் என்ன, தாய் என்ன, இருவரும் சமமாகப் பழகினார்கள். பொன்னுத்துரை சின்னத்தங்கத்தோடு தான் சிறிது பேசுவான். தாயோடு சிறிதும் பேசான். நாட்கள் செல்லச் செல்ல சின்னத்தங்கத்துடன் அதிகமாகப் பழகி வந்தான். சமூகம் என்னை விடுத்து அவனைப் பற்றிக் குசுகுசுக்கத் தொடங்கியது. சிலர் என்னை சாடைமாடையாக வினாவத் தொடங்கினர். நான் அவனுக்கும் அவர்களுக்கும் ஒரு போதும் பொருந்திவராதென்று கண்டிப்பாகக் கூறிவந்தேன்.

ஒரு சனிக்கிழமை. எனக்குச் சிறு காய்ச்சல். தலையிடி வேறு பெரிய வருத்தமாக வரப்போவதற்கு ஆரம்பம். நான் சைக்கிளில் சென்று ஐந்து மைல் தூரத்தில் இருக்கும் வைத்தியசாலையில் மருந்து வாங்க வரும்படி பொன்னுத்துரையைக் கேட்டேன். பொன்னுத்துரை தான் இரவில் நித்திரை விழிப்பதால் பகலில் நித்திரை கொள்ள வேண்டும் என்று கண்டிப்பாக மறுத்துவிட்டான்.

ஆனால் அவன் நித்திரை கொள்ளவுமில்லை. அன்று பகலைச் சின்னத்தங்கம் வீட்டிலேயே கழித்தான். சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சின்னத்தங்கத்தோடு பேசும் அரியசந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாது என்றுதானே எனக்கு மருந்து வாங்க மறுத்தான் எனத் தோன்றியது. எனினும் என்னுடைய மனம் இதைப் பூரணமாக ஒப்புக் கொள்ளவில்லை.

ஒருநாள் பொன்னுத்துரைக்குச் சத்தி, காய்ச்சல். நான் சென்று மருந்து வாங்கிக் கொடுத்துத் தேறியிருந்தான். சாப்பிடமனமில்லை. சின்னத்தங்கத்தின் தாய் இதையறிந்து வந்து பார்த்து விட்டுச் சென்று இரசம் வைத்துக் கொண்டுவந்து தந்தாள். இரசத்தோடு நானும், சின்னத்தங்கத்தின் தாயும் நெருக்கியதாற் சிறிது சாப்பிட்டான். சிலநாள் இரசமும் சோறு கறிகளும், சின்னத்தங்கத்தின் தாய் கொண்டுவந்து தந்தாள். இந்தக் கடனை எப்படி நான் தீர்க்கப்போகிறேன் என்று பொன்னுத்துரை என்னிடம் இடையிடையே சொல்லிக் கொள்வான். இன்னும் வேறு சில சிநேகிதர்களிடமும் தான் வருத்தமாயிருந்த பொழுது அவர்கள் பத்தியக்கறி வைத்துத் தந்த கடனைத் தான் எப்படித்தீர்ப்பது? என்று சொல்லிப் பிரலாபிப்பான்.

எனக்கு இது பெரிய அதிசயமாகப்பட்டது. இது ஒரு பெரிய கடமையாக எனக்குத் தோன்றவில்லை. நாங்கள் அவர்களுக்குச் செய்த உதவிகளுக்கு அவர்கள் செய்ததைப் எடுத்துப் பேசுவது நல்லதாக எனக்குப் படவில்லை.

இச்சம்பவங்களுக்குப் பிறகு தான் நான் நாவல் மரத்தில் ஏறியிருந்து பாடசாலை ஜன்னலுக்கூடாக காணாத ஒரு காட்சியைக் கண்டேன். அந்தக் காட்சி என்னைப் பெரிய ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

சின்னத்தங்கம் பாடசாலை விட்டபின் தனது சில வகுப்புக்களுக்கு மேலதிகமாக மாலையில் படிப்பிப்பது வழக்கம். இது பொன்னுத்துரைக்கு அவளோடு பேசுவதற்கு ஒரு அருந்தருணம். நான் பார்த்தபொழுது வகுப்புக்களையும் அனுப்பி விட்டு இருவரும் தனியே பேசிக் கொண்டிருந் தனர். பொன்னுத்துரை சின்னத்தங்கத்தின் தலையிலே தொட்டு ஏதோ கூறினான். சத்தியஞ் செய்தான் என்று ஊகிப்பது தான் சரி. இன்னும் வேறு சில காட்சிகள்... நாவல் மரத்தில் ஏறியிருந்த கிரகத்திற்கு ஏழாமிடம் என்பது அவர்களுக்குத் தெரியாது.

அதுவரை நடந்துவந்த சம்பவங்களும் அன்று நான் கண்ட சம்பவமும் என்னைக் குழப்பியது. நான் அன்று இரவு அவனைக் கேட்டேன். அவன் அவர்கள் செய்த கடமையை மறக்கமுடியாது. சின்னத்தங்கம் தன்னை விவாகம் செய்யும்படி கேட்டாள்; நான் அவர்கள் நன்றியை நினைத்து ஆம் என்று சத்தியஞ் செய்து கொடுத்துவிட்டேன். எதை மறந்தாலும் நன்றியை மறக்கலாமா? என்று சொன்னான். எனக்கு அவன் சொல்வது பகிடியோ வெற்றியோ என்று கூடத் தெரியவில்லை. மற்றச் சினேகிதர்களுக்கும் தனது செய்ந்நன்றியைப் பற்றியும் தனது தியாகத்தைப் பற்றியும் பெருமையாகக் கூறினான். அத்தோடு என்னுடன் இல்லாமல் அவர்கள் வீட்டிலேயே வசிக்கவும் தொடங்கிவிட்டான்.

சின்னத்தங்கத்தின் தாய், தனது மருமகன் காவல் வேலை பார்த்தா லும், பெரிய சொத்துக்காரன் என்று சிலருக்கும், சம்மதியாவிட்டால் இருவரும் தற்கொலை பண்ணுவம் என்றதுகள் என்று வேறு சிலருக்கும் சொல்லித் திரிகிறாள்.

நான் இந்தச் "செய்ந்நன்றி" என்றதன் பொருள் பிடிபடாமல் தவிக்கி றேன். அதுவுமல்லாமல் என்னோடு சின்னத்தங்கம், தாய், பொன்னுத்துரை மூவரும் காரணம் எதுவுமின்றிப் பேசாமல் விட்டு விட்டார்கள். இதுவும் செய்ந்நன்றிதானோ தெரியாது.

நெய்ந்நன்றியே நீ வாழ்க!

(ஈழகேசரி - 23-9-56)

# ஆசை நாயகி

"உபாத்தியாயர் இருக்கிறாரோ?" என்று கேட்டுக்கொண்டு நான் பொன்னம்பல உபாத்தியாயர் வீட்டுக்கு மாலை ஐந்துமணிக்குச் சென்றேன். என்னையும் படிப்பித்தது பொன்னம்பல உபாத்தியாயர் தான். என்னுடைய தகப்பனாரையும் படிப்பித்தது பொன்னம்பல உபாத்தியாயர் தான். ஆனால் இன்னும் அவர் இளைப்பாறவில்லை. அந்தக்காலத்தில் பிறப்புப்பதிவில்லையாம். அதனால் தாங்கள் நினைத்த திகதியைப் பிறந்த திகதியாகக்கொண்டு சத்தியக்கடுதாசி முடித்து வேலை பார்க்கிறார் என்று கதை. கதை எப்படியெனினும் ஆள் நல்ல வாட்டசாட்டமாக இப்பொழுதும் இருக்கிறார். பல் விழவில்லை. தலைகூட நரைக்கவில்லை. அவரிடம் படித்து உத்தியோகம் பார்க்கிறவர்களுக்குங் கணக்கில்லை.

கிராமாபிவிருத்திச் சங்கம் மூலம் கட்டுகிற கிணற்றுக்கு அகலம் என்ன இருக்க வேண்டுமென்று விசாரிக்கப் பொன்னம்பல உபாத்தியாயரிடம் நான் சென்று அவரை விசாரித்த பொழுது அவர் மனைவியிடமிருந்து வந்த பதில் என்னைத் திடுக்கிடச் செய்தது.

"அவர் எங்கே வைப்பாட்டி வீட்டேதான் இருப்பார்." என்று அவரின் தர்மபத்தினி கூறக்கேட்டு நான் திடுக்குற்றேன். பொன்னம்பலம் உபாத்தியாயர் எங்கள் ஊரில் நல்லொழுக்கத்திற்குப் பேர் போனவர். பஞ்சமாபாதகங்களை விலக்கி நடப்பவர். ஆளையும் ஆளையும் முடித்துவிடுதல், மற்றவர்களைக் குறைத்துத் தன்னையும் தன் குடும்பத்தையும் உயர்த்திப் பேசுதல், பிறருடைய குறையைப் பெரிதாகப் பேசுதல், இத்தியாதி சில்லறைச் சேட்டைகள் அவரிடம் இருந்த போதிலும் இக்கால ஆசிரியர்கள் ஒரு சிலரிடமுள்ளதெனச் சொல்லப்படும் பிறன்மனை நயத்தல், கள்ளுண்ணல் முதலிய இலட்சணங்கள் சிறிதுமில்லாதவர். அப்படிப்பட்ட பொன்னம்பல உபாத்தியாயர் வைப்பாட்டி வீட்டிலே என்று அவர்தம்

தர்மபத்தினியே கூறினால், நான் அதிசயப்படாமல் இருக்க முடியுமா?

நகைச்சுவையாகச் சொன்னார்களோ என்றால் இல்லை; கணவன் வைப்பாட்டி வீட்டுக்குச் சென்றால் மனைவிக்கு எவ்வளவு கடுகடுப்பு இருக்குமோ அவ்வளவு கடுகடுப்பு அவர்களின் பேச்சிலும் முகத்திலும் காணப்பட்டது. எனக்கு 'காலம் மாறிப்போச்சு' என்ற படத்தின் நினைவு தான் வந்தது.

நான் என்னை மறந்து திகைத்து நிற்கின்ற பொழுது, என் பின்னால் பொன்னம்பல உபாத்தியாயர் செருமிக்கொண்டு வந்தார். அவர் பத்தினி சொன்ன வார்த்தைகள் அவருக்குக் கேட்டிருக்க வேண்டும். "வைப்பாட்டி வைத்திருப்பது என்பது தமிழன் மரபு; அகப்பொருள் இலக்கணத்தில் 'பரத்தையிற் பிரிவு' என்ற பகுதி இதை நிருபிக்கவில்லையா? எல்லாச் செல்வமும் பொருந்தியவனென்றால், வைப்பாட்டியும் இருக்க வேண்டும். அன்றேல் அவர் ஐசுவரியம் பூரணமெனப்படாது." என்று அவர் சொன்னார். ஆகவே, அவர் பத்தினி கூற்று உண்மை என்பது புலனாகியது. உண்மையாகக் 'காலம் மாறிப்போச்சு', மழை இல்லை இல்லை என்றால் மழை எப்படி வரும் என்றெல்லாம் உள்மனம் யோசித்தது.

அவருடைய பேச்சுக்கு மறுமொழியாக ஏதோ சொல்ல வாயெடுத்தேன். அவர் அதைக் கவனியாமல், "இந்தச் சச்சிதானந்த வாசிகசாலை இருக்கிறதே, அது உற்பத்தியான கதையைக் கேள்." என்று ஆரம்பித்தார். அவர் கதை சொல்லத் தொடங்கினால் அதை எந்தப்பெரிய 'கவர்ணர்' ஆனாலும் கேட்டே தீரவேண்டும். இந்த அதிகாரம் அவருக்குப் பாடசாலையிலிருந்து ஆரம்பித்தது. பாடசாலையில் கொடுக்கப்பட்ட அதிகாரம், பலகாலச் சேவையினால், வெளியிலும், வீட்டிலும், எங்கும் ஆட்சியாகி நிலைத்துவிட்டது.

சச்சிதானந்த வாசிகசாலை என்பது எங்கள் ஊரில் மாத்திரமல்ல, யாழ்ப்பாணப் பகுதியிலேயே பிரபல்யமானது. அங்கே இருக்கும் நூல்களின் தொகைக்காகவல்ல; அதை நடத்துவோரும் திறம்பட நடத்தினார்கள். யாழ்ப்பாணப் பகுதிக்கு யார் பெரிய மனிதர் வந்தாலும், அவ்வாசிக சாலையைத் தரிசியாமற் போவதில்லை.

இனி, வானொலிப்பெட்டி, சஞ்சிகைகள் முதலிய உப இலட்சணங்கள் எல்லாம் சரிவரப் பொருந்தியது. பல பிரசங்கங்கள், கதாப்பிரசங்கங்கள், அதிகமாக அங்கே நடக்கும். இவையெல்லாவற்றிற்கும் மேலாக அழகான முகப்பையுடைய கட்டடம் எல்லோரையும்- கவர்ந்தது.

இப்படிப் பெருமைவாய்ந்த சச்சிதானந்த வாசிகசாலையின் பூர்வோத்திர

த்தைப் பற்றிப் பொன்னம்பல உபாத்தியாயர் சொல்லத் தொடங்கினார். அவர் கதை சொல்லும் பொழுது இடையிடையே செருமல், முறுகல் முதலியன குறுக்கிடுவதுண்டு. அவர் செருமினால், கதையை நான், தொடரவில்லை என்பதைக் கண்டுவிட்டார் என்பது அர்த்தம். முறுகினால் ஆசாமி புதிதாக ஏதோ கற்பனை செய்கிறார் என்பது அர்த்தம். இவை யெல்லாவற்றிற்குமாக நான் கூர்மையாக அவர் கதையைக் கேட்டேன்.

"உனக்குத் தெரியுமோ தெரியாது; பொன்னையா உடையாரை; இவன் உன்ரை நவரத்தினப் பிரக்கிராசியின் தகப்பன். பொன்னையா உடையாரும் நானும் இளமை தொடக்கம் நல்ல சிநேகிதம். அவர் நல்ல வடிவான ஆம்பிளை. வைரக்கடுக்கன் போட்டிருப்பார். அவரும் நானும் பின்னேரத்தில் சிலவேளை வயற்கரைப்பக்கம் கூடிப்போவது வழக்கம். ஒருநாள் நாங்கள் வயற்கரைப்பக்கம் போனபொழுது உன்ரை சிந்தாமணி; அவள்தான் கணபதிப்பிள்ளைச் சட்டம்பி தூக்கிக்கொண்டு போனான்; என்னடா யோசிக்கிறாய், அவன்தான் முள்ளியவளையிற் படிப்பிக்கிறான். அந்தச் சச்சிதானந்த வாசிகசாலைக்கு அடுத்த வளவு அந்தச் சிந்தாமணியின்றை பாட்டி; மிளகாய்க்காரப் பொன்னி என்று பிறகு அவளைச் சொல்வது வழக்கம். அந்த வாசிகசாலை இருக்கிற வளவு அப்ப உடையாருக்கு. அந்த வளவை அவரும் நானும் சுற்றிப் பார்த்துக்கொண்டு வருகிற பொழுது, அடுத்த வளவில் பொன்னி கண்ணிற்பட்டாள். எலுமிச்சம்பழம் போல நிறம். பதினாலு பதினைந்து வயதிருக்கும், அவள் பொன்னையா உடையாரின் கண்ணிற் பட்டு விட்டாள்" என்று சொல்லிப் பொன்னம்பல உபாத்தியாயர் ஒரு மாதிரி இழுத்து அப்பாற் கேட்டுக்கொண்டு நின்ற தன் தர்மபத்தினியையும் கடைக்கண்ணால் நோக்கி ஒரு புன்னகை புரிந்து, என்னையும் ஒருதரம் ஏறஇறங்கப் பார்த்தார். கற்பனையூற்றில் சிறு அடைப்பு அல்லது புதிதாக ஏதோ பூச்சுமினுக்கு நடக்கப்போகிறதென்பது எனக்கு விளங்கிவிட்டது.

"அந்த வளவுக்குள்ளே இரண்டு பெரிய வேம்புகள் நின்றன. அந்த வேப்பமரங்கள், வாசிகசாலைக் கதவு நிலையும், கதவும். அவற்றுக்கும் இந்தக்கதை தெரியும். ஒருநாள் நல்ல பறுவநிலவு. என்னை ஒரு வேப்பமரத்தில் ஏறி ஆட்கள் நடமாட்டத்தைப் பார்த்து அறிவிக்கச் சொல்லிவிட்டு, மற்ற வேம்பின்கீழே மிளகாய்க்காரப் பொன்னியைச் சந்தித்தார். இந்த நேரத்தில் அவர்தம் பத்தினியின் ஒரு செருமல்: மிஞ்சிப்போகின்றது, நாவை அடக்கிக் கதையை மாற்று என்று அதன் அர்த்தம்.

"உனக்குத் தெரியாதடா பிள்ளை, பொன்னையா உடையாரின் மனைவி; உடைச்சி: அவவுக்குப் பேர் கண்ணகிப்பிள்ளை. உடைச்சி

என்றுதான் எல்லோரும் சொல்லுவார்கள். அவள் பொன்னையா உடையாரையும் அவரைப்போலப் பத்துப்பேரையும் இருத்தி எழுப்பக்கூடிய மனுசி. மிளகாய்க்காரப் பொன்னியின் விஷயம் அவவுக்குத் தெரியவருமென்றால், பொன்னையா உடையாரையும் என்னையும் சேர்த்து பஸ்பமாக்கிப்போடும் மனுசி. அவர் பத்தினி, "அவதான் சரி உங்களுக்கு" என்று ஒரு சிரிப்போடு கூறினார்கள்.

"ஏன், நீ என்ன குறைவோ!" என்று பொன்னம்பல உபாத்தியாயர் கதையைத் தொடர்ந்தார். "எவ்வளவு இரகசியமாக இருந்தாலும் நெடுகலும் நானும் பொன்னையா உடையாரும் ஒரு திக்கில் போவது உடைச்சிக்குச் சந்தேகத்தைக் கொண்டுவந்தது. அந்தத்திக்கில் இனிப் போகவேண்டாம் என்று சட்டம் பிறந்தால், அந்தப் பொன்னையாஉடையாரோ, நானோ மீற முடியாது. ஒரு நாளைக்கு ஒரு நியாயமாக எத்தனை நாளைக்கு அந்தப்பக்கம் போகிறதற்குக் காரணத்தைக் கற்பனை பண்ணிச் சொல்ல முடியும்? சூட்சமான புத்தியில் அந்த நாளையிலும் நான் வலுகெட்டிக்காரன். பொன்னையா உடையார் என்னைத்தான் "இதற்கென்ன புத்தி" என்று கிண்டினார். நான்தான் சொல்லி விட்டேன், இப்படி ஒரு வாசிகசாலையை அந்த வளவில் கட்டத்தொடங்கினால் அந்தச்சாட்டில் நெடுக அந்தப்பக்கம் போய் வரலாம் என்று. "இப்படியான மூளை இன்றைக்கும் ஒருவனுக்கும் வராது." என்று சொல்லிப் பொன்னம்பல உபாத்தியாயர் நெஞ்சை நிமிர்த்தி ஒருமுறை சுற்றிப்பார்த்தார். "யார் பொன்னையா உடையான்ரை கதை சொல்றியோ? அவனுக்கு மந்திரிவேலை பார்த்ததும் போதும், உடைச்சியிட்டை அகப்பையாலே வாங்கினதும் போதும்; என்று சொல்லிக் கொண்டு அடுத்தவீட்டுச் சடையர்க்கிழவன் வந்து சேர்ந்தார்.

நான் வந்த காரியத்தையும் மறந்து, இந்தக் கதையைக் கேட்டதே இதைச் சச்சிதானந்த வாசிகசாலையிற் போய்ச் சொல்லிச் சிரிக்க வேண்டுமென்று எழுந்தேன். "என்ரை வைப்பாட்டி யாரென்று கேளாமற் போகிறாய்." என்று பொன்னம்பல உபாத்தியாயர் மறித்தார். "பொடியன் வந்த காரியத்தையும் மறந்து போச்சுது" என்று அவர் பத்தினி கூறினார்.

"உவரடை வைப்பாட்டிதான் எங்கட என்னம்பொரு வாசிகசாலை. இஞ்சத்தைய அலுவல்களை விட்டிட்டு நெடுக அங்கே போறதினாலே பத்தினிப்பிள்ளை வாசிகசாலையை உவரடை வைப்பாட்டி என்று பேர் வைத்திருக்கு என்று சடையர்க்கிழவன் கூறினார். பத்தினிப்பிள்ளை என்பது பொன்னமபல உபாத்தியாயரின் தர்மபத்தினியின் பெயர்.

(ஈழகேசரி - 21-10-56)

# சிலந்திவலை

## 1 தலை

**பா**லசந்திரன் கடலுக்கும் வானத்துக்கும் இடையிலேயுள்ள நீல வெளியிலே விளங்கிக்கொண்டிருந்த அழகான காட்சியை காலிமுக மைதானத்தில், நான் பார்த்து வியந்துகொண்டு நின்ற அதே நேரத்தில் என் அருகில் நின்ற எனது நண்பனொருவன் சிறிது தூரத்தில் மோட்டார் சைக்கிளிலே சென்ற தம்பதிகளை உற்று நோக்கிக்கொண்டிருந்தான். "என்ன அவர்களைக் கூர்ந்து பார்த்துக்கொண்டு நிற்கிறாய்? அவர்களை உனக்குத் தெரியுமா?" என்று நான் கேட்டேன்.

"எனக்கு அவர்களைத் தெரியாது. யாராயிருக்கலாமென்று கூர்ந்து பார்த்தேன்" என்று நண்பன் சொன்னான்.

"நல்ல ஆராய்ச்சிதான். பொலீஸ் பகுதியில் இருக்க வேண்டியவன். அதில் போன தம்பதிகள் எனக்குப் பழக்கமானவர்கள். அவர்கள் என்னைக் காணவில்லை. கண்டிருந்தால் நின்று கதைத்துவிட்டுத்தான் போவார்கள்."

"ஓகோ, அவர்கள் யார்?" என்று நண்பன் வினவ, "அது ஒரு சுவையான கதை. சொல்கிறேன் கவனமாகக் கேள்" என்று கூறத் தொடங்கினேன்.

## 2 புறம்

இன்றைக்கு ஐந்து வருஷங்களுக்கு முன்னர் நான் கொழும்புக்கு முதன்முதல் வந்தேன். நான் வருவதற்குப் பத்து வருஷங்களுக்கு முந்தி எங்கள் ஊரில் இருந்து 'முதன்முதல் கொழும்பிற்கு உத்தியோகம்

பார்க்க வந்தவர்' என்ற ஓர் ஒப்பற்ற பெருமையுடைய கந்தையா அண்ணை கொழும்புக்கு வந்துவிட்டார். அவர் எனக்கு உறவுமுறை இல்லாவிட்டாலும் நான் 'கந்தையா அண்ணை' என்றுதான் அழைப்பது வழக்கம்.

எனக்கு 'பூவுலக மோட்சம்' எனத்தக்க கொழும்பு உத்தியோகம் கிடைத்தவுடன் கந்தையா அண்ணைக்கு எழுதினேன். அவர் என்னைப் புகையிரத நிலையத்திற்கு வந்து கூட்டிக்கொண்டு போய்த் தனது அறையிலே எனக்கும் இடம் தந்து ஆதரித்தார்.

அவருக்குக் கொழும்பு தண்ணீர் பட்ட பாடம். அப்பொழுது எனக்குக் கொழும்பில் ஒரு தெரு வழியாகப் போனால் மீண்டும் வரத்தெரியாது. அந்தக்காலத்தில் யாழ்ப்பாணத்து நடை உடை பாவனைகளுக்கும் கொழும்பு நடை உடை பாவனைகளுக்கும் வித்தியாசம் அதிகம். ஆனால் இப்பொழுது யாழ்ப்பாணமும் கொழும்புப் 'பிளானை'க் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பிடித்துக் கொண்டு வருகிறது. அந்தக் காலத்தில் கொழும்பிலே பார்த்த மனிதனை யாழ்ப்பாணத்திலே பார்த்தால் அடையாளந் தெரியாது. யாழ்ப்பாணத்திலே பார்த்த மனிதனைக் கொழும்பிலே பார்த்தால் அடையாளந் தெரியாது.

கொழும்புப் 'பிளானை' எனக்குப் பயிற்றுவதிலும், வழிகாட்டுவதிலும், எல்லாவற்றிலும் கந்தையா அண்ணை எனக்குக் குருவாக விளங்கினார். நாங்கள் அப்பொழுது வனத்துமுல்லை றோட்டிலே 'முல்லைவாசம்' என்ற பெயரிலே பன்னிரண்டு அறைகளைத் தனவான் ஒருவர் கட்டி வாடகைக்கு விட்டிருந்த வரிசையிலே பதினோராம் அறையிலே இருந்தோம்.

பன்னிரண்டாம் அறையிலே ஒரு பெண்மணி பெரும்பாலும் தனியே இருந்தாள். மீதிப் பத்தறைகளிலும், எங்களைப்போல் சில வாலிபர்களும், ஒண்டிக் குடித்தனக்காரர் சிலரும் இருந்தார்கள்.

கொழும்புப் 'பிளானின்' படி "அயலண்டையில் உள்ளவர்களுடன் அதிக தொடர்பு வைக்கப்படாது" என்று கந்தையா அண்ணை எனக்கு ஆரம்பத்திலேயே கற்பித்திருந்தார். அடுத்த அறைக்காரரைக் கண்டால், புன்முறுவல் பூப்பதும் சிலசமயம் ஆபத்தாகலாம், என்று எனக்கு எச்சரிக்கை செய்திருந்தார்.

அவர் என்னதான் எச்சரிக்கை செய்தபோதிலும், கடைசி அறையிலுள்ள பெண்மணியை நேருக்குநேர் கண்டால், என்னால் முகத்தை வேறுபக்கம் திருப்பியோ, கோரப்படுத்தியோ வைத்திருக்க முடிவதில்லை.

உள்ளதைச் சொன்னால், கந்தையா அண்ணை இல்லாத சந்தர்ப்பங்களில் நான் அப்பெண்மணியைக் கண்டால், பல்லைக் காட்டுவது வழக்கம்.

பல்லைக் காட்டத் தொடங்கியபின் இன்னும் சிறிது துணிவுடன் வணக்கம் தெரிவித்துப், படிப்படியாக கந்தையா அண்ணைக்குத் தெரியாமல், எங்கள் தொடர்பு ஆமை வேகத்தில் வளர ஆரம்பித்தது. கந்தையா அண்ணை கண்டிப்பான ஒரு பேர்வழியென்று அவளுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அவர் இருக்கும் சந்தர்ப்பங்களில் அவள் என்னைத் திரும்பியும் பாராள்.

ஒருநாள் நாங்கள் தண்ணீர் மொண்டு உபயோகிக்கின்ற வாளியைக் கந்தையா அண்ணை இல்லாத நேரத்தில் அவள் என்னிடம் கேட்டு வாங்கி உபயோகித்துவிட்டுத் தந்தாள். கந்தையா அண்ணை பின்னர் "என்ன இந்த வாளியில் புதிய ஒரு வாசனை மணக்கிறது?" என்று கேட்டார். நான் நடந்ததைச் சொன்னேன். உடனே அவர், கோபத்துடன் வெளியே சென்று பசுச்சாணம் அள்ளிக்கொண்டு வந்து வாளிக்குப் பூசிக் கழுவி வைத்தார்.

இன்னொருநாள் அவளுடைய முற்றத்திலிருந்த ஓர் அழகான பூச்செடியின் வழித்தோன்றல் ஒன்றை நான் எங்கள் முற்றத்தில் கொண்டுவந்து நாட்டியிருந்தேன். கந்தையா அண்ணை விஷயத்தை அறிந்து, என்னை வாட்டு வாட்டென்று வாட்டிவிட்டார். இனி அவளுடன் தொடர்பு வைப்பதென்றால் தன்னுடைய அறையைவிட்டு வெளியேறிவிட வேண்டுமென்று முடிவாகக் கூறிவிட்டார்.

கந்தையா அண்ணையின் கட்டிலைத் தட்டிப் போடுவதும், மேசையைத் துடைப்பதும், புத்தகங்களை அடுக்கி வைப்பதுமான பணிவிடைகளைச் சீடன் என்ற முறையில் நான் செய்வது வழக்கம். அன்று நான் தும்புக்கட்டை எடுத்துத் தூசு துடைத்துக்கொண்டு போகும்பொழுது, கந்தையா அண்ணையின் கட்டில் பக்கத்து மூலையில் சிலந்தி வலையொன்று பெரிதாகப் பின்னியிருக்கக் காணப்பட்டது.

கந்தையா அண்ணை "அந்தச் சிலந்திவலை அப்படியே இருக்கட்டும். அதை அழித்துவிடாதே" என்றார்.

"ஏன் அண்ணை?" என்று நான் கேட்டேன்.

"அந்தச் சிலந்தி இதுவரை அந்த வலையில் சிக்கிய எத்தனை கொசுக்களைப் பிடித்து உண்டதோ தெரியாது. அந்தச் சிலந்திபோல அடுத்த அறையிலிருப்பவளும் பெரிய வலையை விரித்திருக்கிறாள். அதில் யார் அகப்படுகிறார்களோ தெரியாது." என்று கந்தையா அண்ணை

உபதேசித்தார்.

அதன்பின் நான் மிகக் கவனமாக -அவர் இல்லாத சமயம் பார்த்து அவளுடன் பேச்சு வைத்துக்கொண்டேன். அவள் பெயர் கனகமணி. அவளை மணி என்றே எல்லோரும் அழைப்பார்கள். கம்பனி ஒன்றில் தட்டெழுத்து வேலை செய்கிறாள். பூர்வீகம் யாழ்ப்பாணம். தந்தை இல்லை; கல்வி கற்பிக்கும் இன்னொரு சகோதரியுடன் தாய் கண்டிப் பகுதியில் இருக்கிறாள். இத்தகவல்களை நான் படிப்படியாக அறிந்து கொண்டேன்.

அவளுடைய அறைக்குச் சண்முகம், கார்த்திகேசு, கந்தசாமி, முதலிய மூன்று வாலிபர்கள் இடையிடையே வெவ்வேறு தருணங்களில் வந்துபோவதை நானும் கந்தையா அண்ணையும் கண்டிருக்கிறோம். "இதில் எந்தக் கொசு வலையில் சிக்குகிறதோ தெரியவில்லை" என்று கந்தையா அண்ணை எனக்குச் சொல்லுவார்.

கந்தையா அண்ணை எப்படித்தான் இடித்துரைத்த போதிலும், எனக்கு அவள்மீது நல்ல எண்ணமே இருந்தது. அவளை ஒருநாளெனினும் காணாவிட்டால், அன்று எனக்கு ஏதோ ஒன்று குறைவு போலத் தோன்றும்.

## 3 இரை

அன்று இரவு எட்டுமணி இருக்கும். நான் எனது கட்டிலில் படுத்திருந் தேன். நித்திரை கொள்ளவில்லை. கந்தையா அண்ணை கதிரையிலிருந்து வழக்கப்பிரகாரம் தேவாரம் படித்துக்கொண்டிருந்தார். அறைக்கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. கந்தைணா அண்ணை எழுந்து சென்றார். "தாய்க்கு வருத்தம் கடுமை என்று தந்தி வந்திருக்கிறது. காசு பத்துரூபாய் வேண்டும்" என்று அழுதழுது தந்தியையும் கந்தையா அண்ணரிடம் கொடுத்தாள் கனகமணி.

கந்தையா அண்ணை கொடுக்காவிட்டால், "என்ன வந்தாலும் நான் பணம் கொடுக்க வேண்டும்" என்று எனக்குள் தீர்மானித்துக்கொண்டேன். ஆனால் கந்தையா அண்ணை சற்றுச் சிந்தித்துவிட்டு, பத்துரூபாய் எடுத்துக்கொண்டு போய் ஒரு கதையுமின்றிக் கொடுத்தார். அவள் நன்றி தெரிவித்துவிட்டு உடனே புறப்பட்டுப் போய்விட்டாள். நான் நித்திரையில் மறுபக்கம் புரண்டு படுப்பதுபோலப் பாசாங்கு செய்தேன்.

## 4 அகம்

அது நடந்து ஒரு வாரத்தின்பின் ஒருநாளிரவு, நான் நித்திரை

செய்கிறேனாவென்று என்னைப் பார்த்துத் திடப்படுத்திக்கொண்டு, தனது சட்டைப்பையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து கந்தையா அண்ணை வாசித்தார். அடுத்தநாள் அதிகாலை நான் சந்தடியின்றி எழுந்து, அவர் சட்டைப்பையிலிருந்த அந்தக் காகிதத்தை எடுத்துப் படித்துப் பார்த்தேன்.

தனது தாய்க்கு இப்பொழுது சுகம் என்றும், தான் அடுத்த வாரத்தில் வருவதாகவும், கந்தையா அண்ணையைப்போல் சிறந்த மனிதரைக் கொழும்பு நகர் முழுவதிலும் தான் காணவில்லை என்றும், தான் அந்த அறைக்கு வந்து இரண்டு வருடமாகியும் கந்தையா அண்ணை ஒருநாளாவது தன்னை நிமிர்ந்து பார்க்கவில்லை என்றும் இவ்வளவு நற்குணம் நிறைந்த மனிதரை இவுலகில் காண்பதரிதென்றும், தனக்குத் தக்க தருணத்தில் உதவியதைத் தான் என்றும் மறக்க முடியாதென்றும் கனகமணி அக்கடிதத்தில் எழுதியிருந்தாள்.

அந்தக் கடிதத்திற்கு கந்தையா அண்ணை பதில் எழுதினாராவென்பதை என்னால் அறிந்துகொள்ள முடியவில்லை. சில நாட்களில் அவள் வந்துவிட்டாள். அவள் வந்த அன்று கந்தையா அண்ணையும் அவளும் வெளியில் நின்று ஏதோ கதைத்தார்கள்.

முன்பெல்லாம் கந்தையா அண்ணை இரவு ஏழு மணி அளவில்தான் அறைக்கு வருவார். இப்பொழுது எனக்கு முந்தி அவர் அறைக்கு வந்துவிடுவார்.

ஒருநாள் நான் வேலை நிமித்தம் அறைக்கு வரும்பொழுது, கந்தையா அண்ணை கனகமணியின் அறையிலிருந்து எங்கள் அறைக்குப் போவதைக் கண்டேன். அதன்பின் ஒருநாள் கந்தையா அண்ணை தனக்குச் சுகமில்லை என்று சொல்லி லீவு எழுதிவிட்டார்.

நான் வேலைக்குப் போய்விட்டுத் திரும்பி வந்த பொழுது கந்தையா அண்ணை எங்கள் அறையிலில்லை. அறை முழுவதும் வழக்கத்திற்கு மாறாக மிகச் சுத்தமாக இருந்தது. ஒழுங்காக எல்லாம் அடுக்கப்பட்டிருந்தன. மூலையிலிருந்த சிலந்தி வலையையும் காணவில்லை.

சிறிது நேரத்தில் கந்தையா அண்ணை கனகமணியின் அறையினின்றும் வந்து இருந்தார். இன்றைக்கு அவருடன் சிறிது பேச வேண்டுமென்று நான் எனக்குள் தீர்மானித்துக்கொண்டேன். அவருக்கு நேரே ஒரு கதிரையில் அமர்ந்து, செருமித் தொண்டையைக் கனைத்து, நெஞ்சுக் குள் உறுதியை வரவழைத்துக்கொண்டு "இங்கே பாருங்கோ கந்தையா அண்ணை!" என்று ஆரம்பித்தேன். அதே நேரத்தில் கனகமணி இரண்டு கிண்ணங்களில் தேநீர் கொண்டுவந்தாள்.

"எங்கள் திட்டத்தைத் தம்பிக்குச் சொல்லு மணி" என்று கனகமணியைப் பார்த்து கந்தையா அண்ணை சொன்னார். அவள் என்றுமில்லாத மாதிரி, நாணிக்கோணி "நீங்கள்தான் சொல்லுங்கோ" என்று சொல்லிவிட்டு தேநீர்க்கிண்ணங்களை எடுத்துக்கொண்டு திரும்பினாள்.

"நாளைக்கு முகத்துவாரத்து முத்துமாரி அம்மன் கோவிலில் நாங்கள் முறைப்படி திருமணம் செய்துகொள்ளப் போகிறோம்" என்று கந்தையா *அண்ணை திருவாய் மலர்ந்தருளினார். அவள் தனது உட்லை,* மேலும் வளைத்து முகத்தை மறைத்துக்கொண்டு தனது அறைக்கு ஓடிவிட்டாள்.

✡

காலிமுக மைதானத்திலே எனது நண்பனைக் கவர்ந்த - மோட்டார் சைக்கிளிலே சென்ற தம்பதிகள் - கந்தையா அண்ணை தம்பதிகள்தான் என்பதை நான் சொல்ல வேண்டுமா?

(தினகரன் - 14-5-61)

# தமிழன்தான்

நள்ளிரவு: நிலா உதயமாகித் தென்னைமரச் சோலைக்குள்ளால் எட்டிப்பார்த்தது. கிருஷ்ணன் தனது கள்ளுக்கடையை மூடிப் படலையைக் கட்டிவிட்டுக் காசைக் கணக்குப்பார்த்து எடுத்துச் சீலைத்தலைப்பில் முடிந்துகொண்டு வீட்டுக்குப் புறப்பட்டான். றோட்டில் ஏறியவனுக்குத் திடீரென ஒரு யோசனை தோன்றிற்று. திரும்பிப் போய்க் கொட்டிலில் ஒரு தளைநாரை எடுத்துவந்து, தெருவோரத்தின் பனைமரத்தில் உயரத்தே கட்டியிருந்த அழகான பட்டுத்துணியினாலான பெரியதொரு கொடிச்சீலையொன்றை அவிழ்க்க அம்மரத்தில் ஏறினான்.

தேர்தற் காலங்களில், பனைகளிலும், தென்னை மரங்களிலும் கட்சி அபேட்சகர்கள் தத்தம் கொடிகளைக் கட்டிப் பறக்க விடுவதும், எதிர்க் கட்சிக்கரர்களின் கொடிகளை அகற்ற முற்படுவதும் சாதாரண சம்பவமாகும். கிருஷ்ணன் அந்தப் பனையிலேறிக் கொடிச்சீலையை அவிழ்த்துக்கொண்டு இறங்கிய பொழுது, அவனருகே ஒரு கார் வந்து திடீரென பிறேக் போட்டு கிறீச்சென நின்றது. தான் கொடி அவிழ்த்ததற்கு அவர்கள் அடிக்கப்போகிறார்கள் என்று கிருஷ்ணன் பயந்து நடுங்கினான்.

காரில் வந்தவர்கள் சரசரவென்று இறங்கிவந்து, கிருஷ்ணனைப் பிடித்துக்கொண்டு 'நீதான் உண்மையான தமிழன்' என்று கூறி அவனுடைய கையைக் குலுக்கினார்கள். கையைக் குலுக்குகின்ற சம்பவம் அவனுக்குப் புதிதெனினும் பயந்து நடுங்கிய அவன் சிறிது தென்படைந்தான்.

வந்தவர்கள் அவனையும் அழைத்துக்கொண்டு அவனுடைய கள்ளுக் கொட்டிலுக்குப் போனார்கள். அங்கே 'கள்ளில்லை'. என்று கிருஷ்ணன் சொன்னான். 'சரி பரவாயில்லை. எங்களுடன் வா; இப்பொழுது கொண்டு

வந்து விடலாம்.' என்று அவனையும் காரில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டார்கள்.

கிருஷ்ணன் அவிழ்த்த கொடியின் கட்சிக்காரருக்கு எதிராகக் கேட்கும் அபேட்சகரின் வீட்டுக்கு அவன் கொண்டு போகப்பட்டான். நாங்கள் ஒருவரும் தூண்டிவிடாமல், தனது எண்ணத்தில் சூழ்ச்சிக்காரரின் கொடியை அவிழ்த்த 'வீரத்தமிழன்' என்று அங்கேயுள்ளவர்களுக்குக் கிருஷ்ணன் அறிமுகம் செய்துவைக்கப்பட்டான். எல்லோரும் அவன் கையைப் பிடித்துக் குலுக்கினர். அபேட்சகர் வந்து அவனை நோக்கிப் புன்முறுவலுடன் கைகூப்பினார். அபேட்சகரின் மனைவி "உன்னைப்போல் ஆட்கள் இருக்கும் வரையும் தமிழன் அழியமாட்டான்" என்று கூறினார். மற்றவர்கள் ஜே! ஜே! என்று ஆர்ப்பரித்தார்கள்.

இப்படியான ஓர் உபசாரத்தைக் கிருஷ்ணன் தன் வாழ்நாளில் அநுபவித்ததுமில்லை, அறிந்ததுமில்லை, பார்த்ததுமில்லை, பெரிதும் வெட்கப்பட்டான். கலியாணப் பெண்போல அவர்கள் உபசாரத்திற்கு நாணித் தலைகுனிந்தான்.

"நாளைக்கு முற்சந்தியில் ஒரு கூட்டம் நடைபெறும்; கட்டாயம் வா" என்று, சில தேர்தல் விளம்பரங்களையும் அவனிடம் கொடுத்தனுப்பினர். கிருஷ்ணனும் ஆறுதலாக மூச்சு விட்டுக்கொண்டு வீட்டுக்குச் சென்றான்.

அவர்கள் கேட்டுக்கொண்டபடி அடுத்தநாள் கூட்டத்திற்கு அவனும் சென்றிருந்தான். கூட்டம் நடந்துகொண்டிருக்கும் பொழுது ஒருவர் அவனைக் கூட்டிக்கொண்டுபோய் மேடையில் ஏற்றி, "ஓங்கி வளர்ந்த பனையில் தாவி ஏறிச் சூழ்ச்சிக்காரரின் கொடியை அறுத்தெறிந்த வீரத்தமிழன் இதோ" என்று அவனைக் கூட்டத்திற்கு அறிமுகம் செய்து, ஒரு மலர்மாலையும் அவன் கழுத்தில் போட்டார்.

அவனுடைய பரந்த மார்பும், திரண்ட தோளும் அந்தப் பூமாலைக்கே ஒரு அழகைக் கொடுத்தது. அவன் அந்தப் பூமாலையைத் தனது மைத்துனி பொன்னிக்குக் கொண்டுபோய்க் காட்டவேண்டுமென்று நினைத்துக்கொண்டு மேடையிலிருந்து இறங்கினான். ஆனால் ஒருவர் வந்து அந்த மாலை வேறுயாருக்கோ போட வேண்டுமென்று வாங்கிக் கொண்டு போய்விட்டார்.

கிருஷ்ணனின் மைத்துனி பொன்னி ஐந்தாம் வகுப்புவரையும் படித்தவள். அத்தோடு அவள் காணுகிற பத்திரிகைகள், புத்தகங்கள்,

விளம்பரங்கள் எல்லாம் சேகரித்து வாசித்துத் தனது அறிவை ஓரளவு விருத்தி செய்துகொண்டாள்.

கிருஷ்ணனும் பொன்னியும் ஒருவரையொருவர் காதலிக்கிறார்கள் என்று, வேண்டுமானால் நீங்களும் நானும் நினைக்கலாம். ஆனால் அவர்களுக்கு அந்த நினைப்பேயில்லை. காதல் என்ற வார்த்தையே அவர்களுக்குத் தெரியாது.

பொன்னி வாரத்தில் இரண்டொருமுறை என்றாலும் கிருஷ்ணனின் கள்ளுக்கொட்டில் பக்கம் போகத் தவறமாட்டாள். பொன்னி அன்று கள்ளுக்கொட்டிலுக்கு வந்தபொழுது, கிருஷ்ணன் மிகுந்த ஆலோசனையுடன் தரையில் கோடு கீறிக்கொண்டிருந்தான். "என்ன பெரிய ஆலோசனை கிருஷ்ணசுவாமி" என்று பொன்னி கேட்டபடியே அவன் முன்னிலையில் வந்தாள். கிருஷ்ணனைக் கொஞ்சமென்றாலும் பேசவைப்பவள் பொன்னிதான். மற்ற எவரோடும் அவன் அதிகம் பேசமாட்டான்.

கிருஷ்ணன் இருபது வயதுடைய ஒரு வாலிபன். கறுப்புநிறமுடையவன் எனினும் பளபளத்த உடற்கட்டுடையவன். அவனுக்குத் தந்தை இல்லை. தாயும் நான்கு இளைய சகோதரர்களும் இருந்தார்கள். குடும்பத்தை அவனே காப்பாற்றி வந்தான். அன்றாடு கள்ளுவிற்று அக்குடும்பம் சீவித்தது.

கிருஷ்ணனுக்குப் படிப்பு வாசனை இல்லை. இரண்டாந்தரமோ, முதலாம்தரமோ அவன் படித்திருக்கவேண்டும். பள்ளிக்கூடத்திற்குப் போன ஞாபகமே அவனுக்கில்லை. அவனுக்கு எழுத வாசிக்கத் தெரியாது. ஆனால் கள்ளுக்காசை கணக்குப்பார்த்து வாங்கப் பழகிக் கொண்டான். அவன் யாருடனும் அதிகம் பேசமாட்டான். தானுண்டு; தன் தொழிலுண்டு என்று திரிபவன்.

கிருஷ்ணனுடைய கள்ளுக்கொட்டிலிலிருந்து பலரும் பலவித விஷயங்க ளைப் பேசுவார்கள். அவர்கள் பேசுவதை தன்னாலியன்றளவு அவன் கிரகித்துக்கொள்வான். ஆனால் அவன் கிரகித்ததை மற்றவர்களுடன் கலந்து பேசமாட்டான். அது அவன் சுபாவம்.

சமீப காலத்தில் தனது கள்ளுக்கடையில் தமிழன் என்ற வார்த்தை அதிகம் அடிபடுவதை அவன் அவதானித்தான். 'உண்மைத் தமிழன்' 'மறத்தமிழன்' 'வீரத்தமிழன்' என்று பற்பல பிரயோகங்களை அவன் கேட்டான். அவைகளைக் கேட்கக் கேட்கத் தான் தமிழனோ என்ற சந்தேகம் அவனுக்கு ஏற்பட்டது. தான் தமிழனாயிருந்தாலோ என்று

அவன் அங்கலாய்த்தான்.

அவன் கொடி அவிழ்த்தபோது 'வீரத்தமிழன்' என்று பாராட்டியதும், மேடையில் ஏற்றி மாலை சூட்டியதும், அவன் சந்தேகத்தை மேலும் தூண்டியதன்றிக் குறைக்கவில்லை.

பொன்னியின் கேள்விக்குக் கிருஷ்ணன் பதில் கூறாது, தன்பாட்டில் நிலத்தைக் கீறிக்கொண்டிருந்தான். அவள் திரும்பத் திரும்பக் கேட்டும் அவன் ஒன்றும் பேசவில்லை. "பேசாமலிருந்தால் நான் போய்விடுவேன்" என்று பொன்னி உலுப்பினபொழுதுதான் வாய்திறந்தான்.

"நான் தமிழன்தானோ பொன்னி" என்று கிருஷ்ணன் கேட்டான். பொன்னி கலகலவென்று சிரித்துவிட்டு, "சுவாமிக்கு இந்தச் சந்தேகம் ஏனோ உதித்தது" என்று கேட்டாள்.

சமீபகாலத்தில் எல்லோரும் 'தமிழன் தமிழன்' என்று பேசுகிறார்கள். என்னையும் நேற்று மேடையில் ஏற்றி..." என்று முன்பு நடந்த சம்பவங்களை விளக்கமாகக் கூறினான்.

"உங்களையும் வீரத்தமிழன் என்று கூறித்தானே மாலை போட்டார்கள். பிறகு நீங்கள் ஏன் சந்தேகப்பட வேண்டும்" என்று பொன்னி கேட்டாள்.

"இரகசியத்தைத் தெரிந்தும் இப்படிச் சொல்லுகிறாயே பொன்னி; நீ உள்சட்டை தைக்க அந்தக் கொடியை அவிழ்த்துத் தரச்சொன்னாய். அதனாலல்லவோ நான் கொடியை அவிழ்த்தேன். இல்லாத ஒரு விஷயத்தைத்தான் எல்லோரும் திருப்பித் திருப்பி இருக்கென்று சொல்வார்கள். இஞ்சைபார் பொன்னி, நான் புளித்த கள்ளைக் கொடுத்தால் நல்லகள்ளு என்று சொல்லிக்கொண்டு ஒருவர் குடிப்பார். மற்றவர் "ஆமாம் நல்ல கள்ளு கொஞ்சமும் புளிக்கவில்லை" என்று சொல்லிக் குடிப்பார். அன்று முழுக்க நல்லகள்ளு, நல்லகள்ளு என்ற கதையாய்த்தான் இருக்கும். பொய்யைத்தான் எல்லோரும் திருப்பித் திருப்பிச் சொல்லி மெய்யாக்குவது வழக்கம். எல்லோரும் தமிழன், தமிழன் என்றுசொல்ல நான் தமிழனில்லையோவென்று சந்தேகமாயிருக்கு" என்று கிருஷ்ணன் தனது பாஷையில் விளங்கப்படுத்தினான்.

"ஐயோ சுவாமி, நீங்கள், நாங்கள் இந்த ஊரிலே உள்ள எல்லோரும் தமிழர்தான். தேர்தற்காலங்களில் இப்படித்தான் அர்த்தமில்லாத பல கதைகள் பேசுவார்கள்." என்று பொன்னி கூறினாள்.

கிருஷ்ணன் "ஓகோ அப்படியா" என்று புன்முறுவலுடன் எழுந்து தான் அவிழ்த்த கொடிச்சீலைத் துணியை அவளிடம் எடுத்துக் கொடுத்தான்.

பொன்னி வாங்கிக்கொண்டு "எனக்கு உள்சட்டைத் துணிக்கு கொடிச் சீலை அவிழ்க்கப்போய் கூட்டத்திலே மேடையில் ஏறும் பாக்கியமும், மாலை சூட்டப்படும் பாக்கியமும் பெற்றீர்கள். அதற்குக் கைமாறாகச் சந்நிதி கோவிலில் எனக்கு நீங்கள் மாலை சூட்டவேண்டும்" என்று சொல்லி நிற்காமல் ஓடிவிட்டாள்.

"நில், நில்" என்று கிருஷ்ணன் கூவியது அவள் காதில் விழுந்ததோ என்னவோ?

(கலைச்செல்வி - ஆடி. ஆவணி -1961)



# "கசின்
# க. சிவகுருநாதன்

ஈழத்தின் முன்னோடி எழுத்தாளர்களுள் ஒருவரான கசின் க. சிவகுருநாதன் 1920ம் ஆண்டு புலோப்பளையில் பிறந்தார். கட்டுரை ஆசிரியராக எழுத்துலகில் புகுந்த கசின், சிறுகதைப் படைப்பாளியாக வருவதற்கு 'ஈழகேசரி' தூண்டுதலாக அமைந்தது. அவ்வகையில் ஈழகேசரி ஆசிரியர் மறைந்த இராஜ அரியரத்தினத்தை அவர் நன்றியுடன் நினைவு கூருகிறார். கசினின் சிறுகதைகள் தமிழ் சமூகத்தின் ஒரு காலகட்டத்தினைச் சிறப்பாகச் சித்தரிக்கின்றன. அவருடைய சிறுகதைகள் அனைத்திலும் மிக நுட்பமான அவதானிப்பினை காண முடியும். அத்துடன் எளிமையும் இனிமையும் கலந்த மொழி நடையும், அதில் கிண்டலும் நகைச்சுவையும் ஊடு பரவி இருக்கும் தன்மையும் படிக்கும் போது சுவைப்பன. நமது சிறுகதை முன்னோடிகளின் பங்களிப்பையும் நமது நவீன இலக்கிய இருப்பினையும் அறிய இத்தொகுதி உதவும்.

கசின் அவர்கள் ஓய்வுபெற்ற கல்லூரி அதிபர். மூன்று ஆண்மக்களையும், இருபெண் மக்களையும் குழந்தைகளாகக் கொண்டவர். திருமதி இராசம்மா அவர்கள் அவருடைய இல்லத்துணைவியாக அமைந்து, அவருடைய இலக்கியப் பாதைக்கு தூண்டுதலாக உள்ளார்.

பொ. ஆனந்தலிங்கம்